தெய்வத் திருமேனிகளின்
தியானம் - ரூபம் - யந்திரம் - மந்திரம்

Encyclopaedia of
Divine Swaroopas Dhyana - Yantra - Mantras



திருவாவடுதுறை ஆதீனம் சரசுவதி மகால் நூல் நிலையம்
மற்றும் ஆய்வு மையம், திருவாவடுதுறை - 609 803.



உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

தெய்வத் திருமேனிகளின்
தியானம் – ரூபம் – யந்திரம் – மந்திரம்

(Encyclopaedia of Divine Swaroopas - Dhyana - Yantra and Mantras)

* * *

இது
திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்துமூன்றாவது குரு மகாசன்னிதானம்
சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்
அவர்கள் அருளாணையின் வண்ணம் வெளியிடப்பெறுகிறது.

நூலாசிரியர்
திருவிடைமருதூர்
S. நாராயணசுவாமி, M.A., (Phil)., M.A.; (His), M.Ed., Dip. in Sanskrit.
சிவாகமம் மற்றும் சிற்ப ஆராய்ச்சித்துறை,
திருவாவடுதுறை ஆதீனம் சரசுவதிமகால் நூல்நிலையம் மற்றும் ஆய்வு மையம்,
திருவாவடுதுறை.

திருவாவடுதுறை ஆதீனம்
19-01-2010



திரிபுரசங்கார தாண்டவம்



சதாசிவர்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

ஆதீனம் குருமுதல்வர் அருள்திரு நமசிவாயமூர்த்திகள் அருள் வரலாற்றுச் சுருக்கம்

உலகம் ஓர் குலம்; உலகு அனைத்தும் இன்புற வேண்டும் என்ற பரந்த மனம் படைத்தது ஆச்சாரியப் பரம்பரை. திருக்கயிலையில் உண்டாகிய இப்பரம்பரை காலம் பல கடந்து இடையறாது இந்நாள் வரை வளர்ந்து வருகிறது. கயிலைப் பரம்பரையின் மெய்கண்ட சந்தான ஆச்சாரியர்களில் ஸ்ரீ உமாபதி சிவாச்சாரியரிடம் உபதேசம் பெற்ற ஸ்ரீ அருள் நமச்சிவாயரிடம் தீட்சை பெற்றவர் ஸ்ரீசித்தர் சிவப்பிரகாசர். அவரிடம் சிவஞான அபிஷேகமும், ஆச்சாரிய பரம்பரையைப் பாதுகாத்து வர திருஆணையும் பெற்று, திருவாவடுதுறையில் ஆதீனத்தைத் தோற்றுவித்த முதற் பெருங்குருமூர்த்திகள் ஸ்ரீநமசிவாயமூர்த்திகள்.

இவர்கள் சோழ மண்டலத்தில் மயிலாடுதுறைக்கு அருகில் உள்ள மூவலூரில் பரம்பரை சைவ வேளாளர் குலத்தில் தோன்றியவர்கள். இவர்களது பிள்ளைத் திருநாமம் வைத்தியநாதன் என்பது. இளம் பிராயத்தில் இவர்கள் தம் பெற்றோருடன் புள்ளிருக்கு வேளூரில் (வைத்தீஸ்வரன் கோயில்) ஸ்ரீ வைத்தியநாதப் பெருமானை வழிபட்டுத் திருவருளில் ஒன்றிய சிந்தையினராக மனமுருகி நின்றபோது, பெருமானே ஒரு சிவாச்சாரியர் திருமேனி தாங்கி வந்து சிவலிங்கத் திருமேனி ஒன்றினைத் தந்தருளிய பேறுடையவர்கள்.

தல யாத்திரையாகத் தம் அடியார் திருக்கூட்டத்துடன் மூவலூர் சேர்ந்த ஸ்ரீசித்தர் சிவப்பிரகாசர், சிறிய பெருந்தகையாக விளங்கிய வைத்தியநாதரைக் கண்டார்கள். சிவஞானப் பேற்றிற்கு உரிய குறிகளையும் திருவருட்குறிப்பையும் உணர்ந்து, பெற்றோர் இசைவுடன் பிள்ளையைத் தம்முடன் அழைத்துக் கொண்டு திருவாவடுதுறையை அடைந்தார்கள்.

அங்கு ஸ்ரீசித்தர் சிவப்பிரகாசர் அப்பிள்ளைக்கு ஞானதீக்கை புரிந்து **நமசிவாயம்** என தீட்சாநாமம் சாத்தி, குரு பரம்பரையில் தாம் பெற்ற சிவஞான உபதேசத்தை அருளிச் சிவஞானானந்த அனுபவம் கைவருமாறு அநுக்கிரகம் செய்தார்கள். குருமரபில் தாம் பெற்ற ஸ்ரீ உமாபதி சிவாசாரியர் பூஜை செய்த ஸ்ரீஞான மாநடராசப் பெருமானையும், தம்முடைய ஆன்மார்த்த மூர்த்தியையும் பூஜித்து வரும் அதிகாரத்தையும் வழங்கினார்கள். தாம் வீற்றிருந்த இடத்தில் வரை கீறி அமைக்கப்பெற்ற அறையுள் அமர்ந்து சைவ சித்தாந்த மரபு தழைக்க சிவஞான உபதேசம் செய்துவர ஆணையருளி, தாம் திருமறைக்காட்டிற்குச் சென்றருளினார்கள்.

ஸ்ரீ நமச்சிவாய தேசிக மூர்த்திகள் தம் ஞானாசிரியர் திருவாணையின்வண்ணம் அவர் வகுத்த அறையிலிருந்து, வரும் பக்குவ ஆன்மாக்களுக்கு சிவஞான உபதேசம் அருளி சுத்தாத்துவித சைவ சித்தாந்த பரிபாலனம் செய்து வந்தார்கள்.

இவ்வண்ணம் ஆதீன முதற்பெரும் குருமூர்த்திகளாக வீற்றிருந்து சுத்தாத்துவித சைவ சித்தாந்த நன்மரபு தழைக்கச் செய்த ஸ்ரீநமச்சிவாயமூர்த்திகள், தங்கள் குரு சந்தானம் வளர்ந்தோங்கி வர, அம்பலவாண தேசிகருக்கு ஞானாபிஷேகம் செய்து துவிதீய ஆச்சாரியராக அமைத்து, ஒரு தை மாதம் அசுவதி நன்னாளில் சித்தாந்த சுத்தாத்துவித முத்தி அடைந்தருளினார்கள். ஆதீனக் குருமுதல்வர் ஞானச் சமாதித் திருக்கோயிலில் நாள்தோறும் இருகாலம் பூசைகள் நடைபெற்று வருகின்றன. மாதந்தோறும் அசுவதி நட்சத்திரத்தில் குருமூர்த்திகளின் தோத்திரப் பனுவல்கள் பாராயணமும் சிறப்பு வழிபாடும் செய்யப்பட்டு வருகின்றன.

பிரதி வருடம் தை மாதம் அசுவதி நன்னாளில் (மகரத்தலைநாள்) ஆதீன முதற்பெரும் குருமூர்த்திகளாக விளங்கும் ஸ்ரீ நமச்சிவாயமூர்த்திகளின் குருபூஜை வழிபாடுகள் 10 நாட்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

மேலும் ஸ்ரீநமச்சிவாயமூர்த்திகளின் திருமேனியானது மூவலூர் (அவதார இல்லம்), திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில், விக்கிரமசிங்கபுரம் சிவந்தியப்பர் கோயில், திருநெல்வேலி சந்தி விநாயகர் கோயில், சுசீந்தரம், மதுரை, ஈசான்ய மடம் பொதிகையடி காசிதர்மம் ஆகிய தலங்களில் பிரதிட்டை செய்யப் பெற்று, பூசைகளும் நடைபெற்று வருகின்றன. தை அசுவதி நன்னாளில் ௸ தலங்களில் சிறப்பு ஆராதனைகளும் மாகேசுவர பூசைகளும் நடைபெறுகின்றன.

மேலும் திருவாவடுதுறையில் நிகழும் (தை - அசுபதி) குருபூசை பத்து நாட்களில் 2ஆம் நாளில் திருமூலர் சிறப்பு விருதும், 5 ஆம் திருநாளில் தமிழ் மூதறிஞர் ஒருவர்க்குச் சிறப்பு விருதும் (மகாவித்துவான் நினைவுப்பரிசு), குருபூசை நன்னாளில் சித்தாந்த சைவப் பணிகளில் நூறு ஆண்டுகளையும் கடந்து வளர்ந்து வரும் சித்தாந்த சபைக்குச் '' சித்தாந்தச் சுடர் நிலையம்'' எனும் விருதினையும் ஆதீனத்திலிருந்தும் அறக்கட்டளைகள் சார்பாகவும் தக்கார்க்கு சிறப்பு விருதுகளும் பொற்கிழியும் பாராட்டும் மகாசன்னிதானம் அவர்கள் வழங்கியருளுகின்றார்கள்.

இவ்வாறாக ஸ்ரீநமச்சிவாயமூர்த்திகளின் வழிவழி வருகின்ற சிவஞான உபதேச, அபிஷேக பரம்பரையில், இந்நாளில் இவ்வாதீனத்து 23 ஆவது குரு மகாசன்னிதானம் ***சீர் வளர் சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்*** அவர்கள் சித்ராசன சிவஞானபீடத்தில் எழுந்தருளி அருளாட்சி செய்து வருகின்றார்கள்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையில் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணை
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழில்திருவா வடுதுறைவாழ்
குரு நமச்சிவாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

- காஞ்சிப்புராணம்
(அருள்திரு மாதவச் சிவஞான சுவாமிகள்).



திருவாவடுதுறை ஆதீன குருமுதல்வர்
அருள்திரு நமசிவாய மூர்த்திகள்
(14-ஆம் நூற்றாண்டு)

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

குருபரம்பரை விளக்கம்

சீகண்ட பரமசிவம்

திருநந்தித் தேவர்

சனகர் சனந்தனர் சனாதனர் சனற்குமாரர்

சத்தியஞான தரிசினிகள்
பரஞ்சோதி மாமுனிவர்
மெய்கண்ட தேவ நாயனார்
அருள் நந்தி சிவாச்சாரியர்.
மறை ஞானசம்பந்த சிவாச்சாரியர்
உமாபதி சிவாச்சாரியர்
அருணமச்சிவாயர்
சித்தர் சிவப்பிரகாசர்

1.	அருள்திரு நமச்சிவாயமூர்த்திகள் (திருவாவடுதுறை ஆதீனக் குருமுதல்வர்)	1360 -1625
2.	அருள்திரு மறைஞான தேசிகர்	
3.	அருள்திரு அம்பலவாண தேசிகர்	
4.	அருள்திரு உருத்திரகோடி தேசிகர்	
5.	அருள்திரு வேலப்ப தேசிகர்	
6.	அருள்திரு குமாரசுவாமி தேசிகர்	
7.	அருள்திரு (பின்) குமாரசுவாமி தேசிகர்	
8.	அருள்திரு மாசிலாமணி தேசிகர்	1625 - 1658
9.	அருள்திரு இராமலிங்க தேசிகர்	1658 - 1678
10.	அருள்திரு வேலப்ப தேசிகர்	1678 - 1700
11.	அருள்திரு (பின்) வேலப்ப தேசிகர்	1700 - 1730
12.	அருள்திரு திருச்சிற்றம்பல தேசிகர்	1730 - 1770
13.	அருள்திரு அம்பலவாண தேசிகர்	1770 - 1789
14.	அருள்திரு (வேளூர்) சுப்பிரமணிய தேசிகர்	1789 - 1845
15.	அருள்திரு அம்பலவாண தேசிகர்	1845 - 1869
16.	அருள்திரு (மேலகரம்) சுப்பிரமணிய தேசிகர்	1869 - 1888
17.	அருள்திரு அம்பலவாண தேசிகர்	1888 - 1920
18.	அருள்திரு சுப்பிரமணிய தேசிகர்	1920 - 1922
19.	அருள்திரு வைத்தியலிங்க தேசிகர்	1922 - 1937
20.	அருள்திரு அம்பலவாண தேசிகர்	1937 - 1951
21.	அருள்திரு சுப்பிரமணிய தேசிகர்	13.4.1951 முதல் 23.9.1967
22.	அருள்திரு அம்பலவாண தேசிகர்	23.9.1967 முதல் 07.04.1983

23. சீர் வளர் சீர் சிவப்பிரகாசதேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் 7.4.1983 முதல் இவ்வாதீன ஞானபீடத்தில் வீற்றிருந்து அருளாட்சி செய்து வருகின்றார்கள்.

திருவாவடுதுறை அருள்மிகு கோமுக்தீசுவரர் திருக்கோயிலுள்ள
திருமூலரின் ஞானசமாதித் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள
அருள்திரு திருமூல தேவநாயனார்

உ

Sivamayam

Thirukkayilaya Paramparai, Thiruvavaduthurai Adheenam, During the Holy Reign of the 23rd Guru Mahasannidhanam SeerValarSeer

SIVAPRAKASA DESIKA PARAMACHARYA SWAMIGAL

DEIVATH THIRUMENIGAL

BIBLIOGRAPHICAL DATA

01.	Title of the book	:	**DEIVATH THIRUMENIGAL** (Encyclopaedia of Divine Swaroopas Dhyanas - Yantras and Mantras)
02.	Editor	:	**S. NARAYANASWAMY**, M.A., M.A., M.Ed., Dip.in. Sanskrit.
03.	Publisher	:	Thiruvavaduthurai Adheenam Sarasvathi Mahal Library & Reserach Centre, Thiruvavaduthurai - 609 803.
04.	Publication No	:	606
05.	Price	:	Rs.450/-
06.	Subject	:	Religion.
07.	Languages	:	Tamil & Sanskrit.
08.	Number of Pages	:	20 + 460
09.	Edition	:	Fifth Edition
10.	Number of Copies	:	1000
11.	Date of Publication	:	19-01-2010
12.	Paper Used	:	Seshayee 21.3 Maplitho paper
13.	Size of the Book	:	1/4 Demmy Size.
14.	Printing type used	:	Offset Printing.
15.	Binding	:	Perfect Binding with Hardbound
16.	Printers	:	Kalyani Computer Printers 236, Kamaraj Road, Kumbakonam - 612 001. Ph : 0435 - 2425442, Cell : 94434 88791.



அருள்மிகு கோமுக்தீசுவரர் திருக்கோயில்,
திருவாவடுதுறை.

உ

சிவமயம்

பொருளடக்கம்

முன்னுரை ... XI

01. கணபதி திருமேனிகள் ... 1

02. முருகன் திருமேனிகள் ... 37

03. சதாசிவ வடிவம் ... 63

04. இலிங்கம் மற்றும் சிவனின் வடிவங்கள் ... 77

05. சோமாஸ்கந்தர் ... 94

06. நடராசர் (நிருத்த மூர்த்தி) ... 98

07. திருமூலரின் திருமந்திரத்தில் ஐந்தெழுத்தாலான சிவன் யந்திரங்கள் ... 111

08. ரிஷபாரூடர் ... 121

09. கலியாண சுந்தரர் ... 125

10. சந்திரசேகரர் ... 133

11. பிட்சாடனர் ... 137

12. காமாந்தகர் ... 141

13. காலசம்ஹாரர் ... 142

14. ஜலந்தரஹாரர் ... 149

15. திரிபுரசம்ஹாரர் ... 151

16. கஜசம்ஹாரர் ... 153

17. வீரபத்திரர் ... 156

18. தெட்சிணாமூர்த்தி ... 160

19. விஷாபஹரர் ... 172

20. கிராதமூர்த்தி ... 175

21. கங்காளர் ... 176

22. சக்ரதானர் ... 178

23. கஜமுக அனுக்ரஹர் ... 179

24. சண்டேசானுக்ரஹரர் ... 180
25. ஏகபாதர் ... 182
26. இலிங்கோத்பவர் ... 185
27. சுகாசனர் ... 186
28. ஹரிஹரர் ... 189
29. அர்த்தநாரீஸ்வரர் ... 191
30. உமாமகேஸ்வரர் ... 193
31. சண்டேஸ்வரர்கள் ... 195
32. க்ஷேத்ரபாலர் ... 204
33. பைரவர் ... 207
34. சரபர் ... 244
35. அகோரமூர்த்தி ... 249
36. பிரம்மா ... 252
37. நவக்கிரகங்கள் ... 259
38. சப்தரிஷிகள் ... 274
39. சக்தி வழிபாடு ... 277
40. ஸ்ரீசக்கரம் / மகாமேரு ... 283
41. தகமகா வித்யா ... 298
42. சரசுவதி திருவுருவ வகைகள் ... 308
43. சப்தமாதர்கள் ... 325
44. தனித்த தேவீ ரூபம் - கிராம தேவதா மற்றும் வாகனங்கள் ... 340
45. முனீஸ்வரர் ... 363
46. திருமேனிகளுக்கும் யந்திரங்களுக்கும் உரிய உபசார முறைகள் ... 375
47. பிரதிஷ்டா மூர்த்திகளின் காயத்ரீ மற்றும் மந்திரங்கள் ... 382
48. "ஓம்" - ஓங்கார ஸஹஸ்ர நாமாவளி ... 435
49. மந்த்ர புஷ்பம் ... 448
50. எடுத்தாண்ட நூல்கள் ... 449

திருவாவடுதுறை ஆதீனம் 23 ஆவது குரு மகாசன்னிதானம்

சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ
சிவமயம்

முன்னுரை

> “உருவன்றியே நின்று உருவம் புணர்க்கும்
> கருவன்றியே நின்று தான் கருவாகும்
> மருவன்றியே நின்ற மாயப் பிரானைக்
> குருவன்றி யாவர்க்கும் கூட வொண்ணாதே”

- திருமூலர் திருமந்திரம் - 2840.

> “உருமேனி தரித்துக் கொண்டது என்றலும் உரு இறந்த
> அருமேனி அதுவும் கண்டோம் அரு-உரு ஆன போது
> திருமேனி உபயம் பெற்றோம் செப்பிய மூன்றும் நந்தம்
> கருமேனி கழிக்க வந்தகருணையின் வடிவு காணே”

- சிவஞான சித்தியர் - 75.

உணர்த்தினால் தான் ஆன்மா உணர முடியும் என்ற முறையால் நல்வழிப்படுத்தத் திருக்கோயில்களும் திருமடாலயங்களும் நமக்குப் பெருந்துணையாக உள்ளன. ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்ற வாக்கால் ஆலய வழிபாட்டினையும் ஆலயத்தில் அருள் வழங்கும் திருமேனிகளின் தத்துவங்களையும் அறிய வேண்டியது தலையாய ஒன்று.

வழிபாடு இரண்டு வகையுள் அடங்கும். ஒன்று ஆன்மார்த்தம். மற்றொன்று பரார்த்தம். ஆன்மார்த்தம் என்பது சிவதீட்சை பெற்று இல்லத்திலேயே சிவவழிபாடுசெய்து சிவபுண்ணியம் பெறுதலாம். பரார்த்தம் என்பது பரந்த எண்ணத்தோடு திருக்கோயிலில் அமையும் பூசைகளாகும். நித்தம் ஆன்மார்த்த வழிபாடு செய்தாலும், நலம் பெற வேண்டி பரார்த்த வழிபாடாகத் திருக்கோயில் செல்லுதல் வேண்டும்.

திருக்கோயில் வழிபாட்டில் வலம்வருதல், மெழுகிடுதல், பூ தொடுத்து மாலை சாத்துதல், நந்தவனம் அமைத்தல், அபிடேகம் செய்தல், திருவிளக்கு ஏற்றுதல், அருச்சனை செய்தல், தெய்வப் பனுவல்களைப் பாடுதல், அரனருள் வேண்டி ஆடி மகிழ்தல், தண்டனிட்டுப் பேரானந்தம் பெறுதல் இவைபோன்று பலவகை அடங்கும்.

திருக்கோயில்களில் அமைப்பு, வழிபாட்டு முறைகள், இறைவனின் திருமேனிகள், தியானங்கள் யந்திரங்கள், மந்திரங்கள் யாவும் மிகுந்து உள்ளன.

அன்பு, அருள், இன்பம், துன்பம், பலன் முதலானவற்றை அநுபவத்தால் மட்டுமே உணரமுடியும். நமது முன்னோர்கள் தாம் பெற்ற அனுபவத்தைப் பல்லாற்றானும் வெளிப்படுத்தி நாம் உணர வழிவகுத்துக் கொடுத்துள்ளார்கள். அவற்றுள் சிறப்புடையதே திருக்கோயில் வழிபாடு.

பன்னெடுங்காலத்திற்கு முன்னர் முனிவர்கள், ஞானிகள், தவசிகள், மன்னர்கள் முதலானோர் பல ஆசிரமங்களை அமைத்துக் கொண்டு சீடர்களுக்கு நல் உபதேசங்களையும், லீலாவினோத சக்திகளையும், தியானச்சிறப்புகளையும், மந்திர, தந்திர, யந்திர, பிரயோகங்களையும் உபதேசித்து வந்துள்ளனர். இன்றும் இவைகள் அழிந்துவிடாமல் நமது பாரம்பரிய பாரத மண்ணின் திருக்கோயில்களில் நிலைத்து நிற்கின்றன. காலங்களும், நடைமுறைகளும் மாறிக்கொண்டே இருந்தாலும் இறை சிந்தனை வழுவாது மனிதன் வாழ்ந்து வளம்பெற குருநாதர்களும் அவர்கள் அருள் பெற்றுவிளங்கும் திருமடாலயங்களும் நமக்கு நல்வழிகாட்டுகின்றன.

அவ்வகையில் ஞானதாகம் வேண்டி நாடிவரும் அன்பர்க்கு ஞான அருள் வழங்கும் சிவஞான விருட்சமாகத் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் விளங்குகிறது. இவ்வாதீனத்தைக் கி.பி. 14ஆம் நூற்றாண்டில் ஸ்ரீ நமசிவாய மூர்த்திகள் ஸ்தாபித்து அருளினார்கள். இவர்களின் வழிவழியாகத் தற்பொழுது இவ்வாதீனத்தை சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் 23ஆவது குருமகா சன்னிதானமாக வீற்றிருந்து அருளாட்சி செய்து வருகின்றார்கள்.

இவர்களின் கருணைத் திறத்தாலும், தீட்சை முறையாலும், நல் உபதேசத்தாலும் தரிசிக்கவரும் சாதுக்கள், யாத்ரீகள், வித்துவான்கள், புலவர்கள், கலைஞர்கள், பக்தர்கள், ஆராய்ச்சியாளர்கள், யாவரும் உய்வர் என்பது திண்ணம்.

இவ்வாதீனம் சிவதீட்சையும், சிவபூசையும், உபதேசமும் செய்து வருவதோடல்லாமல் இன்று வரை பாடல்பெற்ற பல சிவாலயங்களையும், வைப்புத்தலங்களையும் பேணிபாதுகாத்து வழிபாட்டு முறைகளைச் சிறப்புற நடத்தி வருகின்றது. வேதம், ஆகமம், திருமுறை, சாத்திரம் இவற்றைப் போற்றிப் புகழும் படியாகப் பல விழாநாட்களில் நூல்கள் வாயிலாகவும் அவற்றின் பொருட்செறிவுகளை அன்பர்களுக்கு அளித்துவரும் அரிய பணிகளைச் செய்து வருகின்றது.

அருளாட்சியின் மாட்சி

தற்பொழுது ஞானபீடத்தில் 23ஆவது குரு மகாசன்னிதானமாக ஆட்சியருளுபவர்கள் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆவார்கள். இவர்கள் 07.04.1983ஆம் ஆண்டு ஞானபீடம் ஏறிய நாள்முதலாக ஆதீனத்திற்குச் சொந்தமான திருக்கோயில்கள், கிளைமடங்கள் பெரும்பாலானவை திருப்பணிச் செய்யப்பெற்று புதுப்பொலிவுடன் விளங்குகின்றன. தற்பொழுது கூட திருவாவடுதுறை உள்ளிட்ட ஆதீனத் திருக்கோயில்கள் சிலவற்றில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இவர்களுடைய அருளாட்சியில் நுண்கலை நூல்கள், சாத்திர நூல்கள், தோத்திரநூல்கள், கும்பாபிஷேக மலர்கள், கல்விநிலைய நூற்றாண்டு விழா பொன்விழா மலர்கள் என எண்ணற்ற நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. 100 ஆண்டுகளைக் கடந்த சித்தாந்த சபைகள், ஓதுவார்கள், தமிழறிஞர்கள், ஆகம நூல் வல்லார்கள், சித்தாந்தப் பேரறிஞர்கள், சிவநெறிபேணும் தொண்டர்கள், சைவப் பெருமன்றங்கள், திருக்கோயில் கலைஞர்கள், முதலானோர்க்கு விருது, பட்டம் பொற்கிழியென வழங்கிச் சிறப்பித்து வருகிறார்கள். 1992இல் சைவ சித்தாந்தப் பயிற்சி மையம் இவர்களால் துவக்கப்பெற்று தமிழ்நாட்டில் பலமையங்களைக் கொண்டு செயல்படுவதோடு மலேசிய நாட்டிலும் கூட சிறப்புற நடந்து வருகிறது. மலேசியா, இலங்கை போன்ற அயல்நாடுகளுக்கு யாத்திரை சென்று அங்குவாழும் மக்களுக்கு அருளாசி வழங்கியதில் இவ்வாதீன வரலாற்றில் இவர்களே முதன்மையானவர்கள் என்னும் சிறப்புக்குரியவர்கள். போற்றும் படியாக திரிசிரபுரம் திரு. மீனாட்சி சுந்தரம்பிள்ளை, உ.வே.சாமிநாதய்யர், திருவள்ளுவ நாயனார், சிவஞான சுவாமிகள், கச்சியப்பமுனிவர் போன்றோரின் நினைவாக பல தமிழறிஞர்களைப் பாராட்டிச் சிறப்பித்து வருகிறார்கள். ஆதீனத்தில் நாவலர் பட்டம் பெற்ற ஆறுமுக நாவலர் அவதரித்த இலங்கைத் திருநாட்டில் அதன் தொடர்புகளைப் புதுப்பிக்கும் வண்ணம் சமயப்பரப்புநர் ஒருவரை நியமித்து சைவப் பணியாற்ற அருளாணைப் பிறப்பித்தவர்கள். முக்கியமான பல தலங்களில் சமயப்பரப்புநர்களை நியமித்து சமயவிரிவுரைகள் நிகழ ஏற்பாடு செய்தவர்கள். ஆதீன வித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, சிதம்பரம் இராமலிங்கம் பிள்ளை ஆகியோர் வாழ்ந்த இல்லங்களை நினைவாகக் கட்டுவித்த பெருமைக்குரியவர்கள். நூலகப் பராமரிப்பு இவர்கள் ஆட்சியில் செம்மையாக பேணப்பெறுகிறது. புதிய நூல்கள் வாங்கி சேர்ப்பிக்கப் பெற்றுள்ளன. பக்குவம் வாய்ந்த அன்பர்களுக்குத் தீட்சைகள் செய்து வைத்தருளுகின்றார்கள். திருக்கோயில் மண்டகப்படிகள், ஒரு காலபூசைத் திட்டம், ஏழைமாணவர்களுக்கு அருட்கொடைகள், நன்மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு பரிசுகள் என

எண்ணற்ற அருட்கொடைகள் வழங்கி வருவது இவர்களது கருணைத் திறத்தைப் புலப்படுத்தும். ஆதீனத்திற்குச் சொந்தமான சில திருக்கோயில்களில் நின்றுபோன திருவிழாக்களை மீண்டும் சிறப்பாக நடைபெறச் செய்துள்ளார்கள். நலிவுற்ற திருக்கோயில்கள், திருமடங்களுக்கு நலஉதவி செய்து சிறப்பித்தவர்கள்.

இவர்கள் காட்சிக்கு எளியராய் கடுஞ்சொல் அற்றவர்களாய் விளங்கித் தம்மை நாடிவரும் அன்பர்களுக்கு அருளாசி வழங்கிவருகின்றார்கள்.

நமது வாழ்வில் உபாசனையும் யந்திரங்களும்

எங்கும் நிறைந்து, எல்லோர் உள்ளும் விரவிப் பரவி, உயிர்க்கும் உயிராய், ஒன்றாய், உடனாய், வேறாய், அருளும் பெரும் பெயர் சிவனாம் பரம் பொருளின் பேராற்றலைத் தன்வயப்படுத்தும் முறையே உபாசனை எனப் பெயர் பெறுகின்றது. (உப+அஸநா=உபாஸநா- உடன் இருத்தல்). இவ்வுபாசனையின் முதல்படி நிலையே தியானம் ஆகும்.

''ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமிலாப் பெருமாற்கு ஆயிரம் திருநாமம் பாடித் தெள்ளேணம் கொட்டோமோ'' என்று ஞான வாணியைத் தம் நாவில் நிறுத்திய மணிவாசகப் பெருந்தகை அருள்வார். எனவே, இம்முதற்படி நிலையில் ஒரு நாமத்தை உச்சரிக்கும் முறையில் (எடுத்தல், படுத்தல் /உயர்த்தல்; மெலித்தல்) உச்சரித்திடின், அது ''அது பாடுதலாக'' ஆகின்றது. இவ்வாறு பாடுகையில் மனம் ஒருமுகப்பட்டு செயலும் சொல்லும் அற்று ஒடுங்கும் போது பாடப்பெற்ற நாமப்பொருள் அகக்கண்ணின் முன் உருவாய்த் தோன்றி நிற்கும். இத்திருமேனியை ''மந்திரத் திருமேனி'' என ஆன்றோர் உரைப்பர். உரைப்பார் உரை உகந்து உள்ள வல்லார் தங்கள் உச்சிப் பூவாய் நிற்கும் இத்திருமேனியை சகள நிஷ்களமாம் யந்திரத் திருமேனியில் ஆன்றவிந்தடங்கிய சான்றோர் நிறுவிப் பூசிப்பர்.

மேருமுறை (மேரு தந்த்ரம்)

பெரும்பாலும் சக்தி வழிபாட்டில் இம்முறை பயன்படுத்தபடுகின்றது. எடுத்துக்காட்டு - ஸ்ரீ சக்கரமேரு. இதிலும் பூர்ணமேரு (மகாமேரு), அர்த்தமேரு, சக்ரமேரு என மூவகையாய் அமைகின்றன.

சகளத் திருமேனிகள் - உருவத் திருமேனிகள்

உபாசகனின் இதயத்துள்ளிருந்து வெளிபட்டு அவரின் அகக்கண்ணுக்கும் புறக்கண்ணுக்கும் புலனாகும் வழியில் சிற்பிகள் அமைக்கும் கல், மற்றும் உலோகத் திருமேனிகளே சகளத்திருமேனிகள் ஆகும். கல் திருமேனிகள் சிற்பங்கள் எனவும் அழைக்கப்படும். இவையும் நிலைத் திருமேனிகள், உலாத்திருமேனிகள் (உற்சவ மூர்த்தங்கள்) புடைப்புத் திருமேனிகள் எனப் பலவகைப்படும்.

நிலைத் திருமேனிகளை நிறுவுமிடத்தில் முதலில் எந்திரங்கள் குழிவுகளில் நிலைநிறுத்தப்பட்டு, அவற்றின் மேல் கற்பிரதிமைகள் நிறுவி, அட்டபந்தன மருந்து சாத்தி, குடமுழக்கும், பெருஞ்சாந்திகளும் செய்தபின், ஆன்மார்த்த, பரார்த்த பூசைகளும் நித்திய நைமித்திக காமியார்த்த பூசைகளும் விழாக்களும் செய்யப்படுகின்றன. மேலும் சில ஆலயங்களில் மூலத்தானத்துத் திருமேனிகளின் திருவடிகளிலும், உலாத்திருமேனிகளின் திருவடிகளிலும் அவ்வத் திருமேனிகளுக்குரிய யந்திரங்கள் வைத்துப் பூசிக்கப்படுகின்றன.

உபசாரங்கள்

இப்பூசைகளில், வேதத் துதிகள், ஆகமத் துதிகள், தோத்திர சாத்திரத் துதிகள், திருமுறைத் துதிகள், திருப்புகழ்ப் பாடல்கள் ஆகியன வாய்ப்பாட்டுக்களாயும்; தோல், துளை, நரம்புக் கருவிகள் வழி இசையாயும் திருமேனிகளின் முன் விண்ணப்பிக்க பெறுகையில் அன்பர் அழுது, தொழுது, துவளும் நிலைப்பெற்றுத் திருவருளுக்கு மீளா அடிமைத்திறம் பெறுகின்றனர்.

இம்மீளா அடிமைத்திறம் பெறுபவர்கள் பேரின்பத்துள் ஆழ்ந்து செயலற்று, சிவானந்தம் துய்க்கும் நினைவின்றி துய்த்து நிற்றலே ''முக்தி'' யாம். சீவன் முத்தி பெற்றும் திருவருள் நியமன வழி நம் போலும் அடியவரை, ஆதீனப் பிரதிஷ்டாச்சாரியாரின் குருவான சித்தர் சிவப்பிரகாசர், ஸ்ரீ நமச்சிவாய மூர்த்திகள் (மற்றும் இவர்கள் வழிவருவோர்) இவர்களை ஒல்லும் வகையால் நினைத்து பாடிப் பரவித் தொழவேண்டும்.

இந்நூலில் காணப்பெறுவன

இந்நூல் - ஒரு திருமேனிக்குரிய தியானம் ஒன்றினைக் கூறியும், இதற்குப் பலவகையாக உள்ள ரூபங்களை வரைகோட்டுப் படங்களால் காட்டியும், ரூபங்களுக்குரிய யந்திரங்களும், யந்திர வழிபாட்டுக்குரிய பல்வேறு விதமான மூலமந்திரங்கள் மற்றும் காயத்ரீ மந்திரங்கள் யாவும் ஒருவாறாக எழுதித் தொகுக்கப்பட்டுள்ளன.

இந்நூலின் தொடக்கப்பகுதியில் - கணபதி, முருகன், சதாசிவ வடிவம், இலிங்கம், சிவனாரின் பஞ்சவிம்சதி ரூபங்கள், சக்தி வழிபாடு, ஸ்ரீசக்கரம், தசமகா வித்யா, சரசுவதி, பைரவர், சரபர் முதலான திருமேனிகளைக் கூறியும் தனித்து விளங்கும் தேவீ ரூபங்கள், கிராம தேவதா ரூபங்கள், வாகனாதிகள், யந்திர பூசா முறைகள், பிரதிஷ்டா மூர்த்திகள் காயத்ரீ மற்றும் மந்திரங்கள், இவற்றோடு மந்திரங்களுக்கே மூல மந்திரமாக இருக்கும் ஓம் எனும் பிரணவ மந்திரத்திற்குரிய சஹஸ்ர நாமாவளியும் இடம் பெறுகின்றன.

நூலாக்கத்திற்கு உறுதுணை

இந்நூலினை எழுதித் தொகுக்கும் காலத்தில் அவ்வப்போது அறிவுரைகளையும், திருத்தம் பல நேரில் செய்து என்றும் உறுதுணையாக இருந்தவர் ஆதீன பன்மொழிப் புலவரும், ஆதீன சரசுவதி மகால் நூல் நிலைய ஆய்வுமையத்தின் சிவாகம சிற்பத் துறைத் தலைவராக விளங்கிய காஞ்சிபுரம் சிவஸ்ரீ. சி.எஸ். சதாசிவம்,எம்.ஏ., (ஆங்கிலம்), எம்.ஏ., (வரலாறு), எம்.ஏ., (சமஸ்கிருதம்), எம்.ஏ., (தமிழ்). எம்.ஃபில்., அவர்கள்.

இந்நூலிற்கு அழகூட்டுவனவாக அமைவன வரைகோட்டு ஓவியங்கள். முன்னாள் திருப்பதி தேவஸ்தான பிரதம ஸ்தபதியார் பத்மஸ்ரீ திரு.எஸ்.எம். கணபதி ஸ்தபதி வ்ரைந்து, ஆதீனத்தில் சமர்பித்த வரைகோட்டு ''ஓவிய நூலிலிருந்தும்'', மாமல்லபுரம் சிற்பக் கல்லூரியில் பணியாற்றிய கலைச் செம்மல் திரு. கோ.திருஞானம் அவர்களின் ''படிமக் கோடுகள்'' நூலில் காணும் ஓவியங்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. களப்பயணம் செய்த காலத்தில் சில அன்பர்களின் உதவியும் கிடைக்கப்பெற்றன. அனைத்து அன்பர்களுக்கும் சீர்வளர்சீர் குருமகாசன்னிதானம் அவர்களின் பரிபூரண ஆசி கிடைத்திட என்றும் பிரார்த்திக்கிறேன்.

ஐந்தாம் பதிப்பு வெளியீடு

திருவாவடுதுறை ஆதீனம் குருமுதல்வர் அருள்திரு நமசிவாய மூர்த்திகளின் மகரத் தலைநாள் (தை - அசுவதி) குருபூசை, பத்து நாட்கள் பெருவிழாவில் ஆறாம் திருநாளில் (19-01-2010) இப்பெருநூலை இரவு அருள்திரு நமசிவாயமூர்த்திகள் பூசை நிறைவில் வெளியிட்டருள, இதன் முதல் பிரதியை நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் ச. முனியநாதன் இ.ஆ.ப. அவர்கள் பெற்று மகிழ்கிறார்கள்.

திருவடிப் போற்றி :

என்னை நினைந்தடிமை கொண்டு அருள்பாலிக்கும் அடியேனின் ஞானாசிரிய மூர்த்தியாம் 23வது குருமகா சந்நிதானம் அவர்கள் எளியேனுக்குப் பணி கொடுத்து வாழ்வு தந்தருளி அருள்பாலித்து வருவதை எண்ணி குருமூர்த்திகளின் திருவடித்தாமரைகளை என் சென்னி மீது வைத்துப் போற்றுவதைத் தவிர வேறொன்றும் அறியேன். திருவருளும் குருவருளும் இயக்கிட கருவியாய் நிற்கும் அடியேனால் எழுதித் தொகுப்பாக்கம் பெற்ற இந்நூல் அனைவருக்கும் மெய்மைப் பூசனை விளைவிக்க ஞானாசிரிய மூர்த்திகளின் பொன்னார் திருவடிகளை வணங்கிப் பிரார்த்திக்கிறேன்.

சுபம்
வாழ்க குருமூர்த்திகளின் திருவடிகள்!
வாழ்க துறைசையாதீனம்
வளர்க திருக்கயிலாயபரம்பரை

2ஏ, தெற்குவீதி,
திருவிடைமருதூர் - 612 104.
தஞ்சாவூர் மாவட்டம்
அலைபேசி : 9486648450

இங்ஙனம்
நூலாசிரியர் - வடிவமைப்பு
எஸ்.நாராயணசுவாமி, M.A., (Phil)., (His), M.Ed., Dip In Sanskrit,
சிவாகமம் மற்றும் சிற்பத்துறை, திருவாவடுதுறை ஆதீன
சரசுவதி மகால் நூல் நிலைய ஆய்வு மையம்,
திருவாவடுதுறை - 609 803.

உ

Sivamayam

INTRODUCTION

The traditional convention of Thirukkayilaya Adheenam, is to nature Siddhanta by contribution to the development of Tamil in particular Saivite literature. Siddhar Sivaprakasar, one among the "Navakoti Nadha Siddha" was the causal and instrumental founder of Thuraisai Adheenam through his disciple Sri Namasivayamoorthigal the founder of the Adheenam. His successor pontiffs vied one another in nurting and propagating Siddhanta Saivism acclaimed by both rhe Agamas and Vedas.

Traditional Work

They achived this by butting forth and inner experience in letters-pandara sastras, written commentaries to Meikanda sastras transmitted and communicated fined experiences of selves and their cheias-expositions to Thirumurais and stylistic syited to the generation concemed.

The present Guru Mahasannidhanam 23rd in the orderhas adopted the motto "Guruvei Sivam" ...the philosophy ordaind by St. Thirumoolar, given over by Sri Nandi, the second one of the second one of the Sri Kailasa Dynasty. He has become the cause - essential and instruments in executing the renovation and petiforming kumbhabisekams of santhanachariyas Guruparampara.

He has founded the Thiruvavaduthurai Adheena Saiva Siddhanta Direct Training Centre to impart the Saiva Sidhanta philosophy through conduct class programmes.

Panguni Gurupooja Special Publication

The present Gure Mahasannidhanam has made it convention of releasing special publications on the panguni - Thiruvonam GuruPooja day of His predecessor Arulthiru Ambalavana Desika Moorthigal (22nd Maha Sannidhanam) Volumes on Dhakshinamoorthi (st and 2nd part), Somaskandar, Chandeswarar, Saraswathi, Lingothbhavar, Kalyanasundarar, Bhairavar, pratimalakshnam, Deities in Sivan Temple, Maha Saraswathi, Maha Kala Samharar have already been issued.

With in this volume

Omniscient, Omnipresent, All pervasive God sipreme - remains as the supreme over soul. The Sadhaka by his / her upasana achives in drawing the infinite supreme in to his / her finiteself by the priciple of Tha-Daumiya. This process is known as Upasana (Upa + asana = Upasana - remaining besides)

The first step in this process is called "Dhayana". This word is a derivation of the root - Dhie - Ea - To known by instution. experessed as knowing by knowledge and surrendering in "Whole" to the Holy Feet.

The Supreme is formless; nameles and infinite. But the sadhakas worship the supreme identifying it by thousands of names. in fact, when they chant the name chosen by them, the results in the unification of the soul with the oversoul and then in the immerion of self in sivananda. The result of immersion of the soul is "one-need" with in the "oversoul" and this stage is experessed as "Mukthi" the final wholesome release from all the bendaged-Anava, Karama and Maya. The Chiththa perceives and concieves the from of Mantha - Devatha with the with out. The Sadhaka at first becomes Jeeva - Chiththa and then Sivasiddha. this is the mantra from - This Nieskala from is installed in Yantras - The Sakala - Nishkala Roopa by the Sadhaka.

Engraving of Yantras

The yantras are engraved in various manner, either the engraving is done on the obverse or from the reverse. The rekhas and lipis are culled in metallic plates - gold, Silver, Copper, brass and lead. They are also called in a compounded metal called Aimpon.

Meines

These formes are at large worshipped in Shakthi worship are Atharva Vedic Tantric cults, ie, Sri Chakra. Three fold forms. Sampoorna meru (Maha Meru, Ardha Meru, and Chakra Meru).

Sakalas forms - Roopas

The emanated roopas from within and without of Sadhaka's heart are made into Icons by shilpis. They are made either in stone or metallic compounds they become Icons. The Icons are movable even after vedic and Agamic rituals. Both the forms of Roopa moorthi's yantras are installed either undermeath or at their feet.

Poojas ot Worship

Veda stutis; Agamic stutis; Sastras and Stotras; Thirumurais; Thiruppugazh verses are sung vocally and accompained bu instruments made of skins and hides strings; and instruments consisting of a pipe with finger holes. THe sadhakas become immersed in Parananda and become mukthas.

These mukthas are made to live amongst us by Divine command. They become friends, philosophers and guides to chosen souls. They are numerous saints viz Agasthya, Thirumoolar, ThirumaligaiThevar, Karuvoor thevar, Siddha Sivaprakasar, Sri Namasivaya Moorthigal etc., Let us worship Maheswara Jeevan Mukthas and become blessed by Divine Supreme.

The Benign and Bounteous grace of my Ganacharya, the present Guru Mahasannidhanam while commissioning me to complie this volume, has also provided me with the esteemed association of the following team to achieve success to the core.

Adheenam Panmizhip pulavar Sivasri C.S.SADASIVAM, M.A., M.A., M.Phil., M.Ed., D.S.M., D.S.S., Head of the Dept. of Agama and Silpa, Kanchipuram, Sri S.M. Ganapathi Stapathi, and Mahabalipuram Kalaichemmal K. Thirugnanam and the Superiented of Sri Namasivayamurthy Achakam and al staffs. The bounteous grace of Guru Mahasannidhanam way shower the bening blessing on these all.

I can only part that the Grace. of 23rd Maha Sannidhanam SEERVALARSEER SIVAPRAKASADESIKAPARAMACHARYASWAMIGAL, DEVINE SWAROOPAS DHYANA - YANTRA and MANTRAS and Sri Namasivaya Moorthigal should be their constant guardian and bestow all benevolence on all mentioned above.

Once again being my bounden duty, I submit my most obeisances to my Deksha GanaGurumoorthigal, the 23rd Guru Mahasannidhanam for the extreme knidness showered on me.

Suggessions for improvbements at this volume from luminaries in the various faculties are always welcome.

Ever at the service of the Guru Mahasannidhanam,

S.NARAYANASWAMY, M.A., (Phil)., M.A., (His), M.Ed., Dip in Sanskrit,
Researcher, Dept of Agama & Silpa
Thiruvavaduthurai Adheenam Saraswathi Mahal Library and Research Centre
Thiruvavaduthurai - 609 803.

நூலாசிரியர் வாழ்க்கைக் குறிப்பு



நூலாசிரியர் பெயர் : சு. நாராயணசுவாமி

கல்வித் தகுதி : எம்.ஏ., (தத்துவம்), எம்.ஏ., (வரலாறு), எம்.எட்., டிப்.இன். சம்ஸ்கிருதம்.

பிறந்த தேதி, ஊர் : 02-04-1954 - இன்னம்பூர் (காவிரி வடகரைத் தலம் திருஇன்னம்பூர்)

பள்ளி, கல்லூரி மற்றும் பல்கலைக்கழகம் : சீர்காழியில் உள்ள ச.மு.இ.உ. நிலைப்பள்ளியில் பயின்று பின்னர் இளங்கலை பட்டப்படிப்பு பூம்புகார் கல்லூரியிலும், முதுகலைப் பட்டங்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் பயின்றவர்.

பெற்றோர்கள் : தந்தை - கோ. சுப்பிரமணியன்.
தாயார் - சு. ருக்மணி அம்மாள்.

பணி

1983 முதல் திருவாவடுதுறை ஆதீனம் சரசுவதி மகால் நூல் நிலைய ஆய்வு மையத்தில் சிவாகமம் மற்றும் சிற்பத்துறை - ஆராய்ச்சியாளர்.

இல்வாழ்க்கை

09-09-1884ல் திருமணம்

தீட்சை

திருவாவடுதுறை ஆதீனம் 23-ஆவது குரு மகாசன்னிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களிடம் சமய தீட்சை, விஷேச தீட்சை, ஸ்படிகலிங்க பூஜை பெற்று அனுஷ்டித்து வருகின்றார்கள்.

நூற்பணிகள்

இந்நூலாசிரியர் வரலாறு, சிற்பம், சிவாகமம், நுண்கலை, கல்வெட்டு, இலக்கியம் ஆகியவை சார்ந்த கட்டுரைகள் சுமார் 350ம், நுண்கலை நூல்கள் மற்றும் பல தலங்களின் தலவரலாற்று நூல்கள் சுமார் 22ம் எழுதி அவை ஆதீனப்பதிப்புகளாக வெளிவந்துள்ளன.

இவரது ஆய்வில் உள்ள நூல்கள்

1 - திருவாவடுதுறை ஆதீனத் திருக்கோயில்களின் செப்புத் திருமேனிகள் (தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்)

2 - 108 சிவ தாண்டவங்கள் (தமிழ் - வடமொழி - ஆங்கிலம் - படங்களுடன்).

3 - சிற்பத் தியான சங்கிரகம் (தமிழில்)

பட்டங்களும் பரிசுகளும்

1 - இந்நூலாசிரியர் எழுதிய சோமாஸ்கந்தர் நூலிற்காக பஞ்சலோக சோமாஸ்கந்தர் விக்கிரகத்தையும் (பூசைக்கு) 'சரசுவதி' நூலிற்காக பொற்பவித்திரத்தையும் குரு மகாசன்னிதானம் அவர்கள் வழங்கி ஆசியருளினார்கள் (1992 மற்றும் 1994)

2 - 1996 ஆம் ஆண்டு மதுரை பன்னிரு திருமுறைமன்றம் சிவாகம ஆய்வுச் செல்வம் எனும் பட்டமும், வெள்ளியிலான மீனாட்சி சுந்தரேசுவரர் மொமென்டோவும் வழங்கிச் சிறப்பித்தது.

3 - 1997ல் சென்னையில், இந்துதர்ம மன்றம் ஏற்பாடு செய்து இருந்த விழாவில் முன்னாள் குடியரசுத் தலைவர் மாண்புமிகு ஆர். வெங்கட்ராமன் அவர்களால் தமிழ்ப்பண்டிதர் எனும் பட்டமும், பொற்பதக்கமும் பெற்றவர்கள்.

4 - 1999ல் இந்துசமய அறநிலை ஆட்சித்துறையினரால் இவரது சமயம் பற்றிப் போதிக்கும் திறனைக் கண்டு சிறந்த விரிவுரையாளர் என்ற சான்றிதழ் மற்றும் சன்மானம் பெற்றவர்.

5 - 1999ல் காஞ்சிபுரம் ஸ்ரீ காமகோடி சமஸ்தானம் ஸ்ரீ ஜெயேந்திர சரசுவதி சுவாமிகள் மற்றும் ஸ்ரீவிஜயேந்திர சரசுவதி சுவாமிகள் அவர்கள் (கர்நாடக இசை மும்மூர்த்தி ஜெயந்தி விழாவில் மேற்படி நுண்கலை நூலாசிரியருக்கு புராதன தத்துவப் பிரச்சார மணி என்ற பட்டமும் - நவரத்தின மாலை, சாதராவும் அணிவித்துப் பாராட்டி மகிழ்ந்தார்கள்.

6 - இந்நூலாசிரியர் - திருவாவடுதுறை ஆதீனம் சீர்வளர்சீர் குரு மகாசன்னிதானம் (23வது பட்டம்) அவர்கள் அளித்தருளிய தீட்சையினாலும், உபதேசத்தினாலும் வந்த வெளிப்பாடாகும் என்று கூறுவதில் பெருமை அடைகின்றார். நூலாக்கப்பணி என்றும் தொடர்ந்திடவும் வாழ்வில் எல்லா நலமும் எய்திடவும் திருவாவடுதுறை ஆதீனம் குரு மகாசன்னிதானம் அவர்கள் இந்நூலாசிரியரை ஆசீர்வதிக்கின்றார்கள்.

7 - 04-04-2005, பங்குனித் திருவோணம் குருபூசைத் திருநாளன்று குரு மகாசன்னிதானம் அவர்கள் இந்நூலாசிரியரின் நூற்பணிகளைப் பாராட்டும் முகத்தான் பொன்னாடை, மோதிரம், பொற்கிழி ரூ. 3000/- இவற்றுடன் ஆகம சிற்பக் களஞ்சியக்கலைமணி என்னும் சிறப்பு விருதினை வழங்கியருளினார்கள்.

முகவரி :

சு. நாராயணசுவாமி,
2ஏ, தெற்கு வீதி, திருவிடைமருதூர்,
தஞ்சாவூர் மாவட்டம்.
அலைபேசி: 9486648450, 9360763322

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

தெய்வத்திருமேனிகளின்
தியானம் - ரூபம் - யந்திரம் - மந்திரம்

கணபதி திருமேனிகள்

1. பால கணபதி

கரஸ்தகதளீ சூதபனஸே க்ஷுக மோதகம் /
பால சூர்யப்ரபம் வந்தே தேவம் பாலகணாதிபம் //



வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், கரும்பு, மோதகம் இவைகளை வைத்துக் கொண்டிருப்பவரும், பாலசூரியனைப் போன்ற சரீர காந்தியையுடையவருமான பால கணபதியை வணங்குகின்றேன்.

2. தருண கணபதி

பாசாங்குசா பூபகபித்த ஜம்பூ
ஸ்வதநதசாலீக்ஷுமபி ஸ்வஹஸ்தை :।
தத்தே ஸதா யஸ்தருணாருணாப:
பாயாத் ஸ யுக்ஷ்மாந் தருணோகணேச :॥



கைகளில் பாசம், அங்குசம், அபூபம், விளாம்பழம், நாவல்பழம், தன்னுடைய ஒரு தந்தம், நெற்கதிர், கரும்பு இவ்வெட்டு பதார்த்தங்களையும் வைத்துக் கொண்டிருப்பவரும், நண்பகலில் விளங்குகின்ற கதிரவனின் ஒளியைக் கொண்டவருமான தருணகணபதி எப்போதும் உங்களைக் காப்பாற்றுவாராக. சிவப்பு நிறம்.

3. பக்தி கணபதி

நாளிகேராம்ரகதளீகுட பாயஸ தாரிணம்/
சரச்சந்த்ரா பவ புஷம் பஜேபக்தி கணாதிபம்//



தேங்காய், மாம்பழம், வாழைப்பழம், பாயசம், இவைகளையுடையவரும், சரத்கால சந்திரனைப் போல வெண்மையான சரீரத்தையுடையவருமான பக்தி கணபதியை வணங்குகின்றேன்.

4. வீர கணபதி

வேதாள சக்திசரகார்முக சக்ர கட்க
கட்வாங்க முத்கர கதாங்குச நாகபாசாந் /
சூலஞ்ச குந்தபரகத்வஜ முத்வஹந்தம்
வீரம் கணேசமருணம் ஸததம் நமாமி //



வேதாளம், சக்தி ஆயுதம், அம்பு, வில், சக்ராயுதம், கத்தி, கட்வாங்கம், முத்கரம் (இரும்பு உலக்கை), கதை, அங்குசம், நாகம், பாசம், சூலம், குந்தம், மழு, த்வஜம் ஆகிய ஆயுதங்களைத் தரித்திருப்பவர். - சிவப்பு நிறம்.

5. சக்தி கணபதி

ஆலிங்க்ய தேவீம் ஹரிதாங்கயஷ்டிம்
பரஸ்பராச்லிஷ்ட கடீ நிவேசம்/
ஸந்த்யாருணம் பாசஸ்ருணீ வஹந்தம்
பயாபஹம் சக்தி கணேச மீடே //



தேவியை ஆலிங்கனம் செய்து கொண்டிருப்பவரும், ஒருவருக்கொருவர் அணைத்துக் கொள்ளப்பட்ட இடுப்பை உடையவரும், சந்தியா காலத்தைப் போல சிவந்த நிறமுடையவராக இருப்பவரும், பாசம், அங்குசம் இவைகளை வைத்துக் கொண்டிருப்பவரும் பயத்தைப் போக்கும் சக்தி கணபதி ஆவார்.

6. துவிஜ கணபதி

ய: புஸ்தகாக்ஷ குண தண்ட கமண்டலுஸ்ரீ
வித்யோ தமானகர பூஷண மிந்துவர்ணம்/
ஸ்தம்பேரமாநநச துஷ்ய சோபமானம்
த்வாம்ஸம்ஸ்ம ரேத் த்விஜகணாதிபதேஸதந்ய://



புஸ்தகம், ஜபமாலை, தண்டம், கமண்டலம் இவைகளையுடையவரும், மிக்க ஒலி பொருந்திய கங்கணம் முதலான ஆபரணங்களைக் கைகளில் அணிந்திருப்பவரும், சந்திரனைப் போல் வெண்மையான நிறமுடையவரும் நான்கு யானை முகங்களுடன் சோபிக்கின்றவருமான த்விஜ கணபதி.

7. சித்தி கணபதி

பக்வ சூதபல புஷ்ப மஞ்சரீம் இக்ஷுதண்ட தில மோதனகஸ்ஸஹ /
உத்வஹன் பரசு ஹஸ்தே நம: ஶ்ரீசம்ருத்தியுத தேவ பிங்கல: //



மாம்பழம், பூங்கொத்து, கரும்புத்துண்டு, எள்ளுருண்டை, பரசு, இவற்றைத் துதிக்கையுள் பட ஐந்து கரங்களில் தரித்தவரும், பொன் கலந்த பசுமை நிறமுடையவருமாக விளங்குபவர். சித்தி சத்தியைத் தன் மடியில் கொண்டு விளங்குபவரும் ஒரு வகையாகும்.

8. உச்சிஷ்ட கணபதி

நீலாப்ஜம் தாடீமீ வீணாசாலிகுஞ்சாக்ஷஸூத்ரகம்/
தததுச்சிஷ்ட நாமாயம் கணேச: பாது மேசக://



நீலோத்பலம், மாதுளம்பழம், வீணை, நெல், கதிர், குன்றிமணியாலான ஜபமாலை இவைகளைத் தரித்திருப்பவரும், நீலநிறமாக இருப்பவருமான உச்சிஷ்ட கணபதி ஆவார். கருநீல நிறம். ஷ கணபதியை ''விஜய கணபதி'' என்று ஸ்ரீ தத்துவ நிதி கூறுகிறது.

9. விக்ன கணபதி

சங்க இக்ஷுசாப குஸுமேஷு குடார பாசம்
சக்ர ஸ்வதந்த ஸ்ருணி மஞ்ஜரிகா சராத்யை: /
பாணிச்ரிதை: பரி ஸமீஹித பூஷண ஸ்ரீ :
விக்நேச் வரோ விஜயதே தபநீய கௌர: //



சங்கு, கரும்பு, வில், புஷ்ப பாணம், கோடரி, அங்குசம், பாசம், சக்கரம், தனது தந்தம், பூங்கொத்து போல சுருட்டிய மாலை ஆகியவற்றை தமது கரங்களில் கொண்டவரும், ஆபரணங்களை அணிந்தவரும், பொன்மேனி ரூபமாகவும் விளங்குபவர்.

10. க்ஷிப்ர கணபதி

தந்தகல்பலதாபா சரத்நகும் பாங்கு சோஜ்வலம்।
பந்தூககமநீயாபம த்யாயேத் க்ஷிப்ரகணாதிபம்।



தந்தம், கல்ப விருக்ஷத்தின் கிளை, பாசம், ரத்னகலசம், அங்குசம் இவைகளைத் தரித்துக் கொண்டிருப்பவரும், செம்பரத்தம் பூவைப்போல் அழகான சிவந்த சரீர காந்தியையுடையவருமான க்ஷிப்ர கணபதியைத் தியானித்தல் வேண்டும்.

11. ஏரம்ப கணபதி

அபயவரத ஹஸ்த: பாசதந்தாக்ஷமாலா
ஸ்ருணி பரசுத தாநோ முத்கரம் மோதகஞ்ச/
பலமதிகதஸிம்ஹ: பஞ்சமா தங்கவக்த்ரோ
கணபதி ரதி சௌர: பாது ஹேரம்பநாமா //



அபயம், வரதம் முத்திரைகளைக் கொண்டவரும், பாசம், தந்தம், ஜபமாலை, அங்குசம், கோடரி, முத்கரம், மோதகம், பழம் இவைகளைத் தரித்துக் கொண்டிருப்பவரும், ஸிம்ஹ வாகனத்திலிருப்பவரும், ஐந்து யானை முகங்களுடனிருப்பவருமான ஹேரம்ப கணபதி - மஞ்சள் நிறம்.

12. லக்ஷ்மீ கணபதி

பிப்ராண : சுகபீஜபூர கமிலந்மாணிக்ய கும்பாங்குசாந்
பாசம் கல்பலதாஞ்ச கட்கவிலஸத் ஜ்யோதி ஸுதாநிர்ஜ்ஜர:/
ச்யாமேணாத் தஸரோரு ஹேண ஸஹிதம் தேவீத்வயம் சாந்திகே
கௌராங்கோ வரதா நஹஸ்தளஹிதோ லக்ஷ்மீ கணேசோவதாத் //



கிளி, மாதுளம்பழம், மாணிக்க ரத்னங்களுடன் கூடிய கலசம், அங்குசம், பாசம், கற்பகக்கொடி, கத்தி, மிகவும் பிரகாசிக்கின்ற ஜ்யோதியாகிய அமிருதப் பிரவாஹத்தையுடையவரும், நீலோத்பலத்தைக் கையில் கொண்ட இரு தேவிகளை இருபக்கத்திலும் கொண்டவரும், வரதஹஸ்தத்துடன் லக்ஷ்மீ கணபதியானவர் நம்மைக் காப்பாராக.

13. மகா கணபதி

ஹஸ்தீந்த்ராநநம் இந்துசூடம் அருணச்சாயம் த்ரிநேத்ரம்
ரஸாதாச்லிஷ்டம் ப்ரியயா ஸபத்ம கரயா சாங்கஸ் தயா சந்ததம்।
பீஜாபூர கதேட்சு கார்முகலஸத் சக்ராப்ஜ பாசோத்பல
வ்ரீஹ்யக்ர ஸ்வ விஷாண ரத்ந கலசான் ஹஸ்தைர் வஹந்தம் பஜே॥



மாதுளம்பழம், கதை, கரும்பு வில், சக்கரம், தாமரை, பாசம், நீலோத்பலம், நெற்கதிர், தந்தம், ரத்னகலசம், இவற்றைத் திருக்கரங்களில் தாங்கியவர். செங்கதிர் போன்ற நிறம் உடையவர். முக்கண்ணர் பிறை முடியர். மடிமீது எழுந்தருளியிருக்கும் தாமரையை ஏந்திய தேவியாற் பிரேமைக் குறிப்போடு விழாது தழுவப் பெற்றவர்.

14. விஜய கணபதி

பாசாங்குச ஸ்வதந்தாம்ர பலவாந் ஆகு வாகன: /
விக்நம் நிஹந்து ந : ஸர்வம் ரக்த வர்ணோ விநாயக: //



பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவைகளைத் தரித்தவர். பெருச்சாளி வாகனத்தில் ஏறியிருப்பவர் செந்நிறமானவர்.

15. நிருத்த கணபதி

பாசாங்குசாபூப குடாரதந்த
சஞ்சத் கராக்லுப்த வராக்குளீயகம் /
பீதப்ரபம் கல்பதரோர தஸ்தம்
ப்ஜாமி ந்ருத்தோபபதம் கணேசம் //



பாசம், அங்குசம், அதிரசம், கோடரி, அசைகின்ற கைகளின் விரல்களில் அணியப்பட்ட சிறந்த மோதிரங்களையுடையவரும், மஞ்சள் நிறமுடையவரும், கல்பவிருக்ஷத்தினடியில் இருப்பவருமான நர்த்தன கணபதி. வேறு தியானத்தில் ஆயுதங்கள் மாறியும் இருக்கும்.

16.ஊர்த்துவ கணபதி

கல்ஹார சாலிகமலேக்ஷு கசாப பாண
தந்தப்ரரோஹககதீ கனகோஜ்வலாங்க:/
ஆலிங்கநோத்யதகரோ ஹரிதாங்கயஷ்ட்யா
தேவ்யா கரோது சுபம் ஊர்த்வ கணாதிபோந://



செங்கழுநீர்ப்பூ, நெற்கதிர், தாமரைப்பூ, கரும்பு வில், அம்பு, கதை, தந்தம் இவைகளைக் கரங்களில் கொண்டவரும், தங்க நிறம் கொண்டவரும், பச்சை நிறமுடைய தேவியினால் ஆலிங்கனம் செய்து கொள்ளப்பட்டவருமான ஊர்த்துவ கணபதி.

17. ஏகாட்சர கணபதி

ரக்தோ ரக்தாங்க ராகாம்சுக குஸுமயுதஸ்துந்தில: சந்திரமௌலீ
நேத்ரைர் யுக்தஸ்த்ரிபி: வாமநகராச்ரணோ பீஜபூரம் ததாந:।
ஹஸ்தாக்ரா க்ளுப்த பாசாங்குச ரத வரதோ நாகவக்த்ரோ அஹிபூஷோ
தேவ: பத்மாசநஸ்தோ பவது சுகதரோ பூதயே விக்நராஜ:।



செந்நிறமானவர், செம்பட்டாடையர், செம்மலர் மாலையர், பிறை முடியர், முக்கண்ணர், குறுந்தாளர், குறுங்கையர், தந்தம், பாசம், அங்குசம், வரதம் இவை தாங்கிய கரங்களையுடையவர், தும்பிக்கையில் மாதுளம் பழத்தை வைத்திருப்பவர். யானைமுகவர், பதுமாசனத்திலிருப்பவர், பெருச்சாளி வாகனர்.

18. வர கணபதி

சிந்தூராபம் இபாநநம் த்ரிநயனம் ஹஸ்தே ச பாசாங்குசௌ /
பிப்ராணம் மதுமத் கபாலம் அநிசம் ஸாது இந்துமௌலிம் பஜே //



செவ்வண்ணர். யானை முகவர். முக்கண்ணர். பிறை முடியர். பாசம், அங்குசம் தரித்தவர். தேன் நிறைந்த கபால பாத்திரத்தை ஏந்தியவர். பிறை முடியர்.

19. திரயாக்ஷ்ர கணபதி

கஜேந்த்ர வதநம் ஸாக்ஷாத் சலத் கர்ண சு சாமரம்।
ஹேம வர்ணம் சதுர்ப்பாஹும் பாசாங்குசதரம் வரம்॥
ஸ்வதந்தம் தட்சிணே ஹஸ்தே சவ்யேது ஆம்ர பலம்ததா।
புஷ்கரே மோதகஞ்சைவ தாரயந்தம் அநுஸ்மரேத்॥



அசைகின்ற செவிகளாம் சாமரைகளை உடையவர். பொன்னிறமானவர். நான்கு கரங்களை உடையவர். பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைத் தாங்கியவர். துதிக்கை நுனியில் மோதகம் உடையவர்.

20. க்ஷிப்ரபிரசாத கணபதி

த்ருத பாசாங்குச கல்பலதாஸ்வரதச்ச பீஜபூரயுத:/
சசிகல கலித மௌலிஸ் திரிலோசநோஅரண:ச கஜவதந://
பாசுர பூஷணதீப்த: ப்ருஹத் உதர: பத்மவிஷ்டரோல்லஸித:/
விக்னபயோதர பவந: கரத்ருத கமலஸ் ஸதாஸ்து மே பூத்யை://



பாசம், அங்குசம், கற்பகக் கொடி, இன்சுவை தரும் மாதுளம்பழம், தந்தம், வரத கரம், துதிக்கையில் தாமரை இவற்றைக் கொண்டிருப்பவர். இளம்பிறையொத்த நெற்றியையுடையவர். திருவாபரணங்கள் பல அணிந்தவர். பேழை வயிற்றை உடையவர்.

21. ஹரித்திரா கணபதி

ஹரித்ராபம் கதுர்ப்பாஹும் ஹரித்ரா வதநம் ப்ரபும்/
பாசாங்குச தரம் தேவம் மோதகம் தந்தமேவச/
பக்தாபய ப்ரதாதாரம் வந்தே விக்நவிநாசநம்//



மஞ்சள் நிறமானவர். நான்கு கரங்களையுடையவர். அவற்றில் பாசம், அங்குசம், தந்தம், மோதகம் இவற்றைத் தரித்திருப்பவர். பக்தர்களுக்கு அபயமளிப்பவர்.

22. ஏகதந்த கணபதி

லம்போதரம் ச்யாமதநும் கணேசம்
குடாரம் அட்சஸ்ருஜம் ஊர்த்வகாப்யாம்:/
ஸ லட்டுகம் தந்தம் அத: கராப்யாம்
வாமே தராப்யாஞ்ச ததாநம் ஈடே://



பேழை வயிற்றுடன் நீல மேனியர். கோடரி, அட்சமாலை, லட்டு, தந்தம் இவற்றை உடையவர்.

23. சிருஷ்டி கணபதி

பாசாங்குச ஸ்வதந்தாம்ர பலவாநாஹு வாஹந:/
விக்நம் நிஹந்து ந: சோண: ஸ்ருஷ்டி தக்ஷோ விநாயக://



பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைக் கரங்களில் ஏந்தியவர். பெருச்சாளி வாகனத்தையுடையவர். சிவந்த திருமேனியர். இவர் நமது இடையூறுகளை அகற்றுவாராக.

24. உத்தண்ட கணபதி

கல்ஹாராம்புஜ பீஜபூரக கதாதந்தேக்ஷு சாபம் சுபம்
பிப்ராணோ மணிகும்பசாலி கலசௌ பாசம் ஸ்ருணிஞ் சாப்ஜகம்:/
கௌராங்க்யாம்ராசிரார விந்தகரயாம் தேவீம் சமாலிங்கித: சோணுங்க:
சுப மாதநோது பஜதாம் உத்தண்ட விக்னேச்வர:://



நீலம், தாமரை, மாதுளம்பழம், கதை, தந்தம், அங்குசம், கரும்புவில், ரத்ன கலசம், பாசம், நெற்கதிர், மாலை இவற்றையேந்திய பத்துக்கைகளை உடையவர். அழகிய தாமரைப்பூவை ஏந்திய பொன் மேனியளாகிய தேவியைத் தழுவுபவர். சிவந்த மேனியையுடையவர்.

25. ரணமோசன கணபதி

பாசாங்குசௌ தந்த ஜம்பூ ததாந: ஸ்படிகப்ரப:/
ரக்தாம் சு கோ கணபதி: முதேஸ்யாத் ருணமோசக://



பாசம், அங்குசம், தந்தம், நாவற்பழம் இவற்றைத் தரித்தவர். வெண்பளிங்கு நிற மேனியர். செந்நிறட் பட்டாடையுடுத்தியவர்.

26. துண்டி கணபதி

அட்சமாலாம் குடாரஞ்ச ரத்நபாத்ரம் ஸ்வதந்தகம்/
தத்தே கரைர் விக்நராஜோ டுண்டிநாமா முதேஅஸ்து ந:: //



அட்சமாலை, கோட [illegible]்ன கலசம், தந்தம் இவற்றை ஏந்தியவர்.

27. துவிமுக கணபதி

ஸ்வதந்த பாசாங்குச ரத்ந பாத்ரம்
கரைர் ததாந: ஹரி நீலகாத்ர:/
ரக்தாம் சுகோ ரத்ந கிரீட மாலீ
பூத்யை சதாமே த்விமுகோ கணபதி://



தந்தம், பாசம், அங்குசம், ரத்னபாத்திரம், இவற்றைக் கையில் ஏந்தியவர். மயில் நீல மேனியர். செம்பட்டாடையும், ரத்தின கிரீடமும் அணிந்தவர். இருமுகம் உடையவர்.

28. மும்முக கணபதி

ஸ்ரீமத் தீக்ஷ்ண சிகாங்குசாக்ஷவரதான் தக்ஷே ததாந: கரை:/
பாசஞ்சாம்ருத பூர்ணகும்பமபயம் வாமே ததாநோ முதா/
பீடே ஸ்வர்ண மயாரவிந்த விலஸத் ஸத்கர்ணிகா பாசுரே/
ஆசீனஸ்த்ரிமுக: பலாசருசிர: நாகாநந: பாதுந:: /



வலது கைகளில் கூரிய அங்குசம், அட்சமாலை, வரதம் இவற்றை உடையவர். இடது கைகளில் பாசம், அமுத கலசம், அபயம் இவற்றை உடையவர். பொற்றாமரையாசனத்தின் பொகுட்டில் மூன்று முகங்களோடு எழுந்தருளியிருப்பவர். புரசம்பூப் போன்ற சிவந்த நிறம் உடையவர்.

29. சிங்க கணபதி

வீணாம் கல்பலதாம் ஹரிஞ்ச வரதம் தக்ஷே விதத்தே கரை:/
வாமே தாமரஸஞ்ச ரத்நகலஸம் சன்மஞ்சரீ சாபயம்:/
சுண்டா தண்டலஸன் ம்ருகேந்த்ரவதந: சங்கேந்து கௌர சுபோ:/
திவ்யத் ரத்ந நிபாம்சுகோ கணபதி: பாயாத பாயாத்சந://



வீணை, கற்பகக்கொடி, சக்கரம், வரதம் இவற்றை வலது கைகளில் தாங்கியவர். தாமரை, ரத்ன கலசம், பூங்கொத்து, அபயம் இவையமைந்த இடது கைகளையுடையவர். வெண்ணிற மேனியர். யானை முகவர். சிங்க வானத்தில் எழுந்தருளியிருப்பவர். (பத்ம பீடத்தில் எழுந்தருளி விளங்குதலும் உண்டு).

30. யோக கணபதி

யோகாரூடோ யோக பட்டாபி ரோமோ
பாலார்க்காப: ச இந்த்ர நீலாம் சுகாட்ய:/
பாசே க்ஷ்வக்ஷான் யோக தண்டம் ததாநோ
பாயாந்நித்யம் யோகவிக்நேச்வரோ ந:://



யோக நிலையில், யோக பட்டம் தரித்து, இளஞ்சூரியனது நிறமொடு ஒளிர்ந்து, இந்திர நீலநிற ஆடையை உடுத்தி, பாசம், அட்சமாலை, யோக தண்டம், கரும்பு இவற்றை ஏந்தி இருப்பவர்.

31. துர்க்கா கணபதி

தப்த காஞ்சந சங்காச: சாஷ்ட ஹஸ்தோ மஹத்தநு:/
தீப்தாங்குசம் சரம் சாக்ஷம் தந்தம் தக்ஷே வஹந் கரை:/
வாமே பாசம் கார்முகம் சலதாம் ஜம்பூத்யதத் கரை:/
ரக்தாம் சுகஸ் ஸதா பூயாத் துர்க்கா கணபதிர் முதே//



உருக்கிய பசும்பொன்னிறம், எட்டுக்கை, பெரிய மேனி, அங்குசம், பாணம், அட்சமாலை, தந்தம் இவைகளை வலது கைகளிலும், பாசம், வில், கொடி, நாவற்பழம் இவைகளை இடது கைகளிலும் உடையவர். செந்நிற ஆடையர்.

32. சங்கடஹர கணபதி

பாலார்க்க அருணகாந்திர் வாமே பாலாம் வஹந் அங்ககே।
லஸத் இந்தீவர ஹஸ்தாம் கௌராங்கீம் ரத்ன சோபாட்யாம்।
தட்சே அங்குச வரதானம் வாமேபாசம்ச பாயஸம் பாத்ரம்।
நீலாம்சு கலஸமாந: பீடே பத்மாருணேதிஷ்டன்।
சங்கட ஹரண: பாயாத் சங்கட பூகாத் கஜாநநோ நித்யம்:॥



இளஞ்சூரியன் போன்ற நிறத்தோடு, இடப்பாகத் தொடையில் அம்மையை உடையவர். அம்மை பொன்னிற மேனியளாக நீலப் பூவை ஏந்தியவளாக இருப்பள். வலது கையில் அங்குசம், வரதம் உடையவர். இடது கையில் பாசம், பாயச பாத்திரம் ஏந்தியவர். செந்தாமரைப் பீடத்தில் நிற்பவர். நீலநிற ஆடை அணிந்தவர்.

(**குறிப்பு :-** இந்த 32 கணபதி தியானம் மற்றும் வடிவங்கள் தவிர, பிங்கள கணபதி, புவன கணபதி, சக்தி கணபதி, பஞ்சபூத கணபதி, மூக்ஷிக கணபதி, மூலாதார கணபதி, சித்தி புத்தி கணபதி, வல்லபை கணபதி, வாதாபி கணபதி இவற்றோடு தற்காலத்தில் சர்ப விநாயகர், கண் திருஷ்டி விநாயகர் எனும் பல விநாயகர் திருமேனிகள் உலா வந்துள்ளன. மேலும், விநாயகப் பெருமானுக்குரிய தலங்கள், உபாசனை, விரதம், ஹோமம், பலன் இவைகளை ஷி ஆதீன வெளியீடாகிய ''கணபதி'' (எண் : 100) எனும் நூலில் காண்க).

கணபதி யந்திரங்கள்



கணபதி யந்திரம்



ஸ்ரீமகாகணபதி யந்திரம்

கணபதி யந்திரங்கள்



கணபதி யந்திரம் (வேறுவகை)


।।श्रीश्री लक्ष्मी गणेश महायंत्रम।।

ஸ்ரீஸ்ரீ லக்ஷ்மி கணேச மகாயந்திரம்

கணபதி யந்திரங்கள்



கணபதி யந்திரம்



கணபதி யந்திரம்

கணபதி யந்திரங்கள்


வம் வம்
ஹ்ரா
ஓம்
ஸ்ரீம்
ந
ஓம்
மோ
க
ண
ஏலஏல

கணேச ஸித்திலட்சுமி மஹாயந்திரம்



மூக்ஷிக வாகன யந்திரம்

முருகன் திருமேனிகள்

1. சக்திதரர்

ஏகாஸ்யம் த்விபுஜம் வாமே வஜ்ரம் தக்ஷிணஜேகரே /
இச்சாஜ்ஞான க்ரியசக்தி ரூபம் சக்தி தரம் பஜே //

- குமார தந்திரம்.

ஏகவக்த்ரம் த்விநேத்ரம் ச ஜடாமகுட ஸம்யுதம் /
ச்வேதார்க்க புஷ்பமாலம் ச ஹேமரத்ந கிரீடினம் //
சதுர்புஜை: வஜ்ரசக்தி குக்குடாபய தாரிணம் /
திவ்ய கந்தா நுலிப்தாங்கம் சுக்லயக்ஞோப வீதிநம் //

- ஸ்ரீதத்வநிதி.



குமார தந்திரம் நூலில் - ஒரு முகம், இரு கைகள், வலது கையில் சக்தி, இடது கையில் வச்சிரம், இவற்றோடு விளங்குபவர். இவர் கையிலுள்ள சக்தி - இச்சை, ஞானம், கிரியை என்ற மூன்றையும் வடிவாகக் கொண்டது.

ஸ்ரீ தத்வ நிதி நூலில் - ஒரு முகமும், இரு கண்களும், நான்கு கைகளும், இவற்றில் சக்தி, குக்குடம், வச்சிரம், அபயமும், சடாமகுடமும், வெள்ளெருக்கம்பூ மாலையும், சந்தனப் பூச்சும், வெண்பூணூலும் கொண்டு விளங்குபவர். இவரை ஞானசக்தி சுப்பிரமணியர் என்று நூல் கூறுகிறது.

தணிகை புராணத்தில் - ஒரு கையில் வேலை ஏந்தி மற்றொரு கையைத் தொடைமீது வைத்திருக்கிறார் என்று கூறுகிறது. இவரது பெயர் ஞானசக்திதரர் எனக் குறிப்பிடுகிறது.

2. கந்தசுவாமி

கல்பத்ருமம் ப்ரணமதாம் கமலாருணாபம் ஸ்கந்தம் புஜத்வய
மநாமயம் ஏகவக்த்ரம் ।
காத்யாயநீ சுதம் அஹம் கடிபத்த வாமம் கௌபீந
தண்டதரம் தட்சிணஹஸ்தம் ஈடே ॥

- குமாரதந்திரம்.

சதுர்புஜம் த்விநேத்ரம் ச ச்வேத பத்மாஸநஸ்திதம் ।
குக்குடாபய வஜ்ராணி தததம் வரதம் கரே ॥
கிஞ்சித் கேச சிகாபத்த புஷ்ப மாலாபி ராவ்ருதம் ।
தூம்ர வர்ணப்ரபம் ஸ்கந்தம் பிரபாமண்டல மண்டிதம் ॥

- ஸ்ரீதத்வநிதி.



குமார தந்திரம் நூலில் - ஒரு முகமும், இரு கரமும், அவற்றுள் ஒன்றில் தண்டம் ஏந்தி மற்றொரு கையை இடுப்பில் வைத்துக் கொண்டு, கோவணம் உடுத்திக்கொண்டு செந்தாமரை போன்ற நிறத்துடன் நின்ற திருக்கோலத்தில் காட்சி அருளுபவர். இது பழனியாண்டவர் திருக்கோலமாகும்.

ஸ்ரீதத்வநிதி நூலில் - ஒரு முகமும் இரு கண்களும் நான்கு கைகளும் உடையவர். கைகளில் குக்குடம். அபயம், வச்சிரம், வரதம் இவற்றைத் தாங்கி வெண்தாமரை மலரில் வீற்றிருப்பவர். மயிர் முடியில் கட்டப் பெற்ற பூமாலையையுடையவர். மேகலை, ஆடை இவற்றை உடுத்தியவர். மணியணிகளைப் பூண்டவர். வட்ட ஒளியோடு கூடிய புகை நிறத்தை உடையவர் என்று கூறுகிறது.

3. தேவசேனாபதி

நௌம்யாதித்ய ப்ரதீப்தம் த்விதசநயநகம் ஷண்முகம் மந்தஹாஸம்
வாமாங்கே ஸ்வாதிதாய: ஸரஸிந்ஹேத்ருதாலிங்கிதாய: ப்ரியாயா:/
உத்துங்கோருஸ்தநாக்ரே விஹிதகரதலம் பீதிகோடாதி சூலஹ்ராதிந்யுத்தீப்த
சக்தீஷ் வஸந கந கதா குக்குடாப்ஜேஷு ஹஸ்தம் //

- குமாரதந்திரம்.

ஏகவக்த்ரம் த்விநயநம் சங்கசக்ர வராபயான்/
ஸர்வாபரண ஸம்யுக்தம் திவ்ய கந்தாநு லேபனம்//
ச்யாமவர்ணம் ப்ரபும் சைவ சுக்ல யக்ஞோபவீதினம்/
சுஸ்மிதம் சாருவதநம் தேவசேநாபதிம் பஜே//

- ஸ்ரீதத்வநிதி.



குமார தந்திரம் நூலில் - ஆறுமுகம், பன்னிரண்டு கண், பன்னிரண்டு கை ஆகிய இவற்றோடு தாமரையைத் திருக்கரத்தில் ஏந்திய தேவியைத் தொடையின்மீது உட்கார வைத்து அணைத்துக் கொண்டு அபயம், வரதம், சூலம், கேடகம்,வச்சிரம், தனுசு, கதை, மணி, குக்குடம், பாணம், தாமரை இவற்றை பதினொரு திருக்கரங்களில் உடையவராக விளங்குபவர்.

ஸ்ரீதத்வநிதி நூலில் - ஒருமுகம், இரு கண், அபயம், வரதம், சங்கம், சக்கரம் இவற்றைத் தாங்கிய நான்கு கைகள், கருநிறம் இவற்றை உடையவராக அணிகள் பல பூண்டு வெண்ணூல் அணிந்து, சந்தனப் பூச்சுடன் புன்முறுவலோடு விளங்குபவர் என்று கூறுகிறது.

4. சுப்பிரமணியர்

சிந்தூராருணம் இந்து காந்தி வதநம் கேயூர ஹாராதிபி :
திவ்யை: ஆபரணை: விபூஷித தநும் ஸ்வர்க்காதி சௌக்யப்ரதம் /
அம்போஜாபய சக்திகுக்குடதரம் ரக்தாங்க ராகாம் சுகம்
ஸுப்ரஹ்மண்யம் உபாஸ்மஹே ப்ரணமதோ பீதிப்ரணா சோத்யதம் //

ஏகவக்த்ரம் த்விர்தோர் தண்டம் கடிபத்தாபயான்விதம் /
தருணருண ஸங்காசம் ஸுப்ரஹ்மண்யம் உபாஸ்மஹே //

- குமாரதந்திரம்.



குமார தந்திரம் நூலில் - குங்கும நிறமும், நிறைமதி போலும் முகமும், தாமரை, அபயம், சக்தி, குக்குடம் இவற்றைத் தாங்கிய நான்கு கரங்களும், செஞ்சந்தனப் பூச்சும், செம்பட்டாடையும், கேயூரம், ஆரம் இவற்றையும் உடையவராக விளங்குபவர்.

மற்றொரு வகையாக - ஒரு முகமும், இரு கைகளும், ஒரு கை அபயமாகவும், ஒரு கை இடுப்பிலும் வைத்துக்கொண்டு இருப்பவர். சூரியன் போன்ற ஒளியுடையவர்.

5. கஜவாகனர்

ஏகாநநம் த்விநயனம் வரகுக் குடஞ்ச
வாமத்வயே நிசித சக்த்யபயத்வயஞ்ச/
பிப்ராணம் ஈசுவரசுதம் தபநாயு தாபம்
நித்யம் நமாமி கஜவாஹநம் இஷ்டசித்த்யை //

- குமார தந்திரம்.



குமார தந்திரம் நூலில் - ஒரு முகம், இரு கண், வலது கை இரண்டிலும் குக்குடம், வரதம், இடது கை இரண்டிலும் சக்தி, அபயம் இப்படியாக யானை வாகனத்தின் மேல் விளங்குபவர்.

தணிகைப் புராணம் - இடக்கைகளில் வரதமும் குக்குடமும், வலக்கைகளில் வேலும் வாளும் ஏந்தியிருப்பதாகக் கூறுகிறது.

6. சரவணபவர்

சக்திம் கண்டாம் த்விஜ சரஸிஜே குக்குடம் பாசதண்டம்
டங்கம் பாணம் வரதம் அபயம் கார்முகஞ் சோத்வ ஹந்தம்।
பீதம் ஸௌம்யம் த்விதச நயநம் தேவ சங்கை ரூபாஸ்யம்
ஸத்பி: பூஜ்யம் சரவணபவம் ஷண்முகம் பாவயாமி॥

- குமாரதந்திரம்.

ஷட்புஜம் சைகவதனம் பாலசூர்ய சமப்ரபம்।
ஸர்வாபரண சம்யுக்தம் சிம்ஹஸ்தம் தததம் பஜே॥
த்ரிநேத்ரம் பசிதோத்தூலம் புஷ்பபாணேக்ஷு கார்முகம்।
கட்கம் கேடஞ்ச வஜ்ரம் ச குக்குடத்வஜ தாரிணம்॥

- ஸ்ரீ தத்வநிதி.



குமார தந்திரம் நூலில் ஆறுமுகங்களும், பன்னிரண்டு கண்களும், அபயம், வரதம், சக்தி, மணி, துவஜம், பத்மம், குக்குடம், பாசம், தண்டம், டங்கம் (உளி), பாணம், தனுசு இவற்றை ஏந்திய பன்னிரண்டு கைகளும், மஞ்சள் நிறத்தோடு அன்றலர்ந்த தாமரை போன்ற திருமுகங்களை உடையவர் என்று கூறப்பட்டுள்ளது.

ஸ்ரீதத்வநிதி நூலில் ஒரு முகத்தையும் ஆறு திருக்கரங்களையும், மூன்று கண்களையும்.உடையவராக உதயசூரியன் போன்ற நிறத்தோடு கைகளில் புஷ்பபாணம், கரும்புவில், கட்கம், கேடகம், வச்சிரம், குக்குடம் இவற்றை ஏந்தி செந்நிறத்தோடும், விபூதிப் பூச்சோடும், சிங்க வாகனத்தில் விளங்குபவர் என்று குறிக்கப்பட்டுள்ளது.

7. கார்த்திகேயர்

வரத குலிச கேடம் வாமஹஸ்த த்ரயேண
ததமபய சக்திம் கட்கம் அன்யத்ரயேச/
தருணாரவி ஸமாபம் ஸாதுபி: பூஜ்யமாநம்
கமலவதன ஷட்கம் கார்த்திகேயம் நமாமி//

- குமாரதந்திரம்.

த்ரி நேத்ரம் தசஹஸ்தஞ்ச மஸ்தகே வில்வ தாரிணம்/
சக்திம் சூலம் ததாசக்ரம் அங்குசாபய மந்யகே//
மயூர வாகனாருடம் ஸர்வாபரண பூஷிதம்/
பால ஸூர்ய ப்ரதிகாசம் கார்த்திகேயம் சிவாத்மஜம்//

- ஸ்ரீதத்வநிதி.



குமாரதந்திரம் நூலில் - ஆறு முகங்களும், ஆறு தோளும், அபயம், வரதம், வச்சிரம், கேடகம், சக்தி, கட்கம் இவற்றைத் தாங்கிய ஆறு கரங்களும், மத்தியான சூரியன் போன்ற நிறமுடன் விளங்குபவர்.

ஸ்ரீதத்வநிதி நூலில் - ஒரு முகம், மூன்று கண், சூலம், சக்கரம், சக்தி, அங்குசம், அபயம் இவற்றைத் தாங்கிய வலக்கரங்கள் தோமரம், பாசம், சங்கம், வச்சிரம், வரதம் இவற்றை ஏந்திய இடக்கரங்களை உடையவராகவும், உதய சூரியனை ஒத்த நிறத்தோடு தலையில் வில்வமாலையணிந்து மயில் வாகனத்தில் வீற்றிருப்பவர்.

8. குமாரர்

ஸவ்யத்வயே நிசித சக்த்யஸிமாததாநம்/
வாமத்வயே பிமதகுக்குட கேடகம் த்வாம்/
வள்ளீபதீம் விபுதலோசன பூர்ண சந்திரம்/
கல்யாணதாந நிரதம் கலயே குமாரம்//

- குமாரதந்திரம்.

சதுர்புஜம் சைக வக்த்ரம் கரண்ட மகுடாந்விதம்/
சக்திம் சாபயதம் தட்சே ஸவ்யே வரத வஜ்ரகே/
பத்ம புஷ்பதரம் கண்டே தேவம் பாலஸ்வருபகம்//

- ஸ்ரீ தத்வநிதி.



குமாரதந்திரம் நூலில் - ஒரு முகமும் நான்கு கைகளும் உடையவர். வலக்கையிரண்டிலும் கூர்மையான சக்தியையும் தாங்குபவர். இடக்கையிரண்டிலும் குக்குடம், கேடகம் ஆகிய இரண்டையும் ஏந்தியவர். வள்ளி தேவியோடு கூடியவர்.

ஸ்ரீதத்வநிதி நூலில் - ஒரு முகம், நான்கு கை, கரண்ட மகுடம் உடையவர். வலது கைகளில் சக்தியையும், அபயத்தையும் உடையவர். இடது கைகளில் வரதத்தையும் வச்சிரத்தையும் உடையவர். தாமரைப்பூ மாலையைக் கழுத்தில் தரித்திருப்பவர். குழந்தை வடிவினர். செந்நிறத்தினர்.

9. சண்முகர்

வந்தே சிந்தூர காந்திம் சரவிபிநபவம் ஸ்ரீமயூராதிருடம்
ஷட்வக்த்ரம் தைவசைந்யம் மதுரிபுதநயா வல்லபம் த்வாதசாக்ஷம் /
சக்திம் பாணம் க்ரபாணம் த்வஜமபிச கதாஞ்சாபயம் ஸவ்யஹஸ்தே
சாபம் வஜ்ரம் ஸரோஜம் கடகம்ஷுவரம் சூலமன்னயர் ததாநம் //

- குமாரதந்திரம்.

சக்திம் சரஞ்ச கட்கஞ்ச சக்ரம் பாசாபயௌ ததா
குக்குடஞ்ச தநு: கேடம் சங்கம் தத்தே ஹலம் வரம்
மயூரவாஹநோபேதம் ஸர்வலக்ஷண ஸம்யுதம்
ஜயா ச விஜயா சைவ வாமதக்ஷிண பார்ச்வயோ:
சர்வாலங்கார சம்யுக்தம் ஸர்வாபரண பூஷிதம்
ஷண்முகச் சேதி விக்யாதம் ....

- ஸ்ரீ தத்வநிதி.



குமாரதந்திரம் நூலில் - ஆறு முகமும், பன்னிரண்டு கண்களும், பன்னிரண்டு கைகளும் உடையவர். குங்கும நிறத்தினர். மயில் வாகனத்தில் வீற்றிருப்பவர். வலது கைகளில் சக்தி, பாணம், கட்கம், துவஜம், கதை, அபயம் இவற்றையும் இடது கைகளில் வில், வச்சிரம், தாமரை, கேடகம், சூலம், வரதம் இவற்றையும் தாங்கியவர்.

ஸ்ரீதத்வநிதி நூலில் - சக்தி, சரம், கட்கம், சக்கரம், பாசம், அபயம் இவற்றை வலது கைகளிலும், குக்குடம், தனுசு, கேடகம், சங்கம், கலப்பை, வரதம் இவற்றை இடது கைகளிலும் உடையவர். மயில் வாகனத்தில் எழுந்தருளியிருப்பவர். சயை, விசையை இரு தேவிகளையும் (செவிலியர்கள்) இருமருங்கும் உடையவர். அணி ஆடைகளோடும் செந்நிறமும் உடையவர். இப்படி விளங்குபவராகத் தியானிக்க என்கிறது. தேவிகள் நின்ற கோலமாக இருப்பவர்.

10. தாரகாரி

வரதம் அங்குச வல்லீச கடகௌ சாபவஜ்ரமபய
பாச சக்ர கட்கம் முஸல சக்தி மந்வஹம்।
த்விதச பாணிபி: ததானம் அருணகோடி சந்நிபம்
பஜத தாரகாரிம் மித்ரபவ விநாச காரணம்॥

- குமாரதந்திரம்.

ஏகவக்த்ரம் த்ரிநயநம் கஜப்ருஷ்டோபரி ஸ்திதம்।
ஷட்கரம் சாபயம் கட்கம் சக்திம் வாமேதரேததன்॥
கேடகம் சாட்சமாலாஞ்ச குக்குடம் வாமஹஸ்தகே
தாரகாரீம் பஜே க்யாதம் ....

- ஸ்ரீ தத்வநிதி.



குமாரதந்திரம் நூலில் - கோடி சூரியன் போன்ற பிரகாசம் உடையவராய், பன்னிரண்டு கைகளிலும் முறையே - வரதம், அங்குசம், வல்லி, கடகம், வில், வச்சிரம், அபயம், பாசம், சக்கரம், கட்கம், உலக்கை, சக்தி இவற்றைத் தாங்கியவராகவும் விளங்குபவர்.

ஸ்ரீதத்வநிதி நூலில் - ஒரு முகமும் மூன்று கண்களும் ஆறு கரங்களும் உடையவராக, யானை வாகனத்தில் வீற்றிருப்பவர். வலது கைகளில் அபயம், கட்கம், சக்தி இவற்றைத் தரித்திருப்பவர். இடது கைகளில் கேடகம், அட்சமாலை, குக்குடம் இவற்றைத் தரித்திருப்பவர். செந்நிறத்தினர் என்று குறிப்பிடுகிறது.

11. சேனானி

அபயமஸி ரதாங்கம் சாங்குசம் சக்தி சூலம்
வரத குலிச பாசம் பத்ம தண்டம் கதாம்ச/
தததம் உபயபட்சே த்வாதசாயாம ஹஸ்தை:
த்விதச கமலநேத்ரம் தேவசேநாந்யமீடே //

- குமார தந்திரம்



குமாரதந்திரம் நூலில் - பன்னிரண்டு கண்களும், ஆறு முகங்களும் உடையவர். பன்னிரண்டு கைகளிலும் முறையே அபயம், கத்தி, சக்கரம், அங்குசம், சூலம், சக்தி, வரதம், வச்சிரம், பத்மம், பாசம். தண்டம், கதை இவற்றை உடையவராக விளங்குபவர்.

12. பிரமசாஸ்தா

வாமே கரேச யுகலே வரகுண்டிகேச ஸவ்யே Sக்ஷசூத்ரமபயம் விசாகம்/
வல்யாயுதம் வநஜ லோசனம் ஏகவக்த்ரம் வந்தேமஹே வநஜஸம்பவ சாஸிதாரம்//
- குமார தந்திரம்.



குமாரதந்திரம் நூலில் - இடது கைகளில் வரம், குண்டிகை இவற்றையும், வலது கைகளில் கங்கணங்கள் அணிந்து அட்ச சூத்திரம், அபயம் இவற்றையும் உடையவர். அலர்ந்த செந்தாமரை போன்ற ஒரு முகத்தையும் இரு கண்களையும் உடையவர். இவரே பிரமனைக் குட்டிச் சிறையிருத்தும் கோமானாவர்.

13. வள்ளி கல்யாணசுந்தரர்

ஹஸ்த த்வந்த் வேSக்ஷமாலாம் அபயமபித்ருதம் குண்டிகாயாம் ச்ரோணிபந்தம்
ஸவ்யே வாமே நிஷண்ண சிரவத்ருத விதிநாபூயமாநே நயுக்தம் /
ஸர்வாலங்காரயுக்தம் ஜலகலச த்ருதா விஷ்ணுநா சாருணாபம்
வல்லீ கல்யாண மூர்த்திம் ஸகல சுரகணை: ஸ்தூயமாநம் ப்ரபத்யே //

- குமாரதந்திரம்.



குமாரதந்திரம் நூலில்: - வலது கைகளில் பின்னுள்ள கையில் அட்சமாலை ஏந்தியும், முன்னுள்ள கை அபயமாகவும், இடது கைகளில் முன்னது இடுப்பிலும், பின்னது கமண்டலம் ஏந்தியும் விளங்க, வள்ளி தேவியுடன் ஆபரணங்களோடும், பீதாம்பரங்களோடும் வீற்றிருப்பவர். இவர் எதிரில் பிரம்மா மணச்சடங்கு செய்கிறார். விஷ்ணு கையில் நீர்ச்சொம்புடன் தாரை வார்க்கச் சித்தமாக இருக்கிறார். சிவனும் பார்வதியும் ஆசி வழங்குகிறார்கள். இந்திரன் முதலிய தேவர்கள் சூழ நின்று களிக்கின்றனர். முருகன் செந்நிறம், வள்ளியம்மையார் கருநிறம்.

14. பாலசுவாமி

பத்ம ஸவ்ய கடியுதவாமம் பத்மகாந்தி நிபம் ஏகமுகஞ்ச।
பால வ்ருத்திகரம் ஈச்வர சூநும் பாலம் உந்நத புஜம் ப்ரணதோऽஸ்மி॥

ஏகவக்த்ரம் த்ரிநயநம் பத்மத்வயகரத்வயம்।
விப்ரப்ரிய கரம் வந்தே பாலரூபம் ரவிப்ரபம்॥

- குமாரதந்திரம்.



குமாரதந்திரம் நூலில் - ஒரு முகத்தோடு வலது கையில் தாமரை விளங்க, இடது கை இடுப்பிலிருக்க உயர்ந்த தோளுடனும் செந்தாமரை போன்ற நிறத்துடனும் விளங்குபவர்.

மற்றொரு வகையாகவும் கூறுவர். ஒரு முகத்தோடும் இரண்டு கண்களோடும் இரு தாமரையை ஒரு கைகளிலும் ஏந்தி, இளஞ்சூரியன் போன்ற நிறத்துடன் விளங்குபவர்.

15. கிரவுஞ்ச பேதனர்

அபயசித க்ருபாணம் சக்திபாணம் ச சவ்யை:
வரத குலிச சாபம் கேடகம் சான்ய ஹஸ்தை/
தததம் அமரசேநா நாயகம் சாஷ்டபாகும்
கமலவதந ஷபகம் க்ரௌஞ்ச பேத்தாரம் ஈடே //

- குமார தந்திரம்.

சதுர்புஜம் த்ரிநேத்ரஞ்ச ஸ்திதம் சிம்ஹாஸநோபரி/
வரதாபய ஸம்யுக்த புஷ்ப பாணே க்ஷு கார்முகம் //

மயூர வாஹநாரூடம் நமஸ்யே ரக்ஷணோன்முகம்/
கிரௌஞ்ச பேத கரத்வந்த்வம் க்ரௌஞ்ச பேதிஸ்வரூபகம் //

-ஸ்ரீதத்வநிதி.



குமாரதந்திரம் நூலில்: - ஆறு முகமும், எட்டு கைகளும் உடையவர். வலது கைகளில் அபயம், கத்தி, சக்தி, பாணம் இவற்றையும், இடது கைகளில் வரதம், குலிசம், வில், கேடகம் இவற்றையும் ஏந்தி இருப்பவர்.

ஸ்ரீதத்வநிதி நூலில்: - செந்நிறத்தோடு மூன்று கண்களும், ஒரு முகமும், வரதம், அபயம், மலரம்பு, கரும்பு வில் இவற்றை ஏந்திய நான்கு திருக்கரங்களும் உடையவராய் சிம்மாசனத்தில் வீற்றிருப்பவர்.

இதில் மற்றொரு வகை - தேவர்களைக் காத்தருளும் முயற்சியுடன், மயில் வாகனத்தின் மேல், இரு கைகளிலும் வேல் கொண்டு கிரவுஞ்ச மலைத் துளைக்கும் தோற்றமுடன் விளங்குபவர்.

16. சிகிவாகனர்

வித்ரும ப்ரபம் ஏகமுகம் விபும் வஜ்ரசக்தி வரதாபய பாணிநம் /
தேவலோகரி புக்நம் அவிக்நதம் நௌமி ருத்ரபவம் சிகிவாஹநம் //

- குமாரதந்திரம்.



குமாரதந்திரம் நூலில் - ஒரு முகம் உடையவராய், நான்கு கைகளிலும், வச்சிரம், சக்தி, வரதம் அபயம் இவைகளை ஏந்தி, பவழ நிறமாக, அசுரர்களை வெற்றி கொண்டு, தேவர்களைக் காத்தருளுகின்ற பாவனையில், மயில் வாகனத்தில் எழுந்தருளியிருப்பவர். இந்தத் திருமேனிக்கு மேலும் ஏழு விதமான வடிவங்கள் உள்ளன என்று குமாரதந்திரம் படலம் - 2ல் காணப்படுகிறது.

17. அக்கினிஜாதர்

த்விமுகம் சாஷ்ட பாஹுஞ்ச ச்வேதஞ்ச ச்யாமகந்தரம்/
ஸ்ருவாட்ச மாலாம் கட்கஞ்ச ஸ்வஸ்திகம் தட்சிணேகரே//
குக்குடம் கேடகம் வஜ்ரம் ஆஜ்யபாத்ரந்து வாமகே/
அக்நி ஹோத்ரவிதிம் தேவம் அக்நிஜாதஸ்வரூபகம்//

- ஸ்ரீதத்வநிதி.

ஸ்ரீ தத்வநிதி நூலில்: - இரண்டு முகமும் எட்டுக் கரங்களும், வெள்ளை நிறமும், கரிய கண்டமும் உடையவர். பின்பக்கம் உள்ள நான்கு கரங்களில் சுருவம், அட்சமாலை, கட்கம், சுவஸ்திகம் இவற்றைத் தாங்கியவர். முன் நான்கு கரங்களில் வச்சிரம், குக்குடம், கேடகம், நெய்க்கிண்ணம் இவற்றை ஏந்தியவர். தெய்வீக யாகாக்கினியை வளர்ப்பதற்கு உரிய முயற்சியுடன் நீல வர்ணமாக விளங்குபவர்.

18. சௌரபேயர்

சதுர்வக்த்ராஷ்டநயநம் புஜாஷ்ட கமலாசநம்/
குஞ்சிதம் வாமபாதஞ்ச சுஸ்திதம் தக்ஷிணம் பதம்//
சக்த்யுத்பலம் புஷ்பபாணம் அபயம் தக்ஷிணை: கரை:/
வஜ்ரம் சேக்ஷு தநு: சூலம் வரதம் வாமகைர்தரம்//
பத்ம புஷ்ப நிபம் சைவ சௌரபேயஸ்வரூபகம்......//

- ஸ்ரீதத்வநிதி.

ஸ்ரீதத்வநிதி நூலில் - நான்கு முகத்தோடும், எட்டு கைகளோடும், எட்டு கண்களோடும், தாமரை ஆசனத்து நின்ற கோலத்துடன் விளங்குபவர். வலக்கால் பூமியிலும், இடக்கால் சிறிது வளைந்தும் இருக்கும். வலது கைகளில் சக்தி, நீலோத்பலம், மலரம்பு, அபயம் இவைகளும், இடது கைகளில் வச்சிரம், கரும்புவில், சூலம், வரதம் இவைகளும் காட்சியளிக்கும். செந்தாமரை போன்ற நிறம் உடையவர்.

19. காங்கேயர்

ஏகவக்த்ரம் த்ரிநயனம் தாடிமீ குஸுமபிரபம்/
கரண்ட மகுடோபேதம் குக்குடத்வஜ தாரிணம்//
நீலோத்பலதரம் வந்தே மகராடே மவ்யயம்//

பரசும் பூர்ண கும்பம் ச சவ்யஹஸ்தேஷு தாரிணம்/
அரணிம் குக்குடம் வாமே காங்கேய சமரூபகம்//

- ஸ்ரீதத்வநிதி.

ஸ்ரீதத்வநிதி நூலில்:- ஒரு முகமும், மூன்று கண்ணும், நான்கு கரங்களும், தலையில் கரண்ட மகுடமும் உடையவர். வலது கரங்களில் பரசும் பூர்ண கும்பமும், இடது கைகளில் அரணிக் கட்டையும், கோழிக் கொடியும் ஏந்தியிருப்பர். மகர வாகனமுடையவர். செந்நிறம் உடையவர்.

அல்லது ஒரு கையில் நீலோற்பலமும், மறு கரத்தில் கோழிக்கொடியும் தாங்கி மகரவாகநராக தியானிக்க.

20. குகர்

சதுர்புஜம் த்ரிநேத்ரஞ்ச ஹேமரத்நகிரீடினம் /
சூலம் வரம் தரம் சவ்யே வஜ்ராபயகம் அந்யகே //
ச்வேத வஸ்த்ரதரம் தேவம் ஸர்வேஷாம் ரக்ஷணோன்முகம் /
ஜாயயா வாமபார்ச்வேது கல்யாணோத்ஸவ விக்ரகம் //
பாதாம்புஜம் ஹ்ருதிக் யாத்வா குஹரூபம் சமாச்ரயே /
ச்யாம வர்ண: .... //

- ஸ்ரீதத்வநிதி.

ஸ்ரீ தத்வநிதி நூலில் - ஒரு முகமும், மூன்று கண்ணும், நான்கு கையும், தலையில் இரத்தின கிரீடமும் உடையவர். வலது கைகளில் வச்சிரமும், சூலமும், இடது கைகளில் வரதமும், அபயமும் கொண்டு திகழ்பவர். இடது பாகத்தில் மனைவியோடு கல்யாண கோலத்துடன் விளங்குபவர். கரு நிறமும், வெள்ளியாடையும் உடையவர்.

21. பிரமசாரி

த்விநேத்ரம் த்விபுஜம் சைவபால சூர்யதரம் ப்ரபும் /
தக்ஷபாகே தண்டஹஸ்தம் வஜ்ரம் வா ஊருஹஸ்தகம் //
ஸவ்யாப ஸவ்ய பாதந்து ஸ்திதம் வாகுஞ்சிதந்து வா /
சிகாயக்ஞோப வீதாட்யம் மௌஞ்சீ கௌபீந ஸம்யுதம் //
மேகலோபரி ஓட்யாணம் ரக்தபத்மோபரி ஸ்திதம் /
திவ்ய ரூபதரம் தேவம் ப்ரம்ஹசாரிண மாச்ரயே //

- ஸ்ரீதத்வநிதி.

ஸ்ரீ தத்வநிதி நூலில் - ஒரு முகமும், இரண்டு கண்ணும், இரண்டு கையும் உடையவர். தலையில் அழகிய குடுமியும், மார்பில் பூணூலும், இடையில் முஞ்சிப் புல்லாலான அரைஞாணும் உடையவர். மரவுரி ஆடையும் (இடக்கரம் ஊருஹஸ்தமாகவும் விளங்கலாம்), வலக்கையில் தண்டமும், இடக்கையில் வச்சிரமும் உடையராய், செந்நிறத்தராய், தாமரை மீது வலக்காலும், இடக்கால் சிறிது வளைந்தும் நின்ற திருக்கோலமாய்க் காட்சியளிப்பவர்.

22. தேசிகர்

ஷட்புஜம் சைகவதநம் கரண்ட மகுடாந்விதம் /
சக்தி ஹஸ்த த்வயம் சைவ ஜபமால தாரம் சுபம் //
மயூர வாஹநாருடம் வராபய கராம்புஜம் /
இத்யேவம் விதிவத் த்யாயேத் சிவதேவஸ்ய தேசிகம் //

- ஸ்ரீதத்வநிதி.

ஸ்ரீதத்வநிதி நூலில் - ஒரு முகமும், ஆறு கைகளும், கைகள் இரண்டில் சக்தியும், ஏனைய கைகளில் அட்ச மாலையும், வரதமும், அபயமும், சின்முத்திரையும் விளங்க சிவன் எதிரில் மாணவராகக் கைகட்டி வாய்புதைத்து நிற்க, பிரணவ உபதேசம் செய்பவர்.

மானசாரம் எனும் சிற்ப நூலில் - எதிரில் நிற்கும் சிவபெருமான் இடது கையை மார்போடு அணைத்து வலது கையால் வாயைப் புதைத்து, ஏனைய இரு கைகளிலும் உடுக்கையும், மானும் விளங்க, தலையில் பிறைச்சந்திரன் பொலிய நிறைமதி போன்ற நிறத்துடன் விளங்குவார். பார்வதி இடப்பக்கத்தில் நிற்பார் எனத் தெரிவிக்கிறது.

23. முருகன் தேவிகள்

தேவிமார்கள் இருவரும் இரண்டு கண்களும், இரண்டு கரங்களும், ஒரு முகமும் உடையவர்கள். வலப்பக்கத்தில் தாமரை ஏந்திய கரத்துடன் கரு நிறமுடைய வள்ளியும், இடப்பக்கத்தில் கருங்குவளைப் பூ ஏந்திய தெய்வயானையும் விளங்குவர்.

குமாரதந்திரம் நூலில் - வள்ளியம்மையார் கருநிறமும் புன்முறுவல் பூத்த முகமும் உடையவராய், வலது காலை நேராக ஊன்றி, இடது காலை வளைத்து இருப்பர். இடக்கையில் தாமரையைப் பிடித்துக் கொண்டு வலது கையைத் தொங்கவிட்டிருப்பர். தெய்வானையம்மையார் சிவப்பு நிறத்துடன் புன்முறுவல் பூத்த முகத்துடன் இடக்காலையூன்றி, வலது காலைச் சிறிது வளைத்து, வலது கையில் கருங்குவளை ஏந்தி இடது கையைத் தொங்க விட்டுக் கொண்டிருப்பர்.



ஸ்ரீ தெய்வானை



ஸ்ரீ வள்ளி

(**குறிப்பு :-** இன்னும் பல முருகன் வடிவங்கள் மற்றும் தலங்கள், உபாசனை, யந்திரங்கள், மந்திரங்கள், விரதங்கள் அறிய ஷி ஆதீன வெளியீடாகிய ''முருகன்'' நூலில் விரிவாகக் காண்க).

முருகன் யந்திரங்கள்



பாலதண்டாயுதபாணி யந்திரம்

* * *

சதுர்புஜ சுப்பிரமணியர் யந்திரம்



முருகன் யந்திரங்கள்



ச	ர	ஹ	ண	ப	வ
வ	ச	ர	ஹ	ண	ப
ப	வ	ச	ர	ஹ	ண
ண	ப	வ	ச	ர	ஹ
ஹ	ண	ப	வ	ச	ர
ர	ஹ	ண	ப	வ	ச

பாலஷண்முக ஷடாக்ஷர யந்திரம்



லக்ஷ்மி
சரஸ்வதி
ஜெய
சாவித்ரி
துர்க்கா
சாந்தி
க்ஷமா
ஹ்ரீம்
ஹ்ற
ச
ர
ஹ
ண
ப
வ

பால ஷண்முக யந்திரம்

முருகன் யந்திரங்கள்



ஷண்முகர் யந்திரம்


வ
ஐம்
ஹ்ரீம்
ஸ்ரீம்
ஸ்ரீம்
ஹ்ரீம்
ஐம்

வள்ளி யந்திரம்

முருகன் யந்திரங்கள்



தெய்வானை யந்திரம்


ஶிவ
ஶிவ
ஶிவ
ஶிவ
ஶ
வ
ர
ண
ஹ
வம்

சுப்பிரமணியர் மாத்ருக யந்திரம்

முருகன் யந்திரங்கள்


ஸொ
ண
ஹ
வ
ர
வ
ஶ
ஹம்
ஸூம்
ஸம்
ஸ:

சுப்ரமணியர் அஜந்த மகாயந்திரம்
(அஜந்தம் என்பது உயிரெழுத்துக்கள் மட்டும்)


ரவம்
ஹ்ரீம்
ஸ்ரீம் ஶம்
ஹ
ண
வ
ஸௌ
வ
ஶ
ர
க்ரோம்
ஸூம்
ஹம்
ஸம்
ஸ:

சத்ரு சம்ஹார
ஸ்ரீ சுப்பிரமணியர் மாத்ருகா யந்திரம்

முருகன் யந்திரங்கள்



சுப்பிரமணியர் யந்திரம்


ஓம்
க்லீம்
ஹ்ரீம்
ஸ்ரீம்
ஸௌம்

உச்சிஷ்ட சரவணபவ யந்திரம்

62

முருகன் யந்திரங்கள்


ஹ்ரீம்
ஓம்
ச
ர
ய
ந
வ
வ
ப
ண
க்ஷ
ஸ
ப்ர
ம
ஹ
ரம்
ஹ்ரீம்
ஸ்ரீம்

ஸ்ரீஸுப்ரமண்ய த்யானம்

ஸிந்தூராருண இந்து காந்தி வதனம், கேயூர ஹாராதிபி:
திவ்யையர் ஆபரணையர் விபூஷித தனும், ஸவர்க்காதி ஸௌக்யப்ரதம்
அம்போஜாபய சக்தி குக்குட தரம், க்தாங்க ராகம் ஸுபம்
ஸுப்ரஹ்மண்ய உபாஸ்மஹே ப்ரண தாம் ஸர்வார்த்த ஸம் ஸித்திதம்.

சதாசிவ மூர்த்தி

சைவ சமயம், சிவனை மூன்று வகைகளிற் கூறுகின்றது. அவை அருவம், உருவம், அருவுருவம் என்பன. இவை முறையே நிட்களம், சகளம் சகள நிட்களம் என்றுங் கூறப்படும். வடிவில்லாததால் குறிப்பிட்ட வடிவத்தால் சுட்டிக் காட்ட முடியாதிருப்பது அருவத் திருமேனி என்று கூறப்படும். உருவத் திருமேனி என்பது வடிவு கொண்டு விளங்குவது. சந்திரசேகரர், சோமாஸ்கந்தர், தக்ஷிணாமூர்த்தி போன்ற சிவனின் மகேசுவர வடிவங்கள் உருவத் திருமேனிகளாகும். குறிப்பிட்ட உருவத்தினைக் குறிப்பிடாததால் அருவம் என்றும், ஒரு வடிவு கொண்டு விளங்குவதால் உருவம் என்றும் கருதப்படும் சிவனது வடிவம் அருவுருவத் திருமேனி எனப்படும். சதாசிவம் இலிங்கம் என்பன அருவுருவத் திருமேனியைக் குறிக்கும்.

சதாசிவமூர்த்தி மந்திரங்களால் உருவான அருவுருவ வடிவம். இது சிவனின் ஞானமயமான வடிவினைக் குறிக்கும். எல்லாவற்றிலும் மேலானதாகவும், சிறந்ததாகவும் உயரிய தத்துவங்களைக் கொண்டதாகவும், சாதாரண மக்களால் எளிதிற் புரிந்துகொள்ள முடியாத வடிவினையுடையதாகவும் சதாசிவ வடிவம் விளங்குகின்றது. சதாசிவனின் திருமேனியை வித்யா தேகம் என்று காமிகாகமமும், சப்தப்பிரம்ம ரூபம் என்று அஜிதாகமமும் கூறுகின்றன. ஆகமங்களிற் கூட இதன் முழு இயல்புகளும் விளக்கிக் கூறப்படவில்லை. மக்களாற் புரிந்து கொள்ள முடியாத சதாசிவ மூர்த்தியை மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் இதன் புறத் தோற்றம் பற்றியும், அதனை அமைப்பது பற்றியும் மூல நூல்களிற் கூறப்பட்டுள்ளன. அவற்றின் அடிப்படையில் சதாசிவ வடிவத்தினை பல வகைகளில் அமைக்கப்பட்டுள்ளமையினைக் காணலாம். சதாசிவனை ஒருமுகம், இரண்டு முகங்கள், ஐந்து முகங்கள், இருபத்து ஐந்து முகங்கள் எனப் பல கோலங் கொண்ட வடிவங்களாகவும், சிவனும் ஹரியும் இணைந்து ஐந்து முகங்கள் கொண்ட ஹரிஹர சதாசிவ வடிவாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். சதாசிவ வடிவம் சிவனுடைய மற்றைய வடிவங்கள் போன்று பொதுவாகக் கல், செம்பு என்பவற்றால் அமைக்கப்படுவதில்லை. அத்துடன் வழிபாட்டிலும் இவ்வடிவம் கோயில்களில் இடம் பெறுவதும் மிக அரிதே. கோபுரங்களில் சுதை வடிவில் சதாசிவ மூர்த்தியை அமைத்துள்ளமையைத் தமிழ்நாட்டுக் கோயில்களிற் காணலாம். சதாசிவ வடிவம் தியான வடிவமாகும். இவரை மனதில் நினைத்து தியானம் செய்யக் கூறப்பட்டுள்ள இருபாக்களில் சதாசிவ வடிவம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அப் பாக்கள் வருமாறுள்ளன.

உச்சிமுக மீசான மொளிதெளியப் பளிங்கே
யுத்தரபூ ருவதிசையை நோக்கியுறு முகத்தே
நிச்சயித்த முகத்தின்கீழ்ப் பூர்வதிசை நோக்கி
நிகழுமுகந் தத்புருடங் கோங்கலர்போ னிறமே
யச்சுறுத்து மகோரமுக மறக்கரிது கராள
மவிழ்தாடி வலத்தோளிற் றென்னோக்கி யமருஞ்
செச்சைநிறத் தெரிவைமுக மிடத்தோண்மேல் வாமஞ்
சிறுபுறத்தின் முகஞ்சத்தி யோசாதந் திகழ்பால்.

திருவுருவந் தெளி பளிங்கு சடா மகுடத் திதழி
சிறுபிறைவு மூவைந்து திருநயனம் வலப்பாற்
கரதலத்திற் சத்தியப யஞ்சூழ நீண்ட
கட்டங்கந் தமருகமு மற்றையிடக் கரத்தின்
வரதமுமா துளங்கபலம் போகி செப மாலை
மணமலிநீ லோற்பலமு முடையவர்வய தீரெட்
டுருவிரட்டி யுறுப்பிரண்டு பதம்பதுமா தனந்தா
னுறவிருப்பர் சதாசிவர்தத் துவதவிசி னுகந்தே.

சதாசிவன் நான்கு திசைகட்கும் நான்கு முகங்களும் உச்சியில் ஒரு முகமுமாக ஐந்து முகங்களையும் ஒவ்வொரு முகத்திற்கும் மும்மூன்று கண்களையும் உடையவர். உச்சியிலுள்ள ஈசானமுகம் ஈசான திசையை நோக்கியதாகவும், பளிங்கு நிறம் கொண்டதாகவும் இருக்கும். கிழக்கிலுள்ள தத்புருட முகம் கிழக்கு திசையை நோக்கி கோங்கம் பூ நிறத்தினைக் கொண்டதாகவும், தெற்கிலுள்ள அகோரமுகம் வலது தோள்மேல் தெற்கு நோக்கி, அவிழ்ந்த தாடியும் மிகுந்த கறுப்பும் விருத்தாப்பியமும் பயங்கரத் தோற்றத்தினையு முடையவதாகவும், வடக்கிலுள்ள வாமதேவமுகம் இடது தோள் மேல் வடக்கு நோக்கியதாக பெண்களின் முகம் போன்று சிவப்பு நிறமுடையதாகவும், மேற்கிலுள்ள சத்தியோசாதமுகம் மேற்கு நோக்கியதாகப் பால் நிறமுடையதாகவும் இருக்கும்.

சதாசிவன் சடாமகுடமுடையவராய் சந்திரனையும் கொன்றை மாலையையும் சூடியவராய்க் கழுத்தின் கீழ்ச் சுத்தப் பளிங்கு நிறம் போன்ற திருமேனியையும், வலது கரங்களில் வேல், அபயம், சூலம், மாத்திரைக்கோல், டமருகம் ஆகியனவற்றையும் இடது கரம் மாதுளம்பழம், நாகம், செபமாலை, நீலோற்பலம் என்பனவற்றை ஏந்தியதாகவும், முப்பத்திரண்டு உறுப்புக்கள் கொண்டவராய், இரண்டு பாதங்களும், பதினாறு வயதுடைய இளமை வாய்ந்தவராய் பத்மாசனத்தில் வீற்றிருப்பார் என்று சதாசிவ தியான சுலோகத்திற் சதாசிவனது வடிவம் கூறப்படுகின்றது.

வலது கரங்களிற் சூலம், மழு, வாள், வச்சிரம், அபயமுத்திரை என்பனவற்றை உடையவரென்றும் இடது கரங்களிற் பாம்பு, பாசம், அங்குசம், மணி, வரதமுத்திரை என்பனவற்றைக் கொண்டவர் என்றும் சதாசிவனைத் தியானிப்பதுண்டு. சதாசிவ மூர்த்தியின் வடிவத்தினைப் பற்றி, திருமந்திரத்தில் கீழ்வருமாறு குறிப்பிடப்படுகின்றது.

கூடிய பாதம் இரண்டும் படிமிசை
பாடிய கையிரண் டெட்டுப் பரந்தெழுந்
தேடு முகம் ஐந்து செங்கணின் மூவைந்து
நாடுஞ் சதாசிவ நல்லொளி முத்தே. - (திருமந்திரம், பா. 1730)

அஞ்சு முகமுள ஐம்மூன்று கண்ணுள
அஞ்சினோ டஞ்சு கரதலந் தானுள
அஞ்சுடன் அஞ்சா யுதமுள நம்பியென்
நெஞ்சு புகுந்து நிறைந்துநின் றானே. - (திருமந்திரம், பா. 1736)

சதாசிவ மூர்த்தியின் ஐந்து திருமுகங்களும் ஈசானம், தத்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்றும் பெயர்களைப் பெற்றிருந்தாலும் உண்மையில் இவ் ஐந்தும் பஞ்சப்பிரம்ம மந்திரம் என்றே சிவாகமங்களிற் குறிப்பிடப்படுகின்றன. பஞ்சப் பிரம்ம மந்திரத் திருமேனியாகவே சதாசிவனின் திருமேனி கூறப்படுகின்றது. இது சிவஞான சித்தியாரில் கீழ்வருமாறு கூறப்பட்டுள்ளது.

மந்திர மதனிற் பஞ்ச மந்திரம் வடிவமாகத்
தந்திரஞ் சொன்ன வாறிங் கென்னெனிற் சாற்றக் கேணீ

முந்திய தோற்றத்தாலு மந்திர மூலத்தாலு
மந்தமில் சத்தியாதிக் கிசைத்தலு மாகு மன்றே.

ஈசானம் முதலிய மந்திரங்கள் சிவனுக்குச் சிரம், முகம், இருதயம், குய்யம் (மறைவிடம்) திருவடிகள் என்பனவாகும் என்று கூறப்படுகின்றன. அதாவது ஈசான மந்திரத்தின் 5 கலைகளே சதாசிவ மூர்த்தியின் 5 சிரசுகள்; தத்புருட மந்திரத்தின் 4 கலைகளே 4 முகங்கள்; அகோர மந்திரத்தின் 8 கலைகளே அவரது இருதயம், கழுத்து, தோள்கள் (வலது இடது) நாபி, வயிறு, முதுகு, மார்பு என்னும் அங்கங்கள்; வாமதேவ மந்திரத்தின் 13 கலைகளே குய்யம், கோசம், தொடைகள், முழந்தாள்கள், கணைக்கால்கள், குதம், கடி, இடுப்பு எனும் அங்கங்கள், சத்தியோசாத மந்திரத்தின் 8 கலைகளே பாதங்கள். கைகள், மூக்கு, திருமுடி, புயங்கள் எனப்படும் அங்கங்கள். இவ்வாறு ஈசானம் முதலான மந்திரங்களினாலே தியான பூசை நிமித்தம் 38 கலாசக்திகளைக் கொண்ட திருமேனியாக பரிபூரணமாக அமைந்திருக்கும்.



சதாசிவமூர்த்தி



மகா சதாசிவர்

சதாசிவ மூர்த்தியை பஞ்ச பிரம்ம மந்திரத்தினால் தியானிக்கும்போது ஐந்து முகங்களும் தனித்தனியான முழு வடிவங்களாற் குறிக்கப்படும் அவையாவன:-

1. ஈசான மூர்த்தி

பளிங்கு நிறமுடையவர்; முக்கண்களைக் கொண்டவர்; ஞானச் சந்திரனைச் சடையிலணிந்தவர்; சூலம் அபய முத்திரை என்பனவற்றினைக் கரங்களில் ஏந்தியவர்; பார்வதியுடன் காணப்படுபவர்; அழகும் பிரசன்னமுமுள்ளவர்.

2. தத்புருட மூர்த்தி

பொன்னிறத்தையுடையவர்; பீதாம்பரத்தையும், உபவீதத்தையும், சடையில் இளம் பிறையையும் தரித்தவர். மாதுளங்கனி, உருத்திராக்ஷமாலை என்பனவற்றினைக் கரங்களில் ஏந்தி, கௌரியுடன் காணப்படுபவர்.

3. அகோர மூர்த்தி

முக்கண்களைக் கொண்டவர். திருமுடியில் சந்திரனைச் சூடியவர்; சாந்தத்தையும், குண்டலாலங்காரத்தையும் கொண்டவர். கீரி நிறமுடையவர்; புருவம், மீசை, தாடி, கேசம், பல் என்பனவற்றோடு உக்கிர முகத்தினைக் கொண்டவர். வலது கரங்களிற் சூலம், பரசு, வாள், தண்டம் என்பனவற்றினையும் இடது கரங்களிற் கட்டுவாங்கம், கபாலம், பரிசை, பாசம் என்பனவற்றினையும் ஏந்திக் கபாலம், பாம்பு, விருச்சிகம் என்பவற்றை ஆபரணங்களாகச் சூடியவர்; சத்துருக்களை அழிப்பவர்; சூல்கொண்ட முகில் போன்ற நிறமுள்ள கங்கையுடன் கூடியவர்; இட்ட சித்திகளைக் கொடுப்பவர்.

4. வாமதேவ மூர்த்தி

சிவந்த நிறத்தவர், நறுமணம் பொருந்திய மாலை, வஸ்திரம், உபவீதம் என்பனவற்றினையும், உயர்ந்த மூக்கையும், சிவந்த தலைப்பாகையையுங் கொண்டவர். கணாம்பிகையுடன் கூடியவர். வாள், பரிசைகளைத் திருக்கரங்களில் ஏந்தியவர்.

5. சத்தியோசாத மூர்த்தி

வெண்மை நிறமுள்ளவர், வெண்மையான மாலை, சந்தனம், ஆபரணம், தலைப்பாகை, வஸ்திரம் என்பனவற்றையும், மூன்று கண்களையும், வரத அபயகரங்களையுங் கொண்டவர். சந்திரனைத் தரித்தவர், அம்பிகையுடன் கூடியவர், பால வடிவினர்.

மேற்கூறப்பட்ட பஞ்சப் பிரம்ம தேவரை சூலம், உடுக்கு என்பனவற்றைக் கொண்டவராக, அபயம், வரதம் என்னுங் கோலங்களோடு கூடிய நான்கு திருக்கரங்களையுடையவராகத் தியானிக்க வேண்டுமென்று ஓர் ஆகமம் கூறுகின்றது. ஈசானமுகம் நிர்மலமான ஒளியுடைய குழந்தைத் தன்மையையும், தத்புருட முகம் யௌவன பருவத்தையுடைய சாந்தத் தன்மையையும், அகோரமுகம் கண்டவர் பயங் கொள்ளத்தக்க கோரத்தன்மையையும், வாமதேவமுகம் பெண்கள் முகம் போன்று கவர்ச்சித் தன்மைகளையும், சத்தியோசாதமுகம் சந்திரனது ஒளி பொருந்தியதாக ராஜலக்ஷணங்களுடன் அரசத் தன்மையையும் கொண்டிருக்கும்.

மேற்கூறிய ஈசானம் முதலிய ஐந்து மந்திரங்களும் முறையே அருளல், மறைத்தல், அழித்தல், காத்தல், படைத்தல் என்னும் ஐந்தொழில்களையுஞ் செய்யும். சதாசிவமூர்த்தியின் பஞ்சப் பிரம்மத்தின் தனித்தனித் தோற்றங்கள் யாவும் மந்திரஞ் சொல்லிப் பூசிக்கும்போது பாவனையாக உள்ளத்தில் நினைக்கப்படுவன. சிற்பம், ஓவியம் போன்ற வடிவங்களில் மிகச் சில இடங்களிலேயே காணப்படுகின்றன. கோயில்களில் நாம் வணங்கும் சிவலிங்கம் சதாசிவ வடிவத்தினையே குறிக்கும். சிவலிங்கத்தின் வடிவத்தில் மேலே கூறிய சதாசிவ வடிவத்தினை மனதில் நினைத்து வணங்குதல் வேண்டும்.

ஆகமங்களில் சதாசிவரூபம் :

மந்திரமயமான தியான வடிவான சதாசிவ மூர்த்தியின் வடிவம் எவ்வாறு அமையலாம் என்பது பற்றி ஆகமங்கள் கூறுகின்றன. சதாசிவர் ஐந்து திருமுகங்களும் பத்து திருக்கரங்களும் உடையவர். ஒவ்வொரு முகத்திலும் மும்மூன்று திருக்கண்கள் உண்டு. வலக்கரங்களில் சூலம், வச்சிரம், கத்தி, பரசு, அபயமுத்திரை என்பனவற்றையும், இடது கரங்களில் நாகம், பாசம், மணி, அக்கினி, அங்குசம் என்பவற்றையும் தாங்கியிருப்பவர்; பாம்பினைப் பூணூலாக அணிந்திருப்பவர்; பிறைச் சந்திரனால் அலங்கரிக்கப்பட்ட சடாமகுடம் உடையவர்; அவர் சாந்தமான தோற்றத்தினர். இவ்வாறு காமிகாகமத்தில் சதாசிவனது வடிவம் வர்ணிக்கப்பட்டுள்ளது.

''உத்தரகாமிக ஆகமம்'' சதாசிவ மூர்த்தியின் நிறம் வெண்மையானதென்றும் இவர் தாமரை மலர் இருக்கையின் மீது நிற்கும் நிலையிற் காணப்படுவார் என்றும் குறிப்பிடுகின்றது. இரு முகங்கள் கொண்ட இருதலைகளிலும் சடாமகுடம் அணியச் செய்யவேண்டும் என்றும், அச்சடை பாக்கு நிறத்தினையுடையதாய் அமைக்கப்படவேண்டும் என்றுங் கூறுகின்றது. இவரது பத்துக் கரங்களில் கத்தி, சூலம், கட்வாங்கம், அபயப் பிரசாதம் போன்றவை வலது கரங்களிலும், பாம்பு, அக்ஷமாலை, டமருகம், நீலோற்பலம், பழம் ஆகியவை இடக்கரங்களிலும் அமைய வேண்டும் என்பது ஆகமப் பிரமாணம். மேலும், சதாசிவனை ஒரு தலையுடனும் இச்சை, கிரியை, ஞான சக்திகளைக் குறிப்பிடுவதாக மூன்று கண்களுடனும், சடாமகுடத்தில் ஞானத்தைக் குறிக்கும் பிறைச்சந்திரனுடனும், புரிநூல், மணிமேகலை போன்ற அனைத்து அணிகளுடனும், அவரின் பக்கத்தில் தேவியை நின்ற கோலத்துடனும் அமைக்கலாம் என்வும் உத்தரகாமிக ஆகமம் கூறுகின்றது.

திருக்கோயில்களில் சதாசிவத் திருமேனிகள் :

சதாசிவ வடிவத் திருமேனி மற்றய சிவவடிவங்கள் போன்று அதிகளவிற் கோயில்களிற் காணப்படவில்லை. கோயிற் கோபுரங்களில் சுதை வடிவிலும் ஓரிரு இடங்களில் ஓவிய வடிவிலும் காணப்படும் இவ்வடிவம் நித்திய வழிபாட்டில் இல்லாது காட்சிப் பொருளாகத்தான் உள்ளது. ஐந்து முகங்களும் ஒன்றாகக் காணப்படும் சதாசிவ வடிவினைத் தமிழ் நாட்டிலுள்ள சில கோயில்களின் கோபுரத்திலே காணலாம். நான்கு முகங்களும் நான்கு திசைகளை நோக்கியும் உச்சியிலுள்ள ஈசானமுகம் மேல் நோக்கியும் இருப்பதாக மேலே குறிப்பிட்ட வகையிலல்லாது தமிழக கோபுரங்களிலுள்ள சதாசிவ வடிவத்தில் நடுவில் ஒன்றும் அதன் இரு பக்கங்களிலும் இவ்விரண்டு முகங்களுமாக ஐந்து முகங்களும் ஒரே வரிசையில் உள்ளவாறு அமைக்கப்பட்டுள்ளது. மதுரை மீனாட்சி சுந்தரேசர் கோயிலின் மேலைக் கோபுரத்து மேற்பக்கத்து முதல் நிலையில் வலது பக்கம், சொக்கநாதர் கீழைக் கோபுர கிழக்குப் பகுதியில் முதல் நிலையில் இரு பக்கங்கள், சொக்கநாதர் இரண்டாங் கோபுர வடப்பக்கம் கீழ்வரிசை, சொக்கநாதர் சந்நிதி நுழைவாயிலிலுள்ள துவார பாலகரின் பின்புறம் என்னுமிடங்களிலே சதாசிவனது சுதைச் சிற்பங்களும், சொக்கநாதர் நந்தி மண்டபத்தில் கற்சிற்பமும் உள்ளன. திருவிடைமருதூர் மேலைக் கோபுரக் கிழக்குப் பக்கத்தில் சதாசிவ சுதை வடிவம் ஒன்றும், இக்கோயிலின் தெற்குக் கோபுர வடக்குப் பக்க இருபுறத்தில் இரு சதாசிவ சுதை வடிவங்களும் உள்ளன. தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் இரண்டாம் கோபுரத்திலும் இச்சதாசிவ வடிவம் இடம் பெற்றுள்ளது. சென்னை அருங்காட்சியகத்தில் உச்சியில் ஈசானமுகமும் மற்றைய நான்கு பக்கங்களிலும் நான்கு முகங்கள், பத்து திருக்கரங்களுடன் வீராசன இருக்கையிலுள்ள சதாசிவ வடிவம் உள்ளது.

எலிபெண்டா குகைகளில் இம்மூர்த்தியின் ஐந்து முகங்கள், பத்துக் கரங்களுடன் நிற்கும் நிலையில் ஒரு வடிவமும், இரண்டு முகங்கள், பதினெண் கரங்களுடன் ஒரு வடிவமும் காணப்படுகின்றன. வட இந்தியாவில் சதாசிவ வடிவ ஓவியங்கள் சில மாறுதல்களுடன் காணப்படுகின்றன. மேற்கு பஞ்சாப் பசோலிப் பள்ளி என்னுமிடத்தில் ஐந்து முகங்களும் ஒரே வரிசையில் காணப்பட முகங்கள் தோறும் முக்கண்கள், முடித்த சடைமுடி, வலது கரங்களில் நீண்ட கத்தி, திரிசூலம், பூக்களையுடைய சிறு கிளை, கோடரி என்பனவும் இடது கரங்களில் துடி, பாம்பு, சாட்டை, மணி என்பனவற்றுடன் தாமரை மலரில் அமர்ந்த நிலையில் சதாசிவ ஓவியம் உள்ளது. மேற்கு பஞ்சாப் மாண்டிபள்ளி என்னுமிடத்தில் ஐந்து முகங்கள் நான்கு கரங்களுடனான வடிவிலும், மேற்கு பஞ்சாப் டெகரிகார்வால்பள்ளி என்னுமிடத்தில் ஐந்து முகங்கள் இரு கரங்களுடன் காளை மீதமர்ந்த வடிவிலும் சதாசிவ வடிவ ஓவியங்கள் காணப்படுகின்றன.

மகா சதாசிவர்

சதாசிவமூர்த்தி 25 முகங்களுடனும் 50 கரங்களுடனும் காணப்படும்போது அவர் மகா சதாசிவர் என்றழைக்கப்படுவார். ஸ்ரீதத்துவநிதி என்னும் நூல் மகா கயிலாயமூர்த்தி என்ற பெயரில் மகாசதாசிவ வடிவத்தை விளக்கிக் கூறுகின்றது. மலர்ந்த தாமரை மலர் மீது 25 முகங்கள், 50 கரங்களுடன், விசித்திரமாக இரத்தின அணிகள் எண்ணற்ற சூரியர்களிடத்துக் காணப்படும் பேரொளியை உடையவராய், மெய்யெல்லாம் வெண்ணீறு, பாம்புப் பூணூல், முகங்கள் தோறும் முக்கண்களுடன் வலது காலைத் தொங்கவிட்டு, இடது காலை மடக்கி அமர்ந்திருப்பார் என்றும் கூறப்படுகின்றது. இவரது 50 கரங்களில் இடம் பெற்றிருக்கும் பொருட்களையும் இந்நூல் குறிப்பிட்டுள்ளது. இதன்படி மகாசதாசிவரின் வலது பக்க 25 கரங்களிலும், இடதுபக்க 25 கரங்களிலும் மேல்வரும் அம்சங்கள் இடம்பெற்றிருக்கும்.

வலது கரங்கள்

1. அபயம்
2. சக்கரம்
3. சூலம்
4. உளி (டங்கம்)
5. அம்பு
6. கதை
7. தாமரை
8. கத்தி
9. தோமரம்
10. சத்தி
11. பிராசம்
12. கோடரி
13. பாம்பு
14. கலப்பை
15. அங்குசம்
16. அக்கமாலை
17. சிறுசுத்தி
18. கொடி
19. தண்டம்
20. வச்சிரம்
21. குந்தம்
22. அஸ்திதம் ஷட்ரம்
23. ரம்பம்
24. பிண்டி
25. பாலம்

இடது கரங்கள்

1. வரதம்
2. வில்
3. மான்
4. சங்கம்
5. கேடயம்
6. பாசம்
7. பரசுவதம் (கோடரி)
8. முத்கரம்
9. உடுக்கை
10. மணி
11. சுவடி
12. உருத்திர வீணை
13. கபாலம்
14. முண்டம்
15. கட்வாங்கம்
16. பூசுண்டி
17. பரிகம்
18. பலகை
19. பட்டசம்
20. பிரம்பு
21. கமண்டலம்
22. அனல்
23. கத்திரிக்கோல்
24. உலக்கை
25. மயிற்றோகை

மேற்கூறப்பட்ட மகாசதாசிவ வடிவம் வழிபடும் நிலையில் சிவன் கோயில்களிற் காண்பது அரிதாயினும் கோயிற் கோபுரங்களில் சுதை வடிவில் அமைத்துள்ளமையைக் காணலாம். கோபுரங்களில் காணப்படும் மகாசதாசிவ மூர்த்தியின் கரங்களில் மேற்கூறிய அம்சங்கள் சித்திரிக்கப்படுவதில்லை. இம்மூர்த்தியின் 25 முகங்களும் 9, 7, 5, 3, 1 என்ற எண்ணிக்கை வரிசையில் ஒன்றன் மேல் ஒன்றாக அமைக்கப்பட்டிருக்கும். நிற்கும், இருக்கும் நிலையிலும் காணப்படுவதுண்டு. மதுரை மீனாட்சி சுந்தரேசர் கோயிலிலே அங்கயற்கண்ணம்மையன் கிழக்கு முதல் கோபுரம், தஞ்சாவூர் வைத்தீஸ்வரன் கோயிலிலே தெற்கு கோபுரத் தென்பக்கம் என்பனவற்றில் மகாசதாசிவ மூர்த்தியின் சுதைச் சிற்பங்கள் உள்ளன.

ஹரிஹர சதாசிவர்

சிவனும் திருமாலும் இணைந்த சிவ வடிவங்களுள் ஒன்றான சங்கரநாராயண வடிவத்தினைப் போன்று சதாசிவ வடிவில் வலப்பக்கம் சிவனும் இடப்பக்கம் திருமாலும் காணப்படும் வடிவம் ஹரிஹர சதாசிவ வடிவம் எனப்படும். வட இந்தியாவிலே மேற்கு பஞ்சாபில் இவ்வடிவ ஓவியம் ஒன்று உள்ளது. இதில் ஈசானமுகம் உச்சியில் மேல் நோக்கியதாகவும் மற்றைய நான்கு முகங்கள் நான்கு திசைகளை நோக்கியனவாகவுமுள்ளன. ஓவியம் என்பதால் பின்பக்கத்திலுள்ள மேற்கு முகமான சத்தியோசாத முகம் மறைந்துள்ளது. முகங்கள் யாவும் சடைமுடியுடனும் தொங்கும் சடையுடனும் காணப்படுகின்றன. வலப்பக்கத்திலுள்ள திருமாலின் ஐந்து கரங்களிலே திரிசூலம், உடுக்கை, திருவோடு, கத்தி, பாம்பு என்பனவும் இடப்பக்கத்திலுள்ள திருமாலின் ஐந்து கரங்களில் கதாயுதம், சங்கு, சக்கரம், தாமரை, கேடயம் என்பனவும் வரையப்பட்டுள்ளன. தோளில் யானைத் தோலினை மேலாடையாகவும், இடையில் புலித்தோலையும் அணிந்து, யானைத் தோல் விரிப்பில் இரு கால்களையும் மடக்கி உட்கார்ந்திருக்கும் நிலையில் இவ்ஓவியம் காணப்படுகின்றது. பீடத்தின் வலப் பக்கத்தில் காளையும் இடப்பக்கத்தில் புலியும் வரையப்பட்டுள்ளன. ஹரிஹர சதாசிவ வடிவம் தென்னிந்தியாவில் எங்கும் காணப்படவில்லை.

இவ்வாறு பல்வேறு விதமாக அமைக்கப்படும் சதாசிவ வடிவம் சிவ வடிவங்களில் உயர்ந்ததாகக் கருதப்படுகின்றது. இதுவே மற்றைய சிவ வடிவங்கட்கும் பிறப்பிடம். சதாசிவனின் ஐந்து முகங்களிலிருந்தும் ஒரு முகத்திற்கு ஐந்து வீதம் மொத்தம் 25 மகேசுவர வடிவங்கள் தோற்றம் பெற்றன என்று கூறப்படுகின்றது. அத்துடன் இவரது ஐந்து முகங்களிலிருந்தும் 28 ஆகமங்களும் தோற்றம் பெற்றன என்றும் கூறப்படும். ஆகமங்களில் அமைந்த சிவாகமத்திருமேனியாக சதாசிவனின் திருமேனி விளங்குகின்றது. சதாசிவன் மனோன்மணி என்ற சக்தியுடன் இருந்து அருள் பாலிக்கின்றார்.

சதாசிவ தத்துவம்

சைவசித்தாந்தம் கூறும் 36 தத்துவங்களுள் சதாசிவ தத்துவமும் ஒன்றாகும். சைவ சித்தாந்தத்தில் இருபத்து நான்கு ஆன்ம தத்துவங்களும், கலை முதல் பிரகிருதி வரையான ஏழு அசுத்த தத்துவங்களும் (வித்யா தத்துவங்கள்) உள்ளன. சிவன், சக்தி, சதாசிவம், ஈசுவரம், சுத்த வித்தை என்பன சுத்த தத்துவங்களாகும். இவற்றுள் மூன்றாவது விருத்தியாக சதாசிவ தத்துவம் அமைகின்றது. உலகம் முழுவதும் ஒடுங்கிய முற்றழிப்புக் காலமாகிய சர்வ சங்கார காலத்தில் எந்தவொரு செயலையும் செய்யாது பரமசிவனாக நிற்கும் இறைவன் உலகினை மீண்டும் தோற்றுவிக்க முயலும்போது இறைவனிடமிருந்து வெளிப்படும் சக்திகள் மேற்கூறிய சுத்த தத்துவங்களுக்குக் காரணமாய் விளங்குகின்றன. உமாபதி சிவாச்சாரியர் எழுதிய சிவப்பிரகாசம் என்னும் நூல், இதனை கீழ்வருமாறு கூறுகின்றது.

நீடுபரா சக்திநிக ழிச்சா ஞான
நிறைகிரியை தரவதனை நிமலன் மேவி
நாடரிய கருணைதிரு வுருவ மாகி
நவின்றுபல கலைநாத விந்து வாதி
கூடுமொளி வளர்குடிலை மாயை மேவி .....

பரமசிவனின் சக்தியாகிய பராசக்தி ஐந்தொழில்களைச் செய்தல் மேற்கொண்டு பொது வகையில் வியாபரிக்கும் போது, ஆதிசக்தி எனப் பெயர் பெறும். இது ஐந்தொழில்களையும் செய்யும் போது சிறப்பு வகையால் வியாபரித்து வியாபார பேதத்திற்கேற்ப இச்சா சக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி எனப் பெயர் பெறும். இச்சக்திகளை இறைவன் தன் திருமேனியாகக் கொண்டு சுத்த தத்துவங்கட்குக் காரணமாய் விளங்குகின்றார்.



சதாசிவர்



சதாசிவர்

உலகினை மீண்டும் தோற்றுவிக்க விரும்பும் இறைவனின் எழுச்சி, அதாவது அவனது இச்சை, விருப்பம் என்பது இச்சாசக்தி (விழைவாற்றல்) எனப்படும். அதாவது உயிர்களை உய்விக்க வேண்டுமென்ற இறைவனின் விருப்பத்தினை இது குறித்து நிற்கின்றது. இவ்வாறு விருப்பம் கொண்ட இறைவன் உலகினைப் படைக்குமாற்றை அறியும்போது, அதாவது உயிர்களை உய்விக்குமாற்றை அறியும்போது, அவனது சக்தி ஞானசக்தி (அறிவாற்றல்) எனவும், உலகினைப் படைத்தலை அறிந்த இறைவன் அறிந்தவாறு செயலாற்றும் போது அவனது சக்தி கிரியாசக்தி (செயலாற்றல்) எனவும் பெயர்பெறும். இச்சா, ஞான, கிரியா சக்திகளினாலே இறைவன் உலகினைப் படைப்பதனைச் சிவஞான சித்தியார் கீழ்வருமாறு கூறுகின்றது.

ஒன்றதாய் இச்சா ஞானக்
கிரியையென்(று) ஒரு மூன்(று) ஆகி
நின்றிடும் சக்தி; இச்சை
உயிர்க்கருள் நேசமாகும்;
நன்றெல்லாம் ஞான சக்தி
யால் நயந்(து) அறிவன் நாதன்
அன்றருள் கிரியை தன்னால்
ஆக்குவன் அகிலம் எல்லாம்

இவ்வாறு இறைவன் சக்தி வியாபரத்தால் உலகினை மீண்டும் தோற்றுவிக்க முயலும்போது தோன்றும் தத்துவங்களே சுத்த தத்துவங்களாகும். இறைவனின் ஞானசக்தி மட்டும் தொழிற்படுவது சிவம் எனவும், கிரியாசக்தியும் சமமாகத் தொழிற்படும் நிலை சதாசிவம் எனவும், கிரியா சக்தி மிகுந்து ஞானசக்தி குறைந்து காணப்படுவது ஈசுவரம் எனவும் ஞானசக்தி மிகுந்து கிரியாசக்தி குறைந்து காணப்படுவது சுத்தவித்தை எனவும் பெயர்பெறும். இறைவனின் இத் தொழிற்பாட்டினை படிமுறை விருத்தியாக நோக்குவதன் மூலம் சதாசிவ தத்துவம் பற்றித் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

உலகினைப் படைக்க இச்சை கொண்ட இறைவன் தனது ஞானசக்தியைப் பயன்படுத்தும்போது தோன்றும் தத்துவம் சுத்த மாயையின் முதலாவது விருத்தி நிலையைக் குறித்து நிற்கின்றது. சுத்த மாயையை இறைவன் தனது ஞானசக்தியால் நோக்கும் போது சுத்த மாயை காரியப்படுவதற்கு ஏற்ற பக்குவத்தினைப் பெறும். இந்நிலையில் இறைவன் உருவமற்றவராக, அதாவது நிட்கள திருமேனியுடையவராக நிற்பார். இந்நிலையில் இறைவன் சிவன், சத்தர், இலய சிவன், நிஷ்கள சிவன் போன்ற பெயர்களைப் பெற்றிருப்பார். இத்தத்துவம் சிவதத்துவம், இலய தத்துவம், நிஷ்கள தத்துவம், நாத தத்துவம் என்னும் பெயர்களாற் குறிக்கப்படும்.

சுத்த மாயையை ஞானசக்தியால் நோக்கியபின், "இஃது இவ்வாறு ஆகுக" என கிரியா சக்தியால் சங்கற்பிக்கும்போது முன்பு பக்குவப்படுத்தப்பட்ட சுத்தமாயை இரண்டாவது விருத்தியாக வளர்ச்சியடையும். இந்நிலையிலும் இறைவன் நிஷ்கள திருமேனியுடையவராக சக்தி என்னும் பெயரினைப் பெற்றிருப்பார். சக்தி தத்துவம், தூலலய தத்துவம், தூல நிட்கள தத்துவம், விந்து தத்துவம் என்னும் பெயர்களால் இத்தத்துவம் குறிக்கப்படும்.

சுத்த மாயையை இறைவன் ஞானசக்தியால் பொதுவாக நோக்கியும் கிரியாசக்தியால் பொதுவாகச் சங்கற்பித்தும் நின்றபின்பு, முன்பு வளர்ச்சியுற்ற சுத்த மாயையின் பகுதியை ஞானசக்தியால் சிறப்பாக நோக்கியும் கிரியா சக்தியால் சிறப்பாக சங்கற்பித்தும் நிற்கும்போது இரண்டாவது விருத்தி மூன்றாவது விருத்தியாக வளர்ச்சியடையும் நிலையில் தோற்றம் பெறுவதே சதாசிவதத்துவமாகும். ஞானசக்தி, கிரியாசக்தி இரண்டும் சமமாகப் பரிணமிக்கும்போது தோற்றம் கொள்ளும் தத்துவம் இது. இந்நிலையில் இறைவன் அருவுருவத் திருமேனியுடையவராக, அதாவது சகளத் திருமேனியுடையவராக நிற்பார். சதாசிவன், உத்தியுக்தன், போகசிவன், நிட்கள சகள சிவன் போன்ற பெயர்களை இறைவன் பெற்றிருப்பான்.

இதனால் இத்தத்துவமும் சதாசிவத் தத்துவம், சாதாக்கிய் தத்துவம், உத்தியுத்தத்துவம், போக தத்துவம், நிட்கள சகள தத்துவம் என்னும் பெயர்களாற் குறிக்கப்படும். இறைவனின் சதாசிவ நிலை உலகினைத் தோற்றுவிக்க முயல்கின்ற நிலையாகும்.

ஞானசக்தி, கிரியாசக்தி இரண்டையும் சமமாகச் செலுத்திச் சதாசிவனாக நின்ற இறைவன் கிரியா சக்தியை அதிகமாகச் செலுத்தி செயலில் ஈடுபடும்போது சுத்தமாயையின் மூன்றாவது விருத்தி, நான்காவது விருத்தி நிலையாகத் தோற்றம் கொள்கின்றது. இந்நிலையில் இறைவனின் ஞானசக்தி குறைந்தும் கிரியாசக்தி அதிகரித்தும் காணப்படும். இறைவன் சகள (உருவ)த் திருமேனியுடையவராக மகேசுவரர், பிரவிருத்தர், அதிகாரசிவன், சகளசிவன் என்னும் பெயர்களைப் பெற்றிருப்பார். ஈசுவரத் தத்துவம், சூக்கும பிரவிருத்தி தத்துவம், அதிகாரதத்துவம், சூக்கும அதிகார தத்துவம், சூக்கும சகள தத்துவம் என்னும் பெயர்களால் இத்தத்துவம் கூறப்படும்.

கிரியாசக்தி அதிகமாகச் செலுத்தி மகேசுவரனாக நின்ற இறைவன் பின்பு ஞானசக்தியை அதிகமாகச் செலுத்தி நிற்கும்போது சுத்த மாயையின் நான்காம் விருத்தி ஐந்தாவது விருத்தியாக தோற்றம் கொள்ளும். ஞானசக்தி அதிகரித்தும் கிரியாசக்தி குறைந்தும் காணப்படும். இந்நிலையில் இறைவன் வித்தை (வித்தியேசுவரன்) என்று பெயர் பெற்றிருப்பார். இதனால் குறிக்கப்பெறும் தத்துவம் வித்தை எனப் பெயர் பெறும். அசுத்த மாயா தத்துவத்தில் வித்தை என ஒன்று கூறப்படுவதால் இது சுத்த வித்தை எனக் கூறப்படும். இத்தத்துவம் தூல அதிகாரத் தத்துவம், தூல சகள தத்துவம் போன்ற பெயர்களாலும் அழைக்கப்படும்.

மேற்கூறிய சிவம், சக்தி, சதாசிவம், மகேசுவரம், சுத்த வித்தை என்னும் சுத்தமாயா தத்துவங்கள் ஒவ்வொன்றும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டனவாகும். இறைவனது சக்திகளின் தொழில் வேறுபாட்டினால் இவை தோற்றம் கொள்கின்றனவே தவிர இவற்றுள் வேறுபாடு இல்லை. ஒவ்வொரு தத்துவமும் ஒன்றிலிருந்து ஒன்று தோற்றம் பெறுவனவாகும். இதனைச் சிவப்பிரகாசம் என்னும் நூல் கீழ்வருமாறு கூறுகின்றது.

உன்னலரும் பரமசிவன்ற னருளாலே நாத
முதிக்கு மிகுங் குடிலைதனில் விந்துவரு நாதந்
தன்னிலதி னொளிவளருஞ் சதாசிவரா மவரிற்
றயங்கவரு மீசர்வித்தை தனையளிப்ப ரதனான்
மன்னுவரிவ் வகையைவர் வாய்மையினான் முன்னே
வந்திடுமென் றுரைசெய்த விந்துவழா வகையே
முன்னுதவு சூக்குமாதி யொருநான்கு மென்று
மொழிந்திடுவ ரருங்கலைகள் முதிர்ந்து ளோரே.

சுத்த தத்துவங்களுள் முதலிலுள்ள சிவம், சக்தி தத்துவங்கள் இலய தத்துவமாகவும் மூன்றாவதாக சதாசிவ தத்துவம் போக தத்துவமாகவும், அடுத்த இரு தத்துவங்கள் அதிகார தத்துவமாகவும் விளங்குவதால் இவைகளில் நிற்குமிடத்து இறைவன் இலயம், போகம், அதிகாரம் என்னும் மூன்று நிலைகளையுடையவனாக முறையே அருவ, அருவுருவ, உருவத் திருமேனியையுடையவனாக நிற்பான். தத்துவ நிலையிற் சிவன், சக்தி இரண்டும் சமமான நிலையாகச் சதாசிவன் காணப்படுகின்றார்.

ஆரும் அறியார் அகார மவனென்று
பாரு முகரம் பரந்திட்ட நாயகி
தாரம் இரண்டுந் தரணி முழுதுமாய்
மாறி யெழுந்திடும் ஓசைய தாமே.

என்னும் திருமந்திரப் பாடலின் முதலிரு வரிகளும் அகரம் உகரம் அல்லது சிவன், சக்தி சேர்ந்த நிலையே சதாசிவமாகும் என்பதனைக் கூறுகின்றன.

சதாசிவர்

सदाशिवः ।

सदेशस्थापनं वक्ष्ये तल्लक्षणपुरस्सरम् ।
द्रव्यैश्शिलादिभिः कुर्य्यात्पूर्वोक्तैस्तं विशेषतः ॥

बद्धपद्मासनं श्वेतं स्थितं पञ्चास्यसंयुतम् ।
पिङ्गलाभजटाचूडं (जूटं?) दशादोर्दण्डमण्डितम् ॥

अभयं च प्रसादं च तथा शक्तिं त्रिशूलकम् ।
खट्वाङ्गं दक्षभागस्थैर्वहन्तं करपल्लवैः ॥
भुजङ्गं चाक्षमालां च डमरुं नीलपङ्कजम् ।
बीजापूरं(बीजपूरं?) च वामस्थैर्वहन्तं सुप्रसन्नकम् ॥

अर्चनाध्यायसंसिद्धध्यानान्तरयुतं तु वा ।
इच्छाज्ञानक्रियाशक्तित्रयसंक्लृप्तलोचनम् ॥
ज्ञानचन्द्रकलायुक्तं कलावर्षोपलक्षितम् ।
ब्रह्मसूत्रादिकं कार्य्यं सुवेशः प्रतिमोदितम् ॥

एवं सदाशिवः कार्यो मनोन्मन्या समन्वितः ।

(उत्तरकामिकागमे त्रिचत्वारिंशत्तमपटले ।

உத்தரகாமிகத்தில் சதாசிவம்

உத்தரகாமிகம் - படலம் 43ல் சதாசிவரின் பிரதிஷ்டை சொல்லப்படுகிறது. அவரின் உருவமைதியும் சொல்லப்படுகிறது. மடித்த பத்மாசனத்தில் அமர்ந்தவர். வெண்ணிறத்தர் (பளிங்கு மேனியர்), ஐம்முகங்களுடன் கூடிய உருவினைக் கொண்டவர். பொன்னிறச் சடைமுடியும், பத்துத் தோள்களும் கொண்டவர். வலப்புறத்தில் அபயம், கட்வாங்கம், சக்தி, திரிசூலம், அரவு ஆகியவையும், இடப்புறத்தில் பிரசாதம் (வரதம்), அக்கமாலை, உடுக்கை, நீலோற்பலம், மாதுளங்கனி ஆகியவையும் கரங்களில் கொண்டவர். தியானாந்தரராக இருப்பவர். இச்சை, ஞானம், கிரியை ஆகிய சக்திகளின் உருவான முக்கண்ணர் கலைகளின் மழையொப்ப ஞானப் பிறைமதி கொண்டவர். பிரம்ம சூத்திரம் முதலிய அளவுகள் கொண்டு முறைப்படி பிரதிமையைச் செய்க. மேலும் சதாசிவர் மனோன்மணியோடு கூடியவராக அமைக்கப்படுவார்.

மூர்த்தித் தியானம்

இந்து நிப பஞ்சமுக ஹஸ்த தசயுக்தம்
சூல வர டங்கமஸி வஜ்ரமபயம் ஸ்யாத்/
பாச வர தாங்குச தநுர் தஹநம் வாமே
ச்வேத கமலாஸந ஸதாசிவ ரூபம் பஜே//

சந்திரனை ஒத்த ஐந்து முகங்களையும், பத்து கரங்களையும் உடையவரும், சூலம், கோடரி, கத்தி, வஜ்ரம், அபய முத்திரை இவைகளை வலது கைகளிலும், பாசக்கயிறு, வரதமுத்திரை, அங்குசம், வில், நெருப்பு, இவைகளை இடது கரங்களிலும் கொண்டவரும், வெண்தாமரை மலரில் வீற்றிருப்பவருமான சதாசிவமூர்த்தியை வணங்குகின்றேன்.

மகா சதாசிவர்

महासदाशिवमूर्तिः

प्रसन्नपञ्चविंशकस्फुटाननं जटाधरं
सुपञ्चसप्ततीक्षणं कपोलकुण्डलाङ्कितम ।
शतार्धहस्तभूषितं वराभयान्वितं सितं
भुजङ्गभूषणं परं भजे महासदाशिवम ।।

(मानसारे)

மானசாரம் நூலில்

அன்றலர்ந்த மலரென விளங்கும் இருபத்தைந்து முகங்களும், சடைமுடியும் கொண்டவரும், விரிந்தகன்ற எழுபத்தைந்து கண்களும், குண்டலங்களால் அணி செய்யப்படும் கன்னங்கள் கொண்டவரும், ஐம்பது கரங்கள் கொண்டவரும், வரதமும் அபயமும் கொண்டவரும், வெண்ணிறம் கொண்டவரும், அரவங்களை அணிகளாகக் கொண்டவரும், அனைத்தினும் மேலானவருமான மகாசதாசிவரை வணங்குகின்றேன்.

	இவரது வலது பக்க 25 கைகளில்		**இவரது இடது பக்க 25 கைகளில்**
01.	அபயம்	01.	வரதம்
02.	சக்கரம்	02.	வில்
03.	சூலம்	03.	மான்
04.	உளி (டங்கம்)	04.	சங்கம்
05.	அம்பு	05.	கேடயம்
06.	கதை	06.	பாசம்
07.	தாமரை	07.	கோடரி (பரசுவதம்)
08.	கத்தி	08.	முக்கரம்
09.	தோமரம்	09.	உடுக்கை
10.	சத்தி	10.	மணி
11.	பிராசம்	11.	சுவடி
12.	கோடரி (பரசு)	12.	உருத்திர வீணை
13.	பாம்பு	13.	கபாலம்
14.	கலப்பை	14.	முண்டம்
15.	அங்குசம்	15.	கட்வாங்கம்
16.	அக்கமாலை	16.	பூசுண்டி
17.	சூரிகை (சிறுகத்தி)	17.	பரிகம்
18.	கொடி	18.	பலகை
19.	தண்டம்	19.	பட்டசம்
20.	வச்சிரம்	20.	பிரம்பு
21.	குந்தம்	21.	கமண்டலம்
22.	அஸ்திதம்ஷ்ட்ரம்	22.	அனல்
23.	ரம்பம்	23.	கத்தரிக்கோல்
24.	பிண்டி	24.	உலக்கை
25.	பாலம்	25.	மயில்தோகை

(இப்படியாக மகா சதாசிவரின் கரங்களில் மேற்கண்ட 50 பொருட்கள் உள்ளன என்றும், கணக்கிட முடியாத சிரங்களும் கரங்களும் உள்ளன என்றும் கூறுகிறது).

இலிங்கம் மற்றும் சிவனின் வடிவங்கள்

இலிங்க வடிவம்

சிவ வடிவங்களில் மிகத் தொன்மையானது சிவலிங்க வடிவமாகும். சதாசிவன் எனப்பெறும் சிவபெருமானுடைய அருவுருவத் திருமேனியாகிய இச் சிவலிங்கம் கண்ணுக்குப் புலப்படாத அருவத் திருமேனிக்கும் கண்ணுக்குப் புலப்படும் உருவத் திருமேனிக்கும் மூலமான இருப்பிடமாகச் சிவனை அறிந்து வழிபடுவதற்கு அடையாளமாக விளங்கும் பெருமையுடையதாகும்.

சிவலிங்கப் பகுதிகள்

அனைத்தையும் கடந்த சிவன் பரத்துவ நிலையை உணர்த்துவதான இச்சிவலிங்க வடிவம் மூன்று பகுதிகளை உடையதாகும். சிவலிங்கத்தின் பாண உச்சிப்பகுதி சிவபாகம் எனவும், நடுப்பகுதியான ஆவுடையார் விஷ்ணுப்பகுதி எனவும், அடிப்புறப் பகுதி பிரம்மபாகம் எனவும் கூறப்பெறும். இத்தத்துவம் படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய முப்பெருந் தொழில் தன்மைகளை இயற்றும் சிவன் பரிபூரண நிலையை உணர்த்துகின்றது.

சிவலிங்கக் கோலங்கள்

உருவ வடிவங்களில் நின்ற, இருந்த, கிடந்த கோலங்களில் இறை வடிவங்கள் காணப்பெறுவது போல இலிங்கங்களிலும் இம்மூவகை நிலைகள் உள்ளன என்று சிற்ப நூலார் கூறுவர். சிவலிங்கத்தில் உயரமான பாணம் உடையவை நின்ற திருக்கோலத்தின எனவும், நடுத்தரமான அளவுடையவை அமர்ந்த திருக்கோலத்தின எனவும், மிகச் சிறிய அளவுடையவை கிடந்த (சயன) கோலத்தின எனவும் கூறப்பெறும்.

சிவலிங்க உச்சி அமைப்புகள்

சிவலிங்கத்திற்கு உயர்ந்த பகுதியான பாணத்தின் வடிவு நிலையில் சிவலிங்கங்கள் நான்கு வகைப்படும் என்று குறிப்பிடப்பெறும். அவை,

1. தாழங்குடை போன்ற வடிவுடையவை. (சத்ராகாரம்)
2. கோழி முட்டை போன்ற வடிவுடையவை. (குக்குண்டாகாரம்)
3. வெள்ளரிப்பழம் போன்ற வடிவுடையவை. (திருபுடாகாரம்)
4. பாதிமதி வடிவமுடையவை. (அர்த்த சந்திராகாரம்)

ஆகியன ஆகும்.

இலிங்கத்தின் வகைகள்

சிவன் கோயில்களில் பரார்த்த லிங்கம், சுயம்பு லிங்கம், கணலிங்கம், தைவிகலிங்கம், திவ்யலிங்கம், ஆரிட லிங்கம், மானுட லிங்கம், இராட்சதலிங்கம், பாணலிங்கம், சணிகலிங்கம் எனத் தோற்றத்தால் - தோற்றியோர் பெயரால் பெயர் பெற்றுள்ள பல இலிங்கங்கள் காணப்பெறுகின்றன.

மிகப்பெரிய இலிங்கங்கள்

தஞ்சைப் பெரியகோயில், கங்கைகொண்ட சோழபுரம் கோயில், பாண்டியநாட்டுத் திருப்புனல்வாயில் சிவன் கோயில், ஆந்திர மாநிலம் 'லெப்பாட்சி' சிவன் கோயில், மெசபட்டோமியா பாபிலோன் நகர 16 அடி உயர்ந்த சிவலிங்கம் ஆகியன அளவில் மிகப்பெரிய லிங்கங்கள் என்று கருதப்பெறுகின்றன.

குறிப்பு:- சிவலிங்க வடிவங்களைப் பற்றி மேலும் அறிய இவ்வாதீன வெளியீடுகளான இலிங்கோத்பவர், படிமத் திருக் கோலங்கள், தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு ''சிவ வடிவங்கள்'', Indu Iconography பேரா. சிவ.திருச்சிற்றம்பலம் அவர்களின் 'சிவபெருமான் - கலைக்களஞ்சியம்' நூல்களில் காண்க.

இலிங்க வகைகள்

இலிங்க வகைகள், பரார்த்தலிங்கம், சுயம்பு லிங்கம், கணலிங்கம், தைவிகலிங்கம், ஆரிடலிங்கம், மானுடலிங்கம், சணிகலிங்கம் என்று ஏழு வகைப்படும்.

பரார்த்த லிங்கம்

சிவபெருமான் மகாசங்கார காலம் வரை சாந்நித்யராய் இருந்து ஆன்மாக்களுக்கு அருள்புரியும் லிங்கமாகும். இது தாவரலிங்கம், திரலிங்கம் எனவும் பெயர் பெறும்.

சுயம்பு லிங்கம்

எவராலும் தோற்றுவிக்கப்பெறாமல் இயற்கையாகத் தாமே தோன்றிய லிங்கங்கள் சுயம்பு லிங்கம் எனவும், தான் தோன்றி லிங்கம் எனவும் பெயர் பெறும்.

கணலிங்கம்

கணபதி, முருகன் முதலான தேவ கணங்களால் நிறுவப் பெற்று பூசனை செய்யப்பெற்றவை காணலிங்கங்கள் எனப்பெறும். நந்தி, மகாகாளர், பிருங்கி, கணபதி, ரிஷபம், கந்தர், பார்வதி, சண்டர் என கணத்தலைவர் எண்மராவர்.

தைவிகலிங்கம்

பிரமன், விஷ்ணு முதலான தேவர்களால் நிறுவப்பட்டு பூசிக்கப் பெற்றவை தைவிகலிங்கங்களாகும்.

ஆரிடலிங்கம்

முனிவர்கள், அசுரர்கள் / ராக்கதர் முதலானோரால் நிறுவப் பெற்று பூசனை செய்யப்பெற்றவை ஆரிடலிங்கங்களாகும்.

மானுட லிங்கம்

மனிதர்களால் தாபிக்கப்பெற்றுப் பூசனை செய்யப் பெற்றவை - பெறுபவை மானுட லிங்கங்களாகும்.

சணிகலிங்கம்

நிறுவப்பெற்று பூசனை செய்யப் பெற்றவுடன் விடப்படுபவை சணிகலிங்கங்கள் எனப்பெறும். மண், அரிசி, அன்னம், ஆற்றுமணல், கோமயம், வெண்ணெய், உத்திராக்கம், சந்தனம், கூர்ச்சம், புஷ்பம், சர்க்கரை, மா என்று பன்னிரு பொருள்களால் செய்யப்பெறுவன சணிகலிங்கங்களாகும்.

இரத்தின லிங்கங்கள்

ஒன்பது வகை இரத்தினங்களால் தனித்தனியே உருவாக்கப்பட்ட லிங்கங்கள் பூஜா பலன் மிகவும் தருவதாகும்.

லிங்கங்களும் பூசனைப் பயனும்

முத்து	-	எல்லாவகை வெற்றி
பவளம்	-	அரச உறவு
வைடூரியம்	-	நீண்ட வாழ்நாள்
படிகம்	-	நன்மக்கட்பேறு
மரகதம்	-	நல்லுடல்

நீலம் - முத்தி
மாணிக்கம் - செல்வ வளர்ச்சி
வைரம் - பகைவர் வீழ்ச்சி
கோமேதகம் - வசியம்

இந்த இரத்தினங்கள் குற்றமற்றவையாய் இருக்க வேண்டும். பயறு அளவு முதல் நான்கு அங்குலம் வரையிலும் 2 அங்குல அளவு கூடுதலாக 6 அங்குலம் வரை இருக்கலாம்.

இவற்றிற்குப் பீடங்கள் அந்தந்த இரத்தினங்களாலும் அல்லது தங்கம், வெள்ளி, தாமிரம் இவற்றாலும் இருக்கலாம்.

இவ்விரத்தினங்களுள் சிறிய அளவு ஆன்மார்த்த பூசைக்கும் பெரிய அளவு பரார்த்த (கோயில்) பூசைக்கும் உரியன.

தமிழ்நாட்டில் சில சிவாலயங்களில் இவ்வகை இலிங்க வடிவங்கள் சிறப்புடன் விளங்குகின்றன.

சிவனின் வெவ்வேறு வடிவங்கள்

மருந்துவேன் டில்லிவை மந்திரங் கள்ளிவை
புரிந்துகேட் கப்படும் புண்ணியங் கள்ளிவை
திருந்துதே வன்குடித் தேவர்தே வெய்திய
அருந்தவத் தோர்தொழு மடிகள்வே டங்களே.

- சம்பந்தர்.

சிவன் வடிவின் பல்வேறு நிலைகளைப் பற்றிய செய்திகள் தலபுராணங்கள், சகளாதிகாரம், காஸ்யப சிற்பம், சாத்திரம், கந்தபுராணம், தென்குடித்திட்டைப் புராணம், சிவபராக்கிரமம் ஆகிய நூல்களில் பலவாறாகக் குறிப்பிடப்பெற்றுள்ளன.

அட்டவீரட்ட வடிவங்கள்

சிவன் ஆற்றிய எண்வகை வீரச்செயல்கள் நிகழ்வுற்ற இடங்கள் அட்டவீரட்டத் தலங்கள் எனப்பெறும்.

பிரமன் தலை கொய்த பிரம்ம சிரச்சேதர் - கண்டியூர்
அந்தகாசுரனைக் கொன்ற அந்தகாசுரர் - திருக்கோவலூர்
திரிபுரம் எரித்த திரிபுராந்தகர் - திருவதிகை
சலந்தரனை வென்ற சலந்தராசுரர் - திருவிற்குடி
யானையை உரித்த கஜசம்ஹாரர் - திருவழுவூர்
காமனைக் கண்ணால் எரித்த காமதகனர் - திருக்குறுக்கை
காலனை உதைத்த கால சம்ஹாரர் - திருக்கடவூர்
தக்கனை வென்ற தட்சயக்ஞவதர் - திருப்பறியலூர்

பதினாறு வடிவங்கள்

சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், இடபவாகனர், நிருத்தமூர்த்தி, ஜடாதரர், திரிபுராந்தகர், கல்யாண சுந்தரர், அர்த்த நாரீஸ்வரர், கஜசம்ஹாரர், பாசுபதர், கங்காளர், அரி அர்த்தர், பிட்சாடனர், சண்டேசானுக்ரகர், தெட்சணாமூர்த்தி, காலசம்ஹாரர், இலிங்கோத்பவர் என்று பதினாறு சிவவடிவங்களைச் சகளாதிகாரம் குறிப்பிடுகின்றது.

காஸ்யப சிற்ப சாத்திரம்

காஸ்யப சிற்ப சாத்திர நூல் மேற்காணும் பதினாறு சிவவடிவங்களுடன் சுகாசனர், சுகசம்ஹாரர் என்னும் இரு வடிவங்களைச் சேர்த்து சிவவடிவங்கள் பதினெட்டு என்று குறிப்பிட்டுள்ளது.

கந்தபுராணம் கூறுவன

கச்சியப்பரின் கந்தபுராண நூல் சிவலிங்கமூர்த்தி, சோமாஸ்கந்தர், ஏகபாதர், வேள்விநாயகர், இடபாருடர், சந்திரசேகரர், நடராசர், உக்கிரர், அர்த்தநாரீஸ்வரர், விடாபகரணர், சலந்தராரி, இலகு அளீசர், சக்ரதானர், அந்தகாசுரர், திரிபுராந்தகர், கங்காதரர், ஆபத்சகாயர், சோதிலிங்கசேசர், மச்சசம்ஹாரர், கூர்மசங்காரர், வராக சம்ஹாரர், நரசிங்க சம்ஹாரர், கங்காளர், காலபைரவர், பிட்சாடனர் என இருபத்தைந்து சிவவடிவங்களைக் குறிப்பிட்டு அவற்றின் புராண வரலாறுகளைச் சித்தரித்துள்ளது.

சிவ வடிவங்கள் - 25

சிவாகமங்கள் சிவன் திருமுகங்கள் ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோசாதம் என ஐந்து என்றும் ஐந்து முகங்களிலிருந்து ஐந்து ஐந்து வடிவங்களாகத் தோன்றிய இருபத்தைந்து சிவ வடிவங்களும் சிவன் மாகேஸ்வர மூர்த்த வடிவங்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.

சிவன் உச்சிமுக (ஈசான) வடிவங்கள் - 5

சோமாஸ்கந்தர், நடராசர், ரிஷபாரூடர், கல்யாணசுந்தரர், சந்திரசேகரர்.

சிவன் கிழக்குமுக (தத்புருஷ) வடிவங்கள் - 5

பிட்சாடனர், காமதகனர், காலசம்ஹாரர், சலந்தரவதர், திரிபுராரி.

சிவன் தெற்குமுக (அகோர) வடிவங்கள் - 5

கஜசம்ஹாரர், வீரபத்திரர், தெட்சணாமூர்த்தி, திருநீலகண்டர், கிராதர்.

சிவன் வடக்குமுக (வாமதேவ) வடிவங்கள் - 5

கங்காளர், சக்கரதானர், கஜாந்திகர், சண்டேச அனுக்ரகர், ஏகபாதர்.

சிவன் மேற்குமுக (சத்யோஜாத) வடிவங்கள் - 5

இலிங்கோத்பவர், சுகாசனர், அரியர்த்தர், அர்த்தநாரி, உமாமகேசர்.

தெட்சிணக் குடித்வீப சேத்திர மகாத்மியம்

மேற்காணும் 25 மகேஸ்வர வடிவங்களோடு சரப மூர்த்தியையும் இணைத்து இருபத்து ஆறு மகேஸ்வர வடிவங்களையும் அவற்றுக்குரிய அருட்சக்தி வடிவப் பெயர்களையும் தென்குடித்திட்டை வடமொழித் தலபுராணம் குறிப்பிட்டுள்ளது.

1. லிங்கோத்பவமூர்த்தி - மோக்ஷப்ரதாயிநீ
2. த்ரிமூர்தகபுதாமூர்த்தி - வம்ஸவ்ருத்தி ப்ரதாயிநீ
3. கலியாண சுந்தரமூர்த்தி - ஸர்வதா மங்களப்ரதாயிநீ
4. உமாஸகாயமூர்த்தி - பார்யா ஸௌக்யப்ரதாயிநீ
5. ஸுகாஸீநமூர்த்தி - தர்மார்த்த காமமோக்ஷப்ரதாயிநீ
6. கங்காதரமூர்த்தி - ஸர்வ பாபப்பரணாஸீநீ
7. நடேஸமூர்த்தி - ஸம்பத்யோக ப்ரதாயிநீ
8. சண்டேஸாநவரப்ரத மூர்த்தி - மஹாபாதகநாஸிநீ



சிவலிங்கம்



சிவன் யந்திரம்

9. விருஷவாகனமூர்த்தி - தர்மஸித்திப்ராதாயிநீ
10. ஸ்ரீநீலகண்டமூர்த்தி - விஷதோஷப்ரணாஸிநீ
11. ஹரிஹரமூர்த்தி - தர்மாத்ததாயிநீ
12. ஏகபாதமூர்த்தி - மஹாரோகவிநாஸிநீ
13. அர்த்தநாரீஸ்வரமூர்த்தி - ஸர்வஸௌபாக்யப்ரதாயிநீ
14. ஸ்ரீதக்ஷிணாமூர்த்தி - மேதாப்ரக்ஞாப்ரதாயிநீ
15. ஸோமாதிநாயகமூர்த்தி - ஸர்வஸித்திப்ரதாயிநீ
16. ஸோமாஸ்கந்தமூர்த்தி - புத்ரஸௌபாக்யப்ரதாயிநீ
17. சந்த்ரமௌலீஸ்வரமூர்த்தி - தநதான்யப்ரதாயிநீ
18. வீரபத்ரமூர்த்தி - சத்ருவித்வேஷநாஸிநீ
19. காலசம்ஹாரமூர்த்தி - ஸர்வாரிஷ்டவிநாஸிநீ
20. காமாந்தகமூர்த்தி - ரோகவிக்னவிநாஸிநீ
21. கஜாந்தகமூர்த்தி - பராபிசாரஸமநீ
22. த்ரிபுரசம்ஹாரமூர்த்தி - ஜந்மஜராம்ருத்யுவிநாஸிநீ
23. பிக்ஷாடாநமூர்த்தி - யோஷித்ப்ருந்தவிமோஹிநீ
24. ஜலந்தரஸம்ஹாரமூர்த்தி - துஷ்டவிநாஸிநீ
25. சரபமூர்த்தி - அரிப்ராணாசிநீ
26. பைரவமூர்த்தி - ரக்ஷாகரி

(**குறிப்பு :-** பின்வரும் பகுதியில் மேற்சொன்ன 26 சிவமூர்த்தங்கள் மட்டும் சுலோகம் மற்றும் விளக்கம், படம் கொடுக்கப்பட்டுள்ளது. 64 சிவவடிவங்களின் ரூபங்களை சிவபராக்கிரமம் நூலில் காண்க.

சிவபராக்கிரமம் - 64

மேற்காணும் சிவ வடிவங்களுடன் பிற்காலப் புராண நூல்கள் சுட்டும் சிவ வடிவங்களையும் இணைத்து சிவன் அஷ்டாஷ்ட வடிவங்களை (8 x 8 = 64) சிவபராக்கிரமம் என்றும் நூலாசிரியர் அழகிய படங்களுடனும் சிறந்த புராண வரலாறுகளுடனும் இணைத்து வெளியிட்டுள்ளார். அவற்றை ஈண்டுக் காண்போம்.

1. இலிங்க மூர்த்தி

தற்காலத்தில் சிவன் கோயில்களில் மூலத்தான மூர்த்தியாகக் கர்ப்பக் கிரகத்தில் காணப்பெறும் சிவ வடிவம்.

2. இலிங்கோத்பவர்

பிரமன் அன்னப் பறவையாகவும், திருமால் பன்றியாகவும், சிவன் முடி அடி காண இயலாத நிலையினதான சிவன் வடிவம். இந்நிகழ்ச்சி திருவண்ணாமலையில் நிகழ்வுற்றதென்பர். மகேஸ்வர வடிவங்களுள் இதுவும் ஒன்று. இதன் அருட்சக்தி மோட்சப் பிரதாயினி எனப்பெறும்.

3. முகலிங்கம்

சிவலிங்கத்தின் வகைகள் நான்காகும்.

1. ஆட்யம் - இது 1000 முகங்களைக் கொண்ட பாணலிங்கம்.
2. அநாட்யம் - முகம் எதுவும் அற்றது.
3. சுரோட்யம் - 108 முகங்களை உடைய பாணலிங்கம்.
4. சர்வசம் - ஒன்று முதல் ஐந்து வரை உள்ள முகலிங்கம்.

ஐந்துமுக சர்வசலிங்கம் - தென்னாற்காடு காஞ்சிபுரம்.
நான்குமுக சர்வசலிங்கம் - திருவானைக்கா.
மூன்று முக சர்வசலிங்கம் - திருவக்கரை.
இரண்டு முக சர்வசலிங்கம் - -
ஒருமுக சர்வசலிங்கம் - -

4. சதாசிவமூர்த்தி

ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோசாதம் எனும் ஐந்து முகங்களையும் பத்து திருக்கரங்களையும் அவற்றில் பத்து ஆயுதங்களையும் ஏந்திய சிவ வடிவம்.

5. மகா சதாசிவர்

இவ்வடிவம் கணக்கிட்டு உரைக்க முடியாத பல திருமுகங்களையும், பல திருக்கரங்களையும் உடையதாக சுட்டப்பெறுகின்றது. எண்ணில் பல்முகம், எண்ணில் பலகரம் என்பது இவ்வடிவைக் குறிக்கும் திருவிசைப்பா குறிப்பாகும்.

6. உமாமகேஸ்வர மூர்த்தி

இவ்வடிவம் மகேஸ்வர வடிவங்களுள் ஒன்று. இவ்வடிவின் அருட்சக்தி பார்யா சௌக்ய ப்ரதாயினி எனப்பெறும். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களை இயற்ற வேண்டி இடப்பால் உமையுடன் பொருந்திய சிவவடிவம். சீர்காழியில் இவ்வடிவைத் தரிசிக்கலாம்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல்லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.

- சம்பந்தர்.

7. சுகாசனர்

மகேஸ்வர வடிவங்களுள் இதுவும் ஒன்று. சுகாசனத்தில் இருந்து உமையம்மைக்கு வேத சிவாகமங்களை உபதேசித்த சிவ வடிவம் இதுவாகும். இவ்வடிவின் அருட்சக்தி தர்மார்த்த காமோட்ச ப்ரதாயினி ஆகும்.

8. உமேச மூர்த்தி

உமையம்மையுடன் சிவபிரான் இருந்தருளும் சிவ வடிவம் இதுவாகும்.

9. சோமாஸ்கந்தர்

மகேஸ்வர வடிவங்களுள் ஒன்றான இவ்வடிவம் சத்து - சித்து - ஆனந்தம் எனப்பெறும் உண்மை அறிவு ஆனந்த வடிவமாகும். பெருமானுக்கும் உமையம்மைக்கும் இடையில் கந்தப் பெருமான் ஆனந்த வடிவில் நிற்கும் வடிவம். சிவன் கோயில் திருவிழா நாட்களில் பஞ்ச மூர்த்திகளில் ஒன்றாக விடை வாகனத்தில் எழுந்தருளும் மூர்த்தி வடிவம். இவ்வடிவின் அருட்சக்தி புத்திர சௌபாக்ய ப்ரதாயினி எனப்பெறும். 'நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்' ஆன இவ்வடிவம் சங்க இலக்கியமான ஐங்குறுநூற்றில்,

மறியிடைப் படுத்த மான்பிணை போலப்
புதல்வன் நடுவணன் ஆக நன்றும்
இனிது மன்ற அவர் கிடக்கை

என்று குறிப்பிடப்பெற்றுள்ளது.

10. சந்திரசேகரர்

பிறை சூடிய பெம்மான். மகேஸ்வர வடிவங்களுள் இதுவும் ஒன்று. சந்திர மௌலீஸ்வரரின் அருட்சக்தி தனதான்ய ப்ரதாயினி ஆகும். தக்கன் சாபத்தால் கலைகள் குறைந்து தேய்பிறையான சந்திரன் சிவனை அடைக்கலமாகச் சரண் அடைந்து தன் கலைகள் நிரம்பப் பெற்றான் என்பது புராண வரலாறு.

குறைவதாகிய குளிர்திங்கள் சூடிக்குனித்தான்வினை
பறைவதாக்கும் பரமன் பகவன் பரந்தசடை
இறைவன் எங்கள் பெருமான் இடம்போல் இரும்பைதனுள்
மறைகள் வல்லார் வணங்கித் தொழுகின்ற மகாளமே.

- சம்பந்தர்.

11. இடபாரூடர்

திருமாலே இடப வாகனமாக, சிவபெருமான் உமையம்மையோடு அமர்ந்து காட்சி தரும் சிவ வடிவம். இதுவும் மகேஸ்வர வடிவங்களுள் ஒன்றாகும். இவ்வடிவின் அருட்சக்தி தர்மசித்தி ப்ரதாயினி ஆகும்.

12. இடபாந்திகர்

தரும தேவதையாகிய இடப வாகனத்தின் பக்கத்தில் சிவபெருமான் பெருமாட்டியோடு நின்றவாறு அருள்புரியும் சிவவடிவம் இதுவாகும்.

13. புஜங்கலளித மூர்த்தி

கருடனால் அவதியுற்ற பாம்புகளின் வேண்டுதலுக்கு இரங்கி அவற்றை உடலில் தரித்துக் காத்தருளும் மூர்த்தி. உயிர்கள் செய்யும் நல்வினைகட்கேற்ப அவற்றிற்கு இன்பம் தந்து காத்தருளும் சிவ வடிவம்.

14. புஜங்கத்திராச மூர்த்தி

தாருகாவன முனிவர்கள் செய்த வேள்வியினின்று எழுந்த பாம்புகளை அடக்கி அருளிய மூர்த்தி. உயிர்கள் செய்த தீவினைகட்கேற்ப அவற்றிற்குத் துன்பங்களைத் தந்து வினைகளை அழித்து வீடுபேற்றையருளும் சிவ வடிவம்.

15. சந்தியா தாண்டவ மூர்த்தி

பகலும் இரவும் சந்திக்கும் சாயரட்சை வேளையான பிரதோஷ காலத்தில் திருநந்தி தேவரின் இரண்டு கொம்புகட்கிடையே தாண்டவம் செய்தருளும் சிவ வடிவம்.

16. சதாநிருத்த மூர்த்தி

எக்காலத்தும் இடைவிடாது நர்த்தனம் செய்தருளும் சிவமூர்த்தி. இவ்வடிவம் அனவரத தாண்டவர் எனவும் அழைக்கப்பெறும்.

17. சண்ட தாண்டவ மூர்த்தி

சண்டியெனும் தேவியுடன் நடனமாடி வென்று அவள்தம் அகந்தை உணர்வை அடக்கியருளிய சிவமூர்த்தம்.

18. கங்காதர மூர்த்தி

பகீரதன் தவமிருந்து அரிதின் கொணர்ந்த ஆகாய கங்கையைத் தம் சடையில் ஏற்று அருளிய சிவ மூர்த்தி.

19. கங்காவிசர்ச்சன மூர்த்தி

சகரனுடைய மைந்தர்கள் தம் தந்தையின் என்புகளைக் கரைக்க வேண்டிப் பகீரதனது வேண்டுதலுக்கிணங்க சிவபெருமான் தன் முடிமீதிருந்த கங்கா நதியைப் பூமியின் மீது பாய்ந்தோடச் செய்த திருவடிவம்.

20. திரிபுராந்தகர்

அஷ்டவீரட்ட வடிவங்களில் ஒன்றாகவும், மகேஸ்வர வடிவங்களுள் ஒன்றாகவும் கருதப்பெறும் இம்மூர்த்தியின் அருட்சக்தி சங்கர மிருத்தியுவிநாசினி என்பர். திரிபுர அசுரர்களின் அகந்தையைப் போக்கத் திரிபுரங்களை எரித்த விரிசடைக் கடவுள் வடிவம் இதுவாகும். திரிபுரத்தை எரித்த திருத்தலம் திருவதிகை வீரட்டானம் என்பர்.

21. கல்யாணசுந்தர மூர்த்தி

மலயத்துவசனான இமவான் மகளான உமையம்மையைத் திருமணம் செய்தருளும் சிவ வடிவம். இவ்வடிவின் அருட்சக்தி சர்வதா மங்கள ப்ரதாயினி என்பதாகும். திருமணப் பேற்றினையருளும் இம்மூர்த்தி மகேஸ்வர வடிவங்களில் ஒன்றாகும்.

22. அர்த்தநாரீஸ்வர மூர்த்தி

வலப்பால் சிவனும் இடப்பால் உமையுமாகக் காட்சிதரும் மாதொருபாகன் வடிவம். இது மகேஸ்வர வடிவங்களுள் ஒன்றாகும். இவ்வடிவின் அருட்சக்தி சர்வ சவுக்ய ப்ரதாயினியாகும். இடதுபக்கம் சிவனும் வலது பக்கம் சக்தியும் ஆகக் காணப்பெறும் அற்புத அர்த்த நாரீஸ்வர வடிவினைத் திருவேதிகுடித் திருத்தலத்தில் காணலாம்.

23. கஜயுக்த மூர்த்தி

கஜாசுரன், பிரமனை வேண்டித் தவமிருந்து வரம் பெற்றவன். விண்ணவர்கட்கு இன்னல் பல புரிந்தவ்ன். கரிய யானை வடிவினனான கயாசுரனை வென்ற சிவபெருமானின் போர்க்கோல வடிவம் இதுவாகும். விநாயகரைப் படைத்து அவரால் கயாசுரனைச் சிவன் கொல்வித்தார் என்பார் அப்பர்.

24. சுவரா பக்ன மூர்த்தி

வாணாசுரனுக்கும், கண்ணனுக்கும் ஒருமுறை கடும்போர் நிகழ்வுற்றது. அப்பொழுது கண்ணன் ஏவிய குளிர்சுர பாணத்தை அழிக்க வேண்டிச் சிவபிரான் வெம்மைச் சுரத்தை ஏவினார். இதனால் குளிர்சுரம் நீங்கியது. சிவனாரின் வெஞ்சுரம் மூன்று தலை மூன்று கைகள் மூன்று கால்களை உடைய வடிவில் சென்றமையால் இவ்வுலகம் அவ்வடிவினைச் சுவராபக்ன மூர்த்தி (சுரம் நீக்கும் பரமன்) என்று போற்றி வணங்குவதாயிற்று. இவ்வடிவம் மதுரை சொக்கநாதர் கோயில் திருச்சுற்றின் மேற்பகுதியில் அமைந்துள்ளது.

25. சார்த்துலஹர மூர்த்தி

தாருகாவன முனிவர்கள் வேள்வியில் இருந்து எழுந்து வந்த புலியினைக் கொன்று அதன் தோலை அணிந்து தோன்றும் சிவ வடிவம்.

26. கிராத மூர்த்தி

மகேஸ்வர வடிவங்களுள் இதுவும் ஒன்று. அருச்சுனன் தவத்துக்கிரங்கி வேடுவ வடிவந்தாங்கிச் சென்று விசயனுக்கு அருளிய சிவ வடிவம்.

27. கங்காள மூர்த்தி

வாமனாவதாரத்தை மேற்கொண்ட திருமாலுடைய அகந்தையை அடக்கியருளிய இச்சிவமூர்த்தம் மகேஸ்வர வடிவங்களுள் ஒன்றாகும். இதன் அருட்சக்தி சர்வ பாவ ப்ரதாயினி எனப்பெறும்.

28. கேசவார்த்த மூர்த்தி

அரியர்த்தர், சங்கரநாராயணர் என்று பல்வேறு பெயர்களையுடைய இச்சிவ வடிவம். மகேஸ்வர வடிவங்களுள் ஒன்றாகும். வலது பாதி சிவனாகவும், இடது பாதி திருமாலாகவும் தோன்றும் இவ்வடிவம். நெல்லை மாவட்டம் சங்கரன் கோயிலில் இச்சிறப்புமிகு வடிவைக் கண்டு தரிசிக்கலாம். இவ்வடிவின் அருட்சக்தி தர்மார்த்த ப்ரதாயினி ஆகும்.

29. பிட்சாடன மூர்த்தி

தாருகாவன முனிவர்களின் செருக்கினை அடக்கி நல்லுணர்வு தந்தருள வேண்டிச் சிவபிரான் மேற்கொண்ட வடிவம். மகேஸ்வர வடிவங்களுள் இது ஒன்றாகும். இம்மூர்த்தியின் அருட்சக்தி யோகி தத்பிருத விமோசினி ஆகும்.

30. சிம்மக்ன மூர்த்தி

இரணியனைக் கொன்ற திருமாலின் நரசிங்க வடிவின் அகந்தையை அழித்தருளிய இச்சிறப்பு வடிவைத் தஞ்சை மாவட்டம் கும்பகோணத்துக்கு அண்மையில் உள்ள திருபுவனத்தில் காணலாம். இவ்வடிவின் அருட்சக்தி அரிப்ரணாசினி ஆகும்.

நன்னாலிரண்டு திருவடியும் நனிநீள்வாலும் முகம் இரண்டும்
கொன்னார் சிறகும் உருத்திரமும் கொடும்பேரார்ப்பும் எதிர்தோற்றிச்
செந்நீர் பருகிச் செருக்கு நரமடங்கல் ஆவி செகுத்துரி கொண்(டு)
ஒன்னார் குலங்கள் முழுதழிக்கும் உடையான் சரபத் திருவுருவம்.

- காஞ்சிப்புராணம்.

31. சண்டேச அனுக்ரக மூர்த்தி

சேய்ஞலூரில் தோன்றியருளிய விசாரசருமர் தம் சிவபூசைக்கு இடையூறு விளைவித்த தன் தந்தை எச்சதத்தனின் காலைத் தடிந்தமை கண்டு அவருக்குச் சண்டேசப் பதவியை அருளிய சிவமூர்த்தி. மகேஸ்வர வடிவங்களுள் ஒன்றான இவ்வடிவின் அருட்சக்தி மகாபாதகனாசினி. இச்சிறப்புமிகு மூர்த்தியினைக் கங்கைகொண்ட சோழபுரக் கோயில் கருவறையின் வடபுறம் காணலாம்.

32. தெட்சணா மூர்த்தி

சனகாதி முனிவர்கள் நால்வர்க்கும் கல்லால மரத்தின் கீழ் இருந்து நான்மறைகளை உபதேசித்தருளிய இவ்வடிவம் சிவன் மகேஸ்வர மூர்த்தங்களில் ஒன்றாகும். இதன் அருட்சக்தி மேதாப்பிரக்ஞ ப்ரதாயினி ஆகும். அனைத்துச் சிவன் கோயில்களிலும் கருவறையின் தென்புறம் கோஷ்ட மூர்த்தமாக இவ்வடிவம் காணப்பெறும்.

33. யோக தெட்சணா மூர்த்தி

வடஆலின் கீழ் யோக நிலையில் அமர்ந்தருளும் சிவமூர்த்தம்.

34. வீணாதர தெட்சணாமூர்த்தி

தும்புரு நாரத முனிவர்கட்கு இசை ஞானத்தை அளிக்க வேண்டி வீணையைக் கையிலேந்திக் காட்சி தரும் இம்மூர்த்தத்தினைத் தஞ்சை மாவட்டம் திருப்பூந்துருத்தியில் கண்டு தரிசிக்கலாம்.

35. காலாந்தக மூர்த்தி

காலாரி, காலசம்ஹாரார் என்று பல்வேறு திருநாமங்களால் சுட்டப்பெறும் இவ்வடிவம் மார்க்கண்டேயனுக்காகக் காலனை காலால் தடிந்த சிறப்பினை உடையதாகும். இவ்வடிவம் மகேஸ்வர வடிவங்களுள் ஒன்றாகவும், அஷ்ட வீரட்ட வடிவங்களுள் ஒன்றாகவும் வைத்து எண்ணப்பெறுகின்றது. எமபயம் நீக்கியருளும் இவ்வடிவின் அருட்சக்தி சர்வாரிஷ்ட விநாசினி எனப்பெறும். இச்சிறப்பு மூர்த்தத்தினைத் திருக்கடவூர் வீரட்டத்தில் சென்று தரிசிக்கலாம்.

தோடுலா மலர்கள் தூவித் தொழுது எழு மார்க்கண்டேயன்
வீடுநாள் அணுகிற்று என்று மெய்கொள்வான் வந்த காலன்
பாடுதான் செலலும் அஞ்சிப் பாதமே சரணம் என்னச்
பாடினார் காலன் மாளச் சாய்க்காடு மேவினாரே.

- அப்பர்.

36. காமதகன மூர்த்தி

காமாரி எனப்பெறும் இவ்வடிவமும் அஷ்ட வீரட்ட வடிவங்களுள் ஒன்றாகவும் மகேஸ்வர மூர்த்தங்களுள் ஒன்றாகவும் வைத்து எண்ணப் பெறுவதாகும். யோக நிலையில் இருந்த சிவனார் மீது மன்மதனாகிய காமன் மலர் அம்புகளை ஏவியதால் அவனைத் தம் நெற்றிக் கண்ணால் சுட்டெரித்தருளிய சிவமூர்த்தம். இவ்வடிவின் அருட்சக்தி யோக விக்ன விநாசினி ஆகும். திருக்குறுக்கை வீரட்டம் என்னும் திருத்தலத்தில் இவ்வீரச் செயல் நிகழ்வுற்றதென்பர்.

37. லகுளிச மூர்த்தி

இவ்வண்டங்களில் காணப்பெறும் 224 புவனங்களிலும் ஒவ்வொரு மூர்த்தியாக எழுந்தருளி ஆங்காங்குள்ள ஆன்மாக்களுக்கு அருள்புரியும் சிவவடிவம்.

38. பைரவ மூர்த்தி

இரண்யாட்சகன் மகன் அந்தகாசுரனை வென்றருளிய சிவவடிவம். இவ்வடிவின் வாகனம் நாய் ஆகும். இவ்வடிவின் அருட்சக்தி ரட்சாகரி எனப்பெறும். இவ்வடிவம் அந்தஹாரி எனவும் பெறும்.

39. ஆபதோத்தாரண மூர்த்தி

முனிவர்கட்கு ஏற்பட்ட துன்பங்களையும் ஆபத்துக்களையும் களைத்தருளிய சிவமூர்த்தம்.

40. வடுக மூர்த்தி

பிரமதேவரை வருத்திய முண்டாசுரன் என்னும் அசுரனை வென்று பிரமனின் துயரினை நீக்கியருளிய சிவவடிவம்.

41. க்ஷேத்திரபாலக மூர்த்தி

கடையூழிக் காலத்தில் உலக உயிர்களைக் காத்தருளும் சிவமூர்த்தம்.

42. தட்சயக்ஞவத மூர்த்தி

தட்சயக்ஞவதர் எனப்பெறும் இம்மூர்த்தம் தாட்சாயணி எனப்பெறும் அம்மையின் தந்தையான தட்சனின் யாகத்தை அழித்து அவன் அகந்தையைப் போக்கியருளிய வடிவாகும். மகேஸ்வர வடிவங்களுள் ஒன்றாகவும், அஷ்ட வீரட்ட வடிவங்களுள் ஒன்றாகவும் வைத்து எண்ணப்பெறும். இவ்வடிவின் அருட்சக்தி சத்ருவித்தேவேட்ட விநாசினி ஆகும். இவ்வீரட்டத் தலம் திருப்பறியலூர் என்பதாகும்.

43. வீரபத்திர மூர்த்தி

தக்கனின் அகந்தையைப் போக்கிய சிவவடிவம். ஒட்டக்கூத்தரால் கட்டப் பெற்ற வீரபத்திரர் தனிக்கோயிலைத் தஞ்சை மாவட்டம் தாராசுரத்தில் காணலாம்.

44. அகோரஸ்திர மூர்த்தி

மருத்துவாசுரன் என்னும் அசுரன் தேவர்கட்கிழைத்த கொடுமைகளில் இருந்து தேவர்களைக் காக்கவேண்டி சிவன் மேற்கொண்ட இவ்வடிவினைத் திருவெண்காடு திருத்தலத்தில் சென்று தரிசிக்கலாம்.

45. பாசுபத மூர்த்தி (கிராதர்)

அருச்சுனன் தவத்துக்கிரங்கி பாசுபதாஸ்திரத்தை வழங்கியருளிய சிவமூர்த்தம்.

46. குருமூர்த்தி

திருவாசகத்தை அருளிய திருவாதவூரர் என்னும் மணிவாசகருக்குத் திருப்பெருந்துறை எனப்பெறும் ஆவுடையார் கோயிலில் குருந்த மரநிழலில் அமர்ந்து உபதேசித்து அருளிய சிவ வடிவம்.

47. அசுவாரூட மூர்த்தி

வாதவூரருக்காக நரிகளை எல்லாம் அசுவம் எனப்பெறும் குதிரைகளாக்கி அவற்றைப் பாண்டிய மன்னனிடம் கொண்டு சேர்த்த சிவவடிவம்.

48. கஜாந்திக மூர்த்தி

ஐராவதம் எனப்பெறும் இந்திரனுடைய வெள்ளை யானைக்கு அனுக்ரகம் செய்தருளிய சிவமூர்த்தம்.

49. சலந்திரவத மூர்த்தி

சலந்தராசுரனை வென்ற சிவவடிவம். மகேஸ்வர வடிவங்களுள் ஒன்றாகவும், அஷ்ட வீரட்ட வடிவங்களுள் ஒன்றாகவும் கருதப்பெறும் இச்சிவ வடிவின் அருட்சக்தி துட்டவிநாசினி எனப்பெறும். இவ்வீரச் செயல் நிகழ்வுற்ற திருத்தலம் திருவிற்குடி வீரட்டம் ஆகும்.

ஆரும் எதிராத வலியாகிய சலந்தரனை ஆழியதனால்
ஈரும்வகை செய்தருள் புரிந்தவன் இருந்தமலை தனைவினவின்
ஊரும் அரவம் ஒளிகொள் மாமணி உமிழ்ந்து அவை உலாவிவரலால்
காரிருள் கடிந்து கனகமென விளங்கு காளத்திமலையே.

- சம்பந்தர்.

50. ஏகபாத திருமூர்த்தி

சிவபெருமான் ஒற்றைக் காலராய் நான்கு திருக்கரங்களுடன் திகழ வலது பக்கம் பிரமனும் இடது பக்கம் திருமாலும் நான்கு கரங்களுடன் தோன்றும் சிவ வடிவம். இம்மூர்த்தத்தினைத் திருநல்லூர் திருக்கோயிலின் இராசகோபுரத்தில் சுதை வடிவில் கண்டு தரிசிக்கலாம்.

51. திரிபாத திரிமூர்த்தி

படைத்தல், காத்தல், அழித்தல் தொழில்களைப் புரியும் மும்மூர்த்திகளும் தத்தமக்குரிய நிலை பூர்த்தியானதும் ஒன்றாய் ஒடுங்கித் தோன்றும் சிவவடிவம் இதுவாகும்.

52. ஏகபாத மூர்த்தி

சிவன் மகேஸ்வர வடிவங்களுள் ஒன்றான இவ்வடிவின் அருட்சக்தி மகாரோக விநாசினி என்பதாகும். சர்வசங்கார காலமாகிய கடையூழிக்காலத்தில் அனைத்தையும் தம்முள் ஒடுக்கியருளிக் காட்சி தரும் சிவமூர்த்தம்.

53. கௌரி வரப்பிரசாத மூர்த்தி

உமையம்மை தம் கருமை நிறம் நீங்க வேண்டிச் சிவனைப் பூசித்தபோது அப்பூசனைக்கிரங்கி அம்பிகைக்குப் பொன்னிறம் அளித்த சிவவடிவம்.

54. விஷாபகரண மூர்த்தி

திருநீலகண்ட வடிவம். பாற்கடலில் இருந்த தோன்றிய ஆலகால விடத்தினைத் தாமே உண்டு தேவர்களைக் காத்தருளிய சிவவடிவம். மகேஸ்வர வடிவங்களுள் இதுவும் ஒன்று. இவ்வடிவின் அருட்சக்தி விடதோடப்ரணாசினி ஆகும்.

வடங்கெழுமலை மத்தாக வானவர் அசுரரோடு
கடைந்திட எழுந்த நஞ்சங்கண்டு பல்தேவர் அஞ்சி
அடைந்து நும்சரணம் என்னஅருள் பெரிதுடையராகித்
தடங்கடல் நஞ்சமுண்டார் சாய்க்காடு மேவினாரே.

- அப்பர்.

56. கவுரிலீலா சமந்வித மூர்த்தி

கௌரியாகிய அம்பிகையுடன் சிவன் பல லீலைகளை மேற்கொண்டருளிய வடிவம்.

57. கருடாந்திக மூர்த்தி

நந்தியுடன் பகைகொண்டு துன்புற்ற கருடனுக்கு அருள்செய்த சிவவடிவம்.

58. பிரமசிரச்சேத மூர்த்தி

சிவன் முடியைக் கண்டதாகப் பொய்புகன்ற பிரமனின் ஐந்து சிரங்களில் ஒன்றைக் கொய்து பிரமன் அகந்தையைப் போக்கி ஆட்கொண்ட சிவவடிவம்.

59. கூர்ம சங்கார மூர்த்தி

திருமாலின் பத்து அவதாரங்களுள் ஒன்றான கூர்மாவதாரத்தின் அகந்தையை அடக்கியருளிய சிவவடிவம்.

60. வராக சம்ஹார மூர்த்தி

வராகம் (பன்றி) வடிவிலான திருமால் அவதாரத்தின் ஆணவத்தைப் போக்கிய சிவமூர்த்தம்.

61. மச்ச சம்ஹார மூர்த்தி

மீன் வடிவிலான திருமாலின் மச்சாவதாரத்தின் செருக்கைப் போக்கியருளிய சிவவடிவம்.

62. பிரார்த்தனா மூர்த்தி

உமையம்மையின் ஊடலைத் தணிக்கச் சிவன் மேற்கொண்ட வடிவம்.

63. ரக்தப்பிட்சப் பிரதான மூர்த்தி

தேவர்களுடைய இரத்தத்தினைப் பலியாக ஏற்று அவர்களுடைய செருக்கினை அடக்கியருளிய சிவமூர்த்தி.

64. சிஷ்ய பாவ மூர்த்தி

முருகப் பெருமான் பிரணவத்திற்குப் பொருள் உரைத்த ஞான்று அதனைச் சிஷ்ய பாவத்துடன் கேட்டருளிய சிவமூர்த்தம். இவ்வடிவினைச் சுவாமிமலைத் திருக்கோயிலின் கீழ்புறப்பகுதியில் காணலாம்.

இவ்வறுபத்துநான்கு வடிவங்களைத் தவிரப் புராணங்களில் குறிப்பிடப்பெறும் வேறு சில சிவ வடிவங்கள் பின்வருமாறு :

65. கஜாரி

தாருகாவன முனிவர்கள் வேள்வியில் இருந்து எழுந்து வந்த போர்க்கோல யானையை வென்று அதன் தோலை உரித்துப் போர்த்துகந்த சிவ வடிவம். இது அஷ்ட வீரட்ட வடிவங்களுள் ஒன்றாகும். நிகழ்வுற்ற திருத்தலம் திருவழுவூர் வீரட்டம் .

66. ஹரிவிரிஞ்சதாரணர்

மகாப்ரளயகாலத்தில் தாங்களும் அழிவுறுவோம் என்று கருதிக் கலங்கிய பிரமனையும் திருமாலையும் தம் தோளின் மீதேற்றிக் காத்தருள் செய்த சிவவடிவம்.

67. மகாசதாசிவர்

மகேஸ்வர வடிவங்கள் இருபத்து ஐந்தும் கொண்ட சிவ வடிவம் 25 முகங்களையும் 50 திருக்கரங்களையும் உடைய இவ் வடிவினைத் திருநல்லூர், திருவிடைமருதூர், சிதம்பரம், மதுரை, வைத்தீஸ்வரன்கோவில் ஆகிய ஆலயங்களில் காணலாம்.

68. ஏகதசருத்ரர்

பிரமதேவனுக்குப் படைப்புத் தொழிலில் உதவுவதற்காகச் சிவன் சிருஷ்டித்துதவிய பதினோரு ருத்ரர்களும் ஏகாதச ருத்ரர் எனப்படுவர். இவ்வடிவங்களைக் காஞ்சி கைலாசநாதர் கோயில் திருச்சுற்றில் காணலாம்.

69. முயலக வத மூர்த்தி

முயலகன் என்ற அசுரனின் ஆணவத்தை அடக்கித் தம் அடிக்கீழ் கொண்ட தாண்டவ மூர்த்தி. ‘அடங்காத முயலகனை அடிக்கீழ்க் கொண்டார்’ என்பார் நாவரசர்.

70. கஜமுக அனுக்ரக மூர்த்தி

முருகன் உடனான சோமாஸ்கந்த வடிவினைப் போலச் சிவனும் உமையும் விநாயகருடன் அமர்ந்தருளும் சிவவடிவம் ‘மெல்லியலும் விநாயகனும் விளங்கித் தோன்றும்’ என்பார் அப்பர். இவ்வடிவம் மகேஸ்வர மூர்த்தங்களுள், வாமதேவத் திருமுக வடிவங்களுள் ஒன்றாகும்.

71. இராவண அனுக்ரக மூர்த்தி

திருக்கயிலையைப் பெயர்த்து எடுக்க முயன்ற இராவணனைத் தம் கால்விரல் ஒன்றினால் அடர்த்துப் பின் அவன் இன்னிசை கேட்டு அவனுக்கு அருள் புரிந்த சிவமூர்த்தி. இவ்வடிவின் மாண்பினை ஞானசம்பந்தர் தம் பதிகம்தொறும் எட்டாவது பாடலிலும், நாவரசர் தம் பதிகந்தொறும் கடைசிப் பாடலிலும் குறித்துள்ளனர். இவ்வடிவினைத் திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி கோயில் உட்பிரகாரத்தில் வடமேற்கு மூலையில் கண்டு தரிசிக்கலாம்.

தேரார்தரு திகழ்வாளெயிற் றரக்கன்சிவன் மலையை
ஓராதெடுத் தார்த்தான்முடி யொருபஃதவை நெரித்துக்
கூரார்தரு கொலைவாளொடு குணநாமமுங் கொடுத்த
ஏரார்தரு மிறைவர்க்கிட மிடும்பாவன மிதுவே.

- சம்பந்தர்.

72. சர்வ சம்ஹாரர்

ஊழிக்காலத்தில் உலக உயிர்கள் அனைத்தையும் தம் திருவடிக்கீழ் இருத்தி பின்னர் அவரவர் வினைகளுக்கேற்ப மீளவும் உயிர்ப்பிக்கும் சிவ வடிவம்.

73. யக்ஞேஸ்வரர்

வேள்விகளின் தலைவராய் வீற்றிருந்து வேள்விப் பயன்களை அருளும் சிவவடிவம்.

தோலொடு நூலிழை சேர்ந்த மார்பர்
தொகுமறையோர்கள் வளர்த்தசெந்தீ
மால்புகை போய்விம்மு மாடவீதி
மருகனிலாவியமைந்த சொல்லாய்
சேல்புக்கு தண்வயற்சோலை சூழ்ந்த
சீர்கொள் செங்காட்டங் குடியதனுள்
கால்புல்கு பைங்கழல் ஆர்க்க ஆடும்
கணபதியீச்சரம் காமுறவே.

- சம்பந்தர்.

74. உக்கிரர்

கருணையே திருவுருவான இறைவன் உயிர்களுக்கு அருளும் கருணை அறக்கருணை, மறக்கருணை என இரண்டு வகைப்படும். இவர் கொக்கின் வடிவம் கொண்ட குரண்டன் எனும் அசுரனை அழித்து அருளியவர். தீமைகள் உலகில் பரவிப் பெருகாமல் அவற்றை அழித்து உயிர்களைப் காப்பாற்றி அருளுபவர் இவர்.

வடாது மலையிற் புயம்நான்கும் மலர்க்கண் மூன்றும் உருத்திரமும்
தடாய படப் பாம்பரைநாணும் கபாலக்கரமும் தழலன்றிக்
கடாது சிவந்த சுரிபங்கி கவின்றமுடியும் வெண்ணிறமும்
கெடாத வனப்பிற் பெருங்கோலக் கெழீஇய பெருமான் திருவுருவம்.

- காஞ்சிப்புராணம்.

ஸ்ரீருத்ர மகாயந்திரம்



ஸ்ரீருத்திர மந்திரம்

நமஸ்தே அஸ்து பகவன் விச்வேச்வராய மஹாதேவா/
த்ர்யம்பகாய த்ரிபுராந்தகாய த்ரிகாக்னி காலாய//
காலாக்னி ருத்ராய நீலகண்டாய ம்ருத்யுஞ்ஜயாய ஸர்வேச்வரா/
ஸதா சிவாய ஸ்ரீமன் மஹாதேவாய நம//

குறிப்பு : - இதில் உருத்திரனின் 11 பெயர்களான பகவன், விஸ்வேஸ்வரன், மஹாதேவன், திரியம்பகன், திரிபுராந்தகன், அக்னிகாலன், காலாக்னிருத்திரன், நீலகண்டன், மிருத்திஞ்செயன், சர்வேசன், சதாசிவன் ஆகியன குறிக்கப்பட்டுள்ளன. இதை சூரியனை நோக்கி ஜபிப்பவர்கள் சகல பாவங்களும் ஒழிந்து சிவலோகம் அடைகின்றனர்.

சோமாஸ்கந்தர்

सोमास्कन्दः।

चतुर्भुजं त्रिनेत्रं च जटामकुटसंयुतम् ।
सर्वाभरणसंयुक्तं वरदाभयहस्तकम् ॥

कृष्णापरशुसंयुक्तं दक्षिणे वामकेऽपि च ।
पत्रं तु वामकर्णे तु दक्षिणे कुण्डलं भवेत् ॥

उपवीतधरं चैव शयनं वामपादकम् ।
लम्बितं दक्षिणं पादं वामे गौरीसमायुतम् ॥

तयोर्मध्ये स्थितस्स्कन्दस्सर्वलक्षणसंयुतः ।
ब्रह्मविष्णू द्विपार्श्वाभ्यां देवीभ्यां युक्तभोगदम् ॥

देवस्य बाहुसीमान्तं देव्यास्त्वायाममुच्यते ।
द्विबाहुका द्विनेत्री च करण्डमकुटान्विता ॥

सर्वाभरणसंयुक्ता दुकूलवसनान्विता ।
शयनं दक्षिणं पादं वामपादं तु लम्बितम् ॥

कटकं दक्षिणं हस्तं वरदं वामहस्तकम् ।
बेरायामं तु विभजेदष्टधा चैव भागिकम् ॥

द्विभागं वा गुहायामं वाहु(ल ?)रूपेण कल्पयेत् ।
द्विभुजश्च द्विनेत्रश्च सर्वाभरणभूषितः ॥

कटकं दक्षिणे हस्ते वामहस्तं प्रलम्बितम् ।
आसीनो वा स्थितो वापि कारयेत्तु गुहं ततः ॥

पद्मपीठोर्ध्वके वापि केवलं पीठकोपरि ।
भवानीसहितं ह्येवं वृषवाहनमुच्यते ॥

(पूर्वकारणागमे एकादशपटले ॥)

சோமாஸ்கந்தர்

பூர்வகாரணாகமம் - படலம் 11ல்

நாற்கரமும் முக்கண்ணும் சடைமுடியொடு கூடியவரும் அனைத்தணிகளும் புனைந்தவரும், அபயவரத ஹஸ்தம் கொண்டவரும், மான்மழுவோடு (மேற்புறத்தில்) கூடிய வலமிடக்கரங்கள் கொண்டவரும், இடச்செவியில் சுருள் தோடும், வலச்செவியில் குண்டலமும், முப்புரி நூலணிந்தவரும், இடக்காலை மடித்தவரும், தொங்கவிட்ட வலக்காலையுடையவரும், இடப்புறம் கௌரியோடு கூடியவருமாக அமைக்க. அவர்களினிடையில் அனைத்து லட்சணத்துடன் நிற்கும் கந்தரையும் கொள்க. இரு புறங்களிலும் தேவியருடன் கூடிய அயன், அரி ஆகியோரையும் அமைக்க.

ஐயனின் தோளளவாக அன்னையின் அளவு கொள்க. இரு கரங்களும் இரு கண்களும், கரண்ட மகுடம் உடையவளாயும், அனைத்து அணிகளும் கொண்டவளாயும் சித்திர வேலை கொண்ட ஆடையணிந்தவளாயும், வலத்தாளை மடித்து இடத்தாளைத் தொங்கவிட்டவளாயும், வலக்கரத்தில் கடகமும் இடக்கரத்தில் வரதமுத்திரையும் கொள்க.

அன்னையின் உருவ உயரத்தில் எட்டில் ஒன்று அல்லது இரண்டு பாகங்களால் குகனை அமைக்க. இரு கரங்கள், இரு கண்கள், அனைத்தணிகளும் பூண்டவர். வலக்கரம் கடகமாயும் இடக்கரம் தொங்குவதாயும், நின்ற நிலை அல்லது இருந்த நிலையில் அமைக்க. பத்ம பீடத்தின் மேல் (அல்லது) கேவல பீடத்தின் மேல் பவானியோடு (உமை) கூடிய விடையேறும் பரமனை (சிவனை) அமைக்க.

(**குறிப்பு:**- உத்தரகாமிகாகமம் படலம் 47லும், சுப்ரபேதாகமம் படலம் 43லும், சில்பரத்னம் படலம் 22லும், சோமாஸ்கந்தர் வடிவத்தை விரிவாகக் காணலாம்).



சோமாஸ்கந்தர் திருமேனி
(சிவன் - ஸ்கந்தர் - புத்ரசௌபாக்யப்ரதாயினி)



ஆடல்வல்லான்


45
43
16.4
24
20
29
37
34
9
15
18
40
8
17

படிமமானங்கள்

நடராசர்

(நிருத்த மூர்த்தி)

1. முதல்வகை - நிருத்த மூர்த்தி

(அம்சுமத்பேதாகமம் படலம் - 56ல்)

நிருத்தம் (ஆடல்) நூற்றெட்டு வகையாம். அவற்றில் முதன்மையான ''ஒன்பது வகைகள்'' கூறப்படுகின்றன. உத்தமமான பத்துத் தாள அளவில் அனைத்துறுப்புக்களையும் அமைக்க. மேல் வயிற்றைத் தொடுவதாய்ப் பூர்வ சூத்திரத்தை அமைக்க. அவ்விரேகையிலிருந்து உடுக்கை ஏந்தும் கரத்தின் நுனிவரை அரையங்குலம் கூடுதலான கலாங்குலம் (16.1/2) அங்குலம் கொள்க. அதனிலிருந்து அடுத்த கரத்தின்நுனிவரை நான்கு அங்குலம் கொள்க. அதிலிருந்து தீச்சுடர் தாங்கும் சுரம் வரை முப்பத்தெட்டு அங்குலம் கொள்க. அக்கரத்தின் நடுவிரல் நுனியை உறிக்கா சூத்திரம் வரை உயர்த்தி, அக்கையின் மையப்பகுதி அல்லது நடுவிரலின் நுனியில் அல்லது நடுவிரலின் நடுவில் பாத்திரத்தில் வைத்த தீச்சுடர் அல்லது வெறும் சுடர் (அமைக்க) ஐந்தங்குல அகலமுள்ள அளவில் அமைக்க. பூர்வ சூத்திரத்தின் வலப்புறம் உடுக்கை ஏந்திய கையின் மணிக்கட்டின் வெளிப்புறம் வரை இருபது அங்குலம் கொள்க.

இருபத்தெட்டங்குலம் அல்லது முப்பதங்குலம் கொண்டு வலமுன்கரத்தில் அபயம் அமைக்க. உறிக்காசூத்ரம் வரை உபய நடுவிரலின் உயரம் கொள்க. அபயத்தின் முன் கை மத்தியில் பாம்பணியை அமைக்க. அப்பாம்பணியின் நீளமான வால் திருவடிவரை கொள்க. அதன் படம் பன்னிரண்டு விரல் உயரமும், ஓரங்கல கனமும், ஏழங்குல அகலமும் கொள்க. நீட்டிய பட நுனியில் இரு கண்களும் வெளிநீட்டிய பிளவு நாக்கும் உள்ளதாக கொள்க. புஜங்க வலயத்தை இவ்வாறு செய்க.

தூக்கிய திருவடியின் முழந்தாள் நாபிக்கு நேராக வரக் கொள்க. விரிந்த சடைகளின் எண்ணிக்கையை ஐந்து, ஆறு, ஏழு அல்லது பதினொன்றாக ஒவ்வொரு புறத்தும் கொள்க. சடாபாரத்தைப் புட்ப மாலைகள், நாகம், எருக்கம்பூ, ஊமத்தம்பூ இவற்றால் அலங்கரிக்க. வெண்பற்களைக் காட்டும் வெண்டலைச் சடையைச் சுற்றி இறுக்கிய மணிகளால் ஆன கயிறு, ஆகியவற்றால் மகுடத்தை அலங்கரிக்க.

மகுடத்தின் வலப்புறம் பிறைச் சந்திரனால் அலங்கரிக்க. சிந்தூரப் பூச்சால் அக்கமாலை பூண்ட மார்பை அலங்கரிக்க. முழுநீறு பூசிய திருமேனியராய் புன்சிரிப்பு (குமிண் சிரிப்பு) கூடிய முகமாய் அமைக்க. முப்புரி நூலணி மார்பும் புலித்தோலாடையும், தொடையினுட் செலுத்தியதாயும், நூபுரங்கள் கூடிய திருவடிகளுமாக அமைக்க.

பலவகை அணிகளால் அலங்கரிக்கப்பட்டவராய் கை விரல்களும், கால் விரல்களும் அனைத்தும் பலவகை மணிகள் செறிந்து மோதிரங்களால் நிறைந்தனவாய்ச் செய்க. (நடு விரல் தவிர்த்து மற்றை விரல்களில் அணி செய்க) வளைந்த வலக்கால் சற்றே திருப்பிய நிலையில் அபஸ்மாரத்தின்மேல் ஊன்றி மகேசுரர் நடனம் செய்வதாய் அமைக்க. வலக்காலொப்ப தூக்கிய இடக்காலும் திரும்பிய நிலையில் அமைக்க. உடுக்கை தாங்கிய டோல ஹஸ்தத்தையும் சுழற்றி ஆடும் நிலையில் அமைக்க.

அபஸ்மாரம் அமைக்கும் முறை

சம்புவின் வலப்புறம் சிரமமைத்திடுக. இடப்புறத்தே விரிந்த பாதங்களாக அமைக்க. அபஸ்மாரத்தின் முகம் சிறிதே உயர்ந்த நிலையில் வைக்க. பாம்புடன் விளையாடும் அமைப்பில் வைக்க. பாம்பை இடக்கரத்தால் பிடித்து வலக்கரத்தால் அதன் படத்தருகில் பிடிப்பதாக அமைக்க. கருநிறங் கொண்டதாய் அபஸ்மாரத்தை அமைக்க.

ஷெ ஆதீன வெளியீடு - ''ஆடல்வல்லான்'' நூலில் நடராசப் பெருமானின் பலநிலைத் திருவுருவங்களைக் காணலாம். இதன் மூல ஸ்லோகங்களை நடராசப் பெருமான் நூலில் காண்க.



சந்தியா தாண்டவம்



அத்யுத்தண்ட தாண்டவம்

முன் சொன்ன வகையால் அவருடைய (நிருத்த மூர்த்தியின்) இடப்புறத்தில் உமாதேவியை அமைக்க. சர்வலோகத்துக்கும் நன்மையே தருவதாம் நிருத்தம் இதுவாகும்.

உத்தரகாமிகம் - படலம் 46ல்

நிருத்த மூர்த்தியின் பிரதிட்டையை அவரது உறுப்புகளின் அமைப்புடன் சொல்வேன்.

நாற்கரம், முக்கண், விரித்த சடை, மேல் முடித்த சடை, படமெடுத்த பாம்பால் வளைவுடன் சுற்றியதாகவும், பல்வாறாக முன், பின் பக்கங்களில் தொங்குவதாகவும் அமைக்க. இடைவெளியுடன் கூடிய முப்பது புரிசடைகளைக் கொள்க. ஊமத்தை, கொன்றை, எருக்கு முதலிய புட்பங்களாலலங்கரிக்க. சடைமுடியின் வலத்தில் அஞ்சலி முத்திரையுடன் கங்கையையும், இடப்புறத்தில் நிற்கும் பிறைச் சந்திரனாலும் அலங்கரிக்க. மகிழம்பூமாலைகளொக்க நாகங்களையே மாலைகளாகக் கொண்டதாக அமைக்க. புலித்தோலாடை, ஒளிர்மேனி, பல அணிகள் அலங்கரித்த நிலை, இடத்தோளின் மேல் யானைத்தோல் போர்த்தியவராயும், அழகிய ஆடை கொண்டவராயும் அல்லது மான்தோலுடுத்தவராயும் கொள்க.

கையில் பிரமகபாலங்கொண்டு புட்கங்களால் அலங்கரிக்கப்பட்டவர். வராகத்தின் வளை கொம்புகள். புலி நகங்கள். ஆமையோடு ஆகியவைகளைத் தரித்தவர். சங்கு மணிகள் கொண்ட மாலையணிந்தவர். வலப்பாதத்தினை ஊன்றியும், இடப்பாகத்தை வளைத்துத் தூக்கியும், நன்கு விரிந்த கரமலர்களும், அன்னையின் முகத்தாமரையில் வண்டென மொய்க்கும் கண்களையுடையவர். கிண்கிணிகள் நூபுரங்கள் ஆகியவை அலங்கரிக்கும் பாதங்களை உடையவர். இடவலச் செவிகளில் சுருள் குழையும், சித்திர குண்டலமும் கொண்டவர். விரிந்த படத்தை உடைய நாகத்தால் கங்கணம் பெற்ற வலக்கரம் உடையவர். அதில் அபயங் கொண்டவர்.

இடப்புற மேற்கரத்தால் வன்னியும் (தீச்சுடர்), வலமேற்கரத்தால் உடுக்கையும் தாங்கியவர். உபவீதங் கொண்டவர். பால் வெள்ளை நிறமுடையவர். பன்னிரண்டங்குல வளைவு கொண்ட மேனியுடையவர். பலவகைப் பாம்புகளை அணிகளாகக் கொண்டவர். அபஸ்மாரத்தின் மேல் நின்றவர்.

சிரசிலிருந்து வலநெற்றி வழியே வலநாசிப்புறமாக நாபியின் தெற்காக குல்பமத்தி வழியே சூத்திரம் கொள்க. நெற்றி நடுவிலிருந்து சூத்திரபாகம் துவிமாத்ரம் எனப்படும். உறிக்காசூத்திரத்திற்கும் நெற்றி நடுவுக்கு மிடையான பகுதி திரிமாத்ரம் எனப்படும் சுரோணிக்கும் இடத் தொடைக்கும் இடையில் தொடும் பகுதி இங்கு சம்மதம் (எனப்படும்). நூல் இருகுல்பத்தக்கும் இடைப்பகுதி ஏகாங்குலம் எனப்படும். சூத்ரத்திலிருந்து ஊன்றிய முழுந்தாள் வரையான பாகம் பானு, திக், மாத்ரம் எனப்படும். அச்சூத்ரத்திலிருந்து இடமுழுந்தாள்ள ஐம்பத்தொரு விரலாம். சூத்ரத்திலிருந்து தெற்கு அடிவயிறு எட்டங்குலமாம். சூத்ரத்திலிருந்து இடப்புற வயிறு பன்னிரண்டங்குலமாம். தெற்கு (வலம்) தொடையின் சூத்ரம் பதினேழு அங்குலமாம். சூத்ரத்தின் இடப்பகம் நவமாத்திரம் எடுக்கப்படும். சூத்ரத்திலிருந்து இடக்கழுத்து ஐந்தங்கலம் எடுக்கப்படும். சூத்ரத்திலிருந்து வலக்கழுத்து அதே அளவு எனப்படுகிறது. சூத்ரத்திலிருந்து இடத்தோள் முடிவு வரை மூன்றங்குலத்துடன் கொள்க.

மற்றொரு வகையால் சூத்ரபாதம் சொல்லப்பட்டது. கநீநிகை முடிவிலிருந்து சிரசின் வரையும், அதிலிருந்து நாசி நுனி வரை நாபியிலிருந்து குல்பமத்தி வழியாய் முன் தாள் வரை, இவற்றைத் தொடும் சூத்ரம் மத்திய சூத்ரம் எனப்படும்.

சூத்ரத்திலிருந்து பஞ்ச (ஐந்து) மாத்திரம், வடக்கு முகம் கண்டம், திரிமாத்திரம், தோள்முடிவு திரிமாத்திரம், கட்சம் நவமாத்திரம், நடுவயிறு அஷ்டமாத்திரம், சுரோணி விசுவாங்குலம், இடுப்பு ஓரங்குலம், வேறொரு வகையால் ஆறு மாத்ரம், தொடை நவமாத்தரம், பார்ஷணி (பக்க) முடிவு நாலு மாத்ரம், முகமும் கண்ணும் ஏழங்குலம், கண்டம் ஏழு மாத்ரம், தோள் முடிவு ஏழு மாத்ரம், கட்ச முடிவு (கக்கம்) விசுவமாத்ரம், குக்ஷி (அடிவயிறு) ஏழங்குலம், சுரோணியுகமாத்ரம் (நான்கு மாத்ரம்), கடி (இடுப்பு) வேத மாத்ரம், முழந்தாள் எட்டு அங்குலம் ஆக அமைக்க. பாதநுனி முக மாத்ரமாக அமைக்க. இவ்வாறு புத்தியினால் அமைக்க. நின்ற பாதத்தின் முழந்தாளளவில் எடுத்த தாளின் வளைந்த முன் தாளுயரத்தை அமைக்க. இரு முழந்தாள்களின் இடைவெளி இருபுறமும் இரு மாத்ரமாகும். இடது முழந்தாள் உயர்ந்த அளவில் சுரோணி உயரம் நிர்ணயமாம். தொடைகளின் மையத்திலிருந்து நாபி மத்திக்கான இடைவெளி நவமாத்ரம். இடது தண்டஹஸ்தத்தின் மணிக்கட்டு வரையான நீளம் மநுமாத்ரம்.

அபய ஹஸ்தத்தின் மணிக்கட்டு வரை ரஸாங்குலம் (ஏழு). அதன் பெருவிரலடியிலிருந்து மார்பின் நடுவரை துவயந்தரம் கொள்க. அடித்தல உயரம் இரு கைகளின் நடுவிலிருந்து கொள்க. தண்ட ஹஸ்தத்தின் கூர்ப்பரம் பதினேழு அங்குலமாகக் கொள்க. அக்னி புஜத்தின் உச்சமும் அக்னி சிகைகளின் உயரமும் ஐந்தங்குலமாகக் கொள்க. காதின் உயரத்திலிருந்து ஓரங்குலம் தள்ளி டமருகக் கையை அமைக்க. அக்னி மற்றும் டமருக அளவை முகவிஸ்தர அளவாகவும் ஐந்து (பூதங்கள்) அளவாகவும் கொள்க. மத்ய விஸ்தாரம் கோளக அளவாகக் கொள்க. சுற்றிலும் சூத்ரத்தால் சுற்றப்பட்டதாகக் கொள்க. ஒரு நாவுள்ளதாயும் கம்பீரத்வனியுள்ளதாயும் டமருகத்தை அமைக்க. தோளிலிருந்து மணிக்கட்டு வரை முப்பத்து நான்கு அங்குலம் அளவாகும்.

அபஸ்மாரம்

அபஸ்மாரத்தின் உயரம் (சூரியர் - 12, ருத்திரர் - 11, நந்தர் - 9) முப்பத்திரண்டுடன் எட்டு மாத்ரமாகும். இறைவரின் முக அளவால் அபஸ்மார அளவினைக் கொள்க. இரு முகங்களிலிருந்து ஐந்து முகங்கள் வரை அளவு கொள்க. அரைபாக முகமான அளவால் ஏழளவு எடுத்துக் கொள்க. நான்கு தாள அளவாலும் செய்க.

ஈசனுக்கு

தலை உச்சி (தலைக்குல்லா)யிலிருந்து கேசம் வரை கோலகம் எனப்படும். கேசாந்தத்திலிருந்து புருவம் வரை அஷ்டபாகம் எனப்படும். கழுத்து அர்தாங்குலம் எனப்படும். ஒன்றரை அங்குலம் கரணம் (காது) ஆகும். உறிக்கா சூத்ரத் தொடக்கத்திலிருந்து இதயம் முடிவு வரை ஆறங்குலம் (ஷடங்குலம்) எனப்படும். அதுபோன்றே இதயத்திலிருந்து நாபி வரையும் ஷடங்குலம் கொள்க. அதிலிருந்து மேட்ரமூலம் வரை கௌசிகாங்குலம் சொல்லப்பட்டது. தொடை அளவு ஏழு அம்சம். முழந்தாளவு துவிமாத்ரம். ஜங்கை (கண்ட சதை) அளவு ஏழம்சம். பாத உயரம் துவிமாத்ரம், இரு கரம், இரு கண்கள், மேல் முகம் கீழ் நோக்கியதாக அமைக்க.

பாம்பு இடது கையிலும், அதன் தலை வலக்கரத்திலும் பிடிக்கப்பட்டதாயும், வளைந்ததாயும், அதன் தலை வலப்புறத்துள்ளதாயும் அமைக்க.

கங்கையின் அளவு இறைவரின் முக அளவால் சொல்லப்படும். இரு கரம், இரு - மூன்று - கண்கள், கரண்ட மகுடம் உடையாள். அனைத்தணியும் கொண்டவள். முகம் தவிர்த்த பகுதி நீருருவாக (அலைகளாக) அமைக்க.



திரிபுரசங்கார தாண்டவம்



ஊர்த்துவ தாண்டவம்

பிரபை அளவு நூற்றுப் பத்தங்குல அகலமாக உள்ளது. உயரம் நூற்று முப்பத்தேழு அங்குலம். பதினொரு அங்குல அளவுகள் கூடுதலாகவும் குறைவாகவும் கொள்ளலாம். பாலச்சந்திரனை இரண்டரை அங்குல அளவாகக் கொள்க. அதன் ஏழு அளவால் இறைவரின் அருகில் தேவியை அமைக்க. பத்திரகாளியையும் பிருங்கி ரிஷியையும் அமைக்க. இவ்வாறு புஜங்கதிராசம் சொல்லப்பட்டது.

''புஜங்கலலிதம்'' சொல்லப்படுகிறது. அனைத்தும் புஜங்கத்திராசம் போல் செய்க. சிறப்பம்சங்கள் சொல்லப்படுகின்றன. நிற்கும் தாளின் முழுந்தாளின் சற்றுக் கீழாக தூக்கிய திருவடியின் தலத்தை அமைக்க. துவிமாத்ரம், திரிமாத்ரம், சதுர்மாத்ரமாக செய்க. இவ்வாறு புஜங்கலலிதம் சொல்லப்பட்டது.

''பைரவம்'' சொல்லப்படுகிறது. புஜங்கத்திராசம் போல் செய்க. சிறப்பம்சங்களாக வலப்பாதம் தூக்கியதாக அமைக்க. இடப்பாதத்தை ஊன்றச் செய்க. இடது பாதம் தேக மத்தியில் உள்ளதாயும், தூக்கிய திருவடி தலம் ஒன்றிய நிலையிலும் அமைக்க. நாற்கரங்கள் அல்லது எண்கரங்கள் பலவகை திவ்யாஸ்திரங்கள் கூடியனவாக அமைக்க. சிலை (கல்) முதலான பொருள்களால் நடேசரைச் செய்க.

சுப்ரபேதம் - படலம் 34ல்

நிருத்தத்தில் இடப்பாதம் பாதி உடலளவு நாபிக்குச் சமமாய் உயர்த்தியதாயும், அப்பாதத்தின் பெருவிரலளவில் வலமுழந்தாளும், வலமுழந்தாளுக்குச் சமமாக உள்ள பெருவிரலும், இடக்கரத்தை தண்டம் போல் நீட்டியும் - அபயம், டமருகம் கூடிய வலக்கரங்களும், டமருகம் கழுத்தளவாய் உயர்த்தியும் அழகுடன் அமைக்க. தோளளவு உயர்ந்த இடக்கரம் அக்னி உடையதாயும் அமைக்க.

திருவடி அடியில் அபஸ்மாரம் சர்ப்பத்துடன் விளையாடுவதாயும், ஊமத்தை, வெண்டலை, கங்கை, நிலா, கொக்கிறகு, பதினைந்து சடைகளில் ஒவ்வொரு புறமும் விரிந்த சடை எட்டாயும், புட்பங்கள் போல ஒளிர்வனவாயும், இவ்வாறு வலத்தும் இடத்தில் எரிசுடரின் வண்ணமாய் ஒளிர்வனவாயும் சர்வசாந்தியின் பொருட்டு நிருத்த ரூபத்தை அமைக்க.

சில்பரத்னம் - படலம் 22ல்

''நிருத்தம் நூற்றெட்டு விதமாகும்''- அவற்றில் முதலான ஒன்பது கூறப்படும். பன்னிரண்டு, பதினொன்று, பத்து ஆக நிருத்த மூர்த்தியின் உயரம் கூறப்பட்டது. ஹிக்கா என்னும் அளவுக்கு சமமாக வளைந்த வலக்கரத்தின் நுனி அல்லது உள்ளங்கை நடு அல்லது அக்கரத்தின் நடுவிரல் நுனி அல்லது அந்த நடுவிரலின் உயர்ந்த நடுப்பகுதியில் பாத்திரத்துடனோ, பாத்திரமின்றியோ தீச்சுடரை அமைக்க. எதிர்க்கரத்தில் உடுக்கையை வைக்க. அடுத்த வலக்கரத்தில் முன்கூறியதுபோல் அபயத்தை அமைக்க. அபயத்தின் முன்கைப் பாதியில் நாககங்கணம் செய்க. (புஜங்கவலயம்) சுற்றி வீசும் அமைப்புள்ள இடக்கரத்தினை உசிதப்படி வைக்க. நின்ற முழந்தாளுக்கும் இட முழந்தாள் இடப்பாதம் இடைவெளி கலாங்குலம் (16) ஆகும்.

விரிந்த சடையும், நாகங்களாலலங்கரித்த சடைமுடியும், வெண் தலைகள், ஊமத்தம் மற்றும் நாகலிங்கம் ஆகிய பூக்களால் அலங்கரிக்கப்பட்டதாயும் செய்க. வலப்புறம் பிறைமதி அமைக்க. சிந்தூரம் (செஞ்சாந்து) பூசிய மார்பில் ருத்திராக்க மாலைகளுடன் கூடியதாக அமைக்க. முழுநீறு பூசிய மேனி, குமிண் சிரிப்புடைய மலர் முகம், முந்நூல் மார்பு, புலித்தோலாடை, சற்றே வளைந்த வலப்பாதம் அபஸ்மாரத்தின் மேல் ஊன்றி நின்றதாயமைக்க.

அபஸ்மாரத்தை நான்கு தாள அளவினாற் செய்க. சம்புவின் வலப்பக்கமாயுள்ள அபஸ்மார முகம் கீழ்நோக்கியதாய் அமைக்க. பாதங்கள் பரப்பியனவாகவும் கைகள் பாம்பொடு விளையாடுவனவாகவும் அமைக்க. அல்லது பாம்பினை இடக்கையில் பற்றி, வலக்கையில் (சுட்டு) முத்திரை கூடியதாக அமைக்க.

கலாங்குல உயரம் (16/5) கொண்டதாக பதுமபீடம் அமைக்க. அதன் நான்கு பங்கு அகலம் கொண்டதாக ஒளிவட்டம் அமைக்க. இரவிமண்டலம் போன்றும் ஒளிவட்ட அமைப்புக் கொள்க.

இடப்புறத்தே முன்போல் உமாதேவியை வைக்க. இது அனைத்துலக நன்மைக்கான முதல்வகை நடனமாகும்.

பூர்வகாரணாகமம்

நாற்கரத்தர், முக்கண்ணர், விரிசடையுடையார் பின்புறம் குச்சுடன் கூடிய குரரீ என்னும் மார்பணியுடையார், சடையின் வலப்புறம் பிறைமதியுடையார். சடைநுனியின் வலப்புறத்தே கைகூப்பிய கங்கையினை உடையார். இடக்காதில் சுருள்இலைத்தோடும் வலக்காதில் வளைத்தோடுமுடையார். பல்வகை அணிகளும் முப்புரி நூலும் தரித்தவர்.

புலித்தோலாடை, கரங்களில் கிங்கிணி, வலக்கரத்தில் அபயம், இடக்கரம் வீசுகரம், வலமேற்கரத்தில் உடுக்கை, இடமேற்கரத்தில் அக்கினி, சற்றே வளைந்து, அபஸ்மாரத்தின் (முயலகன்) மீது ஊன்றிய திருவடி, வலப்புறமாய் வளைந்த நுனி கொண்ட எடுத்திட்ட இடத் திருவடி.

வலநெற்றியின் புறம் 8.1/2 யவ ஒதுக்கம் கொண்டு வலநாசிப்புறமாக சூத்திரத்தைத் தொங்கவிடுக. குல்பம் வலது திருவடி ஆகியவற்றின் மையத்தில் சூத்திரம் அமைய வேண்டும். சூத்திரத்திலிருந்து ஆறு அங்குலம் ஒதுக்கத்தில் தொடை அமைக்க. இடத்தொடை, கக்கங்கள் சூத்திரத்திலிருந்து எட்டங்குலம், சூத்திரத்தின் வலப்புறம் ஆறாங்குலத்தில் கிரீவம் (முகம்) அமைக்க. இடப்புறத்து முகம் மூன்றங்குலம் கொள்க.

சூத்திரத்தின் வலப்புறம் நாபி இரண்டங்குலம், சூத்திரத்தின் மேட்ர மூலம் வடப்புறம் கொள்க. சூத்திரத்திலிருந்து ஏழங்குலம் ஒதுக்கம் இடப்புறப் புட்டத்துக்குக் கொள்க. எடுத்த முழந்தாள் பத்தங்குல ஒதுக்கம் கொள்க.

வலது தோளின் முடிவிலிருந்து நடுக்கழுத்து வரை இரண்டு யவை கூடிய இருபதங்குலமாகக் கொள்க. இடத்தோளின் முடிவு நடுக்கழுத்திலிருந்து பதினேழங்குலமும் இரு யவையும் கொள்க. தொப்புளின் இடப்புறம் குட்சியின் ஒதுக்கம் பதின்மூன்றங்குலம். அக்னி கரம் தோளுக்குச் சமமாய்க் கொள்க. நெருப்பின் உயரம் ஐந்தங்குலமாகும். அகலம் மூன்றங்குலமாகும். உள்ளங்கையின் நடுவில் முக்கொழுந்துள்ளதாகக் கொள்க. ஒதுக்கம் தோளிலிருந்து மணிக்கட்டு வரை 34 அங்குலம் கொள்க. சூசி ஹஸ்தத்தில் உடுக்கை அமைக்க. சூசியின் மேல் காதுக்கு சமமாக உடுக்கை அமைக்க. தோளுக்கும் மணிக்கட்டுக்கும் ஒதுக்கம் 24 அங்குலம் கொள்க.

எடுத்த திருவடியின் முழந்தாள் நாபிக்குச் சமமாகக் கொள்க. எடுத்த பாதத்தின் வளைந்த நுனியை ஊன்றிய பாதத்தின் முழந்தாளுக்கு நேராய் அமைக்க. இரண்டு பாதங்கட்கும் இடைவெளி 34 அங்குலமாகக் கொள்க. இடமுழந்தாளுக்கும் வீசிய மணிக்கட்டுக்கும் இரண்டு யவ இடைவெளி கொள்க. அபயகரத்தினை தோளின் அடிப்பக்கத்துக்குச் சமமாகக் கொள்க. முன்கை மத்தியில் நாகத்தினை அமைக்க. மூன்று வளைவுள்ள உடலுடன் நான்கு தாள அளவில் அபஸ்மாரத்தை அமைக்க. பூதரூபம் கொள்க. பெருமானின் இடப்புறம் அனைத்து அழகுடன் கூடியவளாய் தேவியை அமைக்க. இவ்வாறு ''புஜங்கதிராசம்'' அமைக்க.

2) இரண்டாம் வகை - நிருத்தமூர்த்தி

(அம்சுமத் படலம் 65ல்)

அவ்வாறே சடைமுடி நுனியின் வலப்புறம் அனைத்தழகுடன் கைகூப்பிய கங்கையாளை அமைக்க. இவ்வாறு கங்கையைத் தரித்த மூர்த்தி இரண்டாமவர்.

சில்பரத்னம் - படலம் 33ல்

அவ்வாறே சடைமுடியின் நுனியில் வலப்புறமாய் 16 அங்குல உயரமும், இதயத்தில் அஞ்சலித்த கைகளும், மகளிருக்குரிய அனைத்து இலக்கணங்களும் கொண்ட கங்கையை வைக்க. இவ்வாறு கங்கையோடு கூடிய நிருத்த மூர்த்தி இரண்டாமவர்.

3) மூன்றாம் வகை - நிருத்த மூர்த்தி

(அம்சுமத் பேதம் - படலம் 56ல்)

அவ்வாறே அபஸ்மாரத்தின் மீது இடது பாதத்தினை ஊன்றி இடக்காலின் உயரத்துக்கேற்ப வலப்பாதம் எடுத்த நிலையுள்ள மூர்த்தி மூன்றாவர். மற்றவை முன்போற் கொள்க.

4) நான்காம் வகை - நிருத்தமூர்த்தி

(அம்சுமத் பேதம் - படலம் 58ல்)

நன்கு விரிந்த சடை ஜடாமகுடத்தால் அலங்காரம், வட்டச்சடை, மற்றவை முதலாம் மூர்த்தம் போல் கொள்க. அனைத்துயிர்கட்கும் இந்நாலாம் மூர்த்தம் நன்மை பயப்பதாம்.

சில்பரத்னம் - படலம் 22ல்

விரிந்த பரந்த வட்டச்சடை, அழகுடன் கூடிய சடைமுடி, மற்றவை ஆதியில் சொன்னவாறு அமைக்க.

5) ஐந்தாம் வகை - நிருத்தமூர்த்தி

(அம்சுமத் பேதம் - படலம் 56ல்)

வலது திருவடி தலைக்கோலத்தின் முடிவு வரை உயர்ந்ததாயும், வளைந்த இடது திருவடி அபஸ்மாரத்தின் மேல் நன்கு ஊன்றியதாயும், எண்கரங்கள் கொண்டதாயும் ஐந்தாம் மூர்த்தம் சொல்லப்பட்டது. அபயம், சூலம், பாசம், உடுக்கை வலக்கரங்களிலும், கபாலம், அக்னி பாத்திரம், மணி, வீசுகரம் ஆகியவை இடக்கரங்களிலும் கொள்க. முதல் மூர்த்தத்தில் சொன்னபடி சூத்திர அளவுகள் கொள்க.

சில்பரத்னம் - படலம் 22ல்

தலைக்கோல அளவு தூக்கிய வலத் திருவடியும், நன்கு வளைந்து அபஸ்மாரத்தின் மேல் ஊன்றிய இடத் திருவடியும் இரு புறங்களிலும், எண் கரங்களும் - அபயம், சூலம், பாசம், உடுக்கை வலப்புறமும், கபாலம், அக்னி பாத்திரம், மணி, யானைத் துதிக்கையொத்த வீசுகரமும் கொண்டது. ஐந்தாம் வகை நிருத்த மூர்த்தமாகும்.

6) ஆறாம் வகை - நிருத்தமூர்த்தி

பதினாறு தோள்களை இருபுறமும் கொண்டதாக ஆறாம் வகை நிருத்த மூர்த்தி அமையும்.

இடப்புறம் தன் இடது இடுப்பில் கந்தனைத் தாங்கி, சுற்றிய இடக்கையை வலக்கையுடன் சேர்ந்தஞ்சலியாக்கி நிற்பவராய்க் கௌரியை அமைக்க. இறைவனைப் பார்க்கும் திருமுகத்தில் பயம், மிகு

உறவு, ஆச்சரியம் ஆகிய பாவங்கள் அமையும். தாயின் இடுப்பில் அமர்ந்துள்ள கந்தர், தாயிர் இரு மார்பகங்களைத் தன் கைகளால் பிடித்துள்ளவராக அமைக்க.

வலக்கரங்களில் - கீழிருந்து மேலாக அபயம், உடுக்கை, வச்சிரம், சூலம், பாசம், மழு, தண்டு, நாகம் ஆகியவையும், இடக்கரங்களில் - கீழிருந்து மேலாக யானைக்கரம் ஒத்த வீசுகரம், தீப்பிழம்பு, சக்கரம், கொடி, மணி, கேடயம், கபாலம், ஆண் பெண் உடல், ஆகியவையோ, அல்லது, தீச்சுடர், வீசுகரம், கேடயம், விஸ்மய முத்திரை, மணி, கபாலம், சூரிகை, சூசி முத்திரை ஆகியவையோ அமைக்க. பிறவற்றை ஐந்தாம் மூர்த்தியை ஒத்து அமைக்க. திருவடிகளை ஐந்தாம் மூர்த்தத்துக்குள்ளது போல் கொள்க.

சில்பரத்னம் - படலம் 22ல்

பதினாறு தோள்களும், இடப்புறம் கௌரியோடு கூடியவர். கௌரியின் இடுப்பிலுள்ள கந்தர் பயத்துடன் இரு கரங்களாலும் தாயின் மார்பகங்களைப் பிடித்திருப்பராகவும், கௌரி கந்தரை அணைத்த கரங்களை அஞ்சலியாக வைத்திருப்பாள். ஈசரை பார்க்கும் முகத்தில் பீதி, மிகுந்த உறவு, அற்புதம் ஆகிய பாவமுள்ளவர். வலக்கரங்கள் எட்டில் - (கீழ்மேலாய்) அபயம், உடுக்கை, வச்சிரம், சூலம், பாசம், மழு, தண்டம், நாகம் ஆகியவையும், இடக்கரங்களில் - வீசு கரம், தீச்சுடர், ஈருடல்கள், சக்கரம், கொடி, மணி, கபாலம் ஆகியன விளங்கும். திருவடிகள் ஐந்தாம் வகை நிருத்தமூர்த்தி போன்று விளங்கும்.

7) ஏழாம் வகை - நிருத்தமூர்த்தி

(அம்சுமத் பேதம் - படலம் 56ல்)

முக்கண்ணர், எண்தோளர், விரிசடையுடையர், வளைந்த இடக்காலினை அபஸ்மாரத்தின் மேல் ஊன்றியவர். தூக்கிய வலக்காலின் பெருவிரல் பூமி நோக்கி வளைந்தது. அபயம், சூலம், பாசம், உடுக்கை வலப்புறங்களில் கொண்டவர். தீச்சட்டி, விஸ்மய முத்திரை, வீசுகரம் ஆகியவை இடப்புறம் கொண்டவர். உயரம் - பத்தம்சம். இடப்புறம் கௌரியொடு கூடியவர். இவர் ஏழாம் மூர்த்தமாகக் கூறப்படுகிறார். உலகின் துன்பங்களைப் போக்குபவர்.

8) எட்டாம் வகை - நிருத்த மூர்த்தி

(அம்சுமத்பேதம் - படலம் 56ல்)

ஆறுகரமுடையவர், அபயம், உடுக்கை, சூலம், வலப்புறமும், கபாலம், விஸ்மயம், வீசுகரம் இடப்புறம் கொண்டவர். இரு கண்கள், ஐந்து, ஆறு மூர்த்தங்களைப் போன்ற திருடிகள். சூத்திர விதிகள் முன்போற் கொள்க. இவ்வாறாக எட்டாம் வகை நிருத்தமூர்த்தி கூறப்படுகிறார்.

9) ஒன்பதாம் வகை - நிருத்தமூர்த்தி

(அம்சுமத்பேதம் - படலம் 56ல்)

நாற்பெருந்தோளர், முக்கண்ணர், சடைமுடியுடையார், அபயம், துடி - இவை வலப்புறம் தீச்சுடர், வீசுகரம், இடப்புறம் கொண்டும் அபஸ்மாரமில்லாத பீடத்தில் வளைந்த இடத்தாளினை ஊன்றியவர். வலத்தாள் சிறுவிரலை பீடத்தில் படும் நிலையில் இடத்தாளின் முன் வைத்தவர். வலப்பாதத்தையும் வளைந்த நிலையில் யுக்தியின்படி சூத்திரத்தை அமைக்க. இது ஒன்பதாம் வகை நிருத்தமூர்த்தியின் லட்சணமாகும்.



கௌரி தாண்டவம்



சிவ தாண்டவம்

திருமூலர் அருளிய திருமந்திரத்தில் ஐந்தெழுத்தாலான சிவ யந்திரங்கள் திருவம்பலச் சக்கரங்கள்



911-912 திருமந்திரங்களின் விளக்கம்

திருமூலர் அருளிய திருமந்திரத்தில் 4-ஆம் தந்திரப் பகுதியில் காணும் யந்திரங்கள் (சக்கரங்கள்)

(**குறிப்பு** :- திருமூலர் அருளிய திருமந்திரத்தில் 4-ஆம் தந்திரப் பகுதியில் காணும் யந்திரங்கள் (சக்கரங்கள்) தொடர்ந்து இடம் பெறுகின்றன. இன்னும் பல உண்டு. கீழே பாடலின் எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன. விளக்கங்களை ஷெ ஆதீன வெளியீடு எண் : 382ல் காண்க. உரையாசிரியர் ஆதீன மகாவித்துவான் ச. தண்டபாணி தேசிகர்).



ந	உ	ஸி	வ	ய	ஸி	உ	வ	ய	ந	ஸி
ய	ந	வ	ஸி	உ	வ	ஸி	ய	ந	உ	வ
உ	வ	ய	ந	ஸி	ய	வ	ஸி	உ	ய	ந
ஸி	ய	ந	உ	வ	ந	ந	உ	ஸி	வ	ய
வ	ஸி	உ	ய	ந	உ	ய	ந	வ	ஸி	உ
ஹ	ர	ஹ	ர	ஓம்		ஓம்	ஹ	ர	ஹ	ர
வ	உ	ந	ய	ஸி	ஓம்	ஸி	ந	ய	வ	உ
ஸி	ந	ய	வ	உ	ஹ	உ	ஸி	வ	ந	ய
உ	ஸி	வ	ந	ய	ர	ய	வ	ஸி	உ	ந
ய	வ	ஸி	உ	ந	ஹ	ந	ய	உ	ஸி	வ
ந	ய	உ	ஸி	வ	ர	வ	உ	ந	ய	ஸி

914 - திருமந்திர விளக்கம்

==

915 - திருமந்திர விளக்கம்

சி	வ	ய	ந	ம	சி	வ	ய	ந	ம	சி
ம்	ம	ம	ம	ம	ம்	ம	ம	ம	ம	வ்
ந்	ம	ந	ந	ந	ந்	ந	ந	ந	ம	ய்
ய்	ம	ந	ய	ய	ய்	ய	ய	ந	ம	ந்
வ்	ம	ந	ய	வ	வ்	வ	ய	ந	ம	ம்
சி	ம	ந	ய	வ	சி	வ	ய	ந	ம	சி
ம	ம	ந	ய	வ	வ்	வ	ய	ந	ம	வ்
ந்	ம	ந	ய	ய	ய்	ய	ய	ந	ம	ய்
ய்	ம	ந	ந	ந	ந்	ந	ந	ந	ம	ந்
வ்	ம	ம	ம	ம	ம்	ம	ம	ம	ம	ம்
சி	ம	ந	ய	வ	சி	ம	ந	ய	வ	சி

சி	வா	ய	ந	ம
ம	சி	வா	ய	ந
ந	ம	சி	வா	ய
ய	ந	ம	சி	வா
வா	ய	ந	ம	சி

923 - திருமந்திர விளக்கம்

==


ஹ்ரீம் ஸ்ரீம் ஹ்ரீம் ஸ்ரீம் ஹ்ரீம் ஸ்ரீம் ஹ்ரீம் ஸ்ரீம் ஹ்ரீம் ஸ்ரீம் ஹ்ரீம்
ஹ்ரீம் ஸ்ரீம் ஹ்ரீம் ஸ்ரீம் ஹ்ரீம் ஸ்ரீம் ஹ்ரீம் ஸ்ரீம் ஹ்ரீம் ஸ்ரீம் ஹ்ரீம்

ந	ம	ஶி	வ	ய
ம	ஶி	வ	ய	ந
ஶி	வ	ய	ந	ம
வ	ய	ந	ம	ஶி
ய	ந	ம	ஶி	வ

923 - 926 திருமந்திரங்களின் விளக்கம்


ஹ்ரீம்
சிவ
ஹம்ஸ
ஸோஹம்
ம்

924 - 927 திருமந்திரங்களின் விளக்கம்



946-950 திருமந்திரங்களின் விளக்கம்



ஶி	வ	ய	ந	உ	உ	வ	ய	ந	உ	ஶி
வ	ய	ந	உ	ஶி	ந	ய	ந	உ	ஶி	வ
ய	ந	உ	ஶி	வ	ய	ந	உ	ஶி	வ	ய
ந	உ	ஶி	வ	ய	வ	உ	ஶி	வ	ய	ந
உ	ஶி	வ	ய	ந	ஶி	ஶி	வ்	ய	ந	உ
உ	ந	ய	வ	ஶி		ஶி	வ	ய	ந	உ
உ	ஶி	வ	ய	ந	ஶி	ந	உ	ஶி	வ	ய
ஶி	வ	ய	ந	உ	வ	உ	ஶி	வ	ய	ந
வ	ய	ந	உ	ஶி	ய	ஶி	வ	ய	ந	உ
ய	ந	உ	ஶி	வ	ந	வ	ய	ந	உ	ஶி
ந	உ	ஶி	வ	ய	உ	ய	ந	உ	ஶி	வ

946 - திருமந்திர விளக்கம்

987 - 988 திருமந்திரங்களின் விளக்கம்

18	19	20	21	22	23	24
17	சி	வ	ய	ந	ம	1
16	ம	சி	வ	ய	ந	2
15	ந	ம	சி	வ	ய	3
14	ய	ந	ம	சி	வ	4
13	வ	சி	ய	ந	ம	5
12	11	10	9	8	7	6



	ய	வ	ய	
	வ்	சி	வ	
	ய	வ	ய்	

996 - திருமந்திர விளக்கம்

997 - திருமந்திர விளக்கம்

ம	சி	வ	ய	ந
ந	ம	சி	வ	ய
ய	ந	ம	சி	வ
வ	ய	ந	ம	சி
சி	வ	ய	ந	ம



சாம்பவி மண்டலச் சக்கரம்
(1298 - 1300 திருமந்திரங்களின் விளக்கம்)



க்லீம்	ஸௌம்	ஔம்	ஹௌம்	ஹ்ரீம்	கௌம்	வௌம்	ரீம்	ஸ்ரீம்
ஸௌம்	ஔம்	ஹௌம்	ஹ்ரீம்	கௌம்	வௌம்	ரீம்	ஸ்ரீம்	க்லீம்
ஔம்	ஹௌம்	ஹ்ரீம்	கௌம்	வௌம்	ரீம்	ஸ்ரீம்	க்லீம்	ஸௌம்
ஹௌம்	ஹ்ரீம்	கௌம்	வௌம்	ரீம்	ஸ்ரீம்	க்லீம்	ஸௌம்	ஔம்
ஹ்ரீம்	கௌம்	வௌம்	ரீம்	ஸ்ரீம்	க்லீம்	ஸௌம்	ஔம்	ஹௌம்
கௌம்	வௌம்	ரீம்	ஸ்ரீம்	க்லீம்	ஸௌம்	ஔம்	ஹௌம்	ஹ்ரீம்
வௌம்	ரீம்	ஸ்ரீம்	க்லீம்	ஸௌம்	ஔம்	ஹௌம்	ஹ்ரீம்	கௌம்
ரீம்	ஸ்ரீம்	க்லீம்	ஸௌம்	ஔம்	ஹௌம்	ஹ்ரீம்	கௌம்	வௌம்
ஸ்ரீம்	க்லீம்	ஸௌம்	ஔம்	ஹௌம்	ஹ்ரீம்	கௌம்	வௌம்	ரீம்

நவாக்கரிச் சக்கரம்
1364 - திருமந்திர விளக்கம்



சாம்பவி மண்டலச் சக்கரம்

(1311 - 1314 திருமந்திரங்களின் விளக்கம்)


ஸ்ரீ
நமசிவாய
நமசிவாய
நமசிவாய
ஸ்ரீ
ஸ்ரீ
ஓம்
ஸ்ரீ

ஸ்ரீசிதம்பரச் சக்கரம்

ரிஷபாரூட மூர்த்தி

இடபாரூட மூர்த்தி (ரிஷபாரூட மூர்த்தி) இறைவனின் உன்னதமான திருக்கோலமாக அடியார்களால் விரும்பித் தொழப்படுகிறது. திருக்கோயில் திருவிழாக்களில் பெருமானுடைய இடபவாகன காட்சி காண எண்ணற்ற அடியார்கள் காத்து நிற்பதைக் காணலாம். சிவபெருமான் அறத்தின் வடிவாகிய இடபத்தின் மீது எழுந்தருளி உயிர்களை நோக்கி வரும் எளிவந்த வான் கருணையை இக்கோலம் காட்டுகிறது.

''ஸ்ரீதத்வநிதி'' நூலில் - வலது பக்கத்தில் கணபதியை அணைத்துக் கொண்டு கடகஹஸ்தமுடன், வலது கரத்தில் ஜபமாலையுடன் பின் கரங்களில் மானையும் மழுவையும் ஏந்தி, அழகிய முகங்கொண்டு, முக்கண்ணராய், கிரீடம் தரித்த, இடது பக்கம் உமாதேவியுடன் இடபத்தின் மீது வீற்றிருப்பவரே இடபாரூட மூர்த்தி என வருணிக்கிறது. இவரை வணங்கினால் சகல சௌபாக்கியம் கிடைக்கும்.

சோமாஸ்கந்தர் மூர்த்தியை இடபவாகனத்தில் எழுந்தருளச் செய்து இடபாரூட மூர்த்தியாகக் காட்டுவது உண்டு. இவ்வாறு அலங்கரிக்கும்போது ஸ்கந்தரை மறைந்துவிடுவர். சில தலங்களில் சந்திரசேகர மூர்த்தியை இடப வாகனத்தில் வைத்து அலங்கரித்து வீதியுலாச் செய்வர். தியாகராசர் தலங்களில் சந்திரசேகரர் இடபாரூடராக விளங்குவார்.

விருஷவாகனர் (இடபவாகனர் - விடையேறி)

वृषवाहनमूर्तिः।

वृषारूढप्रतिष्ठां तु वक्ष्ये तल्लक्षणान्विताम् ।
चतुर्भुजस्त्रिनेत्रस्तु जटामकुटसंयुतः ॥

परशुर्दक्षिणे हस्ते वामहस्ते मृगो भवेत् ।
पूर्वदक्षिणहस्तस्तु कटको वक्रदण्डयुक् ॥

अस्य सव्यप्रकोष्ठं तु विन्यसेद्वृषमस्तके ।
स हस्तो हंसपक्षो वा पताकाधोमुखस्तु वा ॥

तन्मध्यमाङ्गुलाग्रेण. नाभिसूत्रसमं भवेत् ।
तस्यैवा दक्षिणे देवीं कारयेल्लक्षणान्विताम् ॥

अथ स्वदक्षिणे गौरीयुक्तो वा मूर्त्यपेक्षया ।
आयुधव्यतिरिक्तैस्स्वैरङ्गैस्तु विपरीतकैः ॥

संयुक्तो वा वृषारूढस्त्वेवं मुक्तिप्रदो भवेत् ।
पृष्ठस्थो वृषभः कार्य्यो देवजानूरुकोच्छ्रयः ॥

मेढ्रान्तो नाभिसीमान्तःशेषं सर्वं तु पूर्ववत् ।

(उत्तरकामिकागमे द्विषष्टितमपटले ॥)

உத்தரகாமிகம் - படலம் 62ல்

உரிய லட்சணங்கள் கொண்ட இடபவாகனர் (ரிஷபவாகனர்) பிரதிட்டைச் சொல்கிறேன். நாற்றோளர், முக்கண்ணர், சடைமுடி கொண்டவர். மேற்கரங்களில் வலம் - பரசும், இடம் - மானும் கொண்டவையாகக் கொள்க. முன்னிரு கரங்களில் வலக்கரம் வளைதடியும், இடக்கர முழங்கை இடபத்தின் உச்சந்தலையில் ஊன்றியதாயும் அமைக்க. இடக்கரம் மேனோக்கி விரிந்த உள்ளங்கையுடனோ அன்றி கீழ்நோக்கிய உள்ளங்கையுடனோ அமைக்க. நாபி சூத்திரத்திற்குச் சமமாக இடது கையின் நடுவிரற்பாகம் அமைக்க. ஈசனின் பின் அவரின் இடப்புறத்திலோ வலப்புறத்திலோ அழகுருவாய்த் தேவியை அமைக்க. வேறு வகையான ஆயுதங்களை வேண்டுமானாலும் கொள்க.

இருவரின் பின்புறத்தில் இடபத்தை (ரிஷபம்) அமைக்கவும். சிவனின் தொடையளவு உயரமாகக் கொள்க. அல்லது பிருஷ்டங்களின் அடி அளவு வரையோ அல்லது நாபிசூத்ர அளவோ கொள்க. மற்றவை முன்போல் செய்க.



ரிஷபாரூடர்

குறிப்பு :- அம்சுமத்பேதம் - படலம் 64லும், சுப்ரபேதம் படலம் 34லும், சில்பரத்னம் படலம் 22லும், பூர்ணகாரணாகமம் படலம் 11லும் காண்க.



காளைவாகனர் (ரிஷபாந்திகர்)



ரிஷபாந்திகர்

கலியாணசுந்தர மூர்த்தி

कल्याणसुन्दरः।

अथ वक्ष्ये विशेषेण कल्याणसुन्दरं ततः ।
सुस्थितं वामपादं तु दक्षिणं कुञ्चितं भवेत् ॥
दक्षिणं पूर्वहस्तं तु गौरीदक्षिणहस्तधृक् ।
वरदं त्रामहस्तं तु परहस्तद्वयोस्ततः ॥
दक्षिणे परशुं वामे धृतं कृष्णमृगं परम् ।
जटामकुटसंयुक्तं सर्वाभरणभूषितम् ॥
देहं प्रवालवर्णाभं देवेशस्य विशेषतः ।
सव्ये श्यामनिभा देवी प्राग्वन्मानादिसंयुता ॥
उत्पलं वामहस्ते तु धृतं दक्षिणहस्तकम् ।
शम्भोर्हस्तेन संग्राह्यं लज्जालम्बाननान्विता ॥
पार्वत्यनुगता श्रीर्भूस्सर्वाभरणभूषिते ।
हस्ताभ्यां संस्पृशेदेते गौर्यायास्तु कटीं द्विज ! ॥
देवाग्रे कारयेत्कुण्डे होमकर्म प्रजापतिः ।
शम्भोर्वै स्तनसीमान्तं प्रजशस्योदयं भवेत् ॥
चतुर्भुजं चतुर्वक्रं सर्वाभरणभूषितम् ।
कुण्डिका चाक्षमाला च वामदक्षिणतः परे ॥

स्रुक्स्रुवौ पूर्वहस्तौ द्वौ धृतौ वामेतरौ क्रमात् ।
उत्तराभिमुखासीनः पद्मपीठे प्रजापतिः ॥
प्रागग्रौ देविदेवेशौ देवी देवस्य दक्षिणे ।
दक्षिणाभिमुखो विष्णुर्होमस्योत्तरतस्स्थितः ॥

शम्भोर्वै नासिसीमान्तं श्रेष्ठं अ......स्तनान्तकम्[1] ।
श्यामवर्णं समभङ्गं शङ्खचक्रं परे करे ॥
हिरण्यकरकेणापः पूर्वहस्तद्वयोरपि ।
सङ्गृह्य वरदे हस्ते दद्यादुकपूर्वकम् ॥
अनादिगोत्रसम्भूतस्स शिवः परमेश्वरः ।
आदिगोत्रामिमां गौरीं तवैवास्माद्ददाम्यहम् ॥
इत्युक्त्वा वरदे हस्ते दद्याद्भक्त्योदकं हरिः ।
अष्टविद्येशलोकेशास्सिद्धयक्षगणादयः ॥
ऋषयश्चैव गन्धर्वा मातरश्चान्यदेवताः ।
तत्तच्छक्तिसमोपेता हृदयेऽञ्जलिसंयुताः ॥

सम्भ्रान्तमनसोपेतास्संवीक्ष्य परितस्स्थिताः ।
एवं कल्याणमूर्तिस्तु अर्धनारीश्वरं ततः ॥

(अंशुमद्भेदागमेऽष्टषष्टपटले ॥)



கல்யாண சுந்தரர்



ஸ்ரீகல்யாணசுந்தரர்
(திருவீழிமிழலை)

அம்சுமத்பேதாகமம் - படலம் 86ல்

சிவன் உருவம்

கலியாண சுந்தரரின் திருமேனியானது நேர் நின்று ஊன்றிய இடப்பாதமும் சிறிதே வளைந்த வலப்பாதமும் உடையதாக அமையும். வலமுன்கரம் தேவி கௌரியின் வலக்கரத்தைப் பிடித்திருக்க, இடது முன்கரம் வரதமாக அமையும். வலமேற்கரத்தில் பரசும், இடமேற்கரத்தில் மானும் விளங்கும். சடைமுடியோடு அணிகள் பலவும் கொண்ட கோலமாகவும், பவழ நிறமாகவும் சிவனாரின் திருமேனியை அமைக்க.

தேவீ உருவம்

இறைவனின் வலப்புறம் கரும்பசுமை நிறமும் முன்சொன்ன அளவுகளின் படியான உயரமும், இடக்கரத்தில் மலரும், வலக்கரம் இறைவனின் வலக்கரத்துள் வைத்தும் வெட்கத்தால் குனிந்த முகமும் கொண்டதாக அமைக்க. பார்வதியின் உடன்பயில் தோழிகளாய்த் திருமகளும், பூதேவியும் விளங்கப் பல்வகை அணிகள் பூண்டு, தேவியின் இடுப்பைத் தொட்டழைத்துச் செல்பவராய் அமைக்க.

பிரமன்

இறைவனின் எதிரில் ஹோமகுண்டத்தில் ஹோமம் செய்பவராய், இறைவனின் மார்பளவு உயரம் கொண்டவராய் பிரம்மாவை அமைக்க. நாற்கரங்களும், நான்கு முகங்களும், பல்வகை அணிகள் கொண்ட மேனியும், மேலிரு கரங்களில் கமண்டலம், ஜெபமாலையுடனும், முன்கரங்களில் சுருக், சுருவம் கொண்டவராயும், பத்ம பீடத்தில் வடக்கு முகமாய் அமைத்தவராயும் அமைக்க. ஹோம குண்டத்தின் வடக்கில் தெற்குத் திசை நோக்கியும், தேவன் தேவிக்கு முன்னால் நிற்பவராயும் திருமாலைக் கொள்க.

திருமால்

கருநிறமுள்ளவராயும், சமபங்கமுடையவராயும், மேற்கரங்களில் சங்கு சக்கரம் கொண்டவராயும், சம்புவின் நாசி நுனி வரையான உயரத்துடன் முன் கரங்களால் கமண்டல நீரை (பிடித்துள்ள) இறைவியின் கரத்தில் வார்ப்பவராய் அமைக்க.

திருமால் கூறுவதாகவது

''அநாதி கோத்தமான பரமேஸ்வரராம் சிவத்துக்கு ஆதி கோத்தரங் கொண்ட கௌரியை இப்போது அளிக்கிறேன்'' எனச் சொல்லி, பக்தியுடன் நீர் வார்ப்பதாக (வரத ஹஸ்தத்தில் வார்க்கவும்) அமைக்க.

வணங்குவோர்

வித்யேசர்கள், யோகேசர்கள், சித்தர்கள், யட்சர்கள், பூதகணங்கள், முனிவர்கள், கந்தர்வர்கள், சக்தி கணங்கள், பிற தேவர்கள் முதலானோர் அவரவர் துணைவர்களுடன் இதயத்தில் அஞ்சலி செய்பவர்களாய், அன்பால் மயங்கிய மனதுடையவராய்ச் சூழ்ந்து நிற்குமாறு அமைக்க வேண்டும்.

குறிப்பு :- உத்தரகாமிகம் படலம் 58லும், பூர்வகாரணாகமம் படலம் 11லும், சில்பரத்னம் படலம் 22லும், சூக்ஷ்மாகமம், கிரியாபாதம் படலம் 2லும் காண்க.

சுயம்வர கல்யாணி மண்டல ஆராதனை விளக்கம்



சுயம்வர கல்யாணி யந்திரம்

அத்திரி மகரிஷியின் மகளாகப் பிறந்து சிவபெருமானைக் குறித்துத் தவம்செய்து அவரையே கணவனாக அடைய வேண்டுமென்று மணமாலையுடன் விளங்கும் உமாதேவியை ''சுயம்வரகல்யாணி'' என்று அழைக்கப்படுகின்றாள். இவளைக் குறித்துச் செய்யப்படும் பூசனை சுயம்வரகல்யாணி மகா மண்டல ஆராதனை என்று பெயர் பெறுகின்றது. இதில் அம்பிகையைச் சுற்றி ஒன்பது ஆவரணங்கள் எனப்படும் வீதிகள் அமைகின்றன. இவற்றில் மேதா, வித்யா, லட்சுமி, மகாலட்சுமி ஆகிய தோழிகள், மொழிக்கு ஆதாரமான அட்சர தேவதைகள், இந்திரன், ஈசானன், பிரம்மா, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், பிரம்மா, விஷ்ணு ஆகிய தசதிக் பாலகர்கள் வச்சிரம், சக்கரம், தண்டம், கத்தி, பாசம்,கொடி, சங்கு, சூலம், கதை, வேதாளம் ஆகிய பத்து ஆயுதங்கள். மகாலட்சுமி, பாவஸ்ரீ, புஷ்பசாயகா என்பவர்கள் பூசிக்கப்படுகின்றனர். இவர்களுடன் இந்த வீதிகளுக்குக் காவலாக விளங்கும் விநாயகர், பைரவர், க்ஷேத்பாலகர், யோகினி ஆகியோரும் மந்திரப் பூர்வமாக பூசிக்கப்படுகின்றனர். இதனை எந்திர ரூபமாக அமைத்து சக்தி வழிபாட்டினர் போற்றி வருகின்றனர்.

இந்த வழிபாடு கன்னிப்பெண்கள் நல்ல கணவனை அடையவும் சுமங்கலிகள் நல்ல இல்வாழ்க்கையை அடையவும் நெடுங்காலமாக கடைப்பிடித்து வருகின்றனர்.

சுயம்வர கல்யாணி மஹாமந்திரம்

ஓம் ஹ்ரீம் யோகினி யோகினி யோகேஸ்ரி யோக அபயங்கரி
ஸகல ஸ்தாவர ஜங்கம முக ஹ்ருதயம் மமவசம் /
ஆகர்ஷய ஆகர்ஷ்ய ஸ்வாகா:
ஸ்ரீ ஸ்வயம்பர கல்யாணி ஸ்ரீபாதுகாம் பூஜயாமி நம: //


வம்
அம் ஆம்
க
ஓம்
ய
ண
ரா
லம்
ஸம்

கல்யாணசுந்தரர் யந்திரம்



ஸ்ரீஸ்வயம்வரா பார்வதி யந்திரம்

|| श्री स्वयंवरकला-पूजनयन्त्रम् ||


१७८
१५२
१५३
१५४
१७९
८८
९०
९१

ஸ்ரீஸ்வயம்வரா கலா பூஜா யந்திரம்

சந்திரசேகர மூர்த்தி

चन्द्रशेखरमूर्तिः।

इन्दुमौलिप्रतिष्ठां तु वक्ष्ये लक्षणपूर्विकाम् ।
आपाद्य च शिलादीनि तैः कुर्य्यात्प्रतिमां गुरुः ॥
चतुर्भुजस्त्रिनेत्रश्च समपात्स्थानके स्थितः ।
वराभयसमायुक्तपूर्वस्थकरपल्लवः ॥
वरदं वामहस्ते स्यादभयं दक्षिणे करे ।
वरदं यदि तं कुर्य्यादथान्यस्मिंसहकर्णिकः ॥
ऊरुस्पृष्टकरो वापि कटको वा विधीयते ।
मृगटङ्ककरावन्यौ दोस्सीमान्तं व्यवस्थितौ ॥
मृगटङ्कौ तु कर्णान्तौ कर्त्तरीसंव्यवस्थितौ ।
पराङ्मुखोऽभिमुखो वा मृगष्टङ्कः पराङ्मुखः ॥
रत्नपत्रिकया वापि शङ्खपत्रिकयापि वा ।
पद्मपत्रिकया वापि शोभितं वामकर्णकम् ॥

सव्यं मकरसिंहाढ्यपत्रकुण्डलकैर्युतम् ।
पृष्ठतः कर्णपर्यन्तं केशवर्तिविलम्बनम् ॥
पार्श्वयोर्बाहुमूलात्तु जटाग्राणां विलम्बनम् ।
हारयुग्ग्रीवसंयुक्तं तथा कर्णिकयान्वितम् ॥
वक्षस्स्थलं प्रकर्तव्यं भुजाः केयूरसंयुताः ।
सुपत्रवलयोपेतास्सर्वरत्नोपशोभिताः ॥
मुक्तादामविलम्बाश्च तदग्रं मणिभूषणम् ।
कराग्रं कटकोपेतमङ्गुल्यो मुद्रिकान्विताः ॥

छन्नवीरोत्तरीयोपवीतैस्सोदरबन्धनः ।
`समस्तरत्नपाशाढ्यकृत्तिमाननदामभिः ॥
संयुक्तकटिसूत्रोऽन्तः पादजालकसंयुतः ।
चन्द्रशेखर एवं स्याद्देव्या च सहितो न वा ॥
सापीहाभिन्नपीठा वा देवेनालिङ्गिताथवा ।
तयालिङ्गितदेवो वा अन्योन्यालिङ्गितस्तु वा ॥
आलिङ्गनयुता वा स्यान्निरालिङ्गोऽथवा मतः ।

(उत्तरकामिकागमे अष्टाचत्वारिंशत्तमपटले ॥)

உத்தரகாமிகம் - படலம் 48ல்

சந்திரசேகரரின் உருவமைப்பும் பிரதிட்டையும் சொல்லப்படுகிறது. குரு சிலை முதலியவற்றால் இவ்வுருவினைச் செய்க. சந்திரசேகரராகிய இவர் நாற்கரத்தர், முக்கண்ணர், சமநிலை பாதங்களால் நின்ற கோலத்தால், முன் நீண்ட இரு செந்தளிர் கரங்களில் வரம், அபயம் எனும் நிலை கொண்டவர். இடக்கரத்தில் வரதமும், வலக்கரத்தில் அபயமும் கொண்டவர். வரதமாக அமைப்பின் சிம்மகர்ணமாக அமைக்க. ஊருஸ்பிஷ்டம் (தொடைமீதமர்த்தல்) ஆயின் கடகமாகும். மற்ற இரு கரங்களில் மான், மழு கொள்வர். மானும் மழுவும் காதுகளை ஒட்டியும் கர்த்தரி முத்திரையுடைய விரல்களால் தாங்கியவையுமாக அமையும். மானை திருமுகத்தை நோக்கியோ, எதிர்முகமாகவோ அமைக்க. எதிர்முகமாகவே மழு அமையும். இடச்செவியில் ரத்னம் பதித்த அருளிலைத்தோடு, சங்குருவக் குழை, தாமரை போன்ற தோடு இவற்றிலொன்றை அமைத்து அழகுறுத்துக. வலச்செவியில் மகரக்குழை அல்லது சிம்மக்குழை பொருத்துக. காதுவரை சுருள் குழல்கள் பின்புறம் தொங்குமாறமைக்க.

இருபுறங்களிலும் தோளில் சடை நுனிகள் படும் வகையில் அமைக்க. மதாணிப்பதக்கம் கொண்ட ஆரங்கள் அலங்கரிக்கும் கழுத்தினை அமைக்க. தோள்கள் கேயூரம் (தோள்வளைகள்) கொண்டதாக உருவாக்குக. நல்வேலைப்பாடுகள் கொண்ட வளையங்களும், முத்துத் தொங்கல்களும் அழகூட்டச் செய்க. விரல்கள் மோதிரங்கள கொண்டனவாயமைக்க. முன்கையில் கடகங்கள் அமைத்திடுக. சன்னவீரம் கொண்டும் முந்நூல் கொண்டும் திருமார்பினை அலங்கரிக்க. பல்வகை இரத்தினங்கள் செறிந்த உதர பந்தனமும் இரத்தினங்கள் கோத்த கயிறுகள் கூடிய கடிசூத்திரமும் அமைக்க. பாதங்களில் பாதச்சரங்கள் அமைக்க.

இவ்வாறு சந்திரசேகரரை தனியாகவோ, தேவியுடன் கூடியவராகவோ அமைக்க. தேவியுடன் அமைக்க இருந்தால் அபின்னையாக ஒரே பீடத்தில் ஐயனால் அணைக்கப்பட்டபடியோ, ஐயனை அணைத்தவளாகவோ, ஒருவரையொருவர் தழுவியவர்களாகவோ, தழுவாத நிலையிலோ அமைத்திடுக.

குறிப்பு :- சுப்ரபேதாகமம் படலம் 34லும், பூர்வகாரணாகமம் படலம் 11லும், ஸ்ரீதத்வநிதி, சகளாதிகாரம் அத்தியாயம் 8லும், அம்சுமத்பேதம் படலம் 63லும், சில்பரத்னம் படலம் 23லும் சந்திரசேகரர் திருமேனி பற்றி விரிவாகக் காண்க. சந்திரசேகரர் திருமேனி பல நிலைகள் உண்டு.



சந்திரசேகரர்



அணைத்தெழுந்த நாயகர்

ஷை ஆதீனத்திற்குச் சொந்தமான ஸ்ரீ கோமுக்தீஸ்வரர் ஆலயம், திருவாவடுதுறை.

பிட்சாடன மூர்த்தி

भिक्षाटनमूर्तिः।

अथ वक्ष्ये विशेषेण भिक्षाटनमहेश्वरम् ।
पादौ पादुकसंयुक्तौ वामपादं तु सुस्थितम् ॥

ईषदुद्धृत्य सव्यं तु पादं तु गमनोत्सुकम् ।
ललाटमध्यमासव्ये नवाष्टौ वा यवान्तरे ॥

पादौ पादुकसंयुक्तौ पादुकारहितौ तु वा ।
सुविकीर्णजटाभारं जटामण्डलमेव वा ॥

वृत्तबन्धजटा वाथ नग्नरूपं नताननम् ।
ललाटपट्टसंयुक्तं करेधृत्वे(रोत्वर्धे?)न्दुशेखरम् ॥

सर्वाभरणसंयुक्तं कटिसूत्रविवर्जितम् ।
शुद्धश्वेतनिभं वर्णं नानानागविभूषितम् ॥

दक्षिणे पूर्वहस्तं तु मृगस्यास्यान्तिकं भवेत् ।
वामे तु पूर्वहस्तं तु वरदं स्यात्कपालधृक् ॥

दक्षिणे परहस्ते च डमरुं च धरेद्द्विज! ।
वामे तु शिखिपिञ्छं च कर्तव्यं त्वतिशीतलम् ॥

सितवस्त्रोत्तरीयं च नागेन कटिवेष्टितम् ।
श्वेतयज्ञोपवीतं तु नीलकण्ठं त्रिपुण्ड्रधृक् ॥

पद्मपीठोपरिष्ठात्तु शेषं कङ्कालरूपवत् ।
(अंशुमद्भेदागमे चतुस्सप्ततितमपटले ॥)

அம்சுமத்பேதம் - படலம் 74ல்

இப்போது பிட்சாடன ரூபங்கொண்ட மகேசுரரைச் சிறப்பாகச் சொல்வோம். நன்கு ஊன்றிய இடப்பாதமும், நடந்து செல்வதில் விருப்பம் காட்டும் வகையில் சிறிதே உயர்த்திய வலப்பாதமும், பாதுகைகள் அணிந்தவைகளாகக் கொள்க. நெற்றி நடுவிலிருந்து வலப்புறமும் இடப்புறமும் ஒன்பது அல்லது எட்டு யவைகள் ஒதுக்கங் கொள்க. பாதுகை இன்றியும் பாதங்களைக் கொள்ளலாம். அதுபோன்றே வட்டச் சடையாயும் அல்லது விரிந்த சடையாயும் கொள்ளலாம். வட்டமாய்க் கட்டிய சடையாயினும் கொள்ளலாம். பிறந்த மேனியராயும் சற்றே குனிந்த முகத்தினராயும் கொள்க. நெற்றிப்பட்டம் அணிந்தவராய், பாதிமதி அணிந்தவராய்க் கொள்க. கடிசூத்ரம் (இடைக்கச்சை) தவிர்த்த மற்ற அணிகள் கொள்க. பால்வெள்ளை நிறத்தராய் பலவகை அரவுகளால் அலங்கரிக்கப்பட்டவராய்க் கொள்க. வலது முன்கரம் மானின் மோவாயினை நீவுவதாயும், இடது முன்கரம் (வரதம்) கபாலமேந்தியதாயும் அமைக்க. வலமேற்கரத்தில் உடுக்கையும், இடமேற்கரத்தில் மயிற்பீலியும் கொண்டவராய், மிகச் சாந்தராய் அமைக்க. வெண்ணிற மேலாடையும், அரவு இடைக்கச்சும் கொண்டவராயும், வெண்ணிற முன்னூலும், நீலகண்டமும், திரிபுண்டரம் கொண்ட மேனியும் கொண்டு பத்மபீடத்தின் மேலமைக்க. மற்றவை கங்காள உருவமாய்ச் செய்க.

உத்தரகாமிகம் - படலம் 52ல்

இவரே பெருந்தேவர் (மகாதேவர்). பிறந்த மேனியர். கங்களாத்தை நீக்கியவர். இரு புறங்களிலும் விரிந்த பரந்த சடையாம் கூந்தலுடையவர். அதனால் அழகுற்றவர். இடையில் அரவக் கச்சுடையவர். வரதகரமும் (இடக்கரம்) வலத்தில் கபாலமுங் கொண்டவர். தேவநாதம் எழுப்பும் உடுக்கையை மற்றொரு கரத்தில் கொள்வார். வலப்புறக் கரமொன்றில் மயிற்பீலி தாங்கியவர். மானைத்தன் வலப்புறத்தே தொடரக் கொள்வார். அல்லது தென்கோணத்தில் அமரவைக்க. நாபிக்குச் சமமாக கபாலங்கொண்ட கரத்தினை இடுப்பைத் தொடுவதாக அமைக்க. உடுக்கை காதுக்கு நேராக வரும் வகையில் தூக்கிய மணிக்கட்டுடன் வைக்க. காதின் ஒதுக்கம் பதினாறு மாத்ராங்குலமாகக் கொள்க. மற்றவை கங்காளரை ஒப்பக் கொள்க. இவ்வாறு பிட்சாடனராக ஹரமூர்த்தியை விஷ்ணுவுடனோ அல்லது தனியாகவோ செய்க.

சுப்ரபேதம் - படலம் 34ல்

படைப்போனின் கபாலமும், காப்போனின் உயிரற்ற உடற்கூடும், டமருகம் (உடுக்கை) கொண்டும், நீற்றாலும், அரவங்களாலும் அலங்கரித்த மேனியராய் தோளில் தாங்கிய சூலத்துடனும், சன்னவீரம் எனும் இடைக்கச்சுடன், பாதுகை அணிந்த பாதங்களுடனும் எல்லாவகை உயிர்களாலும் சூழப்பட்டவராய் பிச்சாடனர் உள்ளார்.

சில்பரத்னம் - படலம் 22ல்

பிட்சாடனரின் உருவமைதி பின்வருமாறு சொல்லப்படுகிறது. பாதுகையணிந்த பாதங்கள், இடப்பாதம் நன்கு ஊன்றியதாயும், வலப்பாதம் புறப்பட்டுச் செல்லும் முயற்சியில் சற்றே உயர்த்தியதாயும் அமைக்க. சடையை நன்கு விரித்த நிலையிலோ, வட்டமாய் அமைந்த நிலையிலோ, கட்டிய சடையாகவோ, கட்டாது சுற்றிய நிலையிலோ அமைக்க. நெற்றிப் பட்டையினருகில் பிறைமதி அமைக்க. அனைத்து அணிகளையும் அணிந்தவராயும் இடைக்கச்சு நீக்கியவராயும் அமைக்க. பால் வெண்ணிறத்தராயும் பல்வகை அரவங்களை அணியாகக் கொண்டவராயும் வலது முன்கரத்தால் (அருகிலுள்ள) மானின் முகத்தை வருடும் நிலையிலும் அமைக்க. வரதமுள்ள இடமுன்கரத்தில் கபாலந்தாங்கியும், வலமேற்கரத்தில் தோலினால் கட்டப்பட்ட உடுக்கையினை ஏந்தியும், இடமேற்கரத்தில் மயிற்பீலியுடையராயும், வெண்ணிற மேலாடையுடையவராயும், வெண்முப்புரிநூல் கொண்டவராயும், இடுப்பில் அரவஞ்சுற்றியவராயும், நீல கண்டமும், நெற்றியில் திருநீற்றொளி கொண்டவராயும், பத்மபீடத்தின் மேல் நின்றாராயும் கொள்க. மற்றவை கங்காள மூர்த்தி போல் கொள்க.

காரணாகமம் - படலம் 11ல்

முக்கண்ணர், நாற்றோளர், பிறந்த மேனியர், குமிண் சிரிப்புடைய முகத்தர், அரவங்களை அணிகளாகக் கொண்டவர். சமபங்க நிலையில் நின்றவர். பாதங்களில் பாதுகையுடையவர். வலக்கர நுனியால், அருகில் நின்ற மானின் முகத்தை வருடும் நிலையுடையவர், வலமேற்கரத்தில் உடுக்கை கொண்டவர். இடக்கரங்களில் கபாலமும், மேற்கரத்தில் மயிற்பீலியும் கொண்டவர். சற்றே வளைந்து எழும் வலப்பாதமும் நன்கு ஊன்றிய இடப்பாதமும் கொண்டவர். நடக்க முற்பட்ட நிலையில் சமபங்க நிலையர். கபாலமேந்திய கையின் பின் முழங்கை நாபிக்குச் சமமாக அமைக்க. மற்றவை அனைத்தும் கங்காளர் நிலையில் சொன்னவாறு அமைக்க.



பிட்சாடனர்



பிட்சாடனர்

காமாந்தக மூர்த்தி

कामान्तकः।

त्रिनेत्रं चतुर्भुजं देवं जटामकुटमण्डितम् ।
उग्रदृष्टिसमायुक्तमक्षमालोरगन्धरम् ॥

दक्षिणे तु पताका च वामहस्तं तु सूचिका ।
एतदेव विशेषं तु शेषं व्याख्यानमूर्तिवत् ॥

बेरायामरसांशाच्च त्रिभागं मन्मथायतम् ।
पीठस्थो वा रथस्थो वा कामः काञ्चनसन्निभः ॥

सर्वभूषणभूष्यं च दिव्यरूपसमन्वितम् ।
पुष्पैश्चैव शरैर्युक्तमिक्षुचापं च षड्ध्वजम् (?) ॥

मदरागवसन्तैश्च हेमबान्धवसंयुतम् ।
तापिनी दहनी विश्वमोहिनी विश्वमर्दनी ॥

मादिनी नाम निर्दिष्टास्तस्य पञ्चशरा इमे ।
कार्मुकं वामहस्ते तु वाणं तु सव्यहस्तके ॥

பூர்வகாரணாகமம் - படலம் 11ல்

முக்கண்ணர், நாற்றோளர், ஜடாமகுடம் கொண்டவர். உக்கிரப் பார்வையுடையவர். மார்பில் அக்கமாலை தரித்தவர். வலப்புறம் பதாகையும் இடக்கரத்தில் சுட்டு முத்திரையும் கொள்க. மற்றவற்றை வியாக்யான மூர்த்திக்குள்ளது போல் கொள்க. பேரத்தின் (மூர்த்தியின்) உயரத்தின் நான்கில் மூன்று பங்கு உயரமாக மன்மதனை அமைக்க. பீடத்தில் நின்றவனாகவோ, தேரில் ஊர்த்தவனாகவோ அமைக்க. காமனை காஞ்சன நிறத்தில் அமைக்க. அனைத்து அணிகளும் அணிந்தவனாகவும், ஒளிர் மேனியுடையவனாகவும், பூக்களாலான அம்புகளையுடையவனும், கரும்புவில் உடையவனும், மீனக் கொடியுடையவனும், மதன் - ராகன் - வசந்தன் - இமபாந்தவன் ஆகிய இவர்களோடு கூடியவனும் ஆக அமைக்க. தாபினீ, தஹனீ, விச்வமோகினீ, விசுவமர்த்தினி, மாதினீ என அவனது ஐந்து பாணங்களும் அமைக்கப்பட்டும், இடக்கரத்தில் வில்லும், வலக்கரத்தில் அம்பும் கொண்டவராயும், இவ்வாறு ஐயனெதிரில் வீழ்ந்தவனாக அமைக்க. இவ்வாறு காமனைச் சம்ஹாரம் செய்த மூர்த்தியை அமைக்க.

(**குறிப்பு** :- உத்தரகாமிகாகமம் - படலம் 57லும், சுப்ரபேதம் - படலம் 34லும் காமசம்ஹாரமூர்த்தி பற்றிச் சொல்லப்பட்டுள்ளது.

ஸ்ரீ காலசம்ஹாரர்

कालारिमूर्तिः।

अथ वक्ष्ये विशेषेण कालहामूर्तिलक्षणम् ।
देवस्य दक्षिणं पादं पद्मपीठोपरिस्थितम् ॥

प्रथमेनृत्तमूर्तेस्तु दक्षिणस्थितपादवत् ।
वामपादं तदुद्धृत्य कुञ्चितं तलमुद्धृतम् ॥

अङ्गुष्ठमुद्धृताङ्घ्रेस्तु कालस्य हृदये न्यसेत् ।
दंष्ट्रास्यं च त्रिनेत्रं च जटामकुटमण्डितम् ॥

चतुर्भुजसमायुक्तमष्टहस्तमथापि वा ।
दक्षिणे पूर्वहस्तं तु शूलं कर्णान्तमुद्धृतम् ॥

दक्षिणे परहस्तं तु परशुं वरदं तथा ।
वामे पूर्वकरं नाभिसीमान्तं सूच्यधोमुखम् ॥

वामे त्वपरहस्तं तु विस्मयं परिकल्पयेत् ।
हिक्कासूत्रसमं टङ्ककरं त्वभ्यन्तरं मुखम् ॥

उष्णीषान्तं समुद्धृत्य विस्मयेऽनामिकाग्रकम् ।
कर्णान्तं मणिवन्धान्तं शूलहस्तसमान्तकम् ॥

चतुर्दोर्ह्येवमाख्यातमष्टहस्तमथ शृणु ।
शूलं परशु वज्रं च खड्गं दक्षिणहस्तके ॥

विस्मयं खेटकं पाशं सूचीहस्तं तु वामके ।
विद्रुमस्य निभाकारं सर्वाभरणभूषितम् ॥

कालहामूर्तिमाख्यातमधस्तात्काल उच्यते ।
द्विभुजं च द्विपादं च सदंष्ट्रं पाशपाणिनम् ॥
करण्डमकुटोपेतमसृग्धाराविकीर्णितम् ।
महाभयसमायुक्तं सपाशहृदयाञ्जलिम् ॥
विकीर्णपादं मां दृष्ट्वा शाययेदूर्ध्ववक्त्रकम् ।
कालहामूर्तिमेवं तु प्रोक्तं लिङ्गोद्भवं ततः ॥

(अंशुमद्भेदागमे षट्सप्ततितमपटले ॥)

அம்சுமத்பேதாகமம் - படலம் 76ல்

ஐயனின் வலப்பாதம் பத்மபீடத்தின் மேல் அமைக்கப்படும். நிருத்தமூர்த்தியின் முதல் வகையிற் சொல்லப்பட்டது போல் இடது பாதம் சற்றே வளைந்து பூமியிலிருந்து தூக்கிய நிலையில் அமைக்கப்பட்டிருக்கும். தூக்கிய திருவடியின் பெருவிரல் காலனின் இதயத்தில் தொடும்படி வைக்கப்பட்டிருக்கும். கூர்மையான பற்களும் முக்கண்களும் சடைமுடியால் அலங்கரிக்கப்பட்டவராயும் அமைக்க.

நான்கு அல்லது எட்டு கரங்களையுடையவராக அமைக்க. வலது முன்கரத்தில் காதுவரை உயர்த்தி நீட்டிய சூலத்தினை அமைக்க. வலது மேற்கரத்தில் பரசும், இடது மேற்கரத்தில் வரதமும், கீழ்க்கரம் கீழ்நோக்கிய சுசிமுத்திரை கொண்டதாயும், விஸ்மயம் காட்டுவதாயும், மழுக்கரம் முதல் முகம் வரை ஹிக்காசூத்ர அளவுடனும் திரும்பிய நிலையிலும், விஸ்மயத்தில் அநாமிகை நுனியும் காதிலிருந்தும் மணிபந்தம் (மணிக்கட்டு) வரையான சூலஹஸ்தமும் ஓரளவிலிருக்க அமைக்க. நான்கு கையமைப்பில் இவ்வாறமைக்க.

எட்டுக்கரங்களாயின் - சூலம், பரசு (மழு), வஜ்ரம், வாள் இவைகள் வலப்புறக் கரங்களிலும், விஸ்மய முத்திரை, கேடயம், பாசம், சுசிஹஸ்தம் ஆகியன இடப்புறக் கரங்களிலும், மின்னல் போன்ற ஒளிர் மேனியும், அனைத்தணிகளும் அணிந்த திருமேனியும் ஆக காலாரி மூர்த்தி சொல்லப்படுகிறார்.

இதன் பின்னர் காலனின் அமைப்பு சொல்லப்படுகிறது. இரு கைகள், இரு கால்கள், நீண்ட பற்கள், பாசம் பிடித்தக்கரங்கள், கரண்ட மகுடம், பெரும் பீதி காட்டும் முகம், பாசம் பிடித்து இருதயத்திற் கூப்பிய கரங்களும் விரிந்த பாதங்களும், ஐயனை நோக்கும் மேல் நோக்கிய முகங்களும் அமைக்க. ஆக காலஹாரி மூர்த்தி இவ்வாறு சொல்லப்பட்டார்.

குறிப்பு :- உத்தரகாமிகாகமம் படலம் 57லும், சுப்ரபேதாகமம் படலம் 34லும், சில்பரத்னம் 22லும், பூர்வ காரணாகமம் படலம் 11 காலசம்ஹாரர் லட்சணங்கள் கூறப்படுகின்றன. இதில் பல கரங்களையுடைய காலசம்ஹாரர் திருமேனிகளும் உண்டு. ஷை ஆதீன வெளியீடாகிய ''மகா காலசம்ஹாரர்'' நூலில் இத்திருமேனி பற்றி விரிவாகக் காண்க.



காலசம்ஹாரர்



மஹா மிருத்யுஞ்ஜய யந்திரம்


வம்
ஸ:
ஜூம்
க்ஷேத்ர க்ரஹ
ரோக சாந்திம்வாஹா
ஓம்
ஆயுர்வர்த்திம்
பாலய பாலய
வம்

மிருத்யுஞ்ஜய யந்திரம்


नं९६ प१०२ ९१ पं३ श्लो ७३ शिवमृत्युंजयदेवता २३ फा।स.
१०००
४०
१०००

சிவமிருத்யுஞ்ஜய தேவதா யந்திரம்
(மந்திரார்ணவம் / மந்திரமகோததி)


ஓம் ஜூம் ஸ:
வம்
யம்
ஷம்

ஸ்ரீமிருத்யுஞ்ஜய பூஜா யந்திரம்



ஸ்ரீமிருத்யுஞ்ஜய பிரயோக யந்திரம்


வம்
ஷம்
யம்
லம்
ஹம்
ரம்
வாம்
வௌம்
ஸௌ:

பால யந்திரம்


ஹ்ரீம்
(நாமம்)
க்லீம்
ஸௌ:
ஹ்ரீம்
(ராசி)
ஹ்ரீம்
ஸௌ:
க்லீம்
ஸௌ:

தீப பால யந்திரம்

ஜலந்தரஹர மூர்த்தி

जलन्धरहरमूर्तिः।

रक्ताभमुग्रनयनं द्विभुजं च त्रिनेत्रकम् ।
उपवीतसमायुक्तं सर्वालङ्कारशोभितम् ॥

पादयोः पादुकायुक्तं किञ्चिद्वै गमनोन्मुखम् ।
दक्षहस्ते स्थितं छत्रं वामे पूर्णकमण्डलुम् ॥

सुविकीर्णजटाभारं गङ्गाचन्द्रसमन्वितम् ।
कर्णकुण्डलसंयुक्तं हारनूपुरसंयुतम् ॥

द्विभुजं च त्रिनेत्रं च किरीटकटकान्वितम् ।
सर्वालङ्कारसंयुक्तं कक्षे खड्गसमन्वितम् ॥

कृताञ्जलिपुटोपेतहस्ते चक्रं दधं परम् ।
जलन्धरमथ प्रोक्तम् ॥

(श्रीतत्वनिधौ ॥)

ஸ்ரீதத்வ நிதியில்

செந்நிற மேனியர், அச்சுறுத்தும் கண்களுடையவர், இருகையர், முக்கண்ணர், முந்நூலணிந்தவர், அனைத்தணிகளும் கொண்டவர். பாதுகை அணிந்த திருவடிகள், செல்லும் முயற்சி காட்டுபவர். வலக்கரத்தில் குடையும், இடக்கரத்தில் பூர்ண கமணடலமும் கொண்டவர். நன்கு விரிந்த சடை முடியர். கங்கையும் பிறையும் முடியிற் கொண்டவர். காதில் குண்டலங்கள், மார்பில் ஆரம், திருவடிகளில் நூபுரமும் கொண்டவர்.

இருதோள், இருகண்கள், கிரீட கடகங்களும் கொண்டவனாகவும் அனைத்தணிகளுடன் இடுப்புப் பட்டியில் செருகிய குறுவாளும் உடையவனாய் அஞ்சலி முத்திரை கூடிய கையில் சக்கரத்தைத் தாங்கியவனாய்ச் சலந்தரனை அமைக்க.



ஜலந்தரஹர மூர்த்தி

திரிபுரசம்ஹார மூர்த்தி

त्रिपुरान्तकमूर्तिः।

त्रिपुरान्तकमूर्तेस्तु लक्षणं वक्ष्यतेऽधुना ।
दक्षिणं सुस्थितं पादं वामपादं तु कुञ्चितम् ॥

दक्षिणे पूर्वहस्तोर्ध्वे नाभिसूत्रावसानकम् ।
सिंहकर्णं तु तद्धस्तं बाणमध्यं तु पीडितम् ॥

बाणायामं तु तत्सप्तत्यङ्गुलं तु विधीयते ।
कनिष्ठिकापरीणाहं देवेशस्य करस्य तु ॥

वामहस्ते धनुर्धृत्वा कक्षान्तं तत्करोर्ध्वकम् ।
पूर्णमुष्टिस्तु नाहं स्यान्मध्यादग्रौ क्रमात्कृशौ ॥

अग्रमर्धाङ्गुलव्यासं वृत्तं वर्णैर्विचित्रितम् ।
बाणनाहत्रिभागैकं रज्जुनाहं तु तन्तुना ॥

धनोर्दीर्घाष्टभागे तु सप्तांशं रज्जुदीर्घकम् ।
तद्दीर्घस्यानुकूलं तु धनोर्वक्रमुदाहृतम् ॥

त्रिवक्रसहितं वाथ बालचन्द्राभमेव वा ।
धनुराकृतिरेवं स्यात् दारुजं लोहजं तु वा ॥

कर्तरी परहस्तौ तु टङ्ककृष्णमृगान्वितौ ।
गङ्गं(टङ्कं ?) दक्षिणहस्ते तु वामहस्ते मृगं धृतम् ॥

जटामकुटसंयुक्तं सर्वाभरणभूषितम् ।
प्रवालसदृशप्रख्यं वामे गौरीसमायुतम ॥
त्रिपुरान्तकमूर्तेस्तु प्रथमं
लक्षणं त्विदम् ।

[अंशुमद्भेदागमे सप्ताहितमपटले ॥]

அம்சுமத் பேதாகமம் படலம் 66ல்

இப்போது திரிபுராந்தகரின் உருவமைப்பைச் சொல்கிறேன். வலப்பாதம் நன்கு ஊன்றியதாகவும், வளைந்த இடப்பாதம் உள்ளதாயும் அமைக்க. மேல் வலக்கரத்தில் நாபிசூத்திரம் வரை சிம்ம கர்ணமாக அமைத்து அம்பை இடை நடுவில் பிடிப்பதாக அமைக்க. பாணத்தின் அமைப்பு ஏழங்குலமாகச் சொல்லப்பட்டது. இறைவனின் தேகத்தில் கனிஷ்டிகை விரலளவு பருமனுள்ளதாக பாணம் அமைக்க. இடக்கரம் வில்லை இமையில் பிடித்ததாயும், தோளுயரம், தூக்கியதாயும் அமைக்க. வில்லின் நடுவிலிருந்து இரு முனைகளும் மெலிந்தனவாயமைக்க. இரு முனைகளும் வட்டமாயும் அலங்கரிக்கப்பட்டதாயும் அமைக்க. அரை அங்குல அகலம் கொண்டதாயமைக்க. அம்பைப் பொருத்துமிடத்தில் பாணத்தின் முப்பாகத்தில் ஒரு பகுதி நீளம் நூல் சுற்றியதாய் அமைக்க. வில்லின் நீளத்தில் எட்டில் ஏழு பங்கு நீளமுள்ளதாய் நாணை அமைக்க. (இந்த நீளம் வில்லின் திறனை அதிகரிக்கும்) மூன்று வளைவுகளுடன் கூடியதாகவோ, பிறைச் சந்திரன் வடிவிலோ அமைக்க. மரத்திலோ உலோகத்திலோ வில்லினைச் செய்க.

மேற்கரங்கள் கர்த்தரி முத்திரை கொண்டு வலக்கரம் மழுவையும் இடக்கரம் மானையும் கொள்க. சடைமுடி, அனைத்தணிகள், பவழ வண்ணம், இடப்புறம் - கௌரியுடன் கூடிய நிலையில் அமைக்க. இது திரிபுர சம்ஹார ரூபத்தின் முதல் வகை சொல்லப்பட்டது.



(**குறிப்பு** :- இந்த திரிபுரசம்ஹார ரூபத்தை எட்டு வகையாக அமைப்பர். இதனை கீழ்வரும் ஆகமங்களிலும், சிற்ப நூல்களிலும் காணலாம். உத்தரகாமிகாகமம் - படலம் 59லும், சுப்ரபேதம் படலம் 34லும், சில்பரத்னம் (முதல்வகை) படலம் 22லும், பூர்வ காரணாகமம் படலம் 11லும், அம்சுமத்பேதம் படலம் 67லும், சில்பரத்னம் படலம் 22லும், ஏனைய ஏழுவகை ரூபங்கள் சொல்லப்பட்டுள்ளன. அம்சுமத் பேதம் - படலம் 64லும், அம்சுமத் பேதம் படலம் 76லும் விரிவாக திரிபுரசம்ஹார ரூப லட்சணத்தைப் பார்க்கலாம்).

கஜசம்ஹார மூர்த்தி
गजासुरसंहारमूर्तिः।

अथ वक्ष्ये विशेषेण गजहामूर्तिलक्षणम् ।
सर्वाभरणसंयुक्तं चतुर्दोश्चाष्ट एव वा ॥

चतुर्भुजं चेत् पाशं च गजचर्म च दक्षिणे ।
गजशृङ्गं च चर्म च वामपार्श्वे करद्वये ॥
चतुर्भुजं समाख्यातमष्टहस्तमथोच्यते ।
शूलं डमरुकं पाशं गजचर्म च दक्षिणे ॥
गजशृङ्गं कपालं च गजचर्म च विस्मयम् ।
एवं पार्श्वे तु चत्वारो हस्तमेवं प्रकल्पयेत् ॥
शम्भोर्वामाङ्घ्र्यधस्तात्तु गजस्यैव तु मस्तकम् ।
मकुटस्योपरिष्टात्तु गजपुच्छं प्रकल्पयेत् ॥
पार्श्वयोर्गजपादांस्तु यथायुक्त्या तु कल्पयेत् ।
प्रभामण्डलवच्छेषं गजचर्म प्रकल्पयेत् ॥
व्याघ्रचर्माम्बरोपेतं दुकूलवसनान्वितम् ।
सर्वालङ्कारसंयुक्तमतिरक्तसमप्रभम् ॥
एवं तु गजहामूर्तिं प्रथमं तु विधीयते ।
शूलं खड्गं तथा चर्म गजशृङ्गं च दक्षिणे ॥
कपालं खेटकं घण्टां गजचर्म च वामके ।
सुस्थितं वामपादं तु गजस्य मस्तकोपरि ॥
उद्धृतं दक्षिणं पादं तिर्य्यगुत्कुटिकं भवेत् ।
एवं द्विविधरीत्या तु गजहामूर्तिरुच्यते ॥
स्कन्दोद्धृताप्युमादेवी शम्भोर्वामे भयान्विता ।
(अंशुमद्भेदागमे सप्ततितमपटले ॥)



அம்சுமத்பேதம் - படலம் 70ல்

நாற்கைகளுடனும் அல்லது எட்டுக் கைகளுடனும் அனைத்து அணிகளுடனும் கூடியவராய் சிற்பமாக அமைக்க. நாற்கைகளுடன் கூடியவராயின் வாலும் யானைத்தோலும் வலப்புறமும்,யானைத் தலையும் தோலும் இடக்கரங்களிலும் கொள்க. எட்டுக்கைகள் கொண்ட அமைப்பைக் கூறுகின்றேன். சூலம், உடுக்கை, பாசம், யானைத்தோல் வலப்புறமும்; யானைத்தலை, கபாலம், யானைத்தோலும் இடப்புறம், புன்சிரிப்பும் ஆக இருபுறங்களிலுமாக கரங்களை அமைக்க.

சம்புவின் இடப்பாதம் யானையின் மத்தகத்தின் மேலும், மகுடத்தின் மேல் யானையின் வாலையும் செய்க. பக்கங்களில் யானையின் பாதங்களை அமைக்க. புலித்தோலாடையுடையவராயும் விசித்திர ஆடையணிந்தவராயும் அனைத்து அணிகளும் கொண்டவராயும் இரத்தமெனச் சிவந்த ஒளியுடையவராயும் உள்ள யானையுரித்த பிரானின் முதல்வகை கூறப்பட்டது.

சூலம், வாள், தோல், யானைத்தந்தம் ஆகியவை வலக்கைகளிலும், கபாலம், கேடயம், மணி, யானைத்தோல் ஆகியவை இடக்கைகளிலும், யானைத்தலையில் ஊன்றிய இடப்பாதமும், வானோக்கி யானையின் பின்புறத்தைத் தாங்கும் வலப்பாதமுமாக இரண்டாம் வகை கூறப்பட்டது.

ஐயனின் அருகில் இடப்புறத்தில் கந்தரை இடுப்பில் தாங்கி பயத்துடன் கூடிய உமாதேவியை அமைக்க.

சில்பரத்னம் - படலம் 22ல்

அனைத்தணிகளும் அணிந்தவரும், பாசம் - யானைத்தோல் வலப்புறமும், யானைத்தந்தம் - கபாலம் - பாசம் - யானைத்தோல் இடப்புறமும், சம்புவின் இடப்பாதம் யானைத்தலையின் மேலும், திருமுடி போல் யானை வாலும் அமைக்க. இருபுறங்களிலும் யானையின் கால்களையும் யுக்தியின்படி செய்க. மிகுந்த யானைத்தோலை பிரபாமண்டலமாகச் செய்க.

புலித்தோலுடையவனாயும் விசித்திர ஆடையுடையவனாயும் அனைத்து அணிகளும் அணிந்தவனாயும் இறைவனை அமைக்க. இடப்பாதம் யானை மத்தகத்தின் மீதும், வலப்பாதம் தலைமுடி வரையிலுமாக வலப்பாதம் தூக்கிய நிலையிலுமாக அமைக்க. கௌரி தமதிடுப்பில் ஸ்கந்தரை வைத்துக் கொண்டும் பயத்துடன் கூடியிருப்பவராய் அமைக்க. அல்லது சூலம் - வாள் - யானைத்தந்தம் - தோல் இவற்றை வலப்புறம் அமைக்க. பின்னர் இடப்புறம் கபாலம் - கேடயம் - மணி - யானைத்தோல் இவற்றைக் கரங்களில் அமைக்க.



கஜசம்ஹாரர் (தாராசுரம்)

வீரபத்திர மூர்த்தி

वीरभद्रमूर्तिः।

अथ वक्ष्ये विशेषेण वीरभद्रेश्वरं शृणु ।
महापातकदोषघ्नं सर्वपीडानिवारणम् ॥
वीरभद्रमिति ख्यातं दक्षयज्ञहरं परम् ।
चतुर्भुजं त्रिणेत्रं च ज्वालाकेशं सुदंष्ट्रिणम् ॥
घण्टामालाधरं घोरं शिरोमालाविभूषितम् ।
वृश्चिकाभरणं चैव नागयज्ञोपवीतिनम् ॥
नूपुरं विमलं तद्वत्पादौ पादुकभूषितौ ।
नीलकण्ठं च त्र्यक्षं च ऊरुकञ्चुकसंयुतम् ॥

खड्गखेटधनुर्बाणं कपालं भिण्डिपालकम् ।
रक्तवर्णसमायुक्तमुग्रदृष्टिभयङ्करम् ॥
एवं ध्यात्वा विशेषेण प्रतिष्ठां कारयेत्ततः ।

உத்தர காரணாகமம்

வீரபத்திரர் மாபாதகக் குற்றத்தைப் போக்குபவர். அனைத்துத் துன்பங்களையும் நீக்குபவர். வீரபத்திரர் மேலானவர், தட்சயக்ஞத்தை ஒடுக்கியவர். நாற்றோளர், முக்கண்ணர், ஒளிர்சடை முடியர். நல்ல பற்கள் கொண்டவர். ஒலிக்கும் மணி மாலை கொண்டவர். பயம் தரும் தலைமாலை அணிந்தவர். பாதுகை அணிந்த திருவடிகளில் குற்றமில்லாத ஒலிதரும் நூபுரமணிந்தவர். நீலகண்டர், முக்கண்ணர், தொடைகளுக்கிடையில் செலுத்தி இறுக்கிய கஞ்சுகமென்னும் உடையணிந்தவர். வாள், கேடயம், வில், பாணம், கபாலம், பிண்டிபாலம் உடையவர். செந்நிறத்தோடு கூடியவர். அச்சுறுத்தும் பார்வை உடையவர். இவ்வாறு சிறப்பாகத் தியானித்து பிரதிஷ்டை செய்க. (வீரபத்திரர் திருவுருவம் அமைப்பதில் எட்டுக் கரங்கள் கொண்டவராகவும், 32 கரங்கள் கொண்டவராகவும் அமைத்தல் உண்டு).

ஸ்ரீதத்வ நிதியில்

நாற்கரத்தர், முக்கண்ணர், சடைமுடி கொண்டவர், வலக்கரங்களில் வாளும் பாணமும், இடக்கரங்களில் வில்லும் கதையும் கொண்டவர். தாடி கூடிய முகத்தோடு பயந்தருபவர். பைரவர் எனப் பெருங்குரல் எழுப்புபவர். தலை மாலையும் ருண்டம் (எலும்பு) மாலையும் கொண்டவர். பாதுகைகள் மேல் நிற்பவர். பத்ர காளியோடு கூடியவர். பாம்பணி கொண்டவர். ''தட்சப்ரம்ம உருவம்'' - வீரபத்திரரின் வலப்புறத்தில் அமர்ந்தவனும், ஆட்டுத்தலைக் கொண்டவனும், இரண்டு கண்களுடன் இரு கொம்புகளும் கொண்டவனும், அஞ்சலி முத்திரையுடன் வணங்குபவனும், அந்தணனும், சிவத்தியானத்தில் அமர்ந்தவனுமாக தட்சப்பிரம்மாவினை அமைக்க.



அகோர வீரபத்ரர்



அக்நி வீரபத்ரர்

வீரபத்திரர் தியானம்

ச்வேதாங்கம் சேஷ பூஷாங்கம் கட்கவீணாதரம் சுபம் /
த்ருதக்ருஷ்ணம்ருகம் வீரம் சார் தூலாஜி நவாஸஸம் //
அர்த்தோ ந்மீலித நேத்ரம் தம் த்ரிணேத்ரம்ச ஜடாதரம் /
ஸுகந்தி புஷ்பமாலம் ஸ்ரீவீரபத்ரம் நமாம்யஹம் //

வெண்மை நிறமுடைய மேனியையுடையவரும், சர்ப்பங்களால் அலங்கரிக்கப்பட்ட சரீரத்தை உடையவரும், புள்ளி மான்களைக் கைகளில் உடையவரும், புலித்தோலை உடுத்திக் கொண்டிருப்பவரும், பாதி திறந்திருக்கும்படியான கண்களை உடையவரும், முக்கண்ணனும், ஜடையையுடையவரும், வாசனை பொருந்திய மலர்மாலையை அணிந்திருப்பவருமான வீரபத்ர ஸ்வாமியை வணங்குகின்றேன்.

வீரபத்திரர் தியானம் (வேறுவகை)

ஷண்ணேத்ரம் த்ரிமுகம் பீமம் காலமேக சமப்ரபம் /
உதர்சிஜ்வலனம் நீலகாத்ரம் ஷட்பாஹு சோபினம் //
பான பாத்ராஸி சூலேஷு சாப கட்கதரம் சுபம் /
பூதப்ரேதாதி தமனம் துஷ்டாராதி விநாசனம் //
மேருவாஸம் மஹேசம் தம் வீரபத்ரம் நமாம்யஹம் //

மூன்று முகங்களையும், ஆறு கண்களையும் உடையவரும், பயங்கரமான தோற்றத்தையுடையவரும், காலமேகம் போன்று கருமை நிறம் கொண்டவரும், மேல் நோக்கிச் செல்கின்ற கிரணங்களையுடைய அக்னியை சிகையாக உடையவரும், நீல நிறமான (கருமை) சரீரத்தையுடையவரும், ஆறு கைகளையுடையவரும், பானபாத்ரம், கத்தி, சூலம், வில், அம்பு இவைகளையுடையவரும், நன்மையைச் செய்கின்றவரும், பூதகணங்கள், ப்ரேதங்கள் (இறந்தோர் ஆவி) இவைகள் முதலானவைகளை அடக்குபவரும் கொடிய சத்ருவை அழிப்பவரும், மேரு மலையில் வசிப்பவருமான வீரபத்திரரை வணங்குகின்றேன். (நான்கு கரம் கொண்ட வீரபத்திரர் உருவமும் உண்டு).



வீரபத்திரர் யந்திரம்

தளம் 1. ஓம் ஹௌம் ஹௌம் வீ
2. பத்ராய
3. அதிக்க்ரூரா
4. யத்ரகோ
5 பசம்பவா
6. யசர்வ்வது
7. ஷ்டநிபர்
8. ஹனாய ஹூம்பட்

வீதி கம் முதல் க்ஷம் வரை உள்ள எழுத்துக்கள்அமைய வேண்டும்.
(51 அட்சரத்தில் 16 எழுத்துக்கள் குறைவாக எழுத வேண்டும்)

ஆதாரம் :-
'யந்திர விதிகள்' - வடமொழியில் இருந்த மலையாள எழுத்தில் உள்ள நூல்.

தெட்சிணாமூர்த்தி

கல்லாலின் புடையமர்ந்து நான்மறை ஆறு
அங்கமுதல் கற்றகேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப்பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்துகாட்டி
சொல்லாமல் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடக்கைவெல்வாம்.

- பரஞ்சோதி முனிவர் - திருவிளையாடற் புராணம்.

உத்தரகாமிகம் - படலம் 51ல்

தட்சிணாமூர்த்தியின் உருவமைதியைச் சொல்வோம். இடது திருவடியிலிருந்து நலக (மேற்புரம்) அளவு முன்னால் வலத் திருவடியினைத் தொங்கவிடுக. மடித்த இடது திருவடியை வலத்தொடை நுனிமேல் வைக்க. ஒன்றரை மாத்திரை அளவு உயரம் கொள்க. நாற்கரம் கொண்டவராய் அமைக்க. வலப்பக்க முன்கையில் ஞான முத்திரை கொள்க. மேல்கரத்தில் அக்கமாலை கொள்க. இடமுன் கரத்தை வரதமாகவோ, தொங்கு கரமாகவோ அமைக்க. இடமுழந்தாள் மீது வரதகரநுனி படும்படி கொள்க. நீள்கரமாயின் கூர்ப்பமாகக் கொள்க. இடது மேற்கரத்தில் தீச்சுடரோ அல்லது நாகமோ கொள்க. படிக நிறமுடையராய் விரிந்த முகமுடையவராய், விரிசடையர் அல்லது வட்டச்சடை (ஜடாமண்டலம்) கொண்டவராய் அல்லது முடித்த சடையராய்க் கொள்க.

நாற்கரத்தர், முக்கண்ணர், நிறைமதியென வெளுத்த நிறத்தர் அல்லது வெண்பனி நிறத்தர். (கரும் பசுமை நிறத்தராயும் கொள்வதும் உண்டு) புலித்தோலாடை அல்லது பசும்பொன்னாடை கொண்டவராய்க் கொள்க. தோளிலிட்ட மேலாடை, வெண் முப்புரிநூல் உடையவராய்க் கொள்க.

சடையைச் சுற்றிய கட்டுடையர். வெண்டலை மாலை சிரசிற் சூடியவர். ஊமத்தை, வன்னி, அறுகு, அரவு, பிறைமதி இவற்றால் சடையை அலங்கரித்தவர். பஞ்ச முத்திரைகளால் அலங்கரிக்கப்பட்டவர். கங்கையை முடியிலும், கிண்கிணி பாதத்திலும் கொண்டவர். மலை உச்சியில் ஆலமரத்தடியில் அமர்ந்துள்ளவர். புலித்தோல் மேலாடை கொண்டு அமர்ந்தவர். அல்லது வீராசனத்தில் உள்ளவராய் மடித்துத் தொங்கும் வலமுழந்தாளின் மேல் வைக்கப்பட்ட இடப்பாதம் உடையராய் வலக்கரத்தில் ஞானமுத்திரை, இடக்கரத்தில் புத்தகம் கொண்டவர். அல்லது பாம்பினை கொண்டதாக இடக்கரமமைக்க. அல்லது இடமுழந்தாளைத் தொடும் வரதமாகவோ, தொங்கு கரமாகவோ அமைக்க. தொங்கு கரமாயின் தாமரையென விரிந்து காணும் விரல்கள் கொண்டவராய் அமைக்க.

மேற்கரங்கள் இரண்டிலும் அக்கமாலையும், தீச்சுடரும் கொண்டவராயமைக்க. அல்லது இடது கரத்தில் தாமரை, நீலோற்பலம், அரவம் இவற்றில் ஒன்றினைக் கொள்க. கரங்களில் கடகங்கள் கொள்க. நாசி நுனியில் வைத்த பார்வையுடைய சமலோசனராய்க் கொள்க. இடக்கரத்தில் புத்தகமுடையவராயும் கொள்ளலாம்.

இறைவரின் முன்னும், பக்கங்களிலும் இறைவனை நோக்கியவர்களாய் உயர்த்திய கழுத்தினை உடையவர்களாய் சடைமுடி கொண்டவர்களாய் அவரவர்க்குரிய கலைகள் கொண்டவர்களாய், வெண் முப்புரிநூல் கொண்டவர்களாய் வெள்ளுடை முதலியனவும், திருநீறு, அக்கமாலை பூண்டவர்களாய் முனிவர்களை அமைக்க.

குறிப்பு :- தெட்சிணாமூர்த்தி வடிவம் பற்றி இவ்வாதீனத்தில் வெளியிடப்பட்ட தட்சிணாமூர்த்தி முதற்பாகம், இரண்டாம் பாகம் நூல்களில் விரிவாகக் காணலாம். இதன் மூலபாடத்தை ''பிரதிமாலட்சணானி'' நூலில் காண்க. மேலும் இவரது திருமேனிகளும் திருநாமங்களும் பலவாகும்.



யோக தட்சிணாமூர்த்தி



யோக தட்சிணாமூர்த்தி



ஞான தட்சிணாமூர்த்தி



யோக தட்சிணாமூர்த்தி

கௌசிகர் பசுமைநிறம், காச்யபர் மஞ்சள் நிறம், பரத்வாஜர் சிவந்த நிறம், அத்திரி, கௌதமர் இவர்கள் புகை நிறம். இம் முனிவர்களை பக்கங்களில் ஒருவர், இருவர், மூவர் எனும் வகையில் அமைக்க.

சில்பரத்னம் - படலம் 22ல்

உலகின் தலைவரை ஆலமரத்தடியில் தட்சிணாமூர்த்தியாகச் (தெற்கு நோக்கியவராக) செய்க. வலத் திருவடியைத் தொங்கவிடுக. இடத் திருவடி நுனிப்பகுதி வலத்தொடை மீது உள்ளதாக அமைக்க. சமாசனத்தில் இடத்திருவடி மடிந்த நிலையில் அமைக்க. வலமுன்கரம் ஞானமுத்திரையும் வலமேற்கரம் அக்கமாலையும் கொண்டனவாய் அமைக்க. இடமுன் கரத்தில் வரதம் அல்லது தண்டம் சொல்லப்பட்டது. இடமுழந்தாளின் மேலாக வரதம் கொள்க. தண்டமாயின் கூர்ப்பாமாகச் செய்க. இடமேற்கரத்தில் தீச்சுடர் அல்லது மான் கொள்க. விரிசடையாகவோ, வட்டச் சடையாகவோ, சடையினைக் கொள்க. முடித்த சடையாயோ, மகுடமாகவோ கொள்க. சடையின் இடப்புறம் ஊமத்தை, நாகம் இவற்றைக் கொள்க. வலப்புறம் பிறைமதியும் கொள்க. அனைத்தணிகளால் அழகு கொள்பவராய் அமைக்க.

வெள்ளாடை, வெள்ளை மேலுடை, வெண்முப்புரிநூல், மேற்போர்த்தும் புலித்தோல், முக்கண், அமைதி கொள்முகம் (துன்பம் நீக்கியது), கழுத்திலும் மார்பிலும் அக்கமாலைகள் இவற்றால் அலங்கரிக்க.

நாரதர், ஜமதக்னி, வசிட்டர்கள் வலப்புறத்தும், பரத்வாஜர், சுனகர், அகத்தியர் இடப்புறமும் நின்றேத்தவும், கின்னரர்கள் பத்திமையொடு பாடிப் பணியவும் அமைக்க.

அபஸ்மாரத்தின் மேல் ஊன்றிய திருவடியாகத் தொங்கும் திருவடியினை அமைக்க. அனைத்து நன்மைகளும் தரும் ''தர்ம வியாக்யா ஞானமூர்த்தியாக'' இவர் சொல்லப்படுகிறார்.

விஷ்ணு தர்மோத்தரம்

வலக்கரத்தில் (ஞான) முத்திரையும், மேற்கரத்தில் வெண்ணிற அக்கமாலையும், அனைத்து ஆகம வித்தைகளுமடங்கிய முதற் புத்தகத்தை இடக்கரத்தும், மேற்கரத்தில் அமுத கும்பமும் கொண்டவரும், வெண்ணிறத்தவரும், வெள்ளாடை போர்த்தவரும், வெண்மதி சூடியும், வெண்தாமரையில் இருப்பவரும், முனிவர்கட்கு ''ஞானம் உரைப்பவருமாக அந்தத் தட்சிணாமூர்த்தியை'' போற்றுகின்றனர்.

பூர்வகாரணாகமம் - படலம் 11ல்

நாற்பெருந்தோளர், முக்கண்ணர், யானைத்தோலைப் போர்த்தியவர். சற்றே வளைந்த திருமேனி கொண்டவர். சந்திரன், எருக்கமலர் இவற்றைத் தரித்தவர். வலக்கரத்தில் ஞானமுத்திரை, இடக்கரத்தில் புத்தகம், வலமேற்கரத்தில் அக்கமாலை, இடமேற்கரத்தில் அரவம், கால்நுனியிற் செலுத்திய பார்வை சிறிதே வளைந்து தொங்கும் வலத் திருவடி, அதன் தொடைமேல் மடித்த இடது திருவடியின் நலகம் (மேற்புறம்) இவ்வாறு நன்கறிந்து அமைக்க.

கழுத்தின் நடுவிலிருந்து மணிபந்தம் வரையும் இருபுறமும் மூன்று யவம் ஒதுக்கம் கொள்க. அகஸ்தியர், புலஸ்தியர், விசுவாமித்ரர், ஆங்கிரஸர் ஆகியோரைத் தலைவர்களாகக் கொண்ட முனிவர் கூட்டங்கள் சூழ்ந்தவராகக் கொள்க.

ஞான தட்சிணாமூர்த்தி (ஞானச் செல்வர்)

அம்சுமத் பேதம் - படலம் 75ல்

வலக்கரம் ஞானமுத்திரை கூடியதாயும் (வீணை இல்லாது), மேற்கரம் அக்கமாலை கொண்டதாயும், இடமேற் கரம் தாமரை/ குவளை கொண்டதும், கீழ்க்கரம் விரிந்ததாய் இடமுழந்தாளினுச்சியில் படிந்ததாயும் பால் வெள்ளை நிறம் கொண்டவராயும், மற்றவை முன்போலும் அடைவில் கொள்க. அனைத்துக் காரணப் பொருள்கட்கும் காரணப் பொருளாம் ஞானமூர்த்தி இவ்வாறு உரைக்கப்படுகிறார்.

சில்பரத்னம் - படலம் 22ல்

மேற்கூறியபடி அல்லது முன்கரங்களில் ஞானமுத்திரையும் (வலது) அபயமும் (இடம்) கொண்டவராக அல்லது இடமுழந்தாள் உச்சியில் வைக்கப்பட்ட விரிமலர் போன்ற இடக்கரமும் கொள்க. வலப்புற மேற்கரத்தில் அக்கமாலையும் எதிர்க்கரத்தில் குவளையும் கொள்க. அனைத்துக்கும் காரணராம் ''ஞானமூர்த்தி'' இவ்வாறு சொல்லப்படுகிறார்.

யோக தட்சிணாமூர்த்தி (யோகச் செல்வர்)

அம்சுமத் பேதம் - படலம் 75ல்

(அ) இரு திருவடிகளின் விரல்கள் கூடிய மேற்கால்கள் இரு புட்டங்களின் மேலும் மாறிப் படும்படி அமைக்க. இருதயத்துக்கு நேராக ஞானமுத்திரை கொள்க. இடக்கரம் மேட்ரபீடத்தில் பொருந்திய வரதமாக அமைக்க. வலமேற்கரத்தில் அக்கமாலையும் இடக்கரத்தில் தாமரையும் வைக்க. நாசி நுனியில் பார்வை கொண்டவராயும், ஆர்ஜவ சூத்திர உடலமைப்பும் கொள்க. தொங்கு சடைகளுடன் முனிவர்களால் வணங்கப்பட்டவராய் அமைக்க. எல்லாத் துன்பங்களையும் நீக்கும் யோகமூர்த்தியாக இவர் கூறப்படுகிறார்.

(ஆ) வலது திருவடியைத் தொங்கவிடுக. இடது திருவடியை ஆசனத்தில் பொருத்துக. நிமிர்ந்த உடலுடன் உயர்த்திய இடது திருவடியை யோகபட்டியால் கட்டுக. இடது கரத்தை விரிகரமாக்கி (இட) முழந்தாள் மேல் வைக்க. மற்ற அமைப்புக்களை முன்போற் கொள்க. இவரும் யோகமூர்த்தியே ஆவர்.

(இ) இரு திருவடிகளின் பரடுகளும் ஒன்றை ஒன்று தொடுமாறு இரு முழந்தாள்களையும் மடித்துயர்த்திய நிலையில் ஆசனத்தில் அமைக்க. ஜங்கை (கணுக்கால்)யைத் தொடும் வகையில் யோ பட்டியால் உடலொடு சேர்க்க. இருமுன் கரங்களையும் இரு முழந்தாள்களின் மேல் விரிகரங்களாக அமைக்க. மேல் இரு கரங்களின் அக்கமாலையும் (வலம்) தாமரையும் (இடம்) அமைக்க. வட்டச்சடை, பிறைமதி, நீலகண்டம், சுட்ட சங்கையும் நிலவையும் ஒத்த வெண்ணிறம், கர்ணமாலை, ருத்திராட்சத்தால் ஆன மார்பு ஆரம், இடப்புறம் சிறிதே சாய்ந்த நிலை. இவ்வாறு பல்வகையாய் யோக தட்சிணாமூர்த்தி சொல்லப்படுகிறார்.

உத்தரகாமிகம் - படலம் 51ல்

(ஈ) வியாக்யான மூர்த்தியை இரு கால்களையும் மடித்தமர்ந்தவராய், பாதம் நோக்கி வளைந்த பார்வையுடையவராய், இடக்கரம் விரிகரமாய்க் கொண்டவராய் அமைக்க. இவர் ''யோகமூர்த்தியாகக்'' கொள்ளப்படுகிறார்.

(உ) பிறகு வளைந்த இடக்காலின் பரடு வலது பிருஷ்டத்தின் கீழ் உள்ளவாறும் உயர்ந்த முழந்தாளின் மீது அலர்ந்த இடக்கரம் அமைந்ததாயும் அமைக்க. ஆபங்க உருவமும் நேர்ப்பார்வையும் கொண்டவராக அமைக்க. பல்வேறு விலங்குகள், பல்வகை அரவுகள், பல்வேறு முனிக்கூட்டங்கள், சித்தர்கள், வித்தியாதரர்கள், கின்னர்கள், பூதங்கள் முதலியோரால் சூழப்பட்டவர். பூஞ்சோலைகளில் அமர்ந்தவர். மலைமீது உயர்ந்த ஆலமரத்தடியில் வலப்புற நிழலில் அருளொடு கூடியவராய் அமர்ந்த நிலையில் காட்டுக. மரக்கிளைகளில் பழத்தை நாடும் பல்வகைப் பறவைகளை அமைக்க. ஆசனத்தை மணிகள் பதித்தாயும் புலித்தோல் விரிப்புடையதாயும் கொள்க.

பரமேசுவரானல் தீட்சைப் பெற்றவர்களும், சிவப்பிராமணர்களின் முனிவர்களும், ஆகம விளக்கம் வேண்டுபவர்களும், சுற்றியுள்ளவர்களுமான கௌசிகர் முனிவர்களால் துதிக்கப்பட்டு இவ்வாசனத்தில் அமர்ந்துள்ளராய் தட்சிணா மூர்த்தியைக் கொள்க.

இவ்வாறு அமர்ந்தவர், நின்றவர், முனிவர்களுடன் கூடியவர், தனித்தவர், ஆலடியில் அமர்ந்தவர், மரமின்றி அமர்ந்தவர், பல்வேறு உயிர்த் தொகுதிகளால் சூழப்பட்டவர். அபஸ்மாரத்தின் மீது தொங்கு பாதத்தை ஊன்றியவர் எனப் பல்வகையாகத் தட்சிணாமூர்த்தி சொல்லப்படுகிறார்.



மேதா தட்சிணாமூர்த்தி



ஷட்புஜ தட்சிணாமூர்த்தி



வியாக்யான தட்சிணாமூர்த்தி



வீணா தட்சிணாமூர்த்தி

சில்பரத்னம் - படலம் 22ல்

(ஊ) இரு திருவடிப் பரடுகளையும் மாறிய பிருஷ்டங்களின் அடியில் அமைக்க. இதயத்துக்கு எதிராக ஞான முத்திரை கொள்க. இடக்கரத்தில் மேட்ர பீடத்தின் மேல் வரத முத்திரை கொள்க. நிமிர்ந்தமர்ந்த நிலையில் நாசி நுனியில் வைத்த பார்வையாகக் கொள்க. விரிந்த சடையுடன் கூடிய மூர்த்தம் ''யோக மூர்த்தியாகக்'' கொள்ளப்படுகிறார்.

(எ) வலது பாதம் தொங்குவதாக அமைக்க. இடது பாதம் மடித்துக் குத்திட்டதாகக் கொள்க. யோக பட்டத்தால் குத்திட்ட பாதத்தின் பரடின் வழி உடலுடன் கட்டப்பட்டதாய்க் கொள்க. விரிந்த நீண்ட இடக்கரத்தை இடது முழந்தாள் மேலமைக்க. மற்றவை முன் போற் கொள்க. இதுவும் யோகமூர்த்தியாம்.

(ஏ) தொடைகளின் மூலத்தை ஒட்டிய வகையில் இரு பரடுகளையும் கொள்க. (வலமிடம் மாற்றியதாக அமைக்க) கணுக்கால்களின் மேலாய்ச் செல்லும் யோகபட்டியால் உடலுடன் சேர்க்க. முன்னிரு கரங்களையும் விரிகரங்களாக்கி முழந்தாள்களின் மேல் வைக்க. மேற்கரங்களில் அக்கமாலையும், கமண்டலமும் கொள்க. வட்டச் சடையும், வெண்டலையும், பிறைமதியும், நிலமணிமிடறும், சுட்ட சங்கும், நிலவும் போன்ற வெண்ணிறமும் கொள்க.

வீணாதர தட்சிணாமூர்த்தி (வீணை கொண்டவர்)

அம்சுமத் பேதம் - படலம் 75ல்

மேற்சொன்னவாறு இடப்பாகத்தை உத்குடிகாசனம் கொண்டதாயும், முன் இரு கரங்கள் வீணை கொண்டனவாயும் யுக்தியினால் அமைக்க. மற்றவை முன்போற் செய்க. இவர் வீணாதரர் ஆவர்.

உத்தரகாமிகம் - படலம் 51ல்

மேல், இடை, கடை நிலைகளில் இரண்டில் அரவமும் முன்னிரு கரங்களில் வீணையும் கீழிரண்டில் இடக்கரம் கடகமும் கொண்டவர். வலக்கரம் தொடையில் ஊன்றியதாகக் கொள்க.

சில்பரத்னம் - படலம் 22ல்

அவ்வாறே உத்குடிகாசன வாம பாதமும், முன்னிரு கரங்களில் வீணையும் கொண்டவர் வீணாதரராகக் கொள்ளப்படுகிறார்.

பூர்வகாரணம் - படலம் 11ல்

கடகமணிந்த வலது முன்கரத்தின் அகங்கை கீழ்நோக்கியும், இடமுன் கரத்து அகங்கை மேல் நோக்கியும் அமைக்க. வீணையை வலது தொடையின் முனையிலும் இடக்கரம் தாங்குவதாயும் வலக்கரம் மீட்டுவதாயும் அமைக்க. தொடைக்கு வெளியில் மூன்று மாத்ராங்குலமும் இடக்கரத்துக்கு மேல் நான்கங்குலமும் வீணைத்தண்டின் அளவு கொள்க. அதன் விஸ்தாரம் இரு மாத்ராங்குலம் கொள்க. வீணைமுகம் ஆறு மாத்ராங்குலம் அதன் கனம் அதிற்பாதியும் கொள்க. இவையே சிறப்பு அம்சங்களாகும். மற்றவை முன் சொன்னவாறே கொள்க.



தட்சிணாமூர்த்தி யந்திரம்

விஷாபஹர மூர்த்தி

विषापहारमूर्तिः।

एकवक्त्रं त्रिनयनं जटामकुटसंयुतम् ।
चतुर्बाहुं सुरक्तं समृगं परशुधारिणम् ॥

दक्षहस्ते गरं धृत्वा पानोन्मुखमदेक्षणम् ।
वरदं वामहस्ते तु सर्वालङ्कारसंयुतम् ॥

देवस्य वामपार्श्वे तु देवीं चैव तु कारयेत् ।
श्यामां द्विनेत्रां द्विभुजां त्रिभङ्गीं
सव्यापसव्यस्थितकुञ्चिताङ्घ्रिम् ।
कण्ठे निपीड्यस्थितसव्यलम्बां
चिन्ताकुलामीश्वरतुष्टिदात्रीम् ॥

पीतवस्त्रां द्विनयनां वाञ्छितार्थफलप्रदां ।

ஸ்ரீ தத்வநிதி

ஒருமுகம், முக்கண், சடைமுடியுடையார், நாற்கரத்தார், செம்மேனியுடையார். வலக்கரத்தில் விஷ உருண்டை கொண்டும், அல்லது விஷம் உள்ள பாத்திரத்தைக் கொண்டு, அதனைப் பருகும் நோக்குடைய பார்வை, இடக்கரம் வரதம், அனைத்தணிகளும் புனைந்த மேனி. இவ்வாறு இறைவனை அமைக்க.

பட்டாடை (மஞ்சள் நிறம்) அணிந்தவள், இரு கண்ணுடையாள், கரும் பசுமை நிறம் கொண்டவள், இரு கரம் திரிபங்கம் கொண்டவள். நின்ற வலப்பாதமும், சற்றே வளைந்த இடப்பாதமும் கொண்டவள். கழுத்தை வருடும் வலக்கரமும், தொங்கும் இடக்கரமும் கொண்டவள். கவலையுடன் இறைவனை காதற்பார்வையாற் காண்பவள். வேண்டியதைத் தருபவளாக இறைவியை அமைக்க.

உத்தரகாரணாகமம்

விஷாபஹார மூர்த்தியானவர் நாற்கரத்தர், முக்கண்ணர், சிறிது நெரித்த புருவமும் கூர்ந்த பார்வையும் உடையவர். பூரண மதியொத்த நிறம். சடையிலணிந்த மணி என இளம்பிறை கொண்டவர். வலப்புறத்தில் முத்தலைச் சூலம், கிண்டி (விஷபாத்திரம்) கொண்டவர். இடக்கரத்தில் கபாலம் உடையார். மடித்த இடப்பாதம், தொங்கும் வலப்பாதம், அகன்ற மார்பு, பயமுறுத்தும் உருவம், காலகூட விஷமுண்பவர், கழுத்தின் மத்தியில் கௌரியின் கைகளால் நிறுத்தப்படும் காலகூட விடங்கொண்டவர். புலித்தோல் ஆடை, கால்களில் கிண்கிணி மாலை, அணைத்தணிகளும் பூண்டு விருச்சிக அணியையும் அணிந்தவர். இவ்வாறு மகேசரைத் தியானித்துப் பிரதிட்டை செய்க.



விஷாபஹரர்



கிராத மூர்த்தி

கிராத மூர்த்தி

காண்டிபம் என்ற அதிசய வில்லை அக்னியிடமிருந்து பெற்ற அருச்சுனன் பாரதப் போரில் எதிரிகளின் ஆற்றலை முறியடித்தவன். பார்த்தனுக்குப் பத்து பெயர்கள் உண்டு. (அர்ச்சுனன், பற்குணன், கிரீடி, தனஞ்ஜெயன், சுவேத வாகனன், விபற்க, விஜயன், கிருஷ்ணன், சவ்வியராசி, பார்த்தன்).

''சவ்வியராசி'' என்றால் இடது - வலது என்ற இரண்டு கைகளாலும் அம்பு தொடுப்பவன் என்று பொருள். அத்தகைய சிறந்த வில்லாளியான விஜயன் கௌரவர்களை வெற்றி கொள்ள சிவபெருமானிடமிருந்து ''பாசுபதம்'' என்னும் வலிமை வாய்ந்த அஸ்திரத்தைப் பெறுகிறான். (மூலபாடத்தை பிரதிமா லட்சணானியில் காண்க).

கிராத மூர்த்தி (பாசபதமூர்த்தி)

பண்டு பார்த்தனுக்காகக் கொண்டு நடந்த வேடர் கோலத்தைக் ''கிராதமூர்த்தி'' என்றும் ''பாசுபதமூர்த்தி'' எனவும், ''கிராதார்ஜுன மூர்த்தி'' என்றும் அழைப்பர்.

இவ்வடிவில் ...

சிவபெருமான் மூன்று கண்களும், நான்கு திருக்கரங்களும், ஜடாமகுடமும் கொண்டிருப்பார். அவரது திருக்கரங்களில் வில், அம்பு, பரசு, மான் என்னும் நான்கும் திகழ்கின்றன. சமபங்க நிலையில் அவர் நேராக நிற்கிறார். சிறந்த ஆடைகளையும் அனைத்து வித அணிகலன்களையும் அவர் அணிந்திருப்பார்.

அவருக்கு வலப்பக்கம் அர்ச்சுனனும், இடப் பக்கம் கௌரியும் நிற்கின்றனர். அருச்சுனன் கூப்பிய கரத்தினனாய் நிற்கிறான். (இதில் பரமேஸ்வரன் சிவப்பு நிறமாகவும், அர்ச்சுனன் நீல நிறமாகவும் கொள்வதுண்டு)

பாசுபதாஸ்திர அமைப்பு

பாசுபதாஸ்திரம் நான்கு முகங்களைக் கொண்டது. ஒவ்வொரு முகத்திலும் மூன்று கண்கள் உள்ளன. நான்கு கரங்களையும், உக்கிர முகங்களையும், பயங்கரமான நீண்ட கோரப் பற்களையும், கரிய முடியையும் கொடி மீசையையும் கொண்டு அது விளங்குகிறது. அதன் நாற்கரங்களிலும் சக்தி, முத்கரம், சங்கம், கட்கம் ஆகியன திகழ்கின்றன.

பாசுபதாஸ்திர ஆயுத புருஷன் பத்மாசனத்தில் அமர்ந்திருப்பார். அவர் சிவபெருமானுடைய உக்கிர வடிவையொத்தவராகவே காணப்பெறுகிறார்.



குறிப்பு :- இவ்வடிவம் கும்பகோணம் கும்பேசுவரர் ஆலயத்திலும், சிதம்பரம், திருவேட்களம் ஆலயத்திலும் காணலாம். ஓவியத்திலும் காணலாம்.

கங்காளர்

அம்சுமத்பேதம் - படலம் 72ல்

இப்போது கங்காள மூர்த்தியின் உருவமைப்பு சொல்லப்படுகிறது. பாதுகையுடன் கூடிய பாதங்கள், இடப்பாதம் ஊன்றி நின்றதாயும், வலப்பாதம் நடந்து செல்லும் நோக்கத்துடன் சற்றே தூக்கியதாயும் அமைக்க. சுத்த வெண்ணிறம், அனைத்தணிகளும் அணிந்த திருக்கோலம். சிவந்த நிறக்கஞ்சுகம் (மேலாடை), சடைமுடி அழகர், ஊமத்தை, அரவு, (இடப்புறம்) கொண்டவர். பிறைமதி (வலப்புறம்) கொண்டவர். செவ்வாயில் குமிண்சிரிப்புக் கொள்க. பாடுவோர் கூட்டத்தால் சூழப்பட்டவர். வாயிலுள்ள பற்களின் ஒளியால் விளங்குபவர். பாடும் முயற்சியால் மகிழ்வு காட்டும் முகம் கொண்டவராக அமைக்க. காதுகளில் குழைகளைக் கொள்க. இடக்காதில் சங்க பத்திரக்குழை கொள்க. கங்காளத்தைத் தோள்மீது சாய்த்து எருவாயில் செருகிய தண்டைக் கையினால் பிடிப்பதாயும் கொள்க. அஸ்தி உருவம் நிறமற்றதாய் இருகரங்கள் இரு கால்களொடு கூடியதாய்க் கொள்க. அஸ்தியினைக் கரும்பசுமை (பாசி படர்ந்தது) நிறமுள்ளதாயும் எருவாய்த் துளையில் ஒரு தண்டினை நுழைத்துத் தூக்குவதாயும் கொள்க. எலும்புக் கூட்டின் இரு கால்களையும் தண்டுடன் கயிற்றினால் இறுகக் கட்டியதாகக் கொள்க. கொடிபோல் பிடிக்கப்பட்டும், கண் குழிகளில் வெறுமையாய் அல்லது இரத்தம் வெளிவந்து வற்றியதாய்க் கொள்க. இதனை இடது தோளில் சாய்த்ததாயமைக்க.

மூர்த்தியைச் சுற்றி துணைவியருடன் கூடிய அனேக பூதங்கள் சூழ்ந்து செல்வதாயும், இடப்புற ஓரத்தில் பலிபாத்திரம் சுமந்து மூர்த்தியின் முன் ஒரு பூதம் செல்வதாயும் அமைக்க. பல்வகை உணவுகள் கொண்டதாய் பாத்திரம் அமைக்க. மூர்த்தியைச் சூழ ஆடை குலைந்தவர்களையும், ஆடை நெகிழ்ந்ததால், தங்கள் அல்குல் சிறிதே தெரியும் நிலையிலுள்ளவர்களாயும், மயங்கிய மனோநிலை உடையவர்களாயும், பல பெண்கள் இருப்பதாய் அமைக்க. மூர்த்தியின் இடையில் சூரிகையைக் கட்டிவைக்க. இரு புறங்களிலும் கைகளில் அரவுகளாம் அணிகளை அமைக்க. மார்பிற் கூப்பிய கையர்களாயும் (பெருமானின்) அழகில் மயங்கியவர்களாயும், மூர்த்தியைப் பூசிப்பவர்களாயும், முனிவர், தேவர், கந்தருவர், சித்தர், வித்யாதரர் ஆகியோரை அமைக்க. ஆன்ம சிந்தனையுள்ள பாவத்துடன் அமைக்க. இறைவன் செல்லும் வீதியினை வாயு தூசு துடைப்பதாகவும், வருணன் (பர்ஜன்யன்) நீர்த் தெளிப்பவனாகவும் அமைக்க. தேவர்கள் மலர்மாரி பொழியவும் முனிவர்கள் துதிபாடுவோரும் உடன் செல்க. நான்கு வேதங்களும் துதிப்பனவாய் அமைக்க. தோலினாலான கருவிகள், துளைக் கருவிகள் (குழல் முதலியன) பல வகையான உருவங்கள் கொண்ட கருவிகள், நரம்பினால் ஒலிக்கும் கருவிகள், சங்குகள் இவற்றால் பேரொலி எழுப்புவதாக அமைக்க. தும்புரு, நாரதர் இவர்கள் தம்புராவிலிருந்து நாதத்தை மீட்டுக் கொண்டே பாடுதல். சூரிய சந்திரர்கள் குடை பிடித்துச் செல்லுதல், தேவ மாதர்கள் சாமரம் வீசுதல் ஆகியன சொல்லப்படுகிறது.

உத்தரகாமிகம் - படலம் 52ல்

பாதுகை அணிந்த திருவடிகள், நாற்றோள்கள், புரிநூல் மார்பர், அமைதித் திருமுகம், வெளிச்செல்லும் பாவம். இடையில் உடைவாள் பொலியுமழகு, முடித்துச் சுருட்டிய சடை, அழகிய வெளுத்தமேனி, பல்வகை அணிகள் கொண்டவராய் அமைக்க.

இடக்காதில் சங்கபத்ரிகாகுண்டலம், வலக்காதில் வேலைப்பாடு கொண்ட (மணிகள் பதித்த) தோடு, சிறிதே வளைந்த வலக்கால், நன்கு ஊன்றிய இடதுபாதம், சமபங்காய் ஒளிவீசும் திருமேனி, இடக்கரத்தில் பிடித்த உடுக்கையை வலக்கரத்தால் அடிக்கும் நிலை, வலது புற நடுக்கரத்தின் விரல் கொண்டு மானைப் பிடிக்கும் நிலை. இடக்கரத்தில் முட்களோடு கூடிய காலதண்டகம், மேலிருகரங்களால் தோளில் சார்த்திப் பிடித்த மூலம் (எலும்புடல்), பல்வகை உயிர்த் தொகுதிகளால் சூழப்பட்ட நிலை, தன் வலப்புறத்தில் பலிபாத்திரம் சுமந்து செல்லும் பூத உருவம். பலவகை உருவங்கள் கொண்ட பூதங்களால் சூழப்பட்டவர். பேரிகை, காகலம் முதலிய ஒலிக்கருவிகளை முழக்கிப் பாடியும் ஆடியும் ஒலி எழுப்பும் மானுடர்கள் மறைக்கப்படாது (இறைவனிடம் மயங்கிய நிலையில்) உள்ள உறுப்புகள் கொண்ட மாதர்கள், நழுவிய உடைகளும் அணிகளும் கொண்டு (இறைவனுக்குப்) பிச்சையிடும் நிலை கொண்டவர்களாயும், புகழ் வார்த்தைகள் சொல்பவர்களாயும், தழுவும் முயற்சியிலீடுபட்டு மார்பகம், நாபியின் கீழுள்ள உறுப்புகள் திறந்த நிலையிலும் உள்ள மாதர்களைச் சித்தரிக்க.

குறிப்பு :- மூலபாடத்தை ''பிரதிமாலட்சணானி'' நூலில் காண்க.



கங்காளர்

சக்ரதானர்

உத்தரகாமிகாகமம்

இவ்வடிவத்தில் சிவபெருமான் மூன்று கண்களும், நான்கு கரங்களும் ஜடாமகுடம் புனைந்து சாந்த மூர்த்தியாகத் திகழ்கிறார். அவர் தனது வலது காலை மடக்கி, இடது காலைத் தொங்க அமைத்து அமர்ந்திருப்பார். அவரது இரு வலக்கரங்களிலும் டங்கமும் சக்கரமும் இருக்கும். இம்மூர்த்தியைச் சுற்றிப் பிரபாமண்டலமும் சிரஸ்சக்கரமும் அமைந்துள்ளன. இவரது இடப்பக்கம் பார்வதி அம்மையார் அமர்ந்திருப்பர். வலப்புறம் நான்முகன் நிற்பார். முன்னே திருமால் தனது இருகரங் குவித்து அஞ்சலி செய்து வழிபடுவது போன்றோ, தாமரை மலர்களையும் தனது கண்ணையும் அர்ப்பணித்து வழிபடுவது போன்றோ விளங்குவார் என உத்தரகாமிகாகமம் கூறுகின்றது.

ஸ்ரீதத்வநிதி

ஷெ சிற்பநூலில், சக்ரதானமூர்த்தியின் கரத்தில் டங்கத்திற்குப் பதிலாக பரசு இருத்தல் வேண்டும். இவருக்கு இடப்பக்கம் திருமால் நின்று கொண்டிருப்பார். அவரது தோற்றம், அவர் சிவபெருமானை வழிபட்டு வரம் பெறவும், சக்கரத்தைப் பெற்றுக்கொள்ளவும் தயாராக இருப்பதைக் காட்டும். சிவபெருமான் திருமாலுக்கு ஒரு பீதாம்பரத்தையும், கௌத்தவ மணியையும் சக்கரத்தையும் வழங்குவது போன்ற அமைப்பையுடையவராயிருப்பார். திருமாலின் நான்கு கரங்களுள் இரண்டில் சங்கும் சக்கரமும் ஏனைய இரண்டு கரங்களும் அஞ்சலி செய்வதாயும் அமைந்திருக்கும்.



சக்ரதானர்

குறிப்பு :- இதன் மூலபாடம் ''பிரதிமாலட்சணானி'' நூலிலும், உத்தரகாமிகாகமத்திலும் காண்க. சக்ரதானர் பற்றிய புராண நிகழ்வு திருவீழிமிழலையில் நடந்ததாகும். திருவீழிமிழலை, காஞ்சிபுரம் கயிலாயநாதர் கோயில், மதுரைக்கோயில் ஆகிய தலங்களில் சக்கரதான மூர்த்தியின் சிற்பங்களைக் காணலாம்.

கஜமுக அனுக்ரஹர்

உத்தரகாமிகாகமத்தில்

அனைத்து உயிர்கட்கும் நன்மை அளிப்பதும், புனிதமானதும் அனைத்து வேண்டுகோளையும் நிறைவேற்றுவதுமான விக்நேசானுக்ரக மூர்த்தியைச் (கஜமுகானுக்ரகர்) சொல்கிறேன். சர்வ விக்னங்களையும் ஒடுக்குதலின் பொருட்டு உத்தம ஆச்சார்யன் இவ்வுருவத்தை நிறுவுக. முக்கண்ணர், நாற்கரத்தர், சாந்தர், ஒளிரும் குண்டலம் அணிந்தவர். கொக்கிறகு, பூங்கொத்து (சூளிகை - மகுட உரு), சுரி குழல், ஆரமாயுள்ள மலர்மாலை, கொத்தாய்த் தொங்கக் கூடிய மணிவடம், அங்குசம், அட்சமாலை, ஒளிரும் வரதம், வலப்புறம் நிற்கும் கஜாநநர், முடியில் கைவரும் (வலக்கரம்), இடப்புறத்தில் கௌரீ, மற்றும் வானச் சுடராம் வெண் கொற்றக்குடையுடன் நல்லுருவமைப்போடு கூடியவராயமைத்து முறைப்படி நிறுவுக.

ஸ்ரீதத்வநிதியில்

நாற்கரத்தர், முக்கண்ணர், சடைமுடி கொண்டவர், வலமுன் விநாயகரின் சிரசில் வைத்தவராயும் (விநாயகர் - வலப்புறத்தில் நிற்பதாக அமைக்க), மேல் கரங்களில் மான், மழு தரித்தவராயும், வலத்தாளை ஆசனத்தின் மேல் மடித்து வைத்தும், இடத்தாளைத் தொங்கவிட்டும், அனைத்தணிகள் பூண்டும் பசிய பொன்னிறமும், ஒளிர்மேனியும் கொண்டவராய் அமைக்க. இறைவரின் இடப்புறத்தில் மலர்ந்த முகமும், அணிகளனைத்தும் பூண்டவளும், வலக்கரத்தில் வேலையும், இடக்கரத்தில் வரதமும் கொண்ட இரு கரத்தாளும், முக்கண்ணும் வலத்தாளை மடித்து இடத்தாளைத் தொங்கவிட்டவளும், ஏகாசனத்தில் இடங்கொண்டவளுமான தேவியை உமாஸ்கநதருக்குச் சொன்ன வகையால் அமைக்க. விக்னேஸ்வரர் (விநாயகர்) செந்நிறத்தவரும், கிரீட மகுடத்துடன் கூடியவரும், இரு கைகளால் அஞ்சலி செய்பவரும், பாசம், அங்குசம், கொண்டவரும், அனைத்துப் பயன்களை தருபவருமாக அமைக்க. இம்மூர்த்தியை விக்னப்ரசாத மூர்த்தம் எனவும் கூறுவர்.



சண்டேசானுக்ரஹ மூர்த்தி

चण्डेशानुग्रहमूर्तिः।

अथ वक्ष्ये विशेषेण चण्डेशानुग्रहं परम् ।
उमासहितवत्सर्वं वामे किंचिन्नताननम् ।।

दक्षिणे त्वभयं वर्ज्य तद्धस्तं वरदं भवेत् ।
वामे तु कटकं घर्ज्य तं न्यस्त्वा चण्डमूर्धनि ।।

हृदयेऽञ्जलिसंयुक्तश्चण्डेशो भक्तिसंयुतः ।
आसीनः पद्मपीठे तु चण्डेशस्स्वर्णसन्निभः ।।

देवीदेवेशयोर्मध्ये स्कन्दमूर्तिं विना वुधाः ! ।
चण्डेशानुग्रहं ख्यातं दाक्षिणामूर्तिरुच्यते ।।

(अंशुमद्भेदागमे पञ्चसप्ततितमपटले ।।)

அம்சுமத்பேதம் - படலம் 75ல்

இடப்புறம் சற்றே திரும்பிய முகத்துடன் உமாசகிதரைப் போற்செய்க. வலப்புறம் அபயத்துக்குப் பதில் வரதம் கொள்க. வரதகரம் சண்டேசரின் சிரத்தை வருடுவதாக அமைக்க. பொன்னிற மேனியுடன் பத்மபீடத்தமர்ந்து சண்டேசர் இதயத்திற் கூப்பிய கரங்களுடன் பத்திமை அடியராய் அமைக்க. இறைவர்க்கும் அன்னைக்கும் மத்தியில் கந்தரின்றி அமைத்திடும் படிமத்தை சண்டேசானுக்கிரகர் என்று சொல்வதுண்டு.

உத்தரகாமிகம் - படலம் 55ல்

உமையோடு கூடிய சந்திரசேகர மூர்த்தியினுடைய இடப்புறத்திலோ அல்லது வலப்புறத்திலோ (சண்டேசரை) ஆசாரியன் செய்விக்க. இறைவனின் முழங்கால் அளவில் மார்பும், கழுத்தும், அழகிய முகமும் கொண்டவராயும், அஞ்சல் முத்திரையுடனும், அமர்ந்தவராயோ, நின்றவராயோ செய்க. இறைவனின் திருநோக்கு சண்டேசர்மீது அமையும் வகையில் செய்க. அனைத்து அங்கங்களிலும் உரிய அணிகள் பூண்டவராயும் சிறிய பத்துத்தாள அளவிலும் அமைக்க. மாலையின் நுனி கடக முத்திரையுடைய வலக்கரத்தால் பற்றப்பட்டு, இடக் கரத்தினால் மறுநுனி சண்டேசரின் சிரசில் சுற்றப்படுவதாக அமைக்க.

குறிப்பு :- ஷை ஆதீன வெளியீடு ''சண்டேசுவரர்'' நூலில் பல அனுக்கிரக மூர்த்திகள் மற்றும் சண்டேசுவரர் பற்றி விரிவாகக் காணலாம். மூலபாடம் - பிரதிமாலட்சணானி நூலில் காண்க.

சில்பரத்னம் - படலம் 22ல்

சண்டேசானுக்கிரக மூர்த்தியை உமாஸ்கந்த மூர்த்தியைப் போல் அமைக்க. இடப்புறம் முகமும், வலப்புறத்தில் அபயமின்றி வரதமாகவும், இடக்கரத்தை சண்டேசர் முடியில் கைவைத்த நிலையிலும் அமைக்க. பத்திமை அடியராய் சண்டேசர் கூப்பிய கரத்தராயும் இறைவன் ஆசனத்தடியில் நின்றவராயும் அல்லது அமர்ந்தவராயும் பொன்னிறத்தராய் அமைக்க.

பூர்வகாரணம் - படலம் 11ல்

ஸ்கந்தரின்றி உமாசகிதர்போல் செய்க. வலக்கரத்தில் கடக முத்திரையும் இடக்கரத்தில் வரதமும் கொள்க. இறைவனின் முன்னர் சண்டேசரை அமைக்க. தேவனின் தோள் அளவாக (கைநீளமளவாக) சண்டேசரின் உயரம் சொல்லப்பட்டது. இறைவனை நோக்கி அஞ்சலித்தவராயும், அமர்ந்தவராயும் அமைக்க. சண்டேசரின் சிரசில் ஐயன், மாலை அணிவிப்பவராக அமைக்க. இந்த வகை உருவம் முன் கூறியபடி சண்டேசானுக்கிரகர் எனப்படும்.



சண்டேசானுக்ரஹர்

ஏகபாதர்

एकपादः।

एकपादाभिधो बिभ्रत् क्ष्वंडादः स्याद्दहन् शरम् ।
चक्रं डमरुकं शूलं मुद्गरं तदधो वरम् ॥
अक्षसूत्रमधो वामे खट्वाङ्गं चोर्ध्वहस्तके ।
धनुर्घण्टां कपालं च कौमुदीं तर्जनीं घटम् ॥
परशुं चक्रमाधत्ते क्रमाद्बाह्वष्टके त्विति ।
अनेकभोगसंपत्तिं कुरुते यजनात्सदा ॥

(विश्वकर्मशास्त्रे ॥)

ध्यायेत्कोटिरविप्रभं त्रिनयनं शीतांशुगङ्गाधरं
हस्ते टङ्कमृगं वराभयकरं पादैकयुक्तं विभुम् ।
शंभोर्दक्षिणवामकक्षभुजयोर्ब्रह्माच्युताभ्यां स्थितं
तत्तल्लक्षणमायुधैः परिवृतं हस्तद्वयाढ्यांजलिम् ॥
ब्रह्माण्डप्रलये सुसंस्थितपदं ब्रह्माण्डमध्यस्थितं
ह्येवं लक्षणसंयुतं पुरहरं पादैकमूर्तीकृतम् ।

एकपादमिति ख्यातं सुखासीनम्। रक्तवर्णः। पक्षान्तरे श्वेतवर्णोऽपि प्रसिद्धः ।

(श्रीतत्त्वनिधौ ॥)

விஸ்வகர்ம சாஸ்திரம்

கரும்பு, சரம், சக்கரம், டமருகம், சூலம், சம்மட்டி, வரதம், அட்சமாலை இவைகளை வலக்கரங்களில் மேலிருந்து கீழாகவும், இடப்புறத்தில் - கட்வாங்கம், வில், மணி, கபாலம், கௌமுதி, தர்ச்சனி முத்திரை, பரசு, சக்கரம் இவைகளை கீழ் மேலாகவும் கொண்டு ஏகபாதர் பல்வகை நுகர்வுகளைப் பூசப்போருக்கு அளிக்கிறார்.

ஸ்ரீதத்வநிதியில்

கோடி சூரிய ஒளிக்கு ஒப்பானவரும், முக்கண்ணரும், குளிர்மை நிரம்பிய கங்கையைத் தரித்தவரும், கரங்களில் - மழு, மான், வரதம், அபயம் இவைகளைக் கொண்டவரும், தம் வல இடத்தோள் பகுதிகளில் அயனும் மாலும் கைகூப்பி வணங்கும் நிலையிலுள்ளவரும், பிரமனும் திருமாலும் அவரவர்க்குரிய அமைப்புகளுடன் ஆயுதங்களுடனும் இருப்பதாய் அமைக்க. பிர்ம்மாண்டப் பிரளயத்தில் நன்கு நின்றவரும், நீரின்மேல் நெடிதுயர்ந்தவரும், புரமெரித்தவரும், ஒரே பாதமுள்ளவருமான மூர்த்தியைத் தியானிக்க. அல்லது சுகாசீனராய் சிவந்த நிறத்துடன் அல்லது வெண்ணிறத்துடன் உள்ளவராய்க் கொள்க.



ஏகபாதர்



இலிங்கோத்பவர்

இலிங்கோத்பவ மூர்த்தி

लिङ्गोद्भवमूर्तिः।

अथ वक्ष्ये विशेषेण लिङ्गोद्भवविधिं शृणु ।
लिङ्गाकारस्य मध्ये तु चन्द्रशेखरमूर्तिवत् ॥

नळकात्तलपर्यन्तं लिङ्गे शूलसमन्वितम् ।
ब्रह्मापि हंसरूपेण ऊर्ध्वे वै वामपार्श्वके ॥

विष्णुर्वराहरूपेण दक्षिणेंऽशे त्वधोगतः ।
विष्णुर्दक्षिणपार्श्वे तु वामपार्श्वे पितामहः ॥

हृदयेऽञ्जलिसंयुक्तौ स्थितौ लिङ्गं समीक्ष्य च ।
रक्तश्यामहिरण्याभा ईशविष्णुपितामहाः ॥

एवं लिङ्गोद्भवं ख्यातं वृक्षसङ्ग्रहणं ततः ।
(अंशुमद्भेदागमे षट्सप्ततितमपटले ॥)

அம்சமத்பேதாகமம் - படலம் 78ல்

இலிங்கோத்பவர் (எனும் மூர்த்தத்தை) சிறப்பாக அமைக்கும் விதியைக் கேட்க. இலிங்க உருவின் மத்தியில் சந்திரசேகரர் போல அமைக்க. சூலக்குறி தாங்கியதாக அடிமுதல் முடிவரை தாங்கியதாக இலிங்க உருவினில் அமைக்க. இலிங்கத்தின் உச்சியில் இடப்பகுதியில் அன்ன உருவாய் மேனோக்கிய நிலையில் பிரம்மாவைக் காட்டுக. கீழ்ப்பகுதியில் வலப்புறம் கீழ்நோக்கிய உருவாய் திருமாலைக் காட்டுக. நடுப்பகுதியின் வலப்புறம் மார்பில் கைகூப்பிய நிலையில் திருமாலையும், இடப்புறம் அதே நிலையில் பிரமனையும் அமைக்க. இருவரும் தமதிடையிலுள்ள சிவலிங்கப் பகுதியை நோக்குவதாய் அமைக்க. சிவம் செந்நிறம் கொண்டவராயும், திருமால் பசும் கருமையும், அயன் பொன்னிறமும் கொண்டவர்களாக அமைக்க. இவ்வாறு இலிங்கோத்பவ மூர்த்தம் சொல்லப்பட்டது.

குறிப்பு :- உத்தரகாமிகம் - படலம் 50லும், சுப்ரபேதம் - படலம் 34லும், சில்பரத்னம் - படலம் 22லும், காரணாகமம்
- படலம் 11லும், ஸ்ரீதத்வநிதி சிவம் பகுதியிலும், சகளாதிகாரம் அத்தியாயம் 18லும், அஜிதாகமம் - கிரியாபாதம் படலம்
36லும், ஷெ ஆதீன வெளியீடாகிய ''இலிங்கோத்பவர்'' நூலிலும் விரிவாகக் காணலாம்.

சுகாசன மூர்த்தி

सुखासनमूर्तिः।

मेरुपर्वतपार्श्वे तु मुनीनामाश्रमे तथा ।
दिगम्बरं तु मां दृष्ट्वा तेषां स्त्रीणां भ्रमोऽस्ति वै ।

तं ज्ञात्वा मुनयस्सर्वे जुहुवुस्त्वाभिचारिकम् ।
तन्मध्ये ह्युदितानीह नागं कृष्णमृगं तथा ॥

अपस्मारं च परशुमुक्षं व्याघ्रं हरिं तथा ।
करोटिं तु महाभीममेवमाद्या गता मयि ॥

नागं मृगं च परशुं क्रीडार्थं धारितं मया ।
पादाधस्तादपस्मारं करोटिं शिरसोपरि ॥

सिंहव्याघ्रौ तदा हत्वा तच्चर्मं धारितं मया ।
तदुक्षं वाहनं भूत्वा मम प्रियकरं सदा ॥

महोदधेर्विषं कण्ठे सोमार्धं शेखरे धृतम् ।
वकपुष्पं जटाभारे मया नृत्तेऽवधारितम् ॥

समानमन्यत्सर्वासां प्रतिमानां विशेषतः ।
त्रिनेत्रं चतुर्भुजं सौम्यं बालेन्दुकृतशेखरम् ॥

धुस्तूरभुजगोपेतं जटामकुटमण्डितम् ।
व्याघ्रचर्माम्बरं चैव हारकेयूरसंयुतम् ॥

यज्ञोपवीतसंयुक्तं कुण्डलाभ्यामलङ्कृतम् ।
मूर्तीनां द्वादशानां तु सामान्यमिदमीरितम् ॥

अतः परं विशेषस्तु क्रमशो वक्ष्यतेऽधुना ।
आसने तु सुखासीनं मृगीपरशुधारिणम् ॥
अभयं दक्षिणे हस्ते वरदं वामहस्तके ।
कटकं वा सुखासीनमुमास्कन्दौ च वर्जितम् ॥
५५ सुखासनं प्रोक्तमुमासहितमुच्यते ।

(सुप्रभेदागमे चतुस्त्रिंशत्तमपटले ॥)

சுப்ரபேதம் - படலம் 34ல்

மேருமலைச் சாரலில் முனிவர்களாச்சிரமங்களில் திகம்பரராக சென்ற காலத்தில் முனிகளின் மனைவியர்கள் மயக்கம் கொண்டனர். இறைவரை அறிந்த முனிவர்கள் ஆபிசாரஹோமம் செய்தனர். அந்த ஹோமத்திலிருந்து நாகம், கறுநிறமான், அபஸ்மாரம் (பெரு உடல் கொண்ட பூதம்), பரசு, (மழு), உட்சம் (காளை), புலி, சிங்கம், மிகப்பயம் தரும் கரோடி (வெண்டலை) ஆகியவற்றை உண்டாக்கி இறைவர் மீது அனுப்பினர். நாகம், மான், பரசு ஆகியவைகள் இறைவரால் கையிற் கொள்ளப்பட்டன. சிங்கமும் புலியும் கொல்லப்பட்டு அவற்றின் தோல்கள் உடைகளாயின. உட்சம் (காளை) ஏறும் வாகனமாயிற்று. கறுநஞ்சு கழுத்தணியாயும், பிறைமதி சடைக்கணியாயும் தரிக்கப்பட்டன. இவை அனைத்தும் இறைவனின் அனைத்துருவங்கட்கும் பொதுவானவை. ''சிறப்புக் குறிகளாக'' முக்கண், நாற்பெருந்தோள்கள், அமைதி, பிறைமதிச் சடைமுடி, படம் விரித்த அணியாய் சடையில் நின்ற நாகம், புலித்தோலாடை, மார்பணி மாலைகள், தோள்வளைகள், முப்புரிநூல், செவியிற் குண்டலங்கள் ஆகியன யாவும் பன்னிரு மூர்த்திகட்குரியவை. இனி சுகாசனரைச் சொல்வோம். சுகாசனத்திருப்பவர் மான், மழு கொண்டவர். வலக்கரத்தில் அபயமும் இடக்கரத்தில் வரதமும் கொண்டவர். உமையும் கந்தருமின்றித் தனித்திருப்பார். கடகம் தரித்தவர். இவ்வாறு சுகாசனர் சொல்லப்படுகிறார்.

சில்பரத்னம் - அத்தியாயம் 22ல்

தனக்கேயுரிய கம்பீரத்தோற்றம், பத்ரபீடத்தில் அமர்ந்து இடத்தாளை மடித்தும் வலத்தாளைத் தொங்கவிட்டும் அமர்ந்தவர். எப்போதும் விழித்திருப்பவர். பவளநிற மேனி கொண்டவர். முக்கண்ணர், மலர் போன்ற அழகிய முகமுடையார். அரசகுணங்கள் கொண்டவர். புலித்தோலாடையும் விசித்திர மேலாடையும் கொண்டவர். வலக்கரங்களில் மழு, அபயம், இடக்கரங்களில் மான், வரதம் கொண்டவர். சிம்மகர்ணம் போல் கடகம் கொண்டவர். வலக்காதில் மகரக்குழை அல்லது சிம்மக்குழை கொண்டவர். இடச்செவியில் பத்திரகுண்டலம் கொண்டவர். அல்லது இரு காதுகளிலும் வட்டக் குண்டலங்கள் கொண்டவர். முப்புரி நூலணி மார்பர். அரவக் கங்கணமுடையார். இவ்வாறு அரசர்க்கும் அரசுக்கும் சுகந்தரும் சுகாசனம் சொல்லப்படுகின்றார்.

பூர்வகாரணம் - படலம் 11ல்

ஜடாமகுடம், முக்கண், நாற்கரங்களில் அபயம், வரதம், மான், மழு ஆகியவை கொண்டவர். வலத்தாள் மடிப்பு, இடத்தாள் தொங்கவிட்டவர். மற்றவை கந்தரும் கௌரியும் இல்லாத உமாசகிதர் போல் கொள்க.

(சில்பரத்னம், ஸ்ரீதத்வநிதி நூல்களில் அளவுகளோடு இத்திருமேனிகள் விவரிக்கப்படுகின்றன).



சுகாசனர்

ஹரிஹரர்

உத்தரகாமிகம் - படலம் 60ல்

அர்த்தநாரீசருக்குப் பின் ஹரியர்த்தர் சொல்லப்படுகிறார். மகேஸ்வரரின் பாதியை முன்போல் கொள்க. மறுபாதியை மாலுருவாகக்கொள்க. மாற்பகுதியின் இருகரங்களில் சங்கமும் கடகமும் கொள்க. பீதாம்பரம் (மஞ்சள் வஸ்திரம்) கொண்டதாய் அனைத்தணிகளோடும் கூடியதாயமைக்க. இவ்வாறு ஹரியர்த்தர் சொல்லப்படுகிறார்.

சுப்ரபேதம் - படலம் 34ல்

பீதாம்பரம் அணிந்து கிரீடங் கொள்வதாய் மாலின் பகுதியையும், புலித்தோலணிந்து சடைமுடி கொண்டதாய் சங்கரனின் பகுதியையும், முறையே பசுமை நிறமும், சிவந்த நிறமும் கொண்டவராய் ஹரியர்த்தர் சொல்லப்படுகிறார்.

சில்பரத்னம் - படலம் 22ல்

இப்போது ஹரிஹரர் சொல்லப்படுகிறார். ஊன்றி நின்ற சமநிலைத் திருவடிகள். கரங்களில் வலமேற்கரம் பரசு, கீழ்க்கரம் அபயம், இடப்புறம் மேற்கரம் சங்கு, கீழக்கரம் கடகம் - தொடைமீதமர்ந்ததாக அமைக்க. இடப்புறம் மாலையும், வலப்புறம் ஹரனையும் கொள்க. வலப்புறம் உக்கிரநோக்கும் இடப்புறம் குளிர்பார்வையும் கொள்க. நெற்றியின் வலப்பாதியில் அரைக்கண்ணினை அமைக்க. சிரச்சக்கரம் கொண்டதாக உருவினை அமைக்க.

பதினொரு அங்குல விசாலமும் பன்னிரு கிரணங்களும் கொண்டதாக (சிரச்சக்கரம்) அமைக்க. முழுவட்ட உருவிலோ தாமரை போன்றோ வடிவமைக்க. சிரச்சக்கர நாளவிஸ்தாரம் சக்கரத்தின் ஏழிலொரு பங்காகக் கொள்க. சக்கரதாரை (கிரணம்)யின் உயரம் சக்கரத்தின் முதலிலிருந்து நுனிவரையும் மூன்றிலொன்றாகக் கொள்க. கடிமேலாக குணாங்குல அளவில் நாளமுள்ளதாயமைக்க. நடுவில் (மார்பில்) புஷ்பமாலை கொண்டதாய உருவினைக் கொள்க. எல்லாத் தேவதேவியர்க்கும் இவ்வாறே சிரச்சக்கரம் கொள்க.

சில்பரத்னத் தொகுப்பு :
(பெயர் தெரியாத நூல்)

அனைத்துப் பாவங்களையும் நீக்கும் ஹரிஹர மூர்த்தியைச் சொல்வோம். வலப்புறம் சங்கரபாகமாயும், இடப்புறம் மாலின் பாகமாயும் கொள்க. வலப்புறச் சடைப்பாதியில் இளம்பிறை கொள்க. இடப்புறம் பலமணிகள் பதித்த கிரீடமாகக் கொள்க. வலப்புறச் செவியில் நாககுண்டலமும் அமைக்க. வலக்கரங்களில் கீழ்க்கரம் அபயமும் மற்றது சூலம் கொண்ட தாயும் இடங்கரங்களில் சங்கு சக்கரம், கதை கொண்டவைகளையும் செய்க. வலப்புறத்தில் யானையுரியாடையும் இடப்புறம் பீதாம்பர ஆடையுடனும் பிருஷ்டங்களை அமைக்க. இடது பாதம் நவமணிகள் கொண்ட அணிகள் கொண்ட தாயும் வலப்பாதம் அரவு அணி கொண்டதாயும் கொள்க. சிவபாகம் பால்நிலவொத்த நிறமும், திருமாலின் பாகம் காயாம்பூ வண்ணமாயும் சொல்லப்பட்டது.

விஷ்ணு தர்மோத்தரம்

ஹரிஹரருடைய வலப்புறம் சதாசிவமாயும் இடப்புறம் ஹ்ருஷீகேச பாகமாயும் (திருமால்), முறையே வெண்மை மற்றும் நீலநிறமாயும் வரதம், திரிசூலம், சக்கரம், தாமரை ஆகியவைகளை முறையே கொண்டனவாயமைக்க. வலப்புறம் இடபமும், இடப்புறம் கருடனும் அமைக்க.

பூர்வகாரணம் - படலம் 11ல்

ஈசனின் பகுதியை முன்சொன்னதுபோல் (அர்த்தநாரீசர்க்குச் சொன்னது போல்) கொள்க. திருமாலின் பாதியில் மகுடம் கொள்க. இடப்புறத்தில் உள்ள இரு கரங்களில் கேயூரமும் கடகமும் கொள்க. காதில் மணி பதித்த குண்டலமும், சங்கும் கடகஹஸ்தமும் கொள்க. திருமாலின் பாதி பீதாம்பரமணிந்ததாயும் தகுந்த அணிகளால் அழகு கொண்டதாயும் செய்க. நிமிர்ந்த பாதங்களுடன் (ஈசனின் பகுதியை) சந்திரசேகரர் போல் செய்க.

குறிப்பு :- மூலபாடம் பிரதிமாலட்சணானியில் காண்க.



பிரமன் - ஹரிஹரர் - முருகன்

அர்த்தநாரீஸ்வரர்

अर्धनारीश्वरः।

अथार्धनारीमूर्तिं तु वक्ष्येऽहं शृणु सुव्रत! ।
चतुर्भुजं वा द्विभुजं द्विविधं परिकीर्त्तितम् ॥

सुस्थितं दक्षिणं पादमितरं कुञ्चितं भवेत् ।
वामेऽर्धे पार्वतीरूपं दक्षिणेऽर्धे महेश्वरम् ॥

अभयं परशुं सव्यहस्तौ तत्तु शिवांशकम् ।
वृषमूर्ध्नि च विन्यस्तं कूर्परं वामहस्तके ॥

तदन्यद्वामहस्तं तु कटकं पुष्पहस्तकम् ।
द्विभुजे वरदं पूर्वं परहस्तं तु पुष्पधृक् ॥

शिवस्याभरणं सव्ये वामे स्त्रीभूषणं मतम् ।
पुंस्तनं दक्षिणे पार्श्वे वामे नारीपयोधरम् ॥

अथवा कुञ्चितं सव्यं वामपादं तु सुस्थितम् ।
सव्यं शूलधरं हस्तं वामं पुष्पधरं करम् ॥

वरदं दक्षिणं हस्तं वृषमूर्ध्नि तु कूर्परम्[1] ।
कपालं दक्षिणे हस्ते वामहस्तं प्रसारितम् ॥

दक्षिणे रौद्रदृष्टिस्स्यात् वामपार्श्वे तु शीतलम ।
दुकूलं चोरुमध्यस्थं सव्यं गुल्पमन्यकम्[2] ॥

அம்சுமத்பேதம் - படலம் 69ல்

நல்நியமம் கொண்டோரே, மாதொரு பாதியரைச் சொல்வேன், கேட்க. நாற்கரங்கொண்டவராயும், இருகரங்கொண்டவராயும் இருவகையாகச் சொல்லப்படுகிறார். வலப்பாதம் நேர்நின்று ஊன்றியதாயும், இடப்பாதம் வளைத்தூன்றியதாயும் அமைக்க. இடப்பகுதி பார்வதி உருவாயும் வலப்பகுதி மகேசரின் உருவாயும் கொள்க. நாற்கரங்களாயின், வலப்புறம் சிவப்பகுதியாயும் பரசு, அபயம் இவை கொண்டதாயும், இடப்புறத்தில் மேற்கரம் மலரும் கீழ்க்கரத்தின் முழங்கை முனை இடபத்தின் தலையில் ஊன்றியதாயும் கொள்க. இரு கரங்களாயின் வலப்புறம் வரதமும் இடப்புறம் மலர் கொண்டதாயும் அமைக்க. வலப்பாகம் சிவபாகமென்பதற்கேற்ப ஆண்களுக்கான அணிகளை அமைக்க. சிறிய மார்பகம் கொள்க. இடப்புறம் பெண்களுக்குரிய அணிகளும் பருத்த மார்பகமும் கொள்க. அல்லது வளைந்த வலப்பாதமும், நேர்நின்ற இடப்பாதமும் கொள்க.



அர்த்தநாரீஸ்வரர்

உமாமகேஸ்வர மூர்த்தி

उमामहेश्वरौ।

युग्मं स्त्रीपुरुषं कार्यमुमेशौ दिव्यरूपिणौ ।
अष्टवक्त्रं तु देवेशं जटाचन्द्रार्धभूषितम् ॥
द्विपाणिं द्विभुजां देवीं सुमध्यां सुपयोधराम् ।
वामपाणिं तु देवस्य देव्यास्स्कन्धे नियोजयेत् ॥
दक्षिणं तु करं शम्भोरुत्पलेन विभूषितम् ।
देव्यास्तु दक्षिणं पाणिं स्कन्धे देवस्य कल्पयेत् ॥
वामपाणौ तथा देव्या दर्पणं दापयेच्छुभम् ।
(विष्णुधर्मोत्तरे ॥)

उमामहेश्वरं वक्ष्ये उमया सह शङ्करम् ।
मातुलिङ्गं त्रिशूलं च धत्ते दक्षिणे करे ॥
आलिङ्गन्वामहस्तेन नागेन्द्रं द्वितीये करे ।
हरस्कन्धे उमाहस्तो दर्पणं द्वितीये करे ॥
अधस्ताद्वृषभं कुर्यात्कुमारं च गणेश्वरम् ।
भृङ्गिरिटिं तथा कुर्यान्निर्मांसं नृत्यसंस्थितम् ।
(रूपमण्डने ॥)

விஷ்ணு தர்மோத்தரம்

ஒளி உருக் கொண்டோராய் உமையும் ஈசனுமான இணை இருவரைக் கொள்க. எண்திசையும் ஒருங்கே காணவல்ல தேவர் தலைவனைப் பிறைமதி முடியராயும் தேவியை மெல்லிடையாளாயும் பெருந்தனமுடையளாயும் அமைக்க. ஐயனின் இடக்கரம் அன்னை இடத் தொடையில் ஊன்றியதாயும் வலக்கரம் (தேவியின் கரத்து) நீலோற்பலத்தைத் தாங்குவதாயும் அமைக்க. அன்னையின் வலக்கரம் ஐயனின் வலத்தொடையில் ஊன்றிய நிலையிலும் இடக்கரம் ஆடி ஏந்திய நிலையினும் அமைக்க.

உமையோடு கூடிய சங்கரரான உமாமகேசரை அமைக்கும் முறை சொல்லப்படுகிறது. வலக்கரங்களில் மாதுளம் பழம், திரிசூலம் தரித்தவராயும் (மேல்), இடக்கரத்தில் நாகத்தைக் கொண்டு மற்ற இடக்கரத்தால் தேவியைத் தழுவியுள்ளவராயும், தேவி வலக்கரத்தால் ஐயனின் இடையைத் தழுவியும் இடக்கரத்தில் ஆடி ஏந்தியவளாயும் அமைக்க. அவர்களின் கீழ் இடபதேவரையும், குமாரர் கணேசர் ஆகியோரையும் அமைக்க. கூத்தாடும் ஊனமுற்ற உடலுடன் பிருங்கி முனிவரை அமைக்க.

ஸ்ரீதத்வநிதியில் - பரிவாரங்கள் கொண்ட உமாமகேசர்

இடப்புறத்தே மலைமகள், எதிரில் ரிஷபம், பின்புறம் இந்திரன் முதலிய தேவர்கள். இருபுறங்களிலும் திருமாலும் அயனும் வாயு முதலிய கோணங்களில் பிருங்கி, நாரதர், பாணன், பைரவர், விநாயகர், கந்தர், வீரேசுரன் (வீரபத்ரர்) இவர்களுக்கிடையில் அழகிய வெண்மை கலந்த செந்நிறம் கொண்ட ஒளிரும் மேனியழகுடைய சம்புவை சரணடைந்து போற்றுகின்றேன்.



உமாமகேஸ்வரர் (சீகாழி)
தோனியப்பர் - மலைக்கோயில்

சண்டேஸ்வரர்கள்

த்வனிச்சண்டர் (சிவன் சந்நிதியில்)

யுக்ம கர ரத்ன நிப ஸவ்யகர டங்கம்
வாம கர மூருபரி சாந்தமுக மேகம் ।
ச்வேத மய வஸ்திர யுத பஸ்ம தர தேஹம்
சம்பு பத த்யான மய பக்த த்வனி சண்டம் ॥

காயத்ரீ

டங்க ஹஸ்தாய வித்மஹே சிவசிந்தாய தீமஹி
தந்ந: சண்ட: ப்ரசோதயாத் ॥



தொனிச்சண்டர்

இரு கரங்களும், சிவந்த நிறமும், வலக் கரத்தில் மழுவும், வெண்ணிற ஆடையும், வெண்ணீறணிந்த மேனியும், சிவனடிச் சார்ந்த தியானமுடைய பக்தரும் ஆன த்வனி: சண்டரைத் தியானிக்கின்றேன். (த்வனி : சண்டர் : சண்டர் எனும் பெயரை தமக்கே உரிமையாகவுடையவர்).

196

கும்பசண்டர் (விநாயகர் ஆலயத்தில்)

கும்போதர: சதுர்பாஹு டங்கசூலாஸி தண்டத்ருக்।
ரக்தவர்ணே மஹாதீப்தோ பத்ரபீடோ பரிஸ்தித:॥

காயத்ரீ

கும்ப சண்டாய வித்மஹே டங்கஹஸ்தாய தீமஹி।
தந்நோ சண்ட: ப்ரசோதயாத்॥



கும்பசண்டர்

கும்ப சண்டர் அல்லது கும்போதர சண்டர் நாற்கரமுடையவர். மழு, சூலம், மெல்லிய கூரிய கத்தி, தண்டம் ஆகியன தாங்கியவர். சிவந்த நிறமும், பேரொளி மேனியும் கொண்டு பத்ர பீடத்தில் நிற்பவராய்த் தியானிக்க.

197

சுமித்திர சண்டர் (முருகன் ஆலயத்தில்)

த்விநேத்ரம் த்விபுஜம் ரக்தம் ஸுப்ர ஸன்னம் ஸுயௌவநம் /
தக்ஷிணேசக்தி ஸம்யுக்தம் கரத் வயக்ருதாஞ்சலிம் //

காயத்ரீ

ஸ்கந்த பக்தாய வித்மஹே சக்தி ஹஸ்தாய தீமஹி /
தந்நஸ் ஸுமித்ர : ப்ரசோதயாத்: //



சுமித்திர சண்டர்

இரு கண்கள் இரு தோள்கள், சிவந்த நிறம், மலர்ந்த முகம், இளமையான உருவம், வலத்தோளில் சார்த்திய ''சத்தி'' கூப்பிய கரங்கள் கொண்டவரைத் தியானிக்க.

198

தேஜஸ் சண்டர் (சூரியன் ஆலயத்தில்)

சண்டம் ரக்தம் கராளாஸ்யம் அப்ஜா பயகரத்வயம் /
தம்ஷ்டிரா கராள தீப்தாஸ்யம் ஜடிலம் ரக்தவாஸஸம் //

காயத்ரீ

தேஜஸ் சண்டாய வித்மஹே சாக்ஷீபூதாய தீமஹி /
தந்நோ சண்ட: ப்ரசோதயாத் //



தேஜஸ் சண்டர்

சண்டரை, சிவந்தமேனி, கோபத்தாற் கறுத்தமுகம், தாமரை தாங்கும் இருகரங்கள், கோரைப் பற்களையுடைய கருநாகத்தை அணிந்தவர், சடைமுடி, செவ்வாடை கொண்டவராய்த் தியானிக்க.

கிருதயுகத்தில் பிரசண்டர்

க்ருதயுகே ப்ரசண்டாக்ய: ச்வேத வர்ண சமாயுத:।
தோர்பிர் ஷோடச பிர்யுக்த: வாஹநந்து கஜோபவேத்॥
சூல: ச பரசுர் வஜ்ர: கட்க: கோசஸ்த தைவ ச।
க்ஷுரிகா ச அபயம் தண்ட: தக்ஷிணாஷ்டாயுதம் பவேத்॥
கேடகம் பிண்டி பாலஞ்ச பாசம் கண்டாம் ததைவ ச।
வரதம் வ்யாக்ரஹஸ்தம் ச ஸூசீம் நாகஞ் ச வாமகே॥
ஜடா மகுட ஸம்யுக்தம் ருத்ராக்ஷா பரணாந்விதம்।

காயத்ரீ

ஓம் ப்ரசண்டாக்யாய வித்மஹே ஸ்வேத வர்ணாய தீமஹி।
தந்ந: ப்ரசண்ட: ப்ரசோதயாத்॥



பிரசண்டர்

கிருதயுகத்தில் இவர் பிரசண்டர் எனும் பெயரை உடையவர். வெண்ணிற மேனியும், பதினாறு கரங்கள் கொண்டு யானையை ஊர்பவராய் அமைவர். வலக்கரங்களில் முறையே - சூலம், பரசு, வச்சிரம், கட்கம் (கத்தி), கோசம் (உடல்), சூரிகை (குறுவாள்), அபயமுத்திரை, தண்டம் ஆகியன கொண்டும், இடக்கரங்களில் முறையே, கேடயம், பிண்டிபாலம், பாசம், மணி, வியாக்ரமுத்திரை, சுசீமுத்திரை, நாகம், வரதமுத்திரை விளங்கவும், சடை முடியோடு கூடிய உருத்திராக்க மாலைகளே அணிகளாகக் கொண்டவராய் அமைக்க.

திரேதாயுகத்தில் விக்ராந்த சண்டர்

த்ரேதாயாம் அஷ்டஹஸ்தஸ்து அதிரக்த ஸமப்ரபம் //
விக்ராந்தீததி நாம்நாது ஸுவிகீர்ண ஜடாந்விதம் /
வாஹநந்து ஹயம் வித்யாத் கிஞ்சித் ப்ரஹஸிதாநநம் //
சூலம் பாசம் ச கட்கம் ச பரசும் தட்சிணே கரே /
வரதம் கேடகம் பாலம் கண்டாம் வாமே த்ருடம் த்ருதம் //

காயத்ரீ

ஓம் விக்ராந்தாய ச வித்மஹே அதிரக்தாய தீமஹி /
தந்நோ சண்ட: ப்ரசோதயாத் //



விக்ராந்த சண்டர்

திரேதாயுகத்தில் இவர் விக்ராந்தசண்டர் எனப் பெயர் கொண்டவராய், எண்கரங்களும், ரத்தச் சிவப்பு நிறமும் கொண்டு விளங்குபவர். விரிந்த சடையராய், குமிண் சிரிப்புடையராய் குதிரை ஊர்பவராய் அறிக. வலக்கரங்களில் சூலம், பாசம், கத்தி, பரசு ஆகியவற்றையும், இடக்கரங்களில் வரதம், கேடயம், பாலம், மணி ஆகியன கொண்டும் விளங்குவர்.

201

துவாபர யுகத்தில் விபுசண்டர்

த்வாபரேது சதுர் பாஹு : பீதவர்ண: சுகாசன:।
ஜடாமண்டல ஸம்யுக்தாம் ஸதாசிவத்யான பராயண:॥
தம்ஷ்ட்ரா கராலவதந: டங்கம் சூலம் ச தக்ஷிணே ।
பாசம் சாப்யங்குசம் வாமே பத்ர பீடோபரி ஸ்தித:॥

காயத்ரீ

ஓம் வம் விபுசண்டாய வித்மஹே சிவசிந்தா பராய தீமஹி।
தந்ந: சண்ட: ப்ரசோதயாத்॥



சண்டநாதர்

நாற்கரத்தர், பொன்னிறத்தர், சடையினை வட்டமாகக் கொண்டவர். எப்பொழுதும் சிவத்தியானத்தில் மூழ்கியவர். கோரைப் பற்களுடன் கோபக் குறிகாட்டும் முகமும், மழு, சூலம் வலத்திலும், பாசம், அங்குசம் இடத்திலும் ஏந்தி பத்ர பீடத்தின் மேல் அமர்ந்தவர்.

துவாபரயுக சண்டர் / பிரம்ம சண்டர்
(சதுர்முக சண்டேஸ்வரர் - சதுர்முக சண்டநாதர் - ஆதி சண்டர்)
காயத்ரீ

ஓம் ப்ரம் ப்ரம்ஹ சண்டாய வித்மஹே சதுர்முகாய தீமஹி।
தந்ந : சண்ட : ப்ரசோதயாத்॥



சதுர்முக சண்டர்

உத்தரகாமிகாகமம் 65 ஆவது படலத்தில் - துவாபரயுக சண்டேசுவரர் நான்கு முகம், ஜடாமகுடம், நான்கு கரங்களில் வலப்பக்கம் அக்கமாலை, முத்தலைச் சூலம், இடப்பக்கம் குண்டிகை, மழு இவற்றுடன் விளங்கி, பத்ரபீடத்தில் அமர்ந்திருப்பார். இவரைப் பிரம்ம சண்டர் என்றும் ஆதிசண்டர் என்றும் கூறுவர். தாராசுரம், திருவாவடுதுறை, சிதம்பரம் ஆகிய தலங்களில் இத்திருவுருவங்களைக் காணலாம்.

கலியுகத்தில் சண்டேசர்

கலௌ துவிபுஜாம்சாம்சம் ஜடாமகுட மண்டிதம்/
ஜடாமகுட சம்யுக்தம் கேசபந்த மதாபிவா//
க்ருஷ்ணாபம் வாத ரக்தாபம் ஸௌம்ய நேத்ரா நநாந்விதம்/
ஆபங்கம் ஸமபங்கம் வா ஸமபாதஸ்தானகஸ்துவா//

காயத்ரீ

ஓம் டங்க ஹஸ்தாய வித்மஹே சிவசிந்தாய தீமஹி/
தந்ந: சண்ட: ப்ரசோதயாத்//

கலியுகத்தில் விளங்கும் சண்டேசர் இரு கரங்களும், சடைமுடியினைச் சுருட்டி உயர்த்திக் கட்டிய முடியும் கொண்டவராய்க் கொள்க. கருநிறம் அல்லது சிவந்த நிற மேனி, கருணை பொழியும் கண்கள்; சாந்தமுகம் கொண்டவர். ஆபங்கம் அல்லது சமபங்கத் தோற்றம் கொண்டு நின்றகோலத்தர் எனக் கொள்க.

(**குறிப்பு** :- மழுவில்லாமல் இருந்தால் நின்று, இரு கரம் கூப்பியும், அதில் மலர்மாலையும் கொண்டவராக அமைத்தல் ஒருமுறை. சண்டேச பதம் பெறும் சமயத்தில் சிவனின் வலப்புறமாய் அச்சங்காட்டும் முகத்துடன் கொள்க).

சண்டேஸ்வரி (அம்மன் ஆலயத்தில்)

த்விநேத்ராம் த்விபுஜாம் ச்யாமாம் டங்கம் சைவது தாரிணீம்
கடகம் வா விசேஷேண வ்யாக்யா முத்ராம் ததைவச/
த்விபாதாம் வஸ்திர ஸம்யுக்தாம் சர்வாபரண பூஷிதாம்
ஜடாமகுட ஸம்யுக்தாம் ஞானரூபாம் ததைவச//
(கரஸ்போடந மாத்ரேண சிவபூஜா பலம்பேத்)

காயத்ரீ

சக்தி ஸேவாயைச வித்மஹே பத்மஹஸ்தாயைச தீமஹி/
தந்நோ நீலி ப்ரசோதயாத்//

இரு கண்களையுடையவளும், இரு தோளையும், பசுமை நிறத்தவளும், மழுவேந்தியவளும், கடக முத்திரை அல்லது சின்முத்திரை கொண்டவளும், ஈரடியினைக் கொண்டவளும், நல்லுடையணிந்தவளும், அணிகள் பல பூண்டவளும், சடைமுடி கொண்டவளும், ஞானமே உருவானவளும், ஆன சண்டேஸ்வரியைத் தியானிக்க.

(மேலும் கையினால் சிட்டிகை / தட்டுதலின் மூலம் கவனத்தை நம்பால் திருப்பி பூசைப் பயனைப் பெறுக).

க்ஷேத்ரபாலர்
क्षेत्रपालः।

त्रिविधः क्षेत्रपालस्तु सात्विको राजसस्तमः ।
श्वेतं रक्तमथो कृष्णं सात्विकादिगुणं भवेत् ॥
द्विभुजं वा चतुर्बाहु शान्तं सात्विकमुच्यते ।
षड्बाहु चोग्रवदनमुग्रं स्याद्राजसं स्मृतम् ॥
तामसं चाष्टबाहुं च एते वै समपादकाः ।
स्थानकं पद्मपीठे तु भद्रपीठे तु वा यथा ॥
शूलं दक्षिणहस्ते तु कपालमितरे धृतम् ।
द्विभुजं ह्येवमाख्यातं चतुर्हस्तमथोच्यते ॥
परहस्ते तु सव्ये तु खड्गं घण्टां तदन्यके ।
अथवा पूर्वहस्ते तु अभयं वरदान्वितौ ॥
पूर्ववत्परहस्तौ द्वौ घण्टां वा वामहस्तके ।
सात्विकं ह्येवमाख्यातं राजसं शृणु सुव्रत ! ॥
शूलं खड्गं च घण्टां च दक्षिणे [तु*] करत्रये ।
खेटकं च कपालं च नागं वा पाशवामके ॥
तामसे तु धनुर्बाणं दक्षिणेऽदक्षिणे धृतम् ।
शेषं राजसवत्ख्यातं रक्तकेशोर्ध्वमण्डलम् ॥
उग्रदृष्टिसमायुक्तं नानानागविभूषितम् ।
त्रिनेत्रं नग्नरूपं च क्षेत्रपालं प्रकल्पयेत् ॥

அம்சுமத்பேதம் - படலம் 49ல்

க்ஷேத்ரபாலர் சாத்விக, ராஜஸ, தாமஸர் என மூவகைப்படுவர். முறையே வெண்மை, பொன்மை, கருமை எனும் முந்நிறத்தர். இரண்டு அல்லது நாற்கரத்தராய் அமைதி கொண்ட முகத்தராய் உள்ளவர் சாத்வீகர் எனப்படுவார். ஆறு கரங்களும் உக்கிரமுகமும் உக்கிரப் பார்வையும் கொண்டவர் ராஜஸர். எண்கரங்கள் கொண்டவர் தாமஸர் ஆவர். பத்ம பீடம் அல்லது பத்ர பீடத்தில் நின்ற கோலத்தராயமைக்க. இருகரங் கொண்ட உருவமாயின் சூலமும் மற்றதில் கபாலமும் கொள்க.

சாத்விகர்

நாற்கரங்களாயின்,

1. மேற்கரங்களில் குறுவாள், மணி இவையும் கொள்க.
2. மேற்கரங்களில் குறுவாள் - மணி, முன்கரங்களில் அபயம், வரதம் கொள்க.
3. அல்லது மேற்கரங்களில் சூலம், மணி, முன்கரங்களில் அபய, வரதம் கொள்க.
4. ஆலம், மணி, குறுவாள், கபாலமேனும் கொள்க. இவ்வாறு சாத்விகர் சொல்லப்பட்டார்.

ராஜஸர்

ஆறு கரங்களாயின் - சூலம், குறுவாள், மணி, இவைகள் வலக்கரங்களிலும், கேடயம், கபாலம், நாகம் அல்லது பாசம் இவைகள் இடக்கரங்களிலும் கொள்க. இவரை ராஜசர் என்பர்.

தாமஸர்

இவரது எட்டுக் கரங்களில், மேற்கரங்களில் வில்லும் அம்பும் கொண்டு மற்றவை ராஜசர்போல் கொள்க. உக்கிரப் பார்வையுடனும், பல்வகை அரவுகளை அணிகளாக அணிந்தவரும் முக்கண்ணரும் பிறந்த மேனியருமாய் க்ஷேத்ரபாலரைக் கொள்க.

வைரவசுவாமி யந்திரம்

மந்திரம்: ஓம் கூங் காங் சங் வங் வடுகாய நமஹ

(ஜபம் - ஒரு லட்சம்)





இருளப்பசுவாமி யந்திரம்

மந்திரம்:

ஓம் ஹம் உம் ஸ்ரீயும் அகோர இருளப்பா நமஹ

(ஜபம் - 1001)

குறிப்பு :- க்ஷேத்திரபாலர் பல்வேறு உருவமைதிகளை ஷை ஆதீன வெளியீடாகிய ''பைரவர்'' நூலில் காண்க.



க்ஷேத்ரபாலர்

பைரவர்

இறைவனாகிய சிவபெருமானின் அருட்டன்மை எல்லையற்றது. மக்கள் அதனோடு ஒன்றி நின்று உணருவதென்பதும், உணர்ந்ததை அநுபவத்திற் கொண்டு வருவது என்பதும் அதற்கேற்ப இறைவற்கும் பல பெயர்களையிட்டழைப்பதும் அரியவற்றுள் அரிய செயலாகும். அவ்வண்ணம் சூட்டப்பெற்ற பல பெயர்களிலும் கலந்து எவற்றையும் கடந்து நிற்கும் குணநலத்தை உடைய இறைவனே சிவனார் ஆவார்.

மூன்று நிலை

இங்ஙனம் சிவபெருமானின் பல திருநாமங்களுள் ''பைரவர்'' எனும் திருப்பெயரும் சிறந்ததொன்றாகும். இவ்வுருவம் வீரம், கருணை, ஞானம் எனும் மூன்றினையும் தன்னுள் கொண்டது. சிற்ப நூல்களும் சிவாகமங்களும் பைரவ மூர்த்தத்தை விவரிக்கும்போது அறுபத்து நான்கு பைரவர்களைக் கூறுகின்றன.

சிவபராக்கிரமம் எனும் நூல் அறுபத்து நான்கு சிவமூர்த்தங்களைப் பற்றி உரைநடையாக அமைந்திருப்பதைக் காணலாம். இந்நூல் இலிங்கமூர்த்தியிலிருந்து சிஷ்யபாவ மூர்த்தி வரை கூறுகின்றது. இருப்பினும் ''பைரவர்'' எனும் உருவத்தைக் கூறி கிரமமாக வரும்போது பைரவ மூர்த்தி, ஆபதோத்தாரண மூர்த்தி, வடுக மூர்த்தி, க்ஷேத்திரபாலக மூர்த்தி முதலான திருவுருவங்கள் சிறப்பாகப் புராணங்களில் பேசப்படுகிறது.

தியானம்

தியானம் என்பது இறைத் திருமேனியின் வடிவத்தை எண்ணுவதாகும். தியானங்களில் பூசைக்குரிய தியானங்கள், சிற்பத் தியானங்கள், ஆகமத் தியானங்கள் என்ற பல நிலைத் தியானங்கள் வழி வழியாக அமைந்து விளங்குவனவாகும்.

பொதுவாக சிற்பிகள் தியானங்களைத் தம் மனத்துள் இருத்தி அதனையே வடிவமாக்கி எல்லோரும் பார்த்து தரிசிக்கும் வகையில் அமைப்பது என்பது சாதாரண காரியமில்லை. அகத்தில் எழுவதைப் புறத்தே குற்றமில்லாது நிலவச் செய்தலே தியானத்தின் சிறப்பாகும்.

மூர்த்தித் தியானம்

பைரவ தியானம்

ரக்தஜ்வால ஜடாதரம் சசிதரம் ரக்தாங்க தேஜோமயம்/
டக்கா சூல கபால பாசகதரம் ரக்ஷாகரம் பைரவம்//
நிர்வாணம் சுநவாஹனம் த்ரிநயனஞ் சாநந்த கோலாஹலம்/
வந்தே பூதபிசாச நாதவடுகம் க்ஷேத்ரஸ்ய பாலம் சுபம்//

சிவந்த ஜ்வாலைகளையுடைய ஜடையை தரித்திருப்பவரும், சந்திரனை முடியில் தரித்திருப்பவரும், சிவந்த மேனியையுடையவரும், ஒளிமயமாக விளங்குபவரும், உடுக்கை, சூலம், கபாலம், பாசக்கயிறு இவைகளை வைத்திருப்பவரும், உலகத்தைக் காப்பவரும் பாவிகளுக்கு பயங்கரமான தோற்றத்தையுடையவரும், நிர்வாணமாக இருப்பவரும், நாயை வாகனமாகக் கொண்டவரும், மூன்று கண்களையுடையவரும், எப்பொழுதும் ஆனந்தத்தினால் மிகுந்த கோலாகலமுடையவரும் (ஆனந்த வடிவினர்), பூத கணங்கள் பிசாசுக் கூட்டங்கள் இவைகளுக்குத் தலைவனாக இருப்பவரும், க்ஷேத்ர பாலகருமான பைரவரை வணங்குகின்றேன்.

அஸிதாங்க பைரவ தியானம்

த்ரிணேத்ரம் வரதம் சாந்தம் முண்ட மாலாவிபூக்ஷிதம்/
ச்வேதவர்ணம் க்ருபா மூர்த்திம் பைரவம் குண்டலோ ஜ்வலம்//
கதா கபால ஸம்யுக்தம் குமாரஞ்ச திகம்பரம்/
பாணம் பாத்ரஞ்ச சங்கம் ச அக்ஷமாலாம் கமண்டலும்//

நாக யக்ஞோபவீதஞ் ச தாரிணம் ஸு விபூஷிதம் /
ப்ரஹ்மாணீ சக்தி ஸஹிதம் ஹம்ஸாரூடம் ஸுரூபிணம் /
ஸர்வாபிஷ்டப்ரதம் நித்யம் அஸிதாங்கம் பஜாம்யஹம் //

மூன்று கண்களையுடையவரும் வேண்டிய வரங்களைக் கொடுப்பவரும், சாந்தமான சொரூபத்தையுடையவரும், தலை முண்டங்களால் ஆக்கப்பட்ட மாலையை அணிந்திருப்பவரும் வெண்மையான நிறமுடையவரும், கருணை வடிவங் கொண்டவரும் காதுகளில் அணியப்பெற்ற குண்டலங்களால் மிகவும் பிரகாசிப்பவரும் கதை, கபாலம், பாணம், பாத்ரம், கட்கம், ஜபமாலை, கமண்டம், இவைகளை உடையவரும் திகம்பரனாயும் இளைஞன் ஆகவும் பாம்பைப் பூணுலாக அணிந்து கொண்டிருப்பவரும் நன்கு அலங்கரிக்கப்பட்டிருப்பவரும், ப்ரஹ்மாணி என்கிற சக்தியுடன் கூடியவரும், அன்னப் பறவையை வாகனமாகக் கொண்டவரும் அழகானத் தோற்றத்துடன் வேண்டிய வரங்களைக் கொடுப்பவருமான அஸிதாங்க பைரவர் என்னும் பைரவ மூர்த்தியை எப்பொழுதும் வணங்குகின்றேன்.

ருரு பைரவ தியானம்

த்ரிணேத்ரம் வரதம் சாந்தம் குமாரஞ்ச திகம்பரம் /
டங்கம் க்ருஷ்ணம்ருகம் பாத்ரம் பிப்ராணஞ்ச க்ருபாணகம் //
மகேச்வர்யாயுதம் தேவம் வ்ருஷாரூடம் ஸ்மிதானனம் /
சுத்த ஸ்படிக ஸங்காசம் நமாமி ருருபைரவம் //

மூன்று கண்களையுடையவரும் வேண்டிய வரங்களைக் கொடுப்பவரும் சாந்தமான தோற்றத்தையுடையவரும் இளைஞனாகவும் திகம்பரனாகவுமிருப்பவரும் டங்கம், க்ருஷ்ணம்ருகம் (புள்ளிமான்), பானபாத்ரம், கத்தி இவைகளை வைத்திருப்பவரும், மகேஸ்வரி என்ற சக்தியுடன் கூடியவரும் காளை வாகனத்தின் மேல் வீற்றிருப்பவரும் புன்முறுவல் பூத்த முகத்துடன் கூடியவரும், நிர்மலமான ஸ்படிகம் போன்று வெண்மையான மேனியையுடையவருமான ருரு பைரவர் என்ற மூர்த்தியை வணங்குகின்றேன்.

குரோத பைரவ தியானம்

த்ரிணேத்ரம் வரதம் சாந்தம் குமாரஞ்ச திகம்பரம் /
கதாம் சங்கம் ச சக்ரஞ்ச பாந பாத்ரஞ் ச தாரிணம் //
லக்ஷ்ம்யாச ஸஹிதம் வாமே கருடாஸந ஸுஸ்த்திதம் /
நீலவர்ணம் மஹாதேவம் வந்தே ஸ்ரீக்ரோத பைரவம் //

மூன்று கண்களையுடையவரும், கதை, சங்கம், சக்ரம், பானபாத்ரம் இவைகளையுடையவரும், வேண்டப்பட்ட வரங்களைக் கொடுப்பவரும் சாந்தமான தோற்றத்தையுடையவரும் குமாரனாகவும் திகம்பரனாகவும் விளங்குபவரும் இடது பக்கத்தில் இலக்குமியுடன் கூடியவராக கருட வாகனத்தில் அமர்ந்திருப்பவரும் நீல நிறமான மேனியையுடையவருமான க்ரோத பைரவரை வணங்குகின்றேன்.

உன்மத்த பைரவ தியானம்

த்ரிணேத்ரம் வரதம் சாந்தம் குமாரஞ்ச திகம்பரம் /
ஹேம வர்ணம் மஹாதேவம் அஸ்வவாஹன ஸுஸ்த்திதம் //
கட்கம் கபாலம் முஸலம் ததந்தம் கேடகம் ததா /
வாராஹீ சக்தி ஸஹிதம் வந்தே உன்மத்த பைரவம் //

மூன்று கண்களையுடையவரும் வேண்டப்பட்ட வரங்களைக் கொடுப்பவரும் சாந்தமான தோற்றத்தையுடையவரும் குமாரனாகவும் திகம்பரனாகவுமிருப்பவரும் ஸவர்ணம் போன்று மஞ்சள் நிறமான மேனியையுடையவரும் அஸ்வவாகனத்தில் அமர்ந்திருப்பவரும், கட்கம், கபாலம், உலக்கை, கேடயம் இவைகளையுடையவரும் வராஹீ சக்தியுடன் கூடியவருமான உன்மத்த பைரவரை வணங்குகின்றேன்.

அஷ்ட பைரவர்



அசிதாங்க பைரவர்



ருரு பைரவர்



சண்ட பைரவர்



குரோத பைரவர்



கபால பைரவர்



உன்மத்த பைரவர்



பீஷண பைரவர்



சம்ஹார பைரவர்



அசிதாங்க பைரவர்

கபால பைரவ தியானம்

த்ரிணேத்ரம் வரதம் சாந்தம் குமாரஞ்ச திகம்பரம்/
பாசம் வஜ்ரம் ததா கட்கம் பான பாத்ரஞ்ச தாரிணம்//
இந்த்ராணீ சக்தி ஸகிதம் கஜவாஹன ஸம்ஸ்த்திதம்/
கபால பைரவம் வந்தே பத்மராகப்ரபம் சுபம்//

மூன்று கண்களையுடையவரும் வேண்டப்பட்ட வரங்களை கொடுப்பவரும் சாந்தமான தோற்றமுடையவரும் குமாரனாகவும் திகம்பரனாகவும் இருப்பவரும் பாசக்கயிறு, வஜ்ரம், கத்தி, பானபாத்ரம் இவைகளையுடையவரும், இந்திராணீ என்னும் சக்தியுடன் கூடியவரும் யானை வாகனத்தின் மீது வீற்றிருப்பவரும், பத்மராகம் போன்ற மேனியையுடையவருமான கபால பைரவரை வணங்குகின்றேன்.

பீஷண பைரவ தியானம்

த்ரிணேத்ரம் வரதம் சாந்தம் குமாரஞ்ச திகம்பரம்/
கட்கம் சூலம் கபாலஞ்ச தாரிணம் முஸலம் ததா//
சாமுண்டா சக்திஸகிதம் ப்ரேதவாஹன ஸம்ஸ்த்திதம்/
ரக்தவர்ணம் மகாதேவம் வந்தே பீஷண பைரவம்//

மூன்று கண்களையுடையவரும், வேண்டப்பட்ட வரங்களை கொடுப்பவரும், சாந்தமான தோற்றத்தையுடையவரும், குமாரனாகவும், திகம்பரனாகவும் கத்தி, சூலம், கபாலம், உலக்கை இவைகளை உடையவரும், சாமுண்டி என்னும் சக்தியுடன் கூடியவரும் ப்ரேத வாகனத்தின் மீது அமர்ந்திருப்பவரும், சிவந்த மேனியையுடையவருமான பீஷண பைரவர் என்ற மகாதேவனான பைரவரை வணங்குகின்றேன்.

சண்ட பைரவ தியானம்

த்ரிணேத்ரம் வரதம் சாந்தம் குமாரஞ்ச திகம்பரம்/
தனுர் பாணஞ்ச பிப்ராணம் கட்கம் பாத்ரம் ததைவச//
கௌமாரி சக்திஸகிதம் சிகிவாகன ஸம்ஸ்த்திதம்/
கௌரவர்ண யுதம் தேவம் வந்தே ஸ்ரீசண்டபைரவம்//

மூன்று கண்களையுடையவரும் வேண்டிய வரங்களை கொடுப்பவரும், சாந்தமான தோற்றத்தையுடையரும், வில், அம்பு, கத்தி, பாணபாத்ரம் இவைகளையுடையவரும் கௌமாரீ என்கிற சக்தியையுடையவரும், மயிலைவாகனமாகக் கொண்டவரும் வெண்மையான நிறமுடையவருமான சண்ட பைரவர் என்கிற பைரவரை வணங்குகின்றேன்.

சம்ஹார பைரவ தியானம்

தசபாஹூம் த்ரிணேத்ரம் ச சர்ப்பயக்ஞோபவீதினம்/
தம்ஷ்ட்ராகராளவதனம் அஷ்டைச்வர்ய ப்ரதாயகம்//
திகம்பரம் குமாரஞ்ச சிம்ஹவாஹன ஸம்ஸ்த்திதம்/
சூலம் டமருகம் சங்கம் கதாம் சக்ரஞ்ச தாரிணம்//
கட்கம் பாத்ரம் கட்வாங்கம் பாசமங்குச மேவச/
தைத்ய சீர்ஷக பாலோக்ர ப்ருஹன்மாலாதரம் வடும்//
உக்ரரூபம் மதோன்மத்தம் பாடவானல பைரவம்/
சண்டிகா சக்தி சஹிதம் த்யாயேத் சம்ஹார பைரவம்//

பத்து கைகளையும் மூன்று கண்களையுடையவரும், பாம்பைப் பூணூலாக அணிந்து கொண்டிருப்பவரும், கோரைப் பற்களால் பயங்கரமான முகத்தையுடையவரும், எட்டுவிதமான ஐஸ்வர்யங்களையும் கொடுப்பவரும் திகம்பரனாகவும், குமாரனாகவுமிருப்பவரும் சிம்ஹவாகனத்தில் அமர்ந்திருப்பவரும் சூலம், டமருகம், சங்கம், கதை, சக்கரம், கத்தி, பானபாத்ரம், கட்வாங்கம், பாசம், அங்குசம் இவைகளைக் கைகளில் வைத்திருப்பவரும், அரக்களது மண்டை ஓடுகளால் செய்யப்பட்ட பயங்கரமான பெரிய மாலையை அணிந்திருப்பவரும், வடுகராகவும் பயங்கரமான தோற்றமுடைய வராகவும், மதத்தினால் உன்மத்தராகவும், வடவாக்னி போல் மிகவும் பயங்கரமாக இருப்பவரும் சண்டிகா சக்தியுடன் இருப்பவருமான சம்ஹார பைரவரை தியானம் செய்ய வேண்டும்.

ஊர்த்வ வடுக பைரவ தியானம்

த்ரயக்ஷம் தசபுஜம் ரௌத்ரம் ஊர்த்வ கேசம் ஸுதர்ஷ்ட்ரகம்
ரௌத்ர த்ருஷ்டிஞ்ச க்ருஷ்ணாபம் விலஸச்சசிசேகரம் //
ப்ரபாமண்டல மத்யஸ்த்தம் நாகயக்ஞோபவீதினம் /
கர்ணயோர் பத்ரஸம்யுக்தம் தீஷ்ணதோ மரசம்யுதம் //
சூலம், டமருகம், கட்கம், அங்குசம், சாபயம் ததா /
கபாலம், கேடகம், நாகம், பாசம், தண்டஞ்ச தாரிணம் //
நாநாதிவ்யாம் பரைர்யுக்தம் கிங்கிணீ வரஸம்யுதம் /
பத்ம பீடஸ்த்திதம் வந்தே ஊர்த்வ வடுக பைரவம் //

மூன்று கண்களையும், பத்து கைகளையுமுடையவரும், மிகவும் பயங்கரமான தோற்றமுடையவரும் உயரத் தூக்கிக் கட்டப்பட்ட சிகையையுடையவரும், அழகான கோரைப் பற்களையுடையவரும், கொடூரமான பார்வையையுடையவரும், கருமையான மேனியையுடையவரும் சந்திரனைத் தலையில் வைத்துக் கொண்டிருப்பதால் பிரகாசிப்பவராக இருப்பவரும் ஒளி மண்டலத்தினால் சூழப்பட்டவரும் பாம்பைப் பூணூலாக அணிந்திருப்பவரும், காதுகளில் பத்ரகுண்டலங்களை அணிந்திருப்பவரும் கூர்மையான தோமரம் (இரும்புத்தடி) என்னும் ஆயுதத்தை உடையவரும். சூலம், டமருகம், கத்தி, அங்குசம், கபாலம், கேடகம், பாம்பு, பாசம், தண்டம், அபயமுத்திரை இவைகளையுடையவரும், சிறந்த ஆடைகளால் அலங்கரிக்கப்பட்டவரும், அழகான கிங்கிணீ மாலையை அணிந்திருப்பவரும், பத்ம பீடத்தில் அமர்ந்திருப்பவருமான ஊர்த்வ வடுக பைரவரை வணங்குகின்றேன்.

ஸ்வாயம்புநாத பைரவ தியானம்

ஏகேந சூலமிதரேண சிரஹ் கபாலம்
அந்யேந நாகம் அபரேண வீணாம் /
ஆதாய யச்சரதி பைக்ஷம நேகரூபம்
ஸ்வாயம்பு நாத பகவாந் பரமேச்வரோஸௌ //

ஒரு கையில் சூலத்தையும், ஒரு கையில் மண்டையோட்டையும், ஒரு கையில் பாம்பையும், மற்றொரு கையில் வீணையையும் வைத்திருப்பவரும், பலவிதமான உருவங்களில் தோன்றி பிக்ஷாடனம் செய்பவரும், பரமேச்வரனின் ரூபமான ஸ்வாயம்புநாத பைரவரை வணங்குகின்றேன்.

க்ஷேத்ரபால தியானம்

ஆசாம்பரம் த்ரிணயனம் ஊர்த்வகேசம் சதுர்புஜம்
டக்கா சூல கபாலோக்ரம் வந்தேஹம் க்ஷேத்ர பாலகம் //

திகம்பரராயும் மூன்று கண்களையும் நான்கு கரங்களையுமுடையவராகவும் உயரத்தூக்கிக் கட்டப்பட்ட கேசத்தையுடையவராயும், உடுக்கை, சூலம், கபாலம், இவைகளையுடையவராயும் உக்ரமான உருவத்தையுடையவராயுமிருக்கிற க்ஷேத்ரபாலக சுவாமியை வணங்குகின்றேன்.



ருரு பைரவர்



சண்ட பைரவர்

215

சட்டநாதஸ்வாமி தியானம்

பாலம் நீலஜடாதரம் கஸ்தூரீ திலகோஜ்வலம்/
தண்டா பயகரம் காலம் த்ருதகஞ்சுகமிஷ்டதம்//
ப்ரபுல்லநயனம் சாந்தம் புஷ்போஷ்ணீஷ விராஜிதம்/
ஸ்ரீமத் ப்ரும்மபுரா தீசம் சட்டநாதமு பாஸ்மஹே//

இளம் வயதுடையராயும் (சிறுவனாகவும்) நீலநிறம் கொண்ட (கருமையான) ஜடாபாரத்தையுடையவராயும், நெற்றியில் இடப்பட்ட கஸ்தூரி திலகத்தினால் மிகவும் பிரகாசிப்பவராயும், இயமன் போன்றவரும், அங்கியை (சட்டையை) அணிந்திருப்பவராயும், விரும்பியவற்றைக் கொடுப்பவராயும் மலர்ந்த கண்களையுடையவராயும், சாந்தமான தோற்றத்தையுடையவராயும், மலர்களால் செய்யப்பட்ட தலைப் பாகையை அணிந்திருப்பவராயும், சீர்காழி என்னும் பிரம்மபுரத்திற்கு அதிபராயுமிருக்கிற சட்டநாதசுவாமியை வணங்குவோமாக.

ஆலயவிக்ரக நிர்மாண ஆயாதி சிற்பரகசியம் நூலில்

பைரவமூர்த்தி ரூப தியானம்

அரவா பரணன் நிருவாணி
ஆலுந் தலை மாலையு மணிந்து
நிரமே குருதி நேர் நிறத்தோன்
நின்றே பைரவ ஊர்தியுடன்
கரமேல் டமருக பாசம் ஒளி
காலும் சூல கபாலமுமாய்
சிரமேல் ரக்த நிறவேணி
சீர்குறை மதியுள பைரவமே
அந்தகனென்னு ம் அரக்கன்அகம் அழிக்க வேண்டிப் போர் செய்து
நின்ற சூலத்தால் தாக்கி நிலமே காணா மேல் தூக்க
வந்தித்தேத்த அருள் கூர்ந்து வைத்தான் பூத கணத் தலைமை
உந்தியுளுற்ற பார்க்கவனும் உதித்தான் புவியில் சுக்கிரனென்றே.

(வலக் கரங்களில் - டமருகம், சூலம்; இடக் கரங்களில் - நாகபாசம், கபாலம் - நின்ற திருக்கோலம்)

ஆபதோத்தாரணமூர்த்தி ரூப தியானம்

முப்பத்து முக்கோடி தேவர்களும்
முருகன் கணபதி மாலயனும்
நாற்பத் தெண்ணாயிர முனிவர்
நவக்கோள் சப்தமாதர் ரிஷிகள்
ஆபத்துதவுமெனப் பதினெண்
அரிய கணத்தோடும் சூழ்ந்தேத்த
ஆபத்தோத்தாரண னென்றே
ஆடவனாகித் தண்டுடனும்
கமண்டல மேந்திச் சர்வகாலங்
காரத்தொளிரு மாதனத்தே
விண்டல மண்டலத் தவர்க்குற்ற
வினைகள்களைய ஆங்காங்கே

கண்டொளி கூசிடும் வடிவுடனே
காத்தருள் செய்தீய் ஆத்திகமாய்
சமண்டமாயச் சிவ மயமாம்
சைவம் வளர்க்கும் தேசிகனே
தமருகம் சுவான பாஸமுத்
தலைசூலம் கபாலந் தாங்கி
அமருநல் லாபதோத்தாரண மூர்த்தி
எனப்பேர் கொண்
சமநிகராரே யென்னு சாற்று
நல்லுருவாய் நின்று
எமர்பெறு வினைகள் தீர்க்க எழுந்த
எம் தேவா போற்றி.

(வலக் கரங்களில் - டமருகம், சூலம்; இடக் கரங்களில் - சுவானபாசம், கபாலம், நின்றதிருக்கோலம்).

வடுகமூர்த்தி ரூப தியானம்

ஒளிபடு தமருகம் தண்டுங் கொண்டு ஒளிவீசும்
சடை தலை தோன்ற ஈட்டி கபாலங் கையேந்தி நின்
பலியிடும் நோக்கொடும் பரமனால் வந்த பரமே
ஒலிபடு நாமம் வடுக மூர்த்தியாம் ஓ ஓ கேள்

துந்துபிமைந்தன் முசுண்டன் தவத்தால்
தோள்வலி கொண்டு
அன்றே அரக்கரை ஜெயித்தடிப்படுத்தும்
அமர் தோற்ற
இந்திரன் மலரவன்பால் அபயம் என
எதிர்ப்போரில்
கன்றிய மனத்தவனாக அபயம்
எனக்கறைந் திடவும்
சங்கரன் செவியில் பைங்கமல்தோன்
சாற்றும் ஒலி கேட்டே
தங்கிய வடுகனை அங்ஙனம்
விளித்துதருக்கிய முரணியசீர்
மங்க முசுண்டனைத் தொலைத்தே மலரனை
மகிழ்விப் பாயெனவும்
ஜங்கரன்தாதை தன் மூர்த்தமாய நீ
அப்படியே செய்தாய்.

(வலக் கரங்களில் - டமருகம், ஈட்டி; இடக் கரங்களில் தண்டு, கபாலம், நின்ற திருக்கோலம்)

சேத்திரபாலக மூர்த்தி ரூப தியானம்

அண்டகடாகங்கள் யாவும் ஆனவோர் பிரயைத்தாழப்
பண்டுள மூர்த்தம் நீக்கிப் பத்தினிக் கௌரியோடும்
கொண்டரு பன்னான்கான கலையாடையாகப் பூண்டு
விண்டநற் பிரணவம் தோணி வீறுடன் வீற்றிருக்க



குரோத பைரவர்



கபால பைரவர்

வருணனும் மலர்த்தாள் போற்ற வாலவன் அருள்காத்து
பரு புவனங்கள் யாவும் பதங்களில் நிலைத்து நிற்க
மருவிருள் போக்கி கற்பத்தெழுபுனல் விழியால் மாற்றி
நிறுவனன் க்ஷேத்ரபாலனென் மூர்த்தம் அன்றோ மன்னே.

கரத்துடனே நின்று வலக்கரம் தண்டொன் றேத்த
மாத்திரி சூலம் பற்ற மற்றிடம் துடி கபாலம்
சேர்த்திடப் பிடித்தே சோர்ந்த சூழல் நீர்ப்பிரளயத்தை
மாத்திய மூர்த்தி கண்டாய் க்ஷேத்திரபாலன் ஆவான்.

(வலக்கரங்களில் - தண்டு, சூலம், இடது கரங்களில் - டமருகம், கபாலம்)

கிடைக்கப்பெற்ற சிற்ப நூல்கள், சிவாகம நூல்கள், தியான ரத்னாவளி, புராணங்கள், தந்திரசாரம், மந்திரப் பகுதிகள், இலக்கியங்கள், பத்ததிகள், பிரதிமாலட்சணம் முதலான நூல்களில் காணப்படும் பைரவத் திருவுரு வகைகள் இடம் பெறுகின்றன.

மூர்த்தி தியான நூலில்

1. பைரவர்

- ஜ்வாலாகேசம், சந்திரன், சிவந்தமேனி, உடுக்கை, சூலம், கபாலம், பாசம்.

2. அசிதாங்க பைரவர்

முக்கண், தலைமாலை, வெண்மையான நிறம், கதை, கபாலம், பாநபாத்ரம், கட்கம், ஜபமாலை, கமண்டலம், திகம்பரத் தோற்றம், ப்ரஹ்மாணி சக்தி, அன்னவாகனத்தில் அமர்ந்திருப்பர்.

3. குரு பைரவர்

முக்கண், டங்கம், க்ருஷ்ணாமிருகம் (மான்), பாநபாத்ரம், கத்தி, மாகேசுவரி சக்தியுடன், ரிஷப வாகனத்தில் வீற்றிருப்பர்.

4. குரோத பைரவர்

முக்கண், கதை, சங்கம், பாநபாத்ரம், சாந்தமுகம், குமாரர், திகம்பரத் தோற்றம், இலக்குமி சக்தியுடன் கருட வாகனத்தில் நீல நிறத்துடன் வீற்றிருப்பர்.

5. உன்மத்த பைரவர்

குமாரர், திகம்பரத் தோற்றம், முக்கண், மஞ்சள் நிறம், கட்கம் (கத்தி), கபாலம், உலக்கை, கேடயம், வராகி சக்தியுடன் அஸ்வ வாகனத்தில் (குதிரை) வீற்றிருப்பர்.

6. கபால பைரவர்

பாசக்கயிறு, வஜ்ரம், கத்தி, பாநபாத்திரம், இந்திராணி சக்தியுடன் யானை வாகனத்தில் (கஜம்) அமர்ந்திருப்பர்.

7. பீஷண பைரவர்

கத்தி, சூலம், கபாலம், உலக்கை, சாமுண்டி கத்தியுடன் பிரேத வாகனத்தில் சிவந்த நிறத்தோடு கூடியவராக அமர்ந்திருப்பர்.

8. சண்ட பைரவர்

முக்கண், சாந்தமுகம், வில், அம்பு, கத்தி, பாநபாத்திரம், வெண்ணிறம் கொண்டவர். கௌமாரி சக்தியுடன் மயில் வாகனத்தில் வீற்றிருப்பர்.

9. சம்ஹார பைரவர்

10 கரங்கள், முக்கண், சர்ப்பப்பூணூல், கோரைப்பற்கள், குமாரர், திகம்பரத் தோற்றம், சண்டிகா சக்தியுடன், சிம்ஹ வாஹனத்தில் வீற்றிருப்பர். இவரது கரங்களில் சூலம், டமருகம், சங்கம், கதை, சக்கரம், கத்தி, பாநபாத்திரம், கட்வாங்கம், பாசம், அங்குசம் காணப்படும். தேகத்தில் தலை மாலைகளை அணிந்து காணப்படுவர்.

10. ஊர்த்துவ வடுக பைரவர்

முக்கண், பத்துக்கரங்கள், தலையில் சந்திரன், காதுகளில் பத்ர குண்டலங்கள், கரங்களில் தோமரம் (இரும்புத்தடி), சூலம், டமருகம், கத்தி, அங்குசம், கபாலம், கேடயம், பாம்பு, பாசம், அபயம் காணப்படும். இவர் கிங்கிணி மாலையுடன் பத்ம பீடத்தில் அமர்ந்திருப்பர்.

11. ஸ்வாயம்பு நாத பைரவர்

சூலம், மண்டை ஓடு, பாம்பு, வீணை இவற்றோடு பிச்சை கேட்பவராகக் காணப்படுவர்.

12. க்ஷேத்திர பாலகர்

ஊர்த்துவ கேசம், திரிநேத்ரம், உடுக்கை, சூலம், கபாலம், அபயம் இவற்றோடு நின்று விளங்குவர்.

13. சட்டைநாதர்

இளம் பருவத்தோற்றம், நீலநிறம், சட்டை அணிந்த கோலம், இருகரம். இடக்கரம் கதைகொண்டும், வலக்கரம் சின்முத்திரை கொண்டும் நின்றவாறு காட்சியளிப்பர்.

ஸ்ரீ பரார்த்த பூஜாவிதி நூலில்

14. வடுகர்

சர்ப்பம், டமருகம், அங்குசம், மணி (கண்டை), கட்கம், அமிரு கபாலம், வரதம், அபயம், மரகத நிறம், சிரசில் சந்திரன், ஜடாமண்டலம், முக்கண், தோலாடை, ஆகியவற்றோடு காட்சி தருவர்.

15. வடுகர் (வேறுவகை)

குண்டலங்கள், கோரப்பற்கள், சர்ப்பப்பூணூல், கருமை நிறம், தண்டம், கபாலம், போர்புரியும் திருக்கோலம்.

16. விரிஞ்சி வடுகர்

(திரிகோணத்தில் கிழக்குக் கோணம்) வரதம், அபயம், அட்சமாலை, கமண்டலம், இவரோடு வாக்தேவி விளங்குவாள்.

17. முகுந்த வடுகர்

(திரிகோணத்தில் வடக்குக் கோணம்) சங்கு, சக்கரம், வில், பாணம் தரித்து ஸ்ரீதேவியுடன் கூடி இளமைத் தோற்றத்தோடு விளங்குவர்.

18. ருத்ர வடுகர்

(திரிகோணத்தில் தெற்குக் கோணம்), சூலம், டமருகம், வரதம், அபயம் இவற்றோடு கௌரி தேவியுடன் கூடியிருப்பர்.

19. க்ஷேத்திர பாலகர்

(திரிகோணத்தின் நடுவில்) செம்மை நிறம், மூன்று கண்கள், இரு கரங்கள், டமருகம், சூலம், நிர்வாணத்தோற்றம், கிங்கிணி மாலை, இளமைத் தோற்றம்.

20. க்ஷேத்திர பாலகர் (வேறு வகை)

நிர்வாணக் கோலம், முக்கண், சர்ப்பாபரணம், இரத்தின குண்டலங்கள், சிரசில் மாலை, கட்கம் (கத்தி), சூலம், கபாலம், டமருகம், கோரைப்பற்கள், சுவாந வாகனத்தில் (நாய்வாகனத்தில்) அமர்ந்த நிலையில் க்ஷேத்திர பாலகர் உருவம் உண்டு.

பராக்ய நூலில் – அஷ்ட பைரவர்

21. மர்த்தன பைரவர், 22. பஞ்சவக்த்ர பைரவர், 23. ரவிப்க்ஷக பைரவர், 24. ஏகநந்தன பைரவர், 25. சண்ட பைரவர், 26. நபோ நிர்மல பைரவர், 27. டமரு பாஸ்கர பைரவர், 28. பட்கார பைரவர்.

பராக்கிய நூலில் அஷ்ட பைரவர் சக்திகள்

29. அசிதாங்க பைரவர் - பிராம்ஹி
30. ருரு பைரவர் - மாகேசுவரி
31. சண்ட பைரவர் - கௌமாரி
32. குரோத பைரவர் - வைஷ்ணவி
33. உன்மத்த பைரவர் - வாராஹீ
34. கபால பைரவர் - மஹேந்திரி
35. பீஷண பைரவர் - சாமுண்டா
36. சம்ஹார பைரவர் - சண்டிகா

வாருணபத்ததி நூலில்

37. அசிதாங்க பைரவர்

கத்தி, பாநபாத்திரம், ருத்திராட்சம், கமண்டலம், வெண்மைநிறம், ஹம்ச வாகனம், பிராமி சக்தி, கிழக்கு திசை, திகம்பரத் தோற்றம், சாந்தகுணம்.

38. ருரு பைரவர்

டங்கம், கத்தி, பாநபாத்திரம், சக்தி, ஸ்படிக நிறம், விருஷப வாகனம், பிராமி சக்தி, தென்கிழக்கு, புன்சிரிப்புடன் திகம்பரத் தோற்றம்.

39. சண்ட பைரவர்

வில், பாணம், கத்தி, பாநபாத்திரம், திகம்பரத் தோற்றம், பொன்னிறம், மயூர வாகனம், கௌமாரி சக்தி, தெற்கு திசை, சாந்தமுகம்.

40. குரோதன பைரவர்

சங்கம், சக்கரம், கதை, பாநபாத்திரம், திகம்பரத் தோற்றம், கருப்புநிறம், கருட வாகனம், வைஷ்ணவி சக்தி, தென்மேற்குத் திசை, கிருபாமூர்த்தி.

41. உன்மத்த பைரவர்

சத்தி, உலக்கை, கேடயம், கபாலம், திகம்பரத் தோற்றம், பொன்னிறம், குதிரை வாகனம், வாராஹி சக்தி, மேற்குத்திசை, கிருபாஹரர்.



உன்மத்த பைரவர்



பீஷண பைரவர்

42. கபால பைரவர்

பரசு, வஜ்ரம், கத்தி, பாநபாத்திரம், பத்மராக காந்தி நிறம், திகம்பரத் தோற்றம், யானை வாகனம், இந்திராணி சக்தி, வடமேற்குத் திசை, கிருபாகரர்.

43. பீஷண பைரவர்

சூலம், இரும்பு உலக்கை, கபாலம், கத்தி, சிவப்பு நிறம், திகம்பரத் தோற்றம், சிங்க வாகனம், சாமுண்டி சக்தி, வடக்குத்திசை, கிருபாகரர்.

44. சம்ஹார பைரவர்

முக்கண், பத்துக்கரங்கள், சூலம், டமருகம், சங்கு, சக்கரம், கதை, கத்தி, கபாலம், கட்வாங்கம், பாசம், அங்குசம், சர்ப்ப பூணூல், திகம்பரத் தோற்றம், குமாரர் வடிவம், தெத்துப் பற்கள், பயங்கர முகம், அஷ்ட ஐஸ்வர்யத்தைக் கொடுப்பவர்.

விஷ்ணு தர்மோத்தரம் நூலில்

45. பைரவர் (வேறுவகை)

பொன்னிறம், தொந்தி வயிறு, கருந்தாடி முகம், கபாலமாலை அணிகலன்கள், வானத்திற்கும் கடலுக்குமாகப் பெரிய உருவினை உடையவர். யானைத்தோலை உடுத்தியவர். பல கரங்களைக் கொண்டவர், கூர்மையான நகங்களைக் கொண்டவர், தேவியைப் (சக்தி) பயமுறுத்துபவர்.

46. ரூபமண்டனத்தில் வடுக பைரவர்

எட்டுக் கரங்கள், கட்வாங்கம், ஊண் (உடல்), பாசம், சூலம், உடுக்கை, கபாலம், வரதம், பாம்பு, ஆன்ம நிறம்.

வடுக பைரவர் கல்பத்தில்

47. வடுக பைரவர் (வேறுவகை)

முக்கண், செந்நிறம், சூலம், கபாலம், உடுக்கை, பாசம், நாய்வாகனம்.

48. மல்லாரி சிவன் தியானத்தில் பைரவர் (மல்லாரி சிவன்)

முத்துமாலை, செண்பக புஷ்ப மாலைகள் அணிந்த கோலம், சர்ப்பாபரணம், பீதாம்பரம், கத்தியை உடையவர், குதிரை வாகனத்தைக் கொண்டவர், ஏழு (7) வேட்டை நாய்கள் சூழ சிவந்த நிறத்துடன் விளங்குபவர்.

49. ஸ்ரீதத்வநிதி சிற்ப நூலில்

சுவர்ணகர்ஷண பைரவர்

நான்கு கரங்கள், மஞ்சள் நிறம், வாள், பெருஞ்சூலம், தோமரம், சாமரம், புன்சிரிப்பு, முக்கண், தேவர்களால் சூழப்பட்டவர்.

50. ஸ்ரீதத்வநிதியில் – மூன்றாவது சிவதத்துவ நிதியில்

முதலாம் எண்மர்

(முதல் எட்டு பைரவர்) - பொன்னிறம், முத்தலைச் சூலம், உடுக்கை பாசம், சூர்க்கத்தி.

51. இரண்டாம் எண்மர்

அக்கமாலை, அங்குசம், புத்தகம், வீணை, மணிகளால் அமைந்த ஆபரணங்கள், வெளுப்பு நிறம்.

52. மூன்றாம் எண்மர்

அக்னி ஜ்வாலை கிரீடம், சக்தி, கதை, ஈட்டி, குந்தாலி, நீலவர்ணம்.

53. நான்காம் எண்மர்

வாள், கேடயம், பட்டைக்கத்தி, பரசு, புகைநிறம்.

54. ஐந்தாம் எண்மர்

ஈட்டி, கேடயம், பரிகம் (பரிகாயுதம்), பிண்டிபாலம், வெளுப்பு நிறம்.

55. ஆறாம் எண்மர்

மஞ்சள் நிறம், ஈட்டி, கேடயம், பரிகாயுதம், பிண்டிபாலம்.

56. ஏழாம் எண்மர்

சிவப்பு நிறம், ஈட்டி, கேடயம், பரிகாயுதம், பிண்டி பாலம்.

57. எட்டாம் எண்மர்

மின்னல் நிறம், ஈட்டி, கேடயம், பரிகாயுதம், பிண்டி பாலம்.

சில்பரத்தினம் சிற்ப நூலில்

58. க்ஷேத்திர பாலர் (வேறு வகை)

நின்ற நிலை, இருகரம், வலக்கரத்தில் சூலமும், இடக்கரத்தில் கபாலத்தையும் கொண்டவர்.

59. க்ஷேத்திர பாலகர் (வேறு வகை)

நின்ற நிலை, நான்கு கரங்கள், அபயம், வரதம், சூலம், கபாலம்.

60. க்ஷேத்திர பாலகர் (வேறு வகை)

நின்ற நிலை, ஆறு கரங்கள், சூலம், வாள் (நீளமான கத்தி) மணி, நாகபாசம், கேடயம், கபாலம்.

61. தாமச மூர்த்தியான பைரவர்

நின்ற நிலை, ஆறு கரங்கள், வில், வாள், சூலம், அம்பு, கேடயம், கபாலம்.

62. க்ஷேத்திர பாலகர் (வேறு வகை)

நின்ற நிலை, சர்ப்பாபரணம், கதை, கபாலம், இருகரங்கள் மட்டும்.

சாரஸ்வதிய சித்ரகர்ம சிற்பநூல் சாஸ்திரத்தில்

63. சாத்விக ரூப க்ஷேத்திரபாலகர் ''முதல் வகையில்''

இரு கரங்கள், சூலம், கபாலம்.

64. சாத்விக ரூப க்ஷேத்திரபாலகர் - இரண்டாம் வகையில்

இரு கரங்கள், வலக்கரத்தில் உடுக்கையும், இடக்கரத்தில் பாசத்தையும் கொண்டவர்.

65. சாத்விக ரூப க்ஷேத்திரபாலகர் - மூன்றாம் வகையில்

இரு கரங்கள், வலக் கரத்தில் தண்டத்தையும் இடக்கரத்தில் கபாலத்தையும் கொண்டு விளங்குபவர்.

66. சாத்வீக ரூப க்ஷேத்திரபாலகர்

நான்கு கரங்கள் கொண்டவர், நின்ற நிலை, வலக்கரங்களில் மழுவும், சூலமும், இடக்கரங்களில் கட்வாங்கமும், கபாலமும் விளங்கும்.

67. சாத்வீக ரூப க்ஷேத்திரபாலகர் (வேறுவகை)

நான்கு கரம், நின்ற நிலை, வலக்கரங்களில் மழு, அபயம், இடக்கரங்களில் கட்வாங்கம், வரதம்.

68. சாத்வீகத்தில்

நான்கு கரம், நின்ற நிலை, வலக்கரங்களில் கத்தி, அபயம், இடக்கரங்களில் கேடயம், வரதம்.

69. ஆறு கரங்கள் கொண்ட பைரவர் - ராஜசமூர்த்தி

நின்ற நிலை, வலக்கரங்களில் திரி சூலம், கத்தி, நாகம், இடக்கரங்களில் கபாலம், கேடயம், மணி (கண்டா).

70. எட்டு கரங்கள் கொண்ட பைரவர் தாமசமூர்த்தி

நின்ற நிலை, வலக்கரங்களில் திரிசூலம், பாணம் (அம்பு), நாகம், பாசம், இடக்கரங்களில் கபாலம், கேடயம், கயிறு (தந்து), மணி.

71. இரு சக்திகளுடன் பைரவர் (வேறு வகை)

நின்ற நிலையில் விளங்குபவர். மூன்று கண்கள், தமது இரு கரங்களில் சூலத்தையும் கபாலத்தையும் கொண்டவர். தமது இருமருங்கிலும் இரு சக்திகளைக் கொண்டவர். வலப்பக்கத்தல் உள்ள ''தாத்திரிகை'' எனும் சக்தியின் இடக் கரத்தில் தாமரையும், வலக்கரம் தொங்கியபடியும் இருக்கும். இடப்பக்கத்தில் உள்ள ''கௌரிகை'' எனும் சக்தியின் வலக்கரத்தில் நீலோத்பலமும், இடக்கரம் தொங்கியபடியும் இருக்கும். பைரவரின் பின்னால் நாய் நிற்றல் வேண்டும். மேலும் இவரின் இரு பக்கங்களிலும் இரண்டு யோகினிகள் தத்தமது சூலமும் கபாலமும் கொண்டவர்களாக விளங்குவர்.

பைரவ மூர்த்தியின் தலைக்குமேல் (ஆகாயத்தில்) சித்தர்கள், தேவர்கள், சநகாதிகள், நாரதர், முனிவர்கள், தேவர்கள், கின்னரர்கள், வாத்தியங்களை வாசிக்கும் பைரவ கணங்கள், இன்னும் ஏனைய லட்சணங்களுடன் விளங்குவர். இதில் இவரை நின்றவாறும் அமர்ந்தவாறும் அமைப்பர்.

72. தசபுஜ பைரவர்

(நாகை - சட்டநாதர்) நின்ற திருமேனி, பத்துக் கரங்கள், கழுமுள், தடி, வாள், அங்குசம், கட்கம், கேடகம், அமிர்த கபாலம், வரதம், அபயம், நாய்வாகனம்.

73. மகா பைரவர்

எட்டுக்கரங்கள், முக்கண், நின்றநிலை, சர்ப்பம், டமருகம், அங்குசம், கட்கம், கேடகம், அமிர்த கபாலம், வரதம், அபயம், நாய்வாகனம்.

74. கால பைரவர்

குண்டலங்களை அணிந்த தோற்றம், கருமை நிறம், சர்ப்ப பூணூல், இடக்கரத்தில் கபாலம், வலக்கரத்தில் தண்டம் (தடி), இடையூறுகளை அழித்து இன்பம் தருபவர், ஜ்வாலாகேசம் கொண்டு விளங்குபவர்.

75. உக்கிர பைரவர்

உக்கிர முகம் கொண்டவர், ஜ்வாலாகேசம், பிரம்ம சிரச்சேதம் செய்தவரே உக்கிர பைரவர் எனக் கூறுவர்.

76. கால பைரவர் (வேறு வகை)

வாள், உடுக்கை, கமண்டலம், திரிசூலம், முக்கண், சமபாதஸ்தானம், மணிமாலை, கோரைப்பற்கள், மண்டையோட்டு மாலை, விரிந்த சடை, நின்ற நிலையில் நாய் வாகனம், இவரது பயங்கர தோற்றத்தைக் கண்டு தேவி வலப்பக்கத்தில் அஞ்சி நடுங்கும் காட்சி.



சம்ஹார பைரவர்



கட்வாங்க பைரவர்

77. அம்சுமத் பேதாகமத்தில் சமபாத ஸ்தானக சாத்வீக க்ஷேத்திர பாலகர்

இரண்டு அல்லது நான்கு கரங்கள், சூலம், கபாலம், இவற்றோடு அபயம், வரதம் உண்டு. அல்லது நீண்ட கத்தியும் மணியும் (கண்டா) அமைப்பர். வெண்மை நிறம் கொண்டவர்.

78. சமபாதஸ்தானக ராஜஸ க்ஷேத்திர பாகர்

ஆறு கரங்கள், செம்மேனி உடையவர், உக்ர பார்வை, வலக்கரங்களில் சூலம், கத்தி, மணி (கண்டா), இடக்கரங்களில் கேடகம், கபாலம் நாகம் அல்லது பாசம்.

79. சமபாத ஸ்தானக தாமச க்ஷேத்திரபாலகர்

எட்டுக்கரங்கள், கருமை நிறம் கொண்டவர், ஜடா மண்டலம், நிர்வாணம், சர்ப்பாபரணம், நாய் வாகனம், செஞ்சடை, எட்டுக் கரங்களிலும் முறையே சூலம், கத்தி, மணி, வில், கேடயம், கபாலம், நாகபாசம், பாணம் (அம்பு).

தந்திர சாரம் நூலில்

80. யானைத்தோல் போர்த்திய பைரவர்

சிவனின் ரத்தத்தில் தோன்றியவர், சிவந்த உடல், மூன்று கண்கள், பட்டையான சடைகள், கரங்களில் திரிசூலம், வாள், உடுக்கை, கபாலம் கொண்டு திகழ்பவர். பூதங்களும் பேய்களும் சூழ நாய் மீது ஆரோகணித்து வருபவர். அச்சம் தரும் முகம், கபால மாலை, சர்ப்பாபரணம் கொண்டு திகழ, சக்தியானவள் அஞ்சும் நிலையில் விளங்குவான். கரிய நிறம் கொண்ட உடலில் யானைத்தோல் போர்த்தப்பட்டிருப்பார்.

சிற்ப நூலில்

81. கோவிந்த பைரவர்

பைரவ மூர்த்திகளின் பேதங்களான பஞ்ச வக்தர பைரவர், கோவிந்த பைரவர், சம்ஹார பைரவர் என மூவரைக் கூறுகிறது. இரண்டாவதாக உள்ள கோவிந்த பைரவரின் நான்கு கரங்களில் முறையே சங்கு, சக்கரம், கமண்டலம், தண்டம், வெற்று உடல், முக்கண்,வைஷ்ணவ சக்தி, கருடவாகனம்.

82. சம்ஹார பைரவர்

சம்ஹார பைரவ மூர்த்திக்கு ஐந்து முகங்களும், பத்து கரங்களும் உண்டு. சங்கு, சக்கரம், வாள், உடுக்கை, கமண்டலம், திரிசூலம், கபாலம், நாகபாசம், கேடயம், தண்டம் இவைகள் கரங்களில் விளங்கும். சிற்பிகள் தன் யுக்திக்குத் தக்கவாறு ஆயுதங்களான சங்கு சக்கரத்தைப் பிரதானமாக வைத்து ஏனையவற்றை மாற்றத்துடன் அமைப்பர்.

83. பஞ்சமுக பைரவர்

மகாகால பைரவர் என்று போற்றப்படும் இவர் சர்ப்பம் ஒன்றைத் தமது கரத்தில் கொண்டும், காளி தேவியை அணைத்தபடியும், ஒருவித மதுவைக் கமண்டலத்தில் கொண்டும், அண்டத்தையே விழுங்கும் பயங்கரத் தோற்றத்துடனும் ஐந்து முகங்களுடனும் காட்சியளிப்பார். ஏனைய எட்டுக் கரங்களில் சம்ஹாரத்திற்கு உரிய கருவிகளைக் கொண்டு விளங்குவார்.

84. க்ஷேத்திரபாலபுரம் க்ஷேத்திரபாலகர்

தஞ்சை மாவட்டம் க்ஷேத்திரபாலபுரத்தில் க்ஷேத்திரபாலகர் திருமேனி நான்கு கரங்களை உடையதும், நாய் வாகனம் இல்லாததுமாகக் காணப்படுகிறது.

85. தஞ்சைக் கலைக்கூட க்ஷேத்திரபாலகர்

நின்ற நிலை, குள்ளமான உருவம், சட்டை அணிந்திருத்தல், வலக்கரம் சின்முத்திரையும், இடக்கரம் கதையும் கொண்டு ஜடாமண்டலத்துடன் காணப்படுகிற கருங்கல் சிற்பம்.



வட்டுக பைரவர்



அஷ்டபுஜ பைரவர் (தஞ்சாவூர்)

86.திருக்குற்றலாம் சித்திர சபையில் உள்ள குரோத பைரவர் (ஓவியம்)

குரோத பைரவர் ஓவிய உருவத்தின் பின் கரங்களில் சங்கு, சக்கரமும், இடக்கரத்தில் கதை, முன்கரம் நெஞ்சில் பதியவும், ஜ்வாலா கிரீடம் தரித்தும் நிர்வாணத் திருக்கோலமாக அமைந்துள்ளது.

87. அசிதாங்க பைரவர் (ஓவியம்)

நின்ற நிலை, ஜ்வாலா கிரீடம், பின் கரங்களில் கமண்டலம், டமருகம், முன் கரங்களில் கபாலம், சூலம் விளங்க சமபங்க ஸ்தானத்தில் நிர்வாண கோலம்.

88. ருரு பைரவர் (ஓவியம்)

மான், மழு, கபாலம், சூலம், சர்ப்பாபரணம், ஜ்வாலாகேசம், நிர்வாண நிலை.

89. சண்ட பைரவர் (ஓவியம்)

கத்தி, டமருகபாசம், சூலம், கபாலம், நிர்வாண நிலை, நின்ற நிலை.

90. உன்மத்த பைரவர் (ஓவியம்)

தண்டம், பரசு, கபாலம், சூலம் விளங்க ஜ்வாலா கேசத்துடன் நிர்வாணக் கோலக் காட்சி.

91.கபால பைரவர் (ஓவியம்)

பின்கரங்களில் சக்தி, வாள், முன் கரங்களில் சூலம், கபாலம் ஏந்தியும், ஜ்வாலா கிரீடம் கொண்டும், நிர்வாணக் கோலத்தில் விளங்குதல்.

92. பீஷண பைரவர் (ஓவியம்)

பின் கரங்களில் கத்தி, கேடயம், முன்கரங்களில் சூலம், கபாலம் கொண்டு முன்போல விளங்குதல்.

93. சம்ஹார பைரவர் (ஓவியம்)

அங்குசம், தீ அகல், சூலம், கபாலம், நிர்வாண நிலை, ஜ்வாலா கேசம் நிர்வாணக் காட்சி. (இந்த எட்டு பைரவர்களுக்கும் வாகனம் மற்றும் சக்திகள் இடம்பெறவில்லை)

94. மகா பைரவர்

நாகத்துடன் கூடிய டமருகம், நாகபாசம், கபாலம், சூலம், நாய்வாகனம், ஜ்வாலா கிரீடம், நிர்வாணம், பத்ர பீடத்தில் நிற்றல்.

95. தந்திரசாரத்தில் கால பைரவர்

வாள், உடுக்கை, திரிசூலம் இவைகளைக் கரங்களில் ஏந்தி, இடுப்பில் சிறு சிறு மணிகள் கோத்த பட்டையும் அணிந்து கால பைரவர் விளங்குவார்.

96. காஸ்யப சிற்பத்தில்

காஸ்யப சிற்ப நூலில் கூறப்பட்டுள்ள காலாக்கினி ருத்ரன் போல பைரவர் ரூபம் South Indian Images Book - Page No. 154, 155, 156ல் உள்ள படங்கள் காணப்படுகின்றன. ருத்திரனின் மற்றொரு உருவம் பைரவர் போலும். வாள், கேடயம், வில், அம்பு, சிவந்த ஆடை அணிந்திருப்பார். ஆனால் படம் 99ல் நிர்வாணமாக வாள், உடுக்கை, சூலம், கபாலம் கொண்டு விளங்குகின்றன.

97. மகாகால பைரவர் (வேறுவகை)

ரத்தின சிம்மாசனம், சுகாசனம், நான்கு கரங்கள், பின்கரங்களில் கத்தி, டமருகம், முன் வலக்கரத்தில் கபாலம், முன் இடக்கரத்தில் திரிசூலம், இடுப்பில் சிவப்பு வஸ்திரம், கபால மாலையும், உருத்திராக்க மாலையும் அணிந்து முக்கண்ணுடன், கரங்களிலும் கால்களிலும் ஆபரணங்கள் அணியப்பெற்று விளங்குவர்.

98. சுவர்ணாகர்ஷண பைரவர்

நீண்ட பத்ர பீடத்தில் சக்தியோடு அமர்ந்து இருத்தல், பைரவப் பெருமானின் பின்கரங்களில் தாமரை, சங்கு, முன்கரங்களில் அபய வரத முத்திரைகள் காணப்படும். சிவனாரின் வலத்தொடையில் பூர்ண கும்பம். அம்பிகையின் இடக் கரத்தில் அமிர்த கலசம் (சுவர்ண பொற்குடம்) காணப்படும். அம்பிகை வலக்கையால் சிவனாரது இடுப்பைத் தழுவியிருத்தல், ஜடாமகுடத்தில் கங்கையும் பிறையும் காணப்படும்.

99. பஞ்சமுக பைரவர்

தாத்தையங்கார்பேட்டை ஸ்ரீகாசி விசுவநாதர் ஆலயத்தில் ஐந்து முகங்களைக் கொண்ட பைரவர் கற்சிற்பம் உள்ளது. பைரவரின் பத்து கரங்களில் முறையே சூலம், சக்கரம், மழு, கதை, கத்தி, கபாலம், டமருகம், சங்கு, பாசம், கேடயம் உள்ளன.

100. தசபுஜ பைரவர்

சேந்தமங்கலம் ஸ்ரீ ஆபத்சகாயேஸ்வரர் கோயிலில் பத்து கரங்களையுடைய பைரவர் சிற்பம் உள்ளது. உடுக்கை, பாம்பு, அங்குசம், அம்பு, கத்தி, கேடயம், சூலம், கபாலம், அபயம், வரதம் முதலான ஆயுதங்களையும் முத்திரைகளையும் கொண்டுள்ளது. இதுபோன்ற பத்து கரங்களையுடைய பைரவ வரைகோட்டுப் படத்தில் காண்க. முத்திரைகள் மாறியிருக்கும்.

உத்தர காரணாகமத்தில் (70,71ஆவது படலங்களில்)

101. க்ஷேத்திரபாலர்

தமது நான்கு கரங்களில் சூலம், பாசம், துடி, கபாலம் விளங்கும் என ஷை ஆகமத்தில் 70-ஆவது படலத்தில் காணப்படுகிறது.

102. ஆபதுத்தாரணர்

மேலும் 71-வது படலத்தில் ஆபதுத்தாரணர் என பெயர் கொண்டு தமது இரு கரங்களில் அபயம், தண்டம் அமைதல் வேண்டும் என்றுள்ளது.

பூர்ண காரணாகமத்தில் (13ஆவது படலம்)

103. ஷை ஆகமத்தின்படி இரு கரங்கள் கொண்டதாக உள்ள க்ஷேத்ரபாலகர் சூலத்தையும் கபாலத்தையும் கொண்டு விளங்குவார். இது முதல் வகையாகும். நான்கு கரங்களாக இருந்தால் அக்கரங்களில் சூலம், கபாலம், மணி, பாசம் விளங்குதல் வேண்டும். எட்டுக் கரங்களாக இருந்தால் சூலம், மணி, அழல், உளி, கபாலம், பாசம், பெருவாள், அபயம் இருத்தல் வேண்டும். இது மூன்றாம் வகையாகும்.

பூர்வ காரணாகமம் (103ஆவது படலம்)

104. நின்ற நிலையில் க்ஷேத்ரபாலர் இரு கரங்களாக அமைக்கும்போது சூலம், கபாலம் இருத்தல் வேண்டும்.

105. நான்கு கரங்களாக அமைக்கும்போது துடி, சூலம், பாசம், கபாலம் இருத்தல் வேண்டும்.

106. ஆறு கரங்களாக அமைக்கும்போது வாள், நாகம், சூலம், கேடயம், தோமரம், கபாலம் இருத்தல் வேண்டும்.

107. எட்டுக் கரங்களாக அமைக்கும்போது வில், வாள், உடுக்கை, சூலம், அம்பு, பாசம், மணி, கபாலம் ஆகியன இருத்தல் வேண்டும்.

108. சாத்வீக மூர்த்தியாக அமையும் க்ஷேத்ரபாலர் தமது இரு கரங்களில் சூலதண்டம், கபாலம் கொண்டு திகழ்வர்.

109. ராஜச மூர்த்தியாக விளங்கும் க்ஷேத்ரபாலரின் நான்கு கரங்களில் சூலம், அபயம், கபாலம், வரதம் விளங்குதல் வேண்டும்.



தாத்திரிகை - பைரவர் - கௌரிகை



ஸ்வர்ணாகர்ஷண பைரவர்

110. தாமச மூர்த்தியாக விளங்கும் க்ஷேத்ரபாலரின் பத்து கரங்களில் முறையே உடுக்கை, அங்குசம், வாள், சூலம், அபயம், நாகம், பாசம், மணி, கபாலம், வரதம் ஆகியன அமைதல் வேண்டும்.

பூர்வகாரணாகமத்தில் (64, 65 படலங்களில்)

111. க்ஷேத்ரபாலரின் நான்கு கரங்களில் சூலம், துடி, கபாலம், பாசம் இருத்தல் வேண்டும்.

112. இதில் வேறு வகையான துடி, சூலம், சர்ப்பம், தண்டம், விளங்குதல் வேண்டும்.

பூர்வகாரணாகமத்தில் தக்ஷிண பைரவர் (படலம் 67ல்)

113. தக்ஷிண பைரவரின் இரு கரங்களில் வாளும் கேடயமும் இருத்தல் வேண்டும்.

ஷி ஆகமத்தில் மகா பைரவர் (படலம் 67ல்)

114. மகா பைரவரின் இரு கரங்களில் கேடயமும் தண்டமும் இருத்தல் வேண்டும்.

ரௌரவாகமத்தில் அஷ்டபுஜ க்ஷேத்ரபாலர் (படலம் 51ல்)

115. ஷி ஆகமத்தில் கூறப்படும் அஷ்டபுஜ க்ஷேத்ரபாலரின் கரங்களில் முறையே பெருவாள், நாகம், பாசம், சூலம், கபாலம், துடி, வாள், அழல் ஆகியன விளங்க வேண்டும்.

சூக்ஷ்ம ஆகமத்தில் க்ஷேத்ரபாலர் (படலம் 91ல்)

116. க்ஷேத்ரபாலரின் எட்டுக் கரங்களில் சூலம், உடுக்கை, வாள், வில், கபாலம், பாசம், கேடயம், அம்பு விளங்கும்.

மகுடாகமத்தில் (படலம் 7ல்)

117. இந்த ஆகமத்தில் விளக்கப்படும் க்ஷேத்ரபாலரின் நான்கு கரங்களில் சூலம், துடி, கபாலம், தண்டம் விளங்குதல் வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

118. மேலும் இரு கரங்கள் மற்றும் எட்டு கரங்களில் அமைத்தல் வேண்டும் என்கிறது. அதற்குரிய முத்திரைகளும் ஆயுதங்களும் குறிப்பிடப்படவில்லை.

சுப்ரபேதாகமத்தில் (படலம் 50ல்)

119. நான்கு கரங்களையுடைய க்ஷேத்ர பாலர் திருவுருவத்தை அமைக்கும்போது அக்கரங்களில் சூலம், வாள், கபாலம், கேடயம் இருத்தல் வேண்டும் என்கிறது.

120. ஆறு கரங்களையுடைய திருமேனியாக இருந்தால் சூலம், வாள், நாகம், கபாலம், கேடயம், தோமரம் ஆகியன இருத்தல் வேண்டும்.

121. எட்டு கரங்களையுடைய திருமேனியாக இருந்தால் சூலம், வாள், நாகம், திரிசூலம், டமருகம், கபாலம், கேடயம், தோமரம், கட்வாங்கம் ஆகியன இருத்தல் வேண்டும்.

அஜிதாகமம் - கிரியாபாதம் 30ஆம் படலத்தில் க்ஷேத்ரேசர்

122. இந்த ஆகமத்தில் க்ஷேத்ரேசர் (க்ஷேத்ரபாலர்) தமது நான்கு கரங்களில் சூலம், துடி, கபாலம், பாசம் கொண்டு விளங்குவார்.

123. மேலும் எட்டு கரங்களைக் கொண்டு திகழும் க்ஷேத்ரேசர் சூலம் வாள், நாகம், திரிசூலத்தில் டமருகம், கபாலம், கேடயம், தோமரம், கட்வாங்கம் ஆகியவற்றை ஏந்தித் திகழ்வார்.

ஸ்ரீமகாலட்சுமி மந்திர கோசத்தில் (தந்திர நூல்) சுவர்ணதா பைரவர்

124. இத் தந்திர நூலில் சுவர்ணதா பைரவரின் நான்கு கரங்களில் பொற்குடம், அபயம், தாமரை, வரதம் ஆகியன விளங்கும்.

ஷி தந்திர நூலில் சுவர்ணாகர்ஷண பைரவர்

125. ஷி பைரவரின் ஆறு கரங்களில் முறையே தாமரை, சங்கம், அபயம், அமுதகும்பம், அணைத்த கரம், வரம் ஆகியனவாக அமையும்.

ஷி நூலில் - சுவர்ணாகர்ஷண பைரவர் - வேறுவகை

126. ஷி தந்திர நூலில் பைரவரின் வேறு வகையினைக் கூறும் போது அவரது நான்கு கரங்களில் துடி, தீயழல், சூலம், வரம் விளங்குதல் வேண்டும்.

ஷி நூலில் - சுவர்ணாகர்ஷண பைரவர் - வேறுவகை

127. நான்கு கரங்களில் பாசம், அபயம், அங்குசம், வரம் ஆகியன அமைந்த பைரவரை அமைக்கலாம்.

128. ஷி நூலில் - சுவர்ணாகர்ஷணர் (மந்திரமாலை) (வேறுவகை)

வேறு வகையில் நான்கு கரங்களை உடைய சுவர்ணாகர்ஷணர் பெருவாள், அபயம், சூர்க்கத்தி, கபாலம் ஆகியன கொண்டு திகழ்வர்.

129. ஆகாச பைரவகல்பம் (தந்திர நூல்) நூலில் ஆகாச பைரவர்

ஷி தந்திர நூலின் மாலா மந்திரத்தில் 1000 கரங்களை உடையவர் எனக் குறிப்பிடுகிறது. மேலும் எண்ணிலா கரங்களையுடையவர் எனவும் கூறுகிறது. (வஜ்ர பைரவரின் தோற்றத்தில் ஒருவகை)

130. ஆகாசபைரவ கல்பம் ஸ்மசாந ருத்ரர் (பைரவர்) (மயான ருத்ர பைரவர்)

பத்து கரங்களையுடைய ஸ்மசாந ருத்ரர் மணி, சக்கரம், கதை, அம்பு, சங்கு, கபாலம், சூலம், வாள், வில், கேடயம் ஆகியன கொண்டு திகழ்வர்.

131. ஷி நூலில் உக்ர பைரவர்

பிரித்தறிய முடியாத திருமேனியாக உக்ரபைரவர் திகழ்தல்.

132. ஷி நூலில் சித்த பைரவர்

இரு கரங்களையுடைய சித்த பைரவர் சூலத்தையும் துடியையும் கொண்டு விளங்குவார்.

133. ஷி நூலில் கால பைரவர்

எட்டு கரங்களுடன் திகழும் காலபைரவர் தண்டம், வச்சிரம், கலப்பை, பாசம், சூலம், தோற்சுருள் (தோற்கயிறு), வெட்டுண்ட சிரம் (தலை) கொண்டு திகழ்வர்.

134. ஷி நூலில் மகாபைரவர்

இரு கரங்களையுடைய மகா பைரவர் கபாலத்தையும், தண்டத்தையும் கொண்டு திகழ்வர்.

135. ஷி நூலில் ஹரிப்ரம்ஹாத் மகா பைரவர்

ஷி தந்திர நூலான ஆகாச பைரவ கல்பத்தில் கூறப்படுகின்ற ஹரிப்ரம்ஹாத் மகா பைரவரின் நான்கு கரங்களில் கபாலம், சூலம், துடி, வரதம் ஆகியன விளங்கும்.

136. திருமந்திரம் நான்காம் தந்திரம் - ஆதி வயிரவர் பாடல் 1293ல்

திருமந்திரத்தின் இப்பாடலில் ஆதி வயிரவரின் ஆறு கரங்களில் கபாலம், துடி, தலை (அறுத்த சிரத்தைக் கையில் கொண்டதாக பல வடநாட்டு பைரவ சிற்பங்களில் காண்க) சூலம், பாசம், வாள் ஆகியன திகழும்.

137. மகா பைரவர் (வேறுவகை)

ஒளி பொருந்திய உக்கிரமும், எண் கரங்களில் சர்ப்பம், டமருகம், அங்குசம், கட்கம், கேடகம், அமிர்த கபாலம், வரம், அபயம் ஆகியன கொண்டு திகழ்வர். மேலும் மூன்று கண்கள், சிரசில் சந்திரன், மரகத நிறம், நாய் வாகனத்துடன் விளங்குவார்.

138. காலபைரவர் (வேறு வகை)

கபாலத்தைக் கையில் கொண்டவர். சங்கினைக் குண்டலங்களாக அணிந்தவர். கருமை நிறம் கொண்டதோடு ஓர் தண்டத்தை வைத்திருப்பர். சர்ப்பத்தைப் பூணூலாக அணிந்து இடையூறுகளை அழித்து இன்பம் தருவார்.

139. உக்கிர பைரவர் - சிவபராக்ரம நூலில்

உக்கிர முகத்தைக் கொண்டவர். ஜ்வாலா கேசம் கொண்டு பிரம்ம சிரச்சேதம் செய்தவரே உக்கிர பைரவர் ஆவார்.

140. ஸ்ரீவாஞ்சி யோக பைரவர்

ஸ்ரீ வாஞ்சிநாதர் ஆலயத்தில் வடநாட்டு பைரவர் திருமேனி போன்று ராகு, கேது திருமேனியின் அருகில் யோக பைரவர் விளங்குகின்றார். வலக்கால் குத்திட்டும், இடக்காலை மடக்கியும் பின் கரங்களில் சூலம், பாசம், முன் கரங்களில் கட்கம் (கத்தி), கபாலம் கொண்டு ஆடையின்றி விளங்குகின்றார்.

இன்னும் எண்ணற்ற பைரவ திருவுருவ வகைகள் உள்ளன. பிரபஞ்சசார சங்கிரகம், ஸ்ரீமகாலட்சுமி மந்திர கோசம், விஞ்ஞான பைரவம், மந்திர மகோததி முதலான நூல்களில் மந்திரப் பிரயோகத்தோடு கூடிய உருவபேதங்கள் அநேகம் உள்ளன.

141. சம்ஹார மூர்த்திகள் (ஒடுக்கும் மூர்த்திகள்)

காமாந்தகர், கஜசம்ஹாரர், காலாரி, திரிபுராந்தகர், சரபேசர், சரபமூர்த்தி, பிரம்மசிரச்சேதர், பைரவர், வடுகபைரவர், சுவர்ணாகர்ஷண பைரவர், அஷ்டாஷ்ட பைரவர், வீரபத்திரர், ஜலந்தரஹரர், மல்லாரி சிவர், அஷ்டபுஜ அகோர மூர்த்தி, த்வாதிரிம் சத்புஜ அகோரமூர்த்தி, தசபுஜ அகோர மூர்த்தி எனும் மூர்த்தங்களை பிரதிமா லட்சணத்தில் காணலாம். (பிரதிமா லட்சணம் தேவநாகரியில் ஷி ஆதீனத்து சரசுவதி மகால் நூலகத்தில் உள்ளது. இதற்குரிய தமிழ்மொழி பெயர்ப்பும் செய்யப்பட்டுள்ளது).


॥ ॐ ॥ लं ॥
॥ इन्द्राय नमः ॥
॥ वज्राय ॥
॥ जीवाय ॥
॥ उन्मत्तभैरवाय ॥
॥ वाराह्यै ॥
॥ विश्वम्भराय ॥
ॐ भगवते
महाभैरवाय नमः
नमोऽस्तु
॥ हं ॥
॥ ईशानाय नमः ॥
॥ त्रिशूलाय ॥
॥ रं ॥
॥ अग्नये नमः ॥
॥ शक्तये ॥
॥ कुं ॥
॥ कुबेराय नमः ॥
॥ गदाय ॥
॥ मं ॥
॥ यमाय नमः ॥
॥ दण्डाय ॥
॥ भैरवाय ॥

பைரவர் யந்திரம்



பைரவ பிரதிஷ்டா யந்திரம்


इदं वीरसाधनयन्त्रम् ।
इंद्राय वज्राय
ईशानाय त्रिशूलाय
अग्नये शक्तये
कुबेराय गदायै
यमाय दंडाय
वायवे वृक्षायुधाय
निर्ऋतये खड्गाय
वरुणाय पाशाय
ब्राह्म्यै
माहेश्वर्यै
कौमार्यै
वैष्णव्यै
वाराह्यै
इन्द्राण्यै
चामुण्डायै
महालक्ष्म्यै
श्री बटुकनाथ

வீரசாதன யந்திரம்
(காபாலிக முறை)



சர்வ கார்யசித்தி யந்திரம்


நிருதி
பிரம்மா
வருணன்
வாயு
திரிபுராக்கினி
காராளர்
பீமரூபர்
வஹ்னி
வைஷ்ணவி-குரோதனர்
மாகேந்திரி-கபாலீசுரர்
வாராகி-உன்மத்தர்
ஏகானந்தர்
சண்டேச்வரர்
நலேவாநிர்மலர்
கவசம்
சத்தியோஜாதம்
சிகை
திருபுர பைரவி
உடனுறை
மகாபைரவர்
உருத்திர வடுகர்
யமன்
ஏகபாதர்
கௌமாரி-சண்டர்
ஸ்ரீகண்டர்
அகோரம்
வாமதேவம்
ஸ்ரீபாலஸ்கர்
சாமுண்டி-பீஷணர்
அனந்தர்
குபேரன்
நேத்திரம்
அஸ்த்திரம்
ஹிருதயம்
தத்புருஷம்
சிரசு
பஞ்சவக்த்ரர்
மகாமந்தானர்
படகாரர்
பிராமணி-அஜிதாங்கர்
சண்டிகை-சம்ஹாரர்
மகேஸ்வரி-ருரு
காலாக்கினி-ருபர்
ஹேதுகர்
அக்னிஜிக்வா
ஆட ஹேசுவரர்
அக்னி
இந்திரன்
திருமால்
ஈசானன்

பஞ்சாவர்ண முறை

பைரவ பஞ்சாவரண பூஜையும் - பைரவ மண்டலமும்

சைவநெறி வழிபாட்டில் அனைத்துத் தெய்வங்களையும் உரிய பரிவார தேவர்களோடு வணங்குகின்றோம். உண்மையில் பெருமானுக்குப் பலநூறு பரிவார தேவர்கள் இருப்பினும் அவற்றுள் சிலரை ஐந்து ஆவரணங்களில் அமைத்து வழிபடுவது வழக்கம். இதற்குப் பஞ்சாவரண பூசை என்று பெயர். நித்திய வழிபாட்டிலும் கும்பாபிஷேகம் முதலிய சிறப்புப் பூசைகளிலும் இந்தப் பஞ்சாவரண பூசை தனிச்சிறப்பிடம் பெறுகின்றது. இப்பகுதியில் பைரவருக்கான பஞ்சாவரணத்தைக் காணலாம்.

அழகிய பத்மத்தில் மகா பைரவர் பைரவியோடு வீற்றிருக்கின்றார். அவரைச் சுற்றி அமையும் முதல் ஆவரணத்தில் ஈசானம், தத்புருஷம், வாமதேவம், அகோரம், சத்யோஜாதம் என்னும் பிரம்மங்களும், ஹ்ருதயம், சிரசு, சிகை, கவசம், நேத்திரம், அஸ்திரம் என்னும் ஆறு அங்கங்களும் பூசிக்கப்படுகின்றன.

இரண்டாவது ஆவரணத்தில் அஷ்ட வித்யேசுவரர்களான வடுகர்கள் பூசிக்கப்படுகின்றனர். இவர்கள் முறையே 1. மகாமந்தானர், 2. பஞ்சவக்திரர், 3. ரவிபட்சணர், 4. ஏகானந்தர், 5. சண்ட பைரவர், 6. நபோநிர்மலர், 7. டமருபாஸ்கரர், 8. பட்காரர் என்று பெயர் பெறுகின்றனர். இவர்கள் இரண்டு கரங்கள் கொண்டு அவற்றில் கபாலமும் தண்டமும் ஏந்தியவர்கள்.

மூன்றாவது ஆவரணத்தில் அஷ்ட மாதர்களுடன் கூடிய அஷ்ட பைரவர்கள் வழிபடப்படுகின்றனர். இவர்கள் 1. பிராஹ்மி - அஜிதாங்கர், 2. மகேஸ்வரி - ருரு, 3. கௌமாரீ - சண்டர், 4. வைஷ்ணவி - குரோதனர், 5. வாராகி - உன்மத்தர், 6. மகேந்திரி - கபாலீசர், 7. சாமுண்டி - பீஷ்ணர், 8. சண்டிகை - சம்ஹாரர் எனப்படுகின்றனர்.

நான்காவது ஆவரணத்தில் பைரவரின் படைத்தலைவர்களான பத்து வேதாளர்கள் பூசிக்கப்படுகின்றனர். இவர்கள் கிழக்கிலிருந்து முறையே (கிழக்கில்) ஹேதுகர், (தென்கிழக்கில்) காலாக்னி ரூபர், (தெற்கில்) ஏகபாதர், (தென்மேற்கில்) திரபுராக்னி, (மேற்கில்) பீமரூபர், (வடமேற்கில்), வஹ்கி, (வடக்கில்) அசரர், (வடகிழக்கில்)அக்னி ஜ்ஹ்வா என்று பெயர் பெறுகின்றனர். மேலும், ஆகாயத்தில் உள்ள வேதாளர் கராளர் என்றும், பாதாளத்திலுள்ளவர் ஹாடகேசுவரர் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

ஐந்தாவது ஆவரணத்தில் கிழக்கில் தொடங்கி இந்திரன், அக்னி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், பிரம்மா, விஷ்ணு என்னும் தசதிக் பாலகர்களை பூசிக்க வேண்டும்.

இப்படிப் பஞ்சாவரணத்துடன் பைரவரை பூசிப்பவன் சகல ஐஸ்வர்யங்களை அடைவதுடன், பகைவர்களை வென்று சுகமாக வாழ்கிறான் என்று சமய நூல்கள் கூறுகின்றன.

சிவாலயங்களில் மண்டல பூசையாகவும் இதனை செய்யவேண்டுமென்று விதிக்கப்பட்டுள்ளது. பைரவ மண்டலத்தில், நடுவில் எட்டு இதழ்த் தாமரை ஆசனமாக அமைகிறது. அதைச் சுற்றி முக்கோணம் உள்ளது. முக்கோணத்தைச் சுற்றி சதுரம் உள்ளது.

இதில் நடுவிலுள்ள தாமரையில் மகாபைரவர் பைரவியோடு எழுந்தருளியுள்ளார். தாமரையின் எட்டு இதழ்களிலும் அஷ்ட பைரவர்கள் தத்தம் தேவியருடன் எழுந்தருளியுள்ளனர். அதையடுத்து முக்கோணத்தில் மும்மூர்த்திகள் வடிவான மூன்று பைரவர்கள் உள்ளனர். இவர்கள் வாக்தேவியுடன் கூடிய விரிஞ்சி வடுகர், ஸ்ரீ தேவியுடன் கூடிய முகுந்த வடுகர், கௌரி தேவியுடன் கூடிய உருத்திர வடுகர் எனப்படுகின்றனர். நாற்கோணத்தின் பக்கங்களில் தசதிக் பாலகர்கள் பூசிக்கப்படுகின்றனர். இந்த மண்டலத்தை வண்ணக்கோலமாக வரைந்து பூஜை செய்து பாயாசம் பலிப்பொருளாக அளிக்கப்படுகிறது.

⁂

சரபேஸ்வரர்

शरभेशः।

शरभेशप्रतिष्ठां तु वक्ष्ये लक्षणपूर्विकाम् ।
पक्ष्याकारं सुवर्णाभं पक्षद्वयसमन्वितम् ॥
ऊर्ध्वपक्षसमायुक्तं रक्तनेत्रद्वयान्वितम् ।
पादैस्सिंहपदाकारैश्चतुर्भिश्च समन्वितम् ॥
सुतीक्ष्णनखसंयुक्तैरूर्ध्वस्थैर्वेदपादकैः ।
दिव्यलाङ्गूलसंयुक्तं सुविकीर्णजटान्विम् ॥
कन्धरोर्ध्वनराकारं दिव्यमौलिसमायुतम् ।
सिंहास्यं भीमदंष्ट्रं च भीमविक्रमसंयुतम् ॥
हरन्तं नरसिंहं तु जगत्संहरणोद्धृतम् ।
कृताञ्जलिपुटोपेतं निश्चेष्टितमहातनुम् ॥
नरदेहं तदूर्ध्वास्यं विष्णुं पद्मदलेक्षणम् ।
पादाभ्यामम्बरस्थाभ्यां कुक्षिस्थाभ्यां च तस्य तु ॥
गगनाभिमुखं देवं कारयेच्छरभेश्वरम् ।

(उत्तरकामिकागमे चतुःपञ्चाशत्तमपटले ।।)

உத்தரகாமிகாகமம் - படலம் 54ல்

உருவ அமைப்புடன் சரபேசர் பிரதிட்டையைச் சொல்கிறேன். பறவை உருவம், பொன்னிறம். இரண்டு சிறகுகள், மேனோக்கிய இறகுகள், இரு சிவந்த கண்கள், சிங்கத்தினுடையது (உடலுடன்) போன்ற நாற்கால்கள். இடுப்பின் மேல் மனித உடல். மிகக் கூர்மையான நகங்கள், மேனோக்கிய பாதங்கள், வானமளவும் வால், முடிந்த சடைமுடி, சிங்கமுகம், பயம்தரும் கோரைப்பற்கள், பயம்தரும் போர்க்குணம் உலகழிக்கத் தொடங்கிய நரசிம்மத்தை அழிக்கும் செயல் இவற்றுடன் அமைக்க. அஞ்சலி செய்கரங்கள் கொண்ட மானுடல். சிங்கமுகம், தாமரை இதழ் என நின்ற கண்கள். சரபத்தால் பற்றப்பட்ட கால்களும், இடையையும் உடையவராயும் வானோக்கிய முகமுடையராயும் விஷ்ணுவை அமைக்க. இவரை ஆகாச பைரவர் என்றும் கூறுவர்.

குறிப்பு :- ஸ்ரீதத்வநிதி சிற்பநூலின் 32 கரங்களைக் கொண்ட சரபமூர்த்தி சொல்லப்பட்டுள்ளது. இது 6 சுலோகங்களைக் கொண்டது.

சிவனது சங்கார மூர்த்தங்களுள் சரப மூர்த்தியும் ஒன்று. சரபேசுவரர், சிம்மக்ன மூர்த்தி, நரசிம்ம சம்ஹாரர் என்னும் பெயர்களாலும் இவர் அழைக்கப்படுவார். இரணியகசிபு என்னும் அரக்கனைக் கொல்வதற்காக நரசிம்ம அவதாரம் எடுத்த விஷ்ணு, இரணியகசிபினை அழித்த பின்பும் தமது வேகத்தினைத் தணிக்காது இன்னல் கொடுத்து வந்தார். இதனைத் தேவர்கள் சிவனிடம் முறையிட, சிவன் தனது அம்சமான வீரபத்திரனிடம் கூற, அவர் சரபம் என்னும் வடிவமெடுத்து நரசிம்மத்தினை அழித்து விஷ்ணுவை வைகுண்டத்திற்கு அனுப்பினார் என்னும் புராணக் கதையின் அடிப்படையில் தோன்றிய வடிவமே சரபமூர்த்தி. அதாவது நரசிம்மத்தினை சம்ஹாரம் செய்த வடிவமே இதுவாகும். இலிங்க புராணத்தின் 96 ஆம் அத்தியாயத்தில் வீரபத்திரர் சரப வடிவில் நரசிம்மத்தினைக் கொன்ற கதை விபரமாகக் கூறப்பட்டுள்ளது. சரப புராணமும் இதனைக் கருப்பொருளாக கொண்டது.

பக்திச் சிங்கவணைமீது படரின்றிருந்த பார்த்திவனை
எத்திச் சிங்கலறக் கொன்ற இறுமாப்பதனால் இரு நிலத்திற்
றத்திச் சிங்கலுறத் தேய்த்தறன்னைக் கண்டு சரபமதாய்க்
கொத்திச் சிங்கன்தனை யழித்த கோவே நினது சரண் போற்றி

என சரப வடிவமெடுத்து நரசிம்மத்தினை அழித்தமையை சிவபராக்கிரமம் என்னும் நூல் கூறுகின்றது.

சரப என்பது விலங்கும் பறவையும் இணைந்த ஒரு வடிவம். இதற்கு இரண்டு சிங்க முகங்களும், உடலும், நீண்ட வாலும், பறவைகளைப் போன்று இரு இறகுகளும், எட்டுக் கால்களும் உள்ளன. இதன் உருவ அமைப்பினை இலிங்க புராணமும், காஞ்சிப் புராணமும் கூறுகின்றன.

நன்னாலிரண்டு திருவடியும் நனிநீள்வாலும் முகம் இரண்டும்
கொன்னார் சிறகும் உருத்திரமும் கொடும் பேரார்ப்பும் எதிர் தோற்றிச்
செந்நீர் பருகிச் செருக்கு நரமடங்கல் ஆவி செகுத்துரி கொண்(டு)
ஒன்னார் குலங்கள் முழுதழிக்கும் உடையான் சரபத் திருவுருவம்

என, காஞ்சிப்புராணம் சரபத் திருவுருவினை விவரிக்கின்றது. இவ்வடிவம் சிங்கத்தினைவிட பலம் வாய்ந்தது. இது எண்காற்புள், சிம்புள் என்றும் அழைக்கப்படும்.

சிவனது சரபமூர்த்தி வடிவம் வைணவத்திற்கு எதிராக சைவ சமயத்தின் மேலாதிக்கத்தினை எடுத்துக் காட்டுவதற்காக தோற்றுவிக்கப்பட்ட வடிவம் எனக் கூறப்படுகின்றது.

காமிகாகமம் சரபேச மூர்த்தி என்ற பெயரில் இவ்வடிவினை மேல்வருமாறு வர்ணிக்கின்றது. பறவை போன்ற பொன்னிறமான உடலைக் கொண்டிருப்பார். மேல் நோக்கியதாக இரு இறகுகள் காணப்படும். செந்நிறமான இரு கண்கள் காணப்படும். சிங்கத்தின் கால்களைப் போன்று நான்கு கால்கள் நிலத்தில் ஊன்றப்பட்டும் நான்கு கால்களின் கூரிய வளைந்த நகங்கள் நீட்டப்பட்டுமிருக்கும். மனித உடலையும் நீண்ட வாலையும் கொண்டிருப்பார். சிங்கத்தின் முகமும் தலையில் கிரீடமும் காணப்படும். பக்கத் தந்தங்களையும் கொண்டு பயங்கரமான தோற்றத்துடன் காணப்படுவார். சரபமூர்த்தி தனது இரு கரங்களினால் நரசிம்மத்தினைப் பிடித்திருப்பது போலக் காணப்படும் என்றும், நரசிம்மம் மனித உடலுடன் கரங்களை அஞ்சலி நிலையில் வைத்தவாறு காணப்படும் என்றும் இவ்வாகமம் விவரிக்கின்றது.

ஸ்ரீதத்துவநிதி

ஸ்ரீதத்துவநிதி என்னும் நூலின் முதற்பகுதியில் சரப மூர்த்தியின் வடிவம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. மகாமேரு போன்ற கம்பீரத் தோற்றத்தினைக் கொண்டிருப்பார் என்றும் சந்திரன், சூரியன், அக்கினி என்னும் மூன்று கண்களையும் 32 கரங்களையும் எட்டுக் காலகளையும் கொண்டு தெத்திப் பற்களுடன் சிங்கத்தின் பிடரிமயிரைப் போன்று அடர்த்தியான பிடரி மயிருடன் பயங்கரத் தோற்றமாக இவ்வடிவம் இருக்குமெனவும் இந்நூல் குறிப்பிடுகின்றது. இவரது வலது கரங்களில் வச்சிரம், முஷ்டி (முத்திரை), சக்கரம், சக்தி, தண்டம், அங்குசம், கத்தி, கட்டுவாங்கம், பரசு, அட்சமாலை, எலும்பு, சூலம், வில், உலக்கை, அக்கினி என்பனவும் இடது கரங்களில் வரதம் (முத்திரை), பாசம், கதாயுதம், அம்பு, கொடி, இரம்பம், பன்றி, சங்கம், கேடயம், நாகம், தாமரை, கபாலம், புத்தகம், குந்தகம், கலப்பை என்பவனவற்றுடன் ஒரு கரம் துர்க்கையை ஆலிங்கனம் செய்தவாறும் காணப்படும் என ஸ்ரீதத்துவநிதி கூறுகின்றது.



சரபர்



அஷ்டபாத சரபர்

சரப மூர்த்தியின் மூன்று கண்களும் சூரியன், சந்திரன், அக்கினி என்றும், நாக்கு நிலத்தினுள் உள்ள பாதவலையம் என்றும், இரு இறகுகளும் காளி, துர்க்கை என்றும், நகங்கள் இந்திரன் என்றும், வயிறு காலாக்கினி என்றும், தொடைகள் காலன், மிருத்யு என்றும், இவரது வலிமை வாயுவைப் போன்றது என்றும் கூறுகின்றது. சரபமூர்த்தி வடிவத்தினைக் கோயில்களில் அமைப்பதாலும் வழிபடுவதாலும் எதிரிகள் அழிக்கப்படுவார்கள். போர்களில் வெற்றி, நோய்கள் நீங்கும் என இம்மூர்த்தியின் வழிபாட்டின் பலன்களையும் இவ்வாகமம் கூறுகின்றது.

தமிழ்நாட்டில் சோழராட்சியின் பிற்பகுதியிலிருந்து சரபமூர்த்தியின் வழிபாடு தோற்றம் பெற்றது. பிற்பட்ட சோழ மன்னர்களாற் கட்டப்பட்ட கோயில்களில் சரபமூர்த்தியின் சிற்பங்கள் வடிக்கப்பட்டதுடன் இம் மூர்த்திக்குத் தனியான சந்நிதியும் அமைக்கப்பட்டது. விக்கிரம சோழன் (கி.பி. 1118 - 1135) காலத்தில் கட்டப்பட்ட துக்கச்சி என்ற இடத்திலுள்ள ஆபத்சகாயேசுவரர் கோயிலில் (கும்பகோணம் தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம்) முதன் முதலில் சரப மூர்த்தியின் சிற்பம் அமைக்கப்பட்டமையைக் காணலாம். இரண்டாம் ராஜராஜ சோழ மன்னனால் (கி.பி. 1146 - 1172) தாராசுரத்திற் கட்டப்பட்ட ஐராவதேசுவரர் கோயிலின் (தஞ்சாவூர் மாவட்டம்) ராஜகம்பீர மண்டபத்தின் மேற்குப் பக்கச் சுவரில் சரப மூர்த்தியின் அழகிய சிற்பம் உள்ளது. இதில் சிங்கத்தினது முகத்தினையும் தலையில் கிரீடத்தினையும் இறகுகளையும் கொண்டு விளங்கும் சரப மூர்த்தியின் காலுக்கடியில் கூப்பிய கரங்களுடன் நரசிம்மம் காணப்படுகின்றது. சரப மூர்த்திக்கு மேலே கூப்பிய கரங்களுடனான சிறிய உருவங்கள் காணப்படுகின்றன. மூன்றாம் குலோத்துங்க சோழனால் (கி.பி. 1178 - 1218) கட்டப்பட்ட திரிபுவனத்திலுள்ள கம்பஹரேசுவரர் கோயிலில் (தஞ்சாவூர் மாவட்டம்) சரபமூர்த்திக்குத் தனியான சந்நிதி அமைக்கப்பட்டுள்ளது. கருவறைக்கு வடகீழக்கேயுள்ள இச்சந்நிதியில் சரபமூர்த்தியின் அழகிய வெண்கலப் படிமம் உள்ளது. சிங்கத்தின் முகத்தினையும் உடலையும் கொண்டு வளைந்த நீண்ட வால், நான்கு மானிட கரங்களுடன் இவர் காணப்படுகின்றார். இவரது வலது பக்க மேற்கரத்தில் பரசு, கீழ் கரத்தில் பாசம், இடது பக்க மேற்கரத்தில் மிருகம், கீழ்க் கரத்தில் அக்கினி என்பன விளங்குகின்றன. சரபமூர்த்தி தனது முன்னிரு கால்களினால் நரசிம்மத்தினை இறுகப் பிடித்திருக்க, நரசிம்மம் தன்னை விடுவிடுத்துக் கொள்ள தனது எட்டுக் கரங்களுடன் போராடுவது போன்ற நிலையில் இப்படிமம் வடிக்கப்பட்டுள்ளது. நரசிம்மத்தின் இரு கரங்கள் கூப்பிய நிலையிற் காணப்படுகின்றன. சிதம்பரம் கோயிலிலும் சரப மூர்த்தியின் கற்சிற்பமொன்று கோயிலின் கோபுரத்தில் உள்ளது.

சுதைச் சிற்பங்களாகவும் சரபமூர்த்தி வடிவத்தினைக் காணலாம். திருவாரூர் கோயிலின் மேலைக்கோபுரம், வைத்தீஸ்வரன் கோயில் கிழக்குக் கோபுரம், மதுரை மீனாட்சியம்மன் கோயிற் கோபுரம் ஆகியனவற்றில் சரப மூர்த்தியின் சுதைச் சிற்பங்களைக் காணலாம். சரபமூர்த்தியை வழிபட்டால் தீவினை மறைந்து நன்மை உண்டாகும் என சரபோபநிடதம் கூறுகிறது. (ஆதாரம் :- இந்துக் களஞ்சியம் - இலங்கை - 2000)



ஸ்ரீ பிரத்தியங்கிரா தேவி (சரப சக்தி)

அகோரமூர்த்தி

अष्टभुजाघोरमूर्तिः।

अथ वक्ष्ये विशेषेण सर्वलोकैकपावनम् ।
सर्वयुद्धजयं चैव ब्रह्महत्त्यादिनाशनम् ॥
महापातकदोषघ्नं गुरुद्रोहनिवारणम् ।
शिवद्रव्यापहारं च उपपातकनाशनम् ॥
सर्वैश्वर्याभिवृद्ध्यर्थं परमोक्षनिरासनम् ।
अघोरास्त्रेश्वरं भीमं स्थापनं वक्ष्यते शृणु ॥
त्रिनेत्राष्टभुजं भीममुग्रदंष्ट्राकरालकम् ।
कालमेघसमं घोरं रक्तवस्त्रसमन्वितम् ॥
ज्वालाकेशसमायुक्तं कृशानुनयनैर्युतम् ।
अर्धचन्द्राकृतिं भस्म ललाटोपरिशोभितम् ॥
भुजाभ्यां त्रिशिखा तिर्यक् वेतालं खड्गमेव च ।
डमरुं च कपालं च खेटकं खड्गमेव च ॥
रक्तवस्त्राम्बरोपेतं रक्तपुष्पसमन्वितम् ।
रक्ताभरणसंयुक्तं खड्गमालाविभूषितम् ॥
शिरोमालाविभूष्यं च नागयज्ञोपवीतिनम् ।
वृश्चिकाभरणं कण्ठे कालाग्निसदृशप्रभम् ॥
एवं ध्यात्वा महाघोरं द्वात्रिंशल्लक्षणान्वितम् ।
पद्मपीठोपरिस्थं च समीपे वृषभं तथा ॥
एवं संकल्प्य विधिवत् प्रतिष्ठां कारयेत्ततः ।

(उत्तरकारणागमे ।।)

உத்தரகாரணாகமம் (அஷ்டபுஜ அகோரமூர்த்தி)

அனைத்துலகத்தையும் புனிதமாக்குபவரும், எல்லாவகைப் போர்களிலும் வெற்றி தருபவரும், பிரம்மஹத்தி போன்ற பாவங்களையும் அழித்தருள்பவரும், மாபாதக தோஷந்தீர்ப்பவரும், குருவுக்கிழைத்த குற்றம் போக்குபவரும், சிவத் திரவியங்கவர் குற்றத்தையும் நீக்குபவரும், உபபாதகங்களை ஒழிப்பவரும் ஆன அகோராஸ்திரேசரின் சிறப்பைச் சொல்கிறேன்.

எல்லாவித ஐஸ்வரியங்களும் (ஈசனருள்) பெறவும் மேலான முத்தியினை இருப்பிடமாகவும் பாவம் ஒழியவும் அகோராஸ்திரேசரின் ஸ்தாபனத்தைச் சொல்வேன் கேட்பாயாக.

முக்கண்ணர், எண்தோளர், அச்சந்தருபவர், கூரிய பற்கள், சுருங்கிய நெற்றி, நெறித்த புருவமுடையவர், கருநிற மேகமொத்தவர், கோரர், செந்நிற ஆடையணிந்தவர், ஒளிர் சடைமுடியர், நீண்ட ஒசிந்த கண்களையுடையவர், பிறை வடிவில் நெற்றியின் மேல் நீறணிந்தவர், கரங்களில் திரிசூலம், வேதாளம், குறுவாள், உடுக்கை, கபாலம், கேடயம், நெடுவாள் ஆகியவைகளைக் கொண்டவர்.

ஸ்ரீ அகோரமூர்த்தி தியானம்

வேதாளகர்க்கம் டமரும் திரிசூலம்
கபால கேடான்வித வாமகண்டம் /
ஹஸ்தைர வஹந்தம் அதி கிருஷ்ண ரூபம்
அகோர மூர்த்திம் மனஸா ஸ்மராமி //

கருநிறமும் மணிமாலை புனையழகும்
வளைஎயிறும் கவினைச் செய்ய
எரிசிகையும் நுதல் விழியும் நடைக்
கோல இணையடியும் இலகஎட்டுக்
கரம் நிலவ மணிப்பலகை வெண்தலை
வாள் கடிதுடியோ் சூலமேற்று
வெருவ மருத்துவனை அடர் அகோர
சிவன் துணைப்பதச்சீர் விளம்புவோமே.

இதிகாச காலங்களில்தான் அஸ்திர பிரயோகங்கள் பிரம்மாஸ்திரம், ஆக்னேயாஸ்திரம், வாருணாஸ்திரம் என்பனபோல இருந்து வந்ததாக நாம் நம்பி வருகிறோம். இப்போது அவையாவும் அழிந்துவிட்டன எனச் சிலர் கூறுகின்றனர். ஆனால் மந்திரசாராவளி ஸ்ரீவித்யார்ணவ தந்திரம், ப்ரபஞ்ச ஸாரஸங்கிரஹம், பூதடாமர தந்திரம் போன்ற பல மந்திர சாஸ்திரங்களும் அதர்வண வேதமும் அகோராஸ்திரம், பாசுபதாஸ்திரம், வ்யோமாஸ்திரம், ப்ரதியங்கிராஸ்திரம் போன்ற பல அஸ்திரங்களைப் பிரயோக விதிகளுடன் கூறியிருப்பதைக் காண்கிறோம். எவ்விதம் ஸ்ரீவித்யை - மந்த்ர ராஜம் என்று அழைக்கப்படுகிறதோ அவ்விதமே அகோராஸ்திரம் 'அஸ்த்ர ராஜம்' என்று அழைக்கப்படுகிறது.

ஸ்ரீஅகோரமூர்த்தி சுலோகம்

அகோரப்யோத கோரப்யோ கோர கோர தரேப்ய: ஸர்வேப்ய: /
ஸர்வ சர்வேப்யா நமஸ்தே அஸ்து ருத்ர ருபேப்யா //

என்று யஜுர்வேத மந்த்ரம் சிறப்பித்து உரைக்கும்.

அகோர மூர்த்தி அஸிதாங்க பைரவர், ருத்ர பைரவர், சண்ட பைரவர், க்ரோத பைரவர், உன்மத்த பைரவர், கபால பைரவர், பீஷண பைரவர், ஸ்வர்ணாகர்ஷண பைரவர், வச்யாகர்ஷண பைரவர், பத்தபாலன பைரவர், சோஷண பைரவர், ருரு பைரவர், ஆபதுத்தாரக பைரவர் என்ற பைரவர்களால் சூழப்பெற்றவர். சிரசில் சங்கரன் என்ற பாம்பையும், நெற்றியில் மஹாபத்மன் என்ற நாகத்தையும் இரு குண்டலங்களாக வாசுகி வாசுதேவன் என்ற நாகங்களையும், மாலையாக கார்க்கோடகன் என்ற பாம்பையும், வாகுவலயங்களாக ஆதிசேஷன், பத்மராகன் என்ற நாகங்களையும், ராகு கேது ஆகிய இரு பாம்புகளை இரு மணிகட்டுகளிலும் சங்கபாலன் அரைஞாண் கயிறாகவும், குளிகன் என்ற நாகத்தை யக்ஞோபவீதம் எனப்படும் பூணூல் கயிறாகவும் தரித்தவர்.

குறிப்பு :- அகோரமூர்த்தி ரூபம் - எட்டுக் கரங்களையுடையதாகவும், சிவதத்வ ரத்னாகரத்தில் 32 கரங்களை உடையவராகவும், ரூபமண்டனத்தில் 8 கரங்களை உடையவராகவும் கூறப்படுகிறது.

அகோரமூர்த்தி தேளை மாலையாக அணிந்திருப்பதால் ''லூதா விருச்சிகலததரன்'' என்று போற்றப்படுகின்றார். ராகங்களில் இவருக்குரியது மோஹன ராகமாகும். ''மோஹகீதப்பிரியன்'' என்று இவரது ஸஹஸ்ரநாமம் இவரைப் புகழ்கின்றது. இவர் சன்னதியில் மோஹனராகம் மட்டுமே நாதஸ்வர வித்வான்களால் இசைக்கப்படுகிறது.

கிழமைகளில் அகோரமூர்த்திக்கு உரியது ஞாயிற்றுக்கிழமை. இரவு மூன்றாம் ஜாமம் இவருக்கு உரியது. மாசிமாதம் கிருஷ்ணபக்ஷம் த்ருதியை பூர்வ பங்குனி (பூரம்) நக்ஷத்ரம் இவரது அவதார தினம்.

மோக்ஷத்தை விரும்புபவர்கள் வெண்மை நிறமுள்ளவராக அகோரமூர்த்தியை உபாஸித்தல் வேண்டும். காரிய சித்தியை விரும்புபவன் சிவந்த சிவப்பு நிறமுள்ளவராகவும், சத்ரு நாசத்தை வேண்டுபவன் கருநிறமுள்ளவராகவும் அகோர மூர்த்தியைத் தியானித்தல் வேண்டும்.

இருபத்தெட்டு ஆகமங்களிலே உத்தர காரண ஆகமமும், காமிகமும் அகோரமூர்த்தியைப் புகழ்ந்து பேசுகின்றன. அகோரமூர்த்தியை வழிபட்டு உயர்ந்தவர்கள் இந்திரன், பிரமன், ஐராவதம், மதங்கர், ஸத்யவ்ரதன் என்கிற மனு. வ்யாக்ரபாத், உத்தாலகர், அகஸ்தியர் அர்ஜுனன், வ்யாஸர், சுகர் ஆகியோர் ஆவார்.

அகோராஸ்திரத்திற்குரிய வச்யம், ஸ்தம்பனம், மோஹனம் ஆகிய மூன்று பிரயோகங்களையும் தீபத்தில் ஒளி வடிவாய் அகோர ருத்ரரை வழிபடக் கிடைக்கும். இதைத் தவிர ஆகர்ஷணம், வித்வேஷணம், உச்சாடனம், ஸாரதி ஆகிய பிரயோகங்களும் அகோராஸ்திரத்திற்கு உண்டு. இந்த அகோராஸ்திரத்திற்குரிய அதிதேவதையான அகோரமூர்த்தி சீர்காழியிலிருந்து பூம்புகார் செல்லும் சாலையில் உள்ள திருவெண்காடு என்னும் காசிக்கு ஒப்பான க்ஷேத்திரத்தில் எழுந்தருளியுள்ளார்.

சிவபெருமானின் ஈசானம், தத்புருஷம், வாமதேவம், ஸத்யோஜாதம், அகோரம் என்ற ஐந்து முகங்களில் அகோரம் என்ற முகத்திற்குரியவர் அகோரமூர்த்தி. புராண காலத்தில் மருத்துவன் என்ற அசுரன் தேவர் உலகத்தைக் கைப்பற்றி ஆட்சி செய்தான். இந்திரன் இங்கு வந்து தவமிருக்கவே நந்தியெம்பெருமானைப் படைத்தலைமை பூண்டு செல்லும்படி சிவன் கட்டளையிட்டார். மருத்துவனால் கடுமையாகத் தாக்கப்பட்டு நந்தி சிவபெருமானிடம் ஓடிவந்து அழுது அரற்றி முறையிடவே அதுவரை மறைந்திருந்த அகோர முகம் தனி உருவம் பெற்று சிவபெருமானிடமிருந்து பிரிந்து சென்றது. தீக்கொழுந்து போன்ற செஞ்சடை, கருத்தமேனி, முக்கண்கள், செஞ்சாந்துத் திலகம், தொங்குகின்ற மஞ்சள் நிற மீசை அதன் கீழ் வளைந்த கோரைப்பற்கள், இது தவிர எட்டுக் கரங்களில் வேதாளம், கமண்டலம், உடுக்கை, கபாலம், கேடயம், வாமபாசம், ஒலிக்கின்ற மணி, அகோராஸ்த்ரம் என்னும் திவ்யாஸ்திரம் இவைகளுடன் இடதுகால் நிலத்தில் பரவியிருக்க வலது கால் கட்டை விரலை மட்டும் பூமியில் ஊன்றி ஓடுகின்ற திருக்கோலத்துடன் அகோரமூர்த்தி காணப்பட்டார். வேதாளம், கிளி உருவத்துடன் காணப்பட்டது. அதன் மூலமந்திரம் 'சச்சராம்' என்பதாகும்.

வாமே சூலதளே ஸ்திதஸ்தவஹரி ஸ்ரீநீலருத்ர
புனர்மத்யே, தக்ஷிண தோவிதி
தண்டாக்ரே கணநாயகோ தினகரோ
தண்டஸ்ய மூலேஸ் மரன்
தேனாத்யாஹி கலக்ரஹோன்
மதரிபூன் அஸ்தரேச நிர்நாசய

என்று அகோர ஸ்தவராஜம் அகோராஸ்த்திரத்தின் பெருமையைக் கூறுகிறது.

ஹரி, ருத்ரன், பிரம்மன், சக்தி, ஷண்முகன், கணநாதன், சூரியன் ஆகிய அனைவருமே அகோராஸ்திரத்திலும் மற்ற ஆயுதங்களிலும் தங்கியிருந்தார்கள். அகோர மூர்த்தியின் கையில் இருந்த பான பாத்திரத்தில் மயக்கம் தரும் மதுரசமும் காளஞ்ஜரஸமும் நிரம்ப வழிந்தது. அகோர மூர்த்தியைக் கண்ட மருத்துவன் பயந்து சரணாகதி அடைந்தான். ஒளியுருவான இறைவன் திருவுருவில் இரண்டறக் கலந்தான். தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி இறைவனும் 'சுவேதாரண்யம்' என்று புகழ்பெறும் திருவெண்காட்டில் என்றென்றும் அகோர மூர்த்தி வடிவில் உறைவாராயினார்.

பிரம்மா

ब्रह्मा।

चतुर्भुजश्चतुर्वक्त्रो हरितालसमप्रभः ।
जटामकुटसंयुक्तः पिङ्गाक्षस्सर्वभूषणः ॥

कृष्णाजिनोत्तरीयश्च यज्ञसूत्रसमन्वितः ।
शुक्लवस्त्रधरश्शान्तः कटिसूत्रसमन्वितः ॥

शुक्लमाल्यानुलेपश्च कर्णकुण्डलमण्डितः ।
दक्षिणे चाक्षमाला च कूर्चं चैव तु धारयेत् ॥

कमण्डलुकुश(शं ?) वामे दक्षिणे स्रुक्स्रुवौ तलः (?) ।
आज्यस्थालीं कुशां चैव(श्चैव ?) वामहस्ते तु धारयेत् ॥

अभयवरदोपेतौ पूर्वहस्तौ द्विजोत्तम ! ।
आसने तूभयाङ्घ्रिश्च शाययेत्तु ततः परम् ॥

मेढ्रमूलोपरिष्टात्तु वामहस्तोर्ध्ववक्त्रकम् ।
सव्यहस्तं च तस्योर्ध्वे तदन्यास्यं च कारयेत् ॥

दक्षिणे चाक्षमालां च वामहस्ते कमण्डलुम् ।
सरस्वती दक्षभागे सावित्री वामभागके ॥

आसीनो वा स्थितो वापि पद्मपीठोपरि स्थितः ।

(अंशुमद्भेदागमे एकोनपञ्चाशपटले ॥)

அம்சுமத்பேதம் - படலம் 14ல்

நாற்கரத்தர், நான்முகர், பொன்னொத்த மேனியர், சடைமுடி கொண்டவர், பொன்னிறக் கண்ணர், அனைத்தணிகளும் கொண்டவர், கருப்புத் தோலினாலான மேலாடை கொண்டவர். முப்புரி நூல் பூண்டவர், வெள்ளையுடை பூண்டவர், சாந்தர், கடிசூத்திரம் கொண்டவர், வெண்மலர் மாலையும், வெண் சந்தனமும் பூண்டவர். காதில் குண்டலம் கொண்டவர். கமண்டலம், தர்ப்பை ஆகியவை இடக்கரங்களிலும், ஸ்ருக், ஸ்ருவம் வலக்கரங்களில் கொள்க. அல்லது முன் கரங்களில் அபய வரதமும் மேற்கரங்களில் தர்ப்பை, நெய்க்கிண்ணம், ஸ்ருக், ஸ்ருவம் ஆகியவையும் கொள்க. இரு கால்களையும் மடித்த நிலையில் ஆசனத்தமர்ந்தவராயும், மேட்ரமூலத்திலிருந்து மேலாக இடக்கரம் அதன்மேல் ஒருமுகமும் செய்க. வலக்கரத்தில் கமண்டலமும், இடக்கரத்தில் கமண்டலமும் கொண்டவர்களாய் வலத்தில் சரசுவதியையும், இடத்தில் சாவித்திரியையும் கொள்க. பத்மபீடத்தின்மேல் நின்றவராகவோ அமர்ந்தவராகவோ அமைக்க.

சுப்ரபேதம் - படலம் 34ல்

நான்முகர், நாற்கரத்தர், கமண்டலம், ஜெபமாலை தரித்தவர், செஞ்சடையுடையவர், இடப்புறத்தில் அனைத்தணிகளும் கொண்ட சாவித்திரியையுடையவர். ஒளிரும் மேனி கொண்டவர். உலகை ஆக்குபவர். இவ்வாறு பிரம்மாவைச் செய்க.

சில்பரத்னம் - படலம் 25ல்

நான்முகர், நாற்கரத்தர், நலந்தரும் பார்வை கொண்டவரும், ரத்ன குண்டலங் கொண்டவரும், லம்ப கூர்ச்சம் கொண்டவர். கருப்பு மான்தோல் அணிந்தவர். பொன்னிறத்தரும், வெள்ளாடையும் கொண்டவர். வலக்கரம் வரதமாயும், எதிர்க்கரம் சுருவமும் கொண்டவர். அதுபோல இடமேற்கரம் கமண்டலமும், வலமேற்கரம் சுருவமும் கொண்டவர். நால் வேதங்களைத் தரித்தவராயோ முன்னால் கொண்டவராயோ அமைக்க.

இடவலப் புறங்களில் சாவித்திரி, சரசுவதியையும், முன்னால் நெய்ப்பாத்திரத்தையும், சுற்றிலும் முனிவர்களையும் அமைக்க. அன்னவாகனத்தைக் கொண்டவராயோ அல்லது தாமரையிலமர்ந்தவராயோ கொள்க. உலக சிருஷ்டி செய்யும் பிரம்மாவை இவ்வாறு அமைக்க.

பிருஹத்சம்ஹிதை - அத்தியாயம் 58ல்

கமண்டலத்தைக் கையில் கொண்டவராயும், தாமரையிலமர்ந்த நான்முகராயும் பிரம்மாவைக் கொள்க.

விஷ்ணு புராணம்

விதி அறிந்தவன், பிரம்மதேவரை சௌமியர், நாற்கரத்தர், பத்மாசனத்தமர்ந்தவர், மகிழ்ச்சியுடையர், நான்முகத்தர், ஏழு அன்னங்கள் பூட்டிய தேரினை உடையவர். இடப்புறத்தில் தொடையில் வைத்த கரமும், ஸ்ருக் ஸ்ருவமும் வலமுற்கரத்தில் ஜெபமாலை, மேற்கரம் குண்டிகை, அனைத்தாபரணம் பூண்ட அழகிய மேனி, சர்வ லட்சணம் பொருந்தியவர், சாந்தி ரூபர், தாமரை இதழொத்த நிறங் கொண்டவர். தியானத்தால் சிறிதே மூடிய கண்கள் எனக் கொண்டு சிலா உருவையோ, சித்திரத்தையோ செய்க.

ஆதித்ய புராணம்

தாமரையிலமர்ந்தவராய் நான்கு முகமுடைய பிரம்மாவைச் செய்க. அவரின் இடப்புறம் சாவித்திரியை வைக்க.

ரூபமண்டனம்

ருக்வேதம் முதலியவைகளின் வேறுபாட்டாலும், கிருதயுகம் முதலிய யுகபேதங்களாலும், விப்ரர் முதலிய வருண பேதங்களாலும், நான்முகரும், நாற்கரமுடையரும் (ஆன பிரம்மா) தாமரையிலமர்ந்தவ



பிரம்மா
(கங்கைகொண்ட சோழபுரம்)



உத்தம தசதாளத்தில் பிரம்மா



பத்மாசனத்தில் பிரம்மா



நான்முகனின் சுதை சிற்பம்
(தஞ்சாவூர்)



சரசுவதி - பிரம்மா - சாவித்திரி



ஹம்ஸவாகன பிரம்மா

ராயும், கூடிய சிகைமுடி கொண்டவராயும், வலப்புறக் கீழ்க்கரத்தில் ஜபமாலை, மேல் ஸ்ருக் ஸ்ருவம், புத்தகம், கமண்டலம் இவைகளைத் தரித்தவராய் அமைக்க.

சாவித்திரியை ஜெபமாலை, புஸ்தகம், தாமரை, கமண்டலம் ஆகியவை கொண்டவளாக வேதமுணர்ந்தோர் (வீடுகளில்) அமைக்க.

சடைமுடி, தாடி, மீசை, சாந்தம், தியானத்திலாழ்ந்த மனம், கமண்டலம், ஜபமாலை தரித்தவர்களாய் பிரம்மனைச் சுற்றி உள்ளவர்களாய் ரிஷிகள் உள்ளனர்.

நாற்கரம், அட்சமாலை, புத்தகம், கமண்டலம், யோகமுத்திரை (கம்), முக்கண், அன்னவாகனம் இவை கொண்ட விசுவகர்மாவைக் கிழக்கிலமைக்க. அக்னி திக்கில் கணேசர், தெற்கில் மாத்ருகர், நிருதியில் சஹஸ்ராட்சர் (சூரியன்), மேற்கில் சயனத்துள்ள விஷ்ணு (ஜலசாயி), வாயுதிக்கில் ருத்திரபார்வதி, வடக்கில் கிரகங்கள், வடகிழக்கில் கமலத்திலமர்ந்த சீதேவி, கிழக்கில் (இடையில்) தரணீதரன் (பூமியைத் தாங்கும் ஆதிசேடன்) இவர்களை வைக்க.

இவ்வாறு பிரம்மாவின் பரிவாரங்களை (ஆயுதனம்) அமைக்க.

பிரம்ம பிரதிஹாரர்கள்

பிரம்மாவுக்கு உதவுபவர்களாய் எண்மர் உள்ளனர். புருஷாகாரர்களாய், கம்பீரர்களாய், உயர்ந்த சடை முடியர்களாய், ஒளிரும் முடியுடையவர்களாய், சதாமகர், பிரியோத்பவர், யக்ஞர், விஜயர், யக்ஞபத்ரகர், சர்வகாமிகர், விபவர், சர்வசாந்திதர் இவர்களைக் கொள்க.

தாமரை, சுருக், புத்தகம், தண்டம், கரகம், ஜபமாலை, ஆகமம், சுருவம், பலகை, கதை, கேடயம், பாசம், அங்குசம் இவற்றில் உசிதமானவற்றைக் கொண்டவர்களாயமைக்க.



பிரம்மன் யந்திரம்

நவக்கிரகங்கள்

ஸூரியன் தியானம்

ரக்தவர்ணம் யௌவனம் ச வர்துலாகார மஸ்தகம்
பங்கஜம் ஹஸ்தயுக்மேச கர்ணயோ ஸ்வர்ண குண்டலம்/
ப்ரத்யூஷா வாம பார்ச்வே ச தக்ஷே கௌரீச பத்மனீ
நாநா பரண ஸம்யுக்தம் ஸூர்யமூர்த்தி மஹம்பஜே//

ஸூரியன் காயத்ரீ

ஓம் பாஸ்கராய வித்மஹே திவாகராய தீமஹி/
தந்ந: ஸூர்ய: ப்ரசோதயாத்//



சிவந்த மேனியையுடையவரும், யௌவன வயதுடையவரும், வட்டமான முகத்தையுடையவரும், இரு கைகளிலும் தாமரை மலரையுடையவரும், சுவர்ண குண்டலங்களைக் காதுகளில் அணிந்திருப்பவரும், இடப் புறத்தில் ப்ரத்யுஷா தேவியையும் வலப்பக்கத்தில் பத்மினியான கௌரியையுடையவரும், பலவிதமான ஆபரணங்களையுடையவருமான சூர்யமூர்த்தியை வணங்குகின்றேன்.

சந்திரன் தியானம்

ச்வேதாங்கம் கம்ரரூபம் ச கோமளாங்கஞ்ச யெளவதம்
சீர்ஷஞ்ச வர்துலா காரம் மந்த ஹாஸ யுதானனம்।
உத்பலம் ஹஸ்தயுக்மேச ஸப்தவிம்ச திலக்ஷணம்
சக்திலீலா ஸமாயுக்தம் சந்த்ரரூப ஹம்பஜே॥

சந்திரன் காயத்ரீ

ஓம் பத்மத்வஜாய வித்மஹே ஹேம ரூபாய தீமஹி।
தந்நஸ் ஸோம: ப்ரசோதயாத்॥



வெண்மையான நிறங்கொண்டவரும், மனங்கவர் உருவத்தையும், அழகான சரீராவயங்களை யுடையவரும், யெளவன வயதுடையவரும், வட்டமான தலையையுடையவரும், புன்முறுவலுடன் கூடிய முகத்தையுடையவரும், நீலோத்பல மலரை இரண்டு கைகளிலும் வைத்திருப்பவரும், அச்வனி முதலான இருபத்தேழு நட்சத்திரங்களிலும் சஞ்சரிப்பவரும், சக்தி, லீலா என்ற இரு தேவியரையும் இருபுறம் உடையவருமான சந்திரனை நான் வணங்குகின்றேன்.

அங்காரகன் (செவ்வாய்) தியானம்

நமாம்யங்காரகந் தேவம் ரக்தாங்கஞ்ச சதுர்புஜம்
சக்தி சூல பீதம் பிரவாள மகுடோஜ்வலம்/
பிரவாளம் பூஷிதாங்கஞ்ச ரக்த வஸ்திரந்து தாரிணம்
ரக்த மால்யாநு சோபாட்யம் ரக்த மேஷஞ்ச வாஹநம்//

அங்காரகன் காயத்ரீ

ஓம் ஆங்கிரசாய வித்மஹே சக்தி ஹஸ்தாய தீமஹி/
தந்நோ: பௌம: ப்ரசோதயாத்//



சிவந்த தேகமுடையவரும், சக்தி, சூலம், கதை, அபயம் இவைகளைத் தன் நான்கு கைகளில் கொண்டவரும், பவழ மணிகளால் கீரிடம், ஆபரணம் பூண்டு செவ்வாடை அணிந்தவரும், சிவந்த புஷ்பமாலை விளங்கச் சிவந்த ஆட்டுகடா வாகனாரூடராய் உள்ளவரும் ஆகிய அங்காரகனை நமஸ்கரிப்போம்.

புதன் தியானம்

புதஞ்சநமதாம் சௌம்யம் குங்குமாபாம் சதுர்புஜம்
கட்க சூல கதா பாணிம் வரதாங்கித முத்ரிதம்/
பீதாம்பரதரம் தேவா பீதமால்யானு சோபிதம்
மரகதாபரணஞ்சைவ ஞானானந்தமயம் சுபம்//

புதன் காயத்ரீ

ஓம் சோமபுத்ராய வித்மஹே மஹாராஜாய தீமஹி/
தந்நோ புத : ப்ரசோதயாத்//



சிவந்த தேகத்துடன் தன் நான்கு கரங்களில் கத்தி, சூலம், கதை வரத முத்திரையுடன், பச்சைப் பட்டாடை அணிந்து பச்சை மலர் மாலை சூடி, மரகத மணிகளான ஆபரணங்களைப் பூண்டவரும், சாந்தமானவரும், ஞான ஆனந்த வடிவமானவரும் ஆகிய புதனை வணங்கி எல்லாச் சுபங்களைப் பெறுவோம்.

குரு (வியாழன்) தியானம்

தப்த காஞ்சன வர்ணாபம் சதுர்புஜ சமன்விதம்
தண்டாக்ஷ சூத்ர மாலாஞ்ச கமண்டுல வரம் ததா/
பீதாம்பர தரம் தேவம் பீதகந் தானு லேபனம்
புஷ்ய ராகமயம் பூஷ்யம் க்ருபாமூர்த்திம் குரும்பஜே//

குரு (வியாழன்) காயத்ரீ

ஓம் ஆங்கிரசாய வித்மஹே சுராசார்யாய தீமஹி/
தந்நோ குரு: ப்ரசோதயாத்//



உருக்கிய தங்க வடிவுடன் தன் நான்கு கரங்களில் தண்டம் ஜபமாலை, கமண்டலம், வரதம் கூடியவரும், பொன்னாடை அணிந்தவரும், மஞ்சள்நிற சந்தனம் பூசியவரும், புஷ்பராக மணியாலாகிய ஆபரணம் பூண்ட வரும், கிருபா மூர்த்தியாகிய குருவை வணங்குவோம்.

சுக்கிரன் (வென்ளி) தியானம்

ஸவருதஸ்ஸா நுகர்ஷோயுக்தோ பூஸம் பவைர்ஹயை
ஸோபாஸங்க பதாகஸ்து சுக்ல: ஸ்யாத்து ரதோ மஹாந்।
தேவதைத்ய குருசுத்தெள பீதச்வேதெள சதுர்புஜௌ
தண்டிநௌ வரதெள கார்யௌ ஸாக்ஷஸூத்ர கமண்டலூ॥

சுக்கிரன் (வெள்ளி) காயத்ரீ

ஓம் பார்கவாய வித்மஹே அசுராசார்யாய தீமஹி।
தந்நோ சுக்ர: ப்ரசோதயாத்॥



அசுர குருவான சுக்கிரனின் ரதத்தைப் பெரியதாகவும் நல்ல இருசிக்கட்டை, மூக்கணை இவைகளையுடையதாகவும், குதிரைகளைக் கொண்டதாகவும், அம்பராத்தூணி, வில், வேல் முதலிய ஆயுதங்களை உடையதாகவும், வெண்ணிறக் கொடியை உடையதாகவும், தேவகுருவும், அசுர குருவுமான குரு, சுக்கிரன், இருவரும் மாசற்றவர்களாகவும் முறையே மஞ்சள், வெண்மை நிறமுடையவர்களாக, நான்கு கரங்களைக் கொண்டவராகவும், அதில் தண்டம், வரத முத்திரை, ஜபமாலை, கமண்டம் இவைகளையுடையவர்களாவும் அமைத்தல் வேண்டும்.

சனி தியானம்

சதுர்புஜம் சனீம் தேவம் சாபபாணம் க்ருபாணகம்
வரதம் பீமதம்ஷ்டரஞ்ச நீலாங்கம் நீலவாஸஸம்।
நீல ரத்ன மலங்க்ருத்யம் நீலோத்பல தரம் சுபம்
ஸர்வ பீடா ஹரம் தேவம் க்ருஹாணா முத்த மோத்தமம்॥

சனி காயத்ரீ

ஓம் காகத்வஜாய வித்மஹே கட்க ஹஸ்தாய தீமஹி।
தந்நோ மந்த: ப்ரசோதயாத்॥



சகல துக்கங்களையும் போக்கியருளுபவரும், உத்தமோத்தமரும், தமது நான்கு கரங்களில் வில், அம்பு, கத்தி, வரதமுத்திரைக் கொண்டவரும், பெரிய கோரைப் பற்களுடன் நீல வஸ்திரம் அணிந்து, நீல மணிகளாலான ஆபரணம் பூண்டவரும், நீலோத்பல மலரை மாலையாக அணிந்தவரும், சுபத்தை அருளுபவரும் ஆகிய சனி பகவானைப் பணிவோம்.

இராகு தியானம்

ராகும் த்விபுஜம் தேவம் க்ருதாஞ்சலி கரம் சுபம்
க்ருஷ்ணாம் பரதரம் மால்யாம் க்ருஷண கந்தாணு லேபனம்/
கோமேதக விபூஷாட்யம் விசித்ர மகுடோஜ்வலம்
க்ருஷ்ண சிம்மாசனம் தேவம் பக்தா நாமிஷ்டகதாயகம்//

இராகு காயத்ரீ

ஓம் ப்ரம்மபுத்ராய வித்மஹே ஸௌஹிகெயாய தீமஹி/
தந்நோ ராஹு: ப்ரசோதயாத்//



அஞ்சலியுடன் கூடிய இரு கரங்களைக் கொண்டவரும், கருப்பு நிற ஆடையணிந்து, கருப்பு நிற பூமாலை பூண்டு, கருஞ்சந்தனம் பூசியவரும், கோமேதக மணியால் ஆகிய ஆபரணங்களையும், அழகான கிரீடத்தையும் அணிந்தவரும், கருஞ்சிம்ம வாகனரும் ஆகிய இராகு பகவான் பக்தர்களின் இஷ்டங்களைத் தருபவராவார்.

கேது தியானம்

ஸர்ப்ப க்ரீவம் த்விநேத்ரஞ்ச த்விபுஜாஞ்ஜலி ஹஸ்தகம்
வஜ்ரமாபரணஞ் சைவ சித்ர வஸ்திரேண தாரிணம்।
விசித்ர மகுடோ பேதம் ரக்த புஷ்பேண ஶோபிதம்
ஜ்ஞான மோக்ஷதரம் கேதும் ஜ்ஞானசித்தி பிரதாயகம்॥

கேது காயத்ரீ

ஓம் அஸ்வத்வஜாய வித்மஹே சூலஹஸ்தாய தீமஹி।
தந்நோ கேது: ப்ரசோதயாத்॥



பாம்பின் தலையும், இரண்டு கண்களும், அஞ்சலியுடன் கூடிய இரு கைகளும் உடையவரும், வஜ்ர மணியாலான ஆபரணம், சித்திர வஸ்திரம், தரித்தவரும், விசித்திரமான முடி அணிந்து செம்மலர் சூடி விளங்குபவரும் ஆகிய கேது பகவான் ஞான மோக்ஷத்தையும், ஞானப் பேற்றையும் கொடுத்தருளுபவர் ஆவார்.


புதன்
சுக்ரன்
சந்திரன்
புதன்
சுக்கிரன்
சந்திரன்
குரு
சூரியன்
செவ்வாய்
கேது
சனி
ராகு
குரு
அங்கார-கன்
கேது
சனி
ராகு

நவகிரக யந்திரம்



சூரியன் யந்திரம்



சூரியன் யந்திரம்



சந்திரன் யந்திரம்



சந்திரன் யந்திரம்



செவ்வாய் யந்திரம்

புதன் யந்திரம்





குரு யந்திரம்

சுக்கிரன் யந்திரம்




ம
சனீஸ்சாராயநமஹ

சனி யந்திரம்



ராகு - கேது யந்திரம்

சப்தரிஷிகள்

பிரஜாபதி, பிரமரிஷி, தேவரிஷி, மகாரிஷி, சுருதரிஷி, ராஜரிஷி என கூறப்படுகின்ற பல்வேறு வகையான ரிஷிகளுள் சப்தரிஷிகள் என அழைக்கப்படும் கசியபர், அத்திரி, வஷிட்டர், விசுவாமித்திரர், கௌதமர், ஜமதக்கினி, பரத்துவாசர் என்னும் ஏழு ரிஷிகளும் குறிப்பிடத்தக்கவர்கள். ஆகாயத்தில் கலப்பை வடிவில் தென்படும் 'பெரும் கரடி' என அழைக்கப்படும் நட்சத்திரங்களைக் கொண்ட கூட்டத்திலுள்ள நட்சத்திரங்களாக இந்த ஏழு ரிஷிகளும் அடையாளம் காணப்படுகின்றனர். இந்த ஏழு நட்சத்திரங்களின் தொகுதியை சப்தரிஷி மண்டலம் என அழைப்பர். இவர்களுடன் தொடர்புடைய பல வரலாறுகள், பல வேதங்களிலும், இதிகாசங்களிலும், புராணங்களிலும் இடம் பெற்றுள்ளன.

1. கசியபர்

இவர் பிரஜாபதி என அழைக்கப்படுகின்றார். பல வேத பாடல்கள் இவரால் தரப்பட்டவை எனக் கூறப்படுகின்றது. கசியபர் அவரது சந்தான விருத்தி அம்சத்திற்காக குறிப்பிடப்படுகின்றார். இவருக்கு பல தேவர்களும், அசுரர்களும், மன்னர்களும், ரிஷிகளும் தட்சனின் பதின்மூன்று புதல்விகள் மூலமும் மற்றைய மனைவியர் மூலமும் பிறந்தனர். ஆதித்தி என்ற மனைவி மூலம் இவருக்குப் பல தேவர்கள் பிறந்தனர். அவர்களுள் பன்னிரண்டு ஆதித்தியர்கள் (சூரியன்கள்) மிகவும் முக்கியமானவர்கள். இதே போன்று அரிஷ்டா, முனீ என்போர் மூலம் காந்தவர்களும், திதி மூலம் அசுரர்கள், தைத்யர்களும், விஷ்ணுவின் வாகனமான கருடர், வினதா என்ற மனைவி மூலமும், தானவர்கள் தனு என்பவர் மூலமும், நாகர்கள் கட்ரு மூலமும் யக்ஷர்களும், ராட்சதர்களும் காஷா மூலமும் இவருக்குப் பிறந்தனர். சுரபீ என்ற மனைவி மூலம் ருத்திரர்களும், காமதேனு உட்பட அனைத்து மாடுகட்கும் தாயான ரோகிணியும் இவருக்குப் பிறந்தனர். கசியபரின் சந்ததியினர் காசியபர் என அழைக்கப்படுவர்.

2. அத்திரி

இவர் பிரம்மாவின் கண்களிலிருந்து தோன்றியவர். அக்கினி, இந்திரன், அஸ்வின் என்போரைப் போற்றும் பல வேதப் பாடல்கள் இவரால் தரப்பட்டவையாகும். தட்சனின் மகளான அனுசூயா இவரது மனைவி. இவர்கள் இருவரையும் பற்றி இராமாயணத்தில் குறிப்புகள் உண்டு. இராமர் காட்டுக்குச் சென்றபோது இவரது ஆசிரமத்தில் தங்கினார். தெய்வ பக்திக்காவும் கணவனின் மீதான விசுவாசத்தின் காரணமாகவும் போற்றப்படும் அனுசூயா இதன் மூலம் அதிசய சக்திகளைப் பெற்றிருந்தார். அனுசூயா தொடர்பான பல கதைகள் உண்டு. இவர்கட்கு சந்திரன் மகனாகப் பிறந்தான். பாண்டவர்களையும் கௌரவர்களையும் கொண்ட சந்திர வம்சம் அத்திரியினால் நிறுவப்பட்டதாகும். அத்தரியின் வம்சத்தினர் ஆத்ரேய என்றழைக்கப்படுவர்.

Ref : Department of Hindu Religious and Cultural Affairs, 98-Ward Place, Colombo-7. - Vol -V - 2000)

3. வசிட்டர்

பிரம்மனின் மூச்சிலிருந்து தோன்றியவர். இவர் சூரிய வம்சத்தினருக்கு - சிறப்பாக தசரதருக்கும் இராமருக்கும் புரோகிதராக இருந்தவர். காமதேனு என்னும் தேவலோக பசுவினைச் சொந்தமாகக் கொண்டவர். இருக்கு வேதத்தின் ஏழாவது மண்டலம் வசிட்டராலும்,அவரது சந்ததியினராலும் தரப்பட்டவையாகும். அத்துடன் இதே சம்ஹிதையின் பல பாடல்களும் இவருக்குரியனவாகும். இவர் இராமருக்கு வேதாந்த உபதேசம் செய்த நூல் ஞானவாசிட்டம் என அழைக்கப்படுகின்றது. வாஸ்துவித்யா என்ற மனையடி சாஸ்திரத்தின் முதல் ஆசிரியராக வசிட்டர் கூறப்படுகின்றார். வாசிட்ட சித்தாந்தம் என்ற சோதிட நூலும் வசிட்ட ஸ்மிருதியும் இவரால் இயற்றப்பட்டனவாகும். வசிட்டருக்கும் விசுவாமித்திரருக்கும் வாழ்நாள் முழுவதும் நிலவிய பகை, போட்டி தொடர்பான கதைகள் இராமாயணத்திலுள்ளன. காலை நட்சத்திரமான அருந்ததி இவரது மனைவியருள் குறிப்பிடத்தக்கவர். இவர்கள் இருவரும் சிறந்த தம்பதியாக விளங்கிய காரணத்தினால் திருமணச் சடங்குகளில் அருந்ததி பார்த்தல் என்ற சடங்கு முக்கியமானதொன்றாகக் கருதப்படுகின்றது. வசிட்டரின் வம்சத்தினர் வாசிஸ்டர் என்றும் வாஷ்கலர் என்றும் அழைக்கப்படுவர்.

4. விசுவாமித்திரர்

கன்னியாகுப்ஜத்தின் மன்னன் காதி என்பவனின் மகன் என வேதங்களிற் கூறப்பட்டுள்ளது. பிராமணருக்குரிய குணாதிசயங்களைக் கொண்ட தாய்க்குப் பிறந்த சத்திரியரான விசுவாமித்திரர் கடுமையான தவத்தின் பயனாகத் தன்னைப் பிராமணராக உயர்த்திக் கொண்டார். வசிட்டரிடமிருந்து காமதேனு என்னும் பசுவினை அடைவதற்கு விசுவாமித்திரர் எடுத்த முயற்சி வசிட்டரின் தவ சக்தியினால் தடுக்கப்பட்டது. சத்திரியர்களைவிட பிராமணர்கள் பலம் மிக்கவர் என இதன் மூலம் உணர்ந்த விசுவாமித்திரர் அரச பதவியைத் துறந்து தனக்கு பிராமண அந்தஸ்து தரும்படி பிரம்மாவை நோக்கிக் கடும் தவம் புரிந்து இறுதியில் பிரம்மரிஷி என்று அரிய பட்டத்தினைக் கொண்டார். விசுவாமித்திரருக்குக் கொடுக்கப்பட்ட இந்தப் பதவியினை வசிட்டர் ஏற்றுக்கொள்ளாததினால் இவர்கட்கிடையேயான பகை தொடர்ந்தது. இப் பகைமையானது ஆரம்ப கால இந்தியாவில் பிராமண, சத்திரிய மேலாதிக்கப் போட்டியின் வெளிப்பாடாக அமைந்தது.

5. கௌதமர்

இவர் தீர்க்க தம முனிவரின் புதல்வர். இவரது மனைவி அகலிகை, சதானந்தர் இவர்களது புதல்வர். அகலிகை இந்திரனால் களங்கமுற்றதனால் கல்லாகப் போகும்படி சபிக்கப்பட்டாள் என்றும் பின்பு இராமரின் திருவடி பட்டு பாப விமோசனம் பெற்றாள் என்றும் இராமாயணத்திற் கூறப்பட்டுள்ளது.

6. ஜமதக்கினி

இவர் இருசிகர் என்பவரின் புதல்வர். பிருகு முனிவரின் புதல்வர் என்றும் கூறப்படுகின்றார். இவர் சாஸ்திரங்களில் ஆழ்ந்த தேர்ச்சியும், வேதங்களில் முழுமையான நிபுணத்துவமும் பெற்றிருந்தார். இவரது மனைவி ரேணுகா, பரசுராமர், உருமதி, விசுவாவசு, உத்சாகன் என்போர் இவரது புதல்வர்கள். மனைவி ரேணுகை கற்பு நெறியிலிருந்து தவறியதாகக் கருதி மகனான பரசுராமனைக் கொண்டு அவரைக்

கொல்வித்தார். பின்பு பரசுராமர் வேண்டியதற்கிணங்க ரேணுகைக்கு உயிர் கொடுத்தார். கார்த்தவீரியன் என்னும் அரசனின் புதல்வர்களால் ஜமதக்கினி கொல்லப்பட்டார். இதனால் கோபமுற்ற பரசுராமர் சத்திரிய வம்சத்தினைப் பழிவாங்கினார்.

7. பரத்துவாசர்

இவர் இராமரின் நண்பரும், நலன் விரும்பியும், என இராமாயணத்தில் கூறப்படுகின்றது. இராமர் காட்டிற்குச் சென்றபோது பிரயாகைக்கு அருகிலிருந்த இவரது ஆசிரமத்தில் தங்கினார். இருக்கு வேதத்தின் ஆறாவது காண்டப் பாடல்கள் இவரால் தரப்பட்டவை. இவரது மகன் துரோணர். இவர் பாண்டவ, கௌரவ இளவரசர்கட்கு போர் வித்தைகளைக் கற்றுக் கொடுத்தார். பாரத்துவாசரின் வம்சத்தினர் பரத்துவாசர் என அழைக்கப்படுவர்.

அம்சுமத்பேதம் - படலம் 49ல்

முனிவர்கள் - மஞ்சள்நிற மேனியர், பலவகை வண்ண உடைகள் கொண்டவர். முதிர்ந்த வயதினர், சாந்தர்கள் (ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்), சடைமுடி கொண்டவர்கள். மார்பில் படுமளவு நீண்ட (ஒட்டிய) முகவாயுடையவர், முப்புரி நூலர், திரிபுண்டரமாக நீறணிந்தவர், நின்றோ அமர்ந்தோ இருப்பவர். வலக்கையில் தண்டமும், இடக் கரத்தில் குடையும் கொண்டவர். அல்லது வலக்கையில் ஞானமுத்திரை கொண்டவர். இடமுழந்தாளில் வைத்த இடக்கர முடையவர். மனு, வசிட்டர், புலஸ்தியர், கௌதமர், ஆங்கீரசர், விசுவாமித்ரர், பரத்வாஜர் எனும் ஏழு முனிவர்கள் (சப்த ரிஷிகள்) எனப் பெயருற்றவர்கள்.

சுப்ரபேதம் - படலம் 48ல்

பிருகு, வசிட்டர், புலஸ்தியர், புலகர், கிரது (க்ரது), காசியபர், கௌசிகர், ஆங்கிரஸ் என எழுவர் முனிவர்களெனச் சொல்லப்பட்டனர். மரவுரியும், சடைமுடியும் கொண்டவர், இன்முகத்தர், தண்ட மேந்தியவர், மெலிந்த இடையினர், வெண்ணிற ஆடையர், சுபர்கள், அழகிய கண்களும், பொன்மேனியும் கொண்டவர்களாய் இம்முனிவர்களின் மனைவியர் (ரிஷிபத்தினிகள்) சொல்லப்பட்டனர்.

பூர்வகாரணாகமம் - படலம் 13ல்

அகஸ்தியர், புலஸ்தியர், விசுவாமித்திரர், பராசரர், ஜமதக்னி, வால்மீகி, சனத்குமாரர் என எழுவர். வெண்ணிற ஆடையும், முப்புரி நூலும் கொண்டவர். வெண்மையான மேலாடை தரித்து, சடையும் மரவுரியும் கொண்டவர்கள் கமண்டலம், ஜபமாலையுடன் நீண்ட தாடி மீசை கொண்டவர்கள்.

* * *

சக்தி வழிபாடு

சக்தி வழிபாடு

பெண் தெய்வ வழிபாடு அல்லது தாய்த் தெய்வ வழிபாடு மிகவும் புராதனமானது. கி.மு. 7000 ஆண்டுகளிற்குரிய நியோலிதிக் காலத்திலும் (புதிய கற்காலத்திலும்), அதற்கு முந்திய காலப் பகுதியான கி.மு. 25,000 ஆண்டுகளிற்கு உரியதுமான மேலைப்பலியோலிதிக் காலத்திலும் (பழைய கற்காலத்திலும்) பெண் தெய்வ வழிபாடு உலகெங்கணும் காணப்பட்டமைக்கான சான்றுகள் தொல்பொருளியலாளர்களால் வெளிக்கொணரப்பட்டுள்ளன. பெண்ணை முதன்மைப்படுத்தியே கிரியைகளும், சமய நம்பிக்கைகளும் தோன்றினவென யேம்ஸ் பிரேசர், மகாறெற் மீட் போன்ற மானிடவியலாளர்களும் எடுத்துக் காட்டியுள்ளனர். அவர்களுடைய அபிப்ராயப்படி மானிட வளர்ச்சியின் தொடக்கக் காலத்தில் அதாவது புணர்ச்சியும் மகப்பேறும் ஒன்றோடொன்று தொடர்புடையதென்பதை அறியாத காலத்தில் மக்கட் பேறு பெண்ணிற்கேயுரிய இயற்கைவளமென மனிதர் கருதினர். தன்னினத்தைப் பெண்ணாலேயே காப்பாற்ற முடியுமென்ற நம்பிக்கையும் அவர்களிடமிருந்தது. அதன் காரணமாகத் தெய்வத்தைப் பெண்ணாக வழிபடத் தொடங்கியதும் அவ்வழிபாடு தாய்த் தெய்வ வழிபாடாகியது. ஒப்பீட்டளவில் மிகப் பிந்திய காலத்துக்குரியதாயினும் தாய்த்தெய்வத்தின் முதன்மைச் சுட்டும் தேவி உபநிடதச் சுலோகங்களை இங்கு உதாரணத்திற்கு எடுத்துக் காட்டலாம்.

''தேவி (பராசக்தி) ஒருத்தியே முன்பு இருந்தாள். அந்தத் தேவியே சராசரங்களின் வடிவமான பிரமாண்டத்தைப் படைத்தாள். அவள் காமகலை எனவும் சிருங்கார கலை எனவும் அறியப்படுகிறாள்''.

''அவளிடமிருந்தே பிரம்மா உண்டானார். விஷ்ணு உண்டானார். ருத்திரன்....... எல்லாத் தேவகணங்களும் ..... கந்தர்வர்கள், அப்ஸரஸுகள், கின்னரர்கள் .... உண்டாயினர். போக வஸ்துக்களும், சக்தி படைத்த அனைத்தும் உண்டாயிற்று..... எல்லாப் பிராணிகளும், தாவர சங்கமங்களும் உண்டாயின''.

கி.மு. 25000 ஆண்டுகளிற்குரிய கல், எலும்பு, களிமண் ஆகியவற்றிலான அளவில் சிற்றுருவிலான வழிபாட்டிற்குரிய பெண்ணுருவங்கள் கண்டுபிடிக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. கிறிஸ்து பிறப்பதற்கு நாற்பத்தொன்பது ஆண்டுகளுக்கு முன்பு சிசிலி நாட்டைச் சேர்ந்த டையோடோரஸ் என்பாரின் வடஆப்ரிக்கா மற்றும் கிழக்கு நாடுகளின் பயணக் குறிப்புகள் மிகவும் சுவையானவை; சமூகத்திலும், சமய வழிபாட்டிலும் பெண்ணாதிக்கம் நிலவியமை பற்றிய குறிப்புகள் அதிலுண்டு. பண்டைய எதியோப்பியாவிற் பெண்கள் ஆயுததாரிகளாகத் திரிந்தனரென்றும், அங்கு குழுமணமுறை காணப்பட்டதென்றும், அக்கால லிபியாவில் பெண் தெய்வம் உன்னத நிலையிலிருந்ததெனவும், பெண் போர்த்தெய்வ வழிபாடு காணப்பட்டதெனவும் குறிப்பிடப்படுகிறது. பெண் தெய்வ வழிபாடு பாபிலோனியா, எகிப்து, கிரேக்கம் ஆகிய பகுதிகளிற் காணப்பட்டதுடன், அது ஞானம், தீர்க்க தரிசனம் என்பனவற்றைத் தருவதாகவும் கருதப்பட்டது. மத்திய தரைக் கடற் பிரதேச நாடுகளில் பாம்பு பெண் தெய்வமாக வழிபட்டமைக்கான சான்றுகளும் கிடைத்துள்ளன. பாம்பு பாலியற் குறியீடாகும். இவ்வாறு தொடக்ககாலச் சமயத்தில் பெண் தெய்வமே வழிபடப்பட்டதென்றும், காலப் போக்கில் ஆண் தெய்வம் முதன்மை ஸ்தானம் பெற்றதென்றும் மேளின் ஸ்ரோன் குறிப்பிடுகிறார். இந்த மரபு தமிழ் மரபிற்கும் அன்னியமானதொன்றன்று.

சங்க இலக்கியங்களிலும் பெண் தெய்வமான கொற்றவையின் வழிபாடு காணப்பட்டது. கொற்றவை பரவலாக திராவிட மக்களால் வழிபடப்பட்டவள். தென்னிந்தியாவிற் காணப்பட்ட வேட்டையாடும் இனக் குழுக்களால் வழிபடப்பட்டவளென்றும், ஆநிரை கவர்வதில் வெற்றியைப் பெற்றுத் தருபவளென்றும், இரத்தப் பலியினால் மகிழ்விக்கப்படுபவளென்றும் குறிப்பிடப்படுகிறது. விஷ்ணு புராணத்திலும் பாகவத

புராணத்திலும் கொற்றவையென்ற பிறிதொரு பெண் தெய்வம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. போர்த் தெய்வமாகவும், சில சந்தர்ப்பங்களில் மாதிருக்களில் ஒன்றாகவும் கருதப்படும் இத்தெய்வம், மூர்க்கமுடையதாய், விரிந்த சடையுடன், அச்சம் தருகிற தோற்றத்தையுடையதாய் விவரிக்கப்படுகிறது. நிர்வாணமாய் விரித்த சடையுடன் காணப்படும் இவளால் ஈர்க்கப்படாதிருப்பதற்காக விஷ்ணு தன் தலையைத் திருப்பிக் கொண்டதாக பாகவத புராணம் குறிப்பிடுகிறது. (10.63.20). போர் நிகழுமிடங்களிற் காணப்படுபவளாக விபரிக்கபடுமிவள் பற்றிய வருணனையுடன் சங்க இலக்கியங்கள் பேசும் கொற்றவையை இணைத்து நோக்கலாம்.

கிறிஸ்து சகாப்தத்திற்கு முற்பட்ட ஆதித் தாய்த் தெய்வ வழிபாட்டிற்குரிய சான்றுகள் தமிழ்நாட்டிலும் கிடைத்துள்ளன. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூரில் பெருங் கற்காலப் பண்பாட்டிற்குரிய புதை குழிகளிலிருந்து 3 அங்குல உயரமான, செப்பிலான பெண்ணுருவம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதன் காலம் கி.மு. 8ஆம் நூற்றாண்டாகலாம். (நாகசுவாமி:142). கிழக்கு மாகாணத்தில் இன்று வரை காணப்படும் கண்ணகியம்மன், நாச்சியம்மன், மாரியம்மன், திரௌபதியம்மன் முதலான பெண் தெய்வங்களின் வழிபாடும் வரலாற்றுத் தொடர்ச்சியை இன்றுவரை எமக்குணர்த்துவதாகக் காணப்படுகிறது.

இந்து மரபில் சக்தி வழிபாடு

இந்து மரபில், பெண்ணாக ஆள் நிலைப்படுத்தப்பட்ட ஆற்றலே சக்தி தத்துவமெனவும் அதன் வழிபாடு சக்தி வழிபாடெனவும் அழைக்கப்படும். சக்தி தத்துவம் ஆண் தத்துவத்திலிருந்து வேறுபட்டதும், செயல்முனைப்புடையதாயுமுள்ள ஒன்றாகும். சக்தி வழிபாடு பற்றிய குறிப்புகள் இருக்கு வேதத்தில் மிகவும் குறைவாகவே உள்ளன. வேதகால மனிதன் தொடர்ச்சியாகத் தெய்வீக அருளை வேண்டி நின்றான். அவ்வருள் தெய்வங்களின் உள்ளுறை ஆற்றலாகக் கொள்ளப்பட்டது. ''சசி'' என்ற பிறிதொரு மூலத்திலிருந்து பெறப்பட்டதாகவே இருக்கு வேதம் குறிப்பிடுகிறது. இயற்கையாற்றலைப் பெண்மைத் தத்துவமாக உருவகிக்கும் சிந்தனை வேதங்களில் இடம்பெற்றாலும், தாந்திரிகக் கோட்பாடுகளிலேயே அது சக்தி வழிபாடாக முதன்மை பெற்றது. வேதங்களும், பிராமணங்களும் கிரியைகளை முதன்மைப் படுத்தியதால் அக்காலத்தில் சக்தி வழிபாடு பெருவழக்கு பெறாதிருந்திருக்கலாம்.

பிற்கால இந்து மரபில் செல்வாக்குப் பெற்ற சிவ வழிபாடு பெண் தெய்வ வழிபாட்டுடன் கலப்புற்ற நிலையில் சக்தி வழிபாடாகியது. பார்வதி, உமை முதலிய பெண் தெய்வங்கள் தொடக்கத்திலே சக்தி தத்துவத்துடன் வெளிப்படையான தொடர்பைக் கொண்டிராத பொழுதும், காலப்போக்கில் அவை சக்தி வழிபாட்டின் முதன்மைத் தெய்வங்களாயின. உதாரணமாக, சக்திகளின் ஒன்றான அம்பிகையின் அடைமொழியான சாகம்பரி (மூலிகை வளம்) தாவரங்களுடன் தொடர்புடையதாய், தாவரங்களின் தெய்வமான சிவனுடன் இணைத்துப் பேசப்படுவது குறிப்பிடத்தக்கது. பிறிதொரு சக்தியான துர்க்கை பல்வேறு அவதாரங்களைக் கொண்டதுடன், வேறு பிற சக்திகளும் துர்க்கையில் இருந்து தோன்றின. துர்க்கை சில சந்தர்ப்பங்களில் அம்பிகையென அழைக்கப்பட்டதுடன், அம்பிகையின் நெற்றியிலிருந்து காளியும்; காளியிலிருந்து அழித்தல் சக்தியான சாமுண்டியும் தோன்றியதாகப் புராணங்கள் குறிப்பிடும். மகாபாரதத்திலும், புராணங்களிலும் சக்தி, பலவகையான பெயர்களால் குறிப்பிடப்பட்டாலும், அவையனைத்தும் மகாதேவியின் பிரிக்கமுடியாத அம்சங்களாகுமெனப்படுகிறது.

வைஷ்ணவத்திலே சக்தியை ஆள்நிலைப்படுத்தப்பட்ட ஆற்றலாக உருவகிக்கும் போக்கு முதன்மை பெறாதிருப்பினும், ஸ்ரீ, பிகு, சரஸ்வதி, ப்ரீதி, கீர்த்தி, சாந்தி, துஷ்டி, புஷ்டி ஆகிய எண்வகைச் சக்தி மார்க்கங்களினூடாக இறைவனின் காக்கும் சக்தி பக்தர்களுக்கு நன்மையளிக்கிறதென வைஷ்ணவம் ஏற்றுக் கொள்கிறது. உலக நன்மைக்காக விஷ்ணு பல்வகை அவதாரங்களை மேற்கொள்கிறார் என்ற நம்பிக்கையும் அதற்கொரு காரணமாயிருக்கலாம்.

''தொடக்கத்தில் விஷ்ணு வழிபாடு பிராமணியத்திற்குரியதாயும், தந்தை வழிச் சமூக அமைப்பிற்கு உரியதாயுமிருக்க, சிவ வழிபாடோ அதன் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் பெரும்பான்மையும் உள்ளூர்க்குரியதாய், தாய்வழிச் சமூக அமைப்பிற்குரியதாய், இருந்ததெனக் கருதுவோரும் உண்டு'' எனக் கருதப்படுகின்றது.

இந்து மரபில் சக்தியை வழிபடுபவர்கள் சாக்தர்கள் என அழைக்கப்படுவர். செயல்முனைப்புடைய தத்துவமாகிய சக்தி தத்துவமே அனைத்திற்கும் ஆதாரமானதென அவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். சக்தி இலக்கண ரிதியாக பெண்பாலை மட்டும் சுட்டாது. கருத்தடிப்படையிலும் பெண் தத்துவத்தைச் சுட்டுகிறது. எல்லாத் தோற்றப்பாடுகளிலும் இயற்கையாற்றலொன்று செல்வாக்குச் செலுத்துகிறதென ஆதிமனிதன் கருதினான். சமயக் கருத்துகளில் இந்த நம்பிக்கை பெரும் செல்வாக்குச் செலுத்தியமையை தேவி சூக்தம் என்ற இருக்குவேதப் பாடல்களிற் காணலாம். மனிதன், மிருகங்கள் உட்பட பிரபஞ்சம் அனைத்திலும் உள்ளார்ந்திருக்கும் தெய்வீக ஆற்றல் அல்லது சக்தி தத்துவம் பற்றி, சிறப்பானதும் அதேவேளை மிகவும் எளிமையானதுமான சுலோகங்கள் மேற்படி தேவி சூக்தத்திற் காணப்படுகின்றன.

இருக்கு வேதத்திலும் அதனைத் தொடர்ந்த காலப் பகுதியில் எழுந்த நூல்களிலும் சக்தி வழிபாடு முழு வளர்ச்சியடையாத நிலையிற் காணப்பட்டாலும், சாக்தம் ஒரு அங்கீகரிக்கப்பட்ட வழிபாட்டு முறையாக மத்திய காலப் பகுதியிலேயே மிகவும் செல்வாக்குப் பெற்றதெனலாம். சமய ஈடுபாட்டின் வெளிப்பாடும், அவ்வெளிப்பாட்டிற்கான முறைகளும் இந்து மரபில் பல்வேறு வடிவங்களைப் பெற்றுள்ளது. ஒருபுறம் மிகக் கடுமையான துறவறமும், மறுபுறம் நுகர்வியல்பான தாந்திரிக நடைமுறைகளுமென மிகப் பரந்த நடைமுறைகள் இந்து மரபிற் காணப்படுகின்றன. சமய நடைமுறைகள் பற்றிய இம்மாறுபட்ட நிலைப்பாடு சாக்த வழிபாட்டை இருமுறை வழிமுறைகளாக வளர்ச்சி அடைய வைத்தது. துறவற வாழ்க்கையை முதன்மைப்படுத்திய பிரிவு வலக்கை மார்க்கம் அல்லது தக்ஷிணசாரமெனவும், மறுபிரிவு இடங்கை மார்க்கம் அல்லது வாமசாரமெனவும் அழைக்கப்பட்டது. யோகத்துடன் கூடவே மது அருந்துதல், மாமிசம் புசித்தல், பெண்களைப் புணர்தல் என்பவற்றையும் துறவற இலக்குகளுடன் இணைத்துக்கொண்ட வழிமுறையொன்றை வாமசாரம் பின்பற்றியது. சில சாக்தர்கள் மந்திர தந்திரம், இரசவாதம் முதலிய உத்திகளையும் உள்ளடக்கிய வகையில் தமது வழிபாட்டு முறைகளை அமைத்துக் கொண்டனர்.

வங்காளம், அசாம் போன்ற பகுதிகளிலும், தென்னிந்தியாவிலும் சாக்தம் மிகவும் செழிப்புற்றிருந்தது. சிவனுடன் இணைந்ததாயினும், சக்தி வழிபாடு சிவ வழிபாட்டிலிருந்தும் வேறுபட்டது. சக்தியின்றி சிவன் உயிரற்றதெனக் குறிப்பிடும் சாக்த கருத்துரை இங்கு குறிப்பிடத்தக்கது. (இதனை மணப்பெண் இல்லாத மணமகன் இறந்தவனையொப்பானெனப் பௌத்த தந்திர நூல்கள் குறிப்பிடும்). மேற்படி கூற்று சாக்தத்திற் பெண் தெய்வங்களின் முதன்மை ஸ்தானத்தையும், ஆண் தெய்வங்களனைத்தும் இரண்டாம் பட்சமானவை என்பதையும் வலியுறுத்துகிறது.

வேதகாலப் பெண் தெய்வங்கள்

இந்து சமயத்தின் ஆதார நூல்களாகக் கருதப்படும் வேத இலக்கியங்களிற் பெரும்பாலும் ஆண் தெய்வங்களே முதன்மை ஸ்தானத்தைப் பெற்றிருக்கின்றன. அக்னி, சோமன், இந்திரன் முதலான தெய்வங்களே முதன்மைத் தெய்வங்களும் வருணன், மித்திரன், சூரியன், பிரகஸ்பதி, விஸ்வகர்மன் முதலான வழிநிலைத் முதன்மைத் தெய்வங்களும் பிரதான இடத்தைப் பெற்றுள்ளனர். முதனிலைத் தெய்வங்களில் குறிப்பிடத்தக்க பெண் தெய்வமென எதுவுமில்லை. வழிநிலைத் தெய்வங்களோடு ஒப்பிடுமளவிற்கு சமத்துவமுள்ள பெண் தெய்வமாக உஷா காணப்படுகிறாள்.

சக்தி பீடங்கள்

சிவபெருமானை மதிக்காமல் தக்கன் செய்த யாகத்திற்குச் சென்ற பராசக்தியாகிய தாக்ஷாயணி, அங்கு தானும் தனது நாயகனும் அவமதிக்கப்பட்டதையறிந்து மனம் பொறுக்காமல் அந்த யாக குண்டத்திலேயே விழுந்து உயிர் துறந்தாள். இதனைக் கேள்வியுற்ற சிவபெருமான், அடங்காச் சினத்துடன் அங்கு வந்து கோபக் கனலாக மாறி தனது தேவியின் இறந்த உடலை எடுத்துச் சிரசின் மேல் வைத்துச் சுழன்று சுழன்று ஆவேசமாக ஆடினான். உலகமே அஞ்சியது. அழிவு நெருங்கி விட்டதோ என்று பிரம்மா முதல் அனைவரும் நடு நடுங்கினர். கடல் பொங்கியது. கோள்கள் நிலைதடுமாறிச் சுழன்றன. பூமி நடுங்கியது. இதனைப் பார்த்த காத்தற் கடவுளாகிய திருமால், தனது சக்கராயுதத்தை ஏவிப் பராசக்தியின் உடலைத் துண்டுகளாக்கித் தெறித்து விழச் செய்தார். பாரத நாட்டின் பல்வேறு பாகங்களில் உடற்பாகங்கள் விழுந்தன. அவையே சக்தி பீடங்களாகத் திகழ்கின்றன.

சக்தி பீடங்கள் 64 என்றும், 108 என்றும், 51 என்றும் கூறுவர். ‘பீட நிர்மயா’ என்ற நூல் 51 சக்தி பீடங்களையே சிறப்பாகக் குறிப்பிடுகின்றது.

1. காஞ்சிபுரம் : இது ஸ்ரீசக்கர பீடம். தேவியின் எலும்புகள் இங்கு வீழ்ந்ததாகக் கூறுவர்.
2. மதுரை : இது மந்த்ரிணி பீடம்.
3. திருஆனைக்கா : இது வராகி பீடம்.
4. திருக்குற்றாலம் : இது பராசக்தி பீடம்.
5. திருவாரூர் : இது கமலை பீடம் - காமகலா பீடம் என்றும் கூறுவர்.
6. கன்னியாகுமரி : இது தேவியின் பிருஷ்ட பாகம் விழுந்த இடம்.
7. அம்பத்தூர் : சென்னைக்கருகிலுள்ள வைஷ்ணவி ஆலயம். சக்திபீட வரிசையில் ஐம்பத்தோரூர் என்பதே அம்பத்தூர் என மருவியதாகக் கூறுவர்.
8. கோகர்ணம் : வலது காது விழுந்த இடம். பரசுராம க்ஷேத்திரம். தேவியின் திருநாமம் பத்ரகர்ணிகை.
9. ஸ்ரீசைலம் : இடது காது விழுந்த இடம். சிறந்த சிவத்தலம். அம்பிகையின் திருநாமம் பிரமராம்பாள். மாதவி பீடம்.
10. பூரி : நாபி விழுந்த இடம். உத்கலம் எனப்படும் ஒரிசா மாநிலத்தில் உள்ளது. பைரவ பீடம். தேவியின் திருநாமம் விமலை.
11. சிருங்கேரி : மைசூர் மாநிலத்தில் உள்ளது. தேவி சாரதையாகத் திகழ்கின்றாள்.
12. கோலாப்பூர் : கண்கள் விழுந்த இடம். அன்னை மகா இலக்குமியாக விளங்குகின்றாள்.
13. அரசூர் : தனம் விழுந்த இடம். ஆபூ மலைக்கு அருகில் உள்ளது. இங்கு சிலா வடிவில் இல்லாமல் அம்பிகை யந்திர வடிவில் அம்பிகா என்ற திருநாமத்துடன் விளங்குகின்றாள்.
14. ஜலந்தரா : தனம் விழுந்த இடம். தேவியின் திருநாமம் திருபுரமாலினி.
15. துவாராவாட் : குஜராத் மாநிலத்தில் உள்ளது.
16. பிரபாசா : திருவயிறு விழுந்த இடம். இதனை சோமதத்தலம் என்றும் கூறுவர்.

17. பராகத் : இக்குன்றின் அமைப்பே காளியாக யந்திர உருவில் உள்ளது.
18. சிம்லா : தேவியின் திருநாமம் சியாமளா. இதுவே திரிந்து சிம்லாவாயிற்று.
19. மானசரோவர் : இது ஒரு தடாகம். தலை விழுந்த இடம். இமயத்தில் உள்ளது. அம்பிகை தாட்சாயணி. குமுதா பிடம்.
20. காஷ்மீரம் : கழுத்து விழுந்த இடம். அம்பிகையின் திருநாமம் மகாமாயை.
21. நேபாளம் : முழங்கால் விழுந்த இடம். இங்குள்ள அஷ்ட மாத்ருகைகளின் ஆலயம் புகழ்மிக்கது.
22. ஜுவாலாமுகி : நாக்கு விழுந்த இடம்.
23. சுகந்தா : மூக்கு விழுந்த இடம். இமயமலைச் சரிவில் உள்ள தலம்.
24. வாரணாசி (காசி) : காதுக் குண்டலம் விழுந்த இடம். இது மணிகர்ணிகை பீடம். தேவியின் திருநாமம் விசாலாக்ஷி.
25. நைமிசாரண்யம் : அம்பிகை இலிங்க தாரிணியாகத் திகழ்கின்றாள்.
26. குருக்ஷேத்திரம் : முழங்கை விழுந்த இடம்.
27. பிரயாகை : கை விரல்கள் விழுந்த இடம். லலிதா பீடம்.
28. உஜ்ஜயினி : இங்கு தேவி மங்கள சண்டிகையாக விளங்குகின்றாள். மகாகவி காளிதானுக்கு அருள் நல்கியவள்.
29. பிருந்தாவனம் : கூந்தல் விழுந்த இடம். இராதா பீடம்.
30. அத்தினாபுரம் : இங்கு அம்பிகையின் திருநாமம் ஜெயந்தி. ஜயந்தி பீடம்.
31. கன்னியாகுப்ஜம் : கௌரிபீடம். அம்பிகையின் திருநாமம் கௌரி.
32. புஷ்கரம் : அன்னையின் திருநாமம் புருஹூதை. புருஹூதா பீடம்.
33. கேதாரம் : சன்மார்க்கதாயினி பீடம்.
34. பத்ரை : பத்ரேஸ்வரி பீடம்.
35. உருத்திரகோடி : உருத்ராணி பீடம்.
36. சாளக்ராமம் : மஹாதேவி பீடம்.
37. மலயாசலம் : தேவியின் திருநாமம் கல்யாணி. ரம்பா பீடம்.
38. தேவிகா தடம் : நந்தினி பீடம்.
39. சஹஸ்திராக்ஷம் : உத்பலாக்ஷி பீடம்.
40. வராக சைலம் : ஜயா பீடம்.
41. இரண்யாக்ஷம் : மகோத்பலா பீடம்.
42. திரிகூட பர்வதம் : உருத்திர சுந்தரீ பீடம்.
43. சஃயபர்வதம் : ஏகவீரா பீடம்.
44. வைத்தியநாதம் : ஆரோக்யா பீடம்.

45. மகாகாளம் : மஹேஸ்வரி பீடம்.

46. விந்தியபர்வதம் : நிதம்பை பீடம்.

47. வேதமுகம் : காயத்ரீ பீடம்.

48. ஹேமகூடம் : மன்மதா பீடம்.

49. அமர கண்டம் : சண்டிகா பீடம்.

50. கல்கத்தா : கால் விரல்கள் விழுந்த இடம். அன்னை காளிகாதேவியாக அருள் பாலிக்கின்றாள்.

51. காமரூபம் : உபஸ்தம் விழுந்த இடம். இத்தலம் அஸ்ஸாமில் உள்ளது. காமாக்யா என்பது அம்பிகையின் திருநாமம்.

மேலும் 64, 108, 1008 சக்தி பீடங்கள் உள்ளன என பெரியோர்கள் வாக்கு.



மகிஷாசுரமர்த்தினி (சிதம்பரம்)

ஆதாரம் :- இந்து கலைக்களஞ்சியம், தொகுதி - 5, வெளியீடு - இந்து சமய கலாசார அலுவல்கள், திணைக்களம், கொழும்பு -7, இலங்கை - 2001

ஸ்ரீசக்கரம் / மகாமேரு

ஸ்ரீ சக்கர (மேரு) விளக்கம்

1. முதலாவது த்ரைலோக்ய மோஹன சக்கிரம்

இது நாற்சதுரமாய் மூன்று பிராகாரங்களோடு விளங்கும். இது முதலாவது ஆவரணமாகும். இதன் முதல் ரேகையில் பரதேவதையின் தேக காந்திகளையே சரீரமாகத் தரித்த அணிமா, மஹிமா, இலகிமா, ஈசித்வ, வசித்வ, ப்ராகாம்ய, புக்தி, இச்சா, பிராப்தி, ஸர்வகாமமென்னும் தச ஸித்தி தேவதைகளும், இரண்டாவது ரேகையில் பிராஹ்மீ, மாஹேஸ்வரீ, கௌமாரீ, வைஷ்ணவீ, வாராஹீ, மாஹேந்திரீ, சாமுண்டா, மஹாலக்ஷ்மீ என்னும் அஷ்டமாத்ருகைகளும், மூன்றாவது ரேகையில் ஸர்வஸம்க்ஷோபிணீ, ஸர்வவித்ராவிணீ, ஸர்வாகர்ஷிணீ, ஸர்வவசீகரிணீ, ஸர்வோந்மாதினீ, ஸர்வமஹாங்கசீ, ஸர்வகேசரீ, ஸர்வபீஜ, ஸர்வயோனி, ஸர்வத்ரிகண்டா என்னும் பத்து முத்ரா தேவதைகளும் வசித்துக் கொண்டிருப்பார்கள். இவர்களின் சரீர காந்திகள் சூரியனையும் தோற்றுவிக்கும்படியானவை. இவைகளுக்குப் பிரகட யோகினிகள் என்று பெயர். இவர்களுக்கெல்லாம் நாயகியாகிய திரிபுரையென்னும் சக்ரேஸ்வரி அக்ர (முன்) பாகத்தில் ரத்ன ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருந்து யோகினீ கணங்கள் புடைசூழப் பேராநந்தத்தோடு விளங்குவள்.

2. இரண்டாவது ஸர்வாசா பரிபூரக சக்கிரம்

இது பதினாறு தளங்களையுடைய கமலமாகும். இதில் காமாகர்ஷிணீ, புத்யாகர்ஷிணீ, அஹங்காரகர்ஷிணீ, சப்தா கர்ஷிணீ, ஸ்பர்சாகர்ஷிணீ, ரூபாகர்ஷிணீ, ரஸாகர்ஷிணீ, கந்தாகர்ஷிணீ, தைர்யாகர்ஷிணீ, ஸ்மிருத்யா கர்ஷிணீ, நாமாகர்ஷிணீ, பீஜாகர்ஷிணீ, ஆத்மாகர்ஷிணீ, அம்ருதாகர்ஷிணீ, சரீராகர்ஷிணீ என்னும் பதினாறு ஆகர்ஷிணீ தேவதைகள் வசிப்பார்கள். இவர்களுக்குப் குப்த யோகினிகள் என்று பெயர். இவர்களுக்கெல்லாம் பிரபுவாய் திரிபுரேசீயென்னும் சக்ரேச்வரீ தேவி மணிபீடத்தின்மேல் வீற்றிருந்து ஆவரண தேவதைகள் வணங்க ஆநந்தமாய் இருப்பாள்.

3. மூன்றாவது ஸர்வ ஸம்க்ஷோபண சக்கிரம்

இது எட்டிதழ்ப் பதுமம். இந்த தளங்களில் குப்ததர யோகினிகள் என்னும் பெயரையுடைய அநங்ககுஸுமா, அநங்க மேகலா, அநங்கமதனா, அநங்கமதனாதுரா, அநங்கரேகா, அநங்காங்குசா, அநங்கவேகினீ, அநங்கமாலினீ என்னும் எட்டு சக்திகள் பாசம், அங்குசம், வரதம், அபயம் என்பவற்றைக் கையில் தாங்கிச் செம்மையான வஸ்திரங்களையும், புஷ்ப மாலைகளையும் தரித்துக் கொண்டு மஹா திரிபுரசுந்தரீ தேவியின் தியானத்தில் ஒரு முகப்பட்ட மனத்தர்களாய் விளங்குவார்கள். இவர்களுக்கெல்லாம் நாயகியாகிய திரிபுரசுந்தரீ யென்னும் சக்ரேச்வரீ, சக்ர தேவதைகள் சேவிக்க முன்னருள்ள சிம்மாஸனத்தில் வீற்றிருப்பாள்.

4. நான்காவது ஸர்வ ஸௌபாக்ய தாயக சக்கிரம்

இந்த சக்கிரம் பதினான்கு முக்கோணங்களையுடையது. அந்த முக்கோணங்களில் ஸர்வஸம்ஹோபிணீ, ஸர்வ வித்ராவிணீ, ஸர்வா கர்ஷிணீ, ஸர்வாஹ்லாதினீ, ஸர்வஸம்மோஹினீ, ஸர்வஸ்தம்பினீ, ஸர்வஜ்ரும்பிணீ, ஸர்வவசங்கரீ, ஸர்வரஞ்சனீ, ஸர்வோந்மாதினீ, ஸர்வார்த்தஸாதனீ, ஸர்வஸம்பத்திபூரணீ, ஸர்வமந்த்ரமயீ, ஸர்வதுவந்துவக்ஷயங்கரீ என்னும் நாமங்களையுடைய பதினான்கு ஸம்பிரதாய யோகினிகள் வசிப்பார்கள். இவர்களுக்கெல்லாம் பிரபுவாய் திரிபுரவாஸினியென்னும் சக்ரேச்வரீ அவ்வாவாண தேவதைகள் புடைசூழ மணிமயமான ஆஸனத்தின்மேல் அமர்ந்து விளங்குவாள்.



ஸ்ரீசக்கரம்

பிந்துத்ரி கோணவஸுகோண தசாரயுக்ம
மன்வச்ர நாகதளஸம்யுத ஷோடசாரம்/
விருத்தத்ரயஞ்ச தரணீஸதன த்ரயஞ்ச
ஸ்ரீசக்ர மேததுதிதம் பரதேவதாய://

மகாமேரு
(திருவிடைமருதூர்)

5. ஐந்தாவது ஸர்வார்த்த ஸாதக சக்கிரம்

இது பஹிர்த்தசாரம் என்னும் வெளியேயுள்ள பத்து முக்கோணங்களையுடைய சக்கிரமாகும். இக்கோணங்களில் குளோத்தீர்ண யோகினிகள் என்னும் பெயரையுடைய ஸர்வஸித்திப்ரதா, ஸர்வ ஸம்பத்ப்ரதா, ஸர்வப்ரியங்கரீ, ஸர்வ மங்களகாரிணீ, ஸர்வ காமப்ரதா, ஸர்வ துக்க விமோசனீ, ஸர்வமிருத்யுப்பிரசமனீ, ஸர்வ விக்கின நிவாரணீ, ஸர்வாங்க சுந்தரீ ஸர்வ ஸௌபாக்யதாயினீ என்னும் பத்து தேவதைகள் பரிவார ஸமேதர்களாய் வாஸஞ் செய்து கொண்டிருப்பார்கள். இவர்களுக்கெல்லாம் ஈசையாய்த், திரிபுராஸ்ரீ என்னும் சக்ரேச்வரீ, பரிவார தேவதைகள் போற்ற, ஸ்வர்ண சிம்மாஸனத்தின் மேல் வீற்றிருப்பாள்.

6. ஆறாவது ஸர்வ ரக்ஷாகர சக்கிரம்

இது, உள்ளே பத்து முக்கோணங்களையுடையது. இவற்றில் உள்ள ஆவரண தேவதைகளுக்கு நிகர்ப்ப யோகினிகள் என்று பெயர். இவர்கள் ஸர்வக்ஞா, ஸர்வ சக்தி, ஸர்வ ஐச்வர்யப்பிரதா, ஸர்வஞானமயீ, ஸர்வ வியாதி விநாசினீ, ஸர்வாதார ஸ்வரூபா, ஸர்வபாபஹரா, ஸர்வாநந்தமயீ, ஸர்வரக்ஷாஸ்வரூபிணீ, ஸர்வேப்ஸித பலப்ரதா என்னும் திருநாமங்களையுடையவராவர். இவர்கள் ஜபமாலையும் புஸ்தகத்தையும் கையில் தாங்கிப் பச்சைக் கற்பூரம் போன்ற வெண்மையான திருமேனியையுடையராய் விளங்குவார்கள். இவர்களுக்கெல்லாம் நாயகியாய்த் திரிபுராமாலினீ யென்னும் சக்ரேச்வரீ, சக்ரதேவதைகள் பணிய, ரத்தின சிம்மாதனத்தின்மேல் வீற்றிருப்பாள்.

7. ஏழாவது ஸர்வரோக ஹர சக்கிரம்

இந்த சக்கிரமானது எட்டு கோணங்களையுடையது. இக்கோணங்களில் வசினீ, காமேச்வரீ, மோதினீ, விமலா, அருணா, ஜயினீ, ஸர்வேச்வரீ, கௌளினீ என்னும் பெயர்களையுடைய ரஹஸ்ய யோகினிகள் வசித்துக் கொண்டிருப்பார்கள். இவர்களுக்கு வாக்தேவதைகளென்றும் வேறு பெயருண்டு. இவ்வாவரண தேவதைகளின் நாயகியாகிய திரிபுரா ஸித்தாம்பாள் என்னும் சக்ரேச்வரீயானவள் மஹாபீடத்தின்மேல் வீற்றிருப்பாள்.

8. எட்டாவது ஸர்வ ஸித்திப்ரதாயக சக்கிரம்

இது மத்தியிலுள்ள முக்கோணமாகும். இந்த முக்கோணத்திற்கும் அஷ்டகோணத்திற்கும் இடையில் வலது பாகத்திலும், இடது பாகத்திலும், மேல் பாகத்திலும் மூன்று நாற்கோணங்கள் உண்டு. இந்த நாற்கோணங்களில் ஸகல அஸ்த்ர தேவதைகளும், தனுசு, பாணங்கள், பாசம், அங்குசம் முதலிய ஆயுத தேவதைகளும் வசித்துக்கொண்டிருப்பார்கள். முக்கோணத்தில் தனக்கு அதாவது ஸாதகனுக்கு எதிர்முகமாயுள்ள கோணத்திலுள்ள காமகிரி ஆலயத்தில் அக்கினி மயமான காமகிரி பீடத்தின்மேல் வாக்பவபீஜ ஸ்வரூபிணியும், காதி வித்யாமய பிரம்மாத்மக சக்தியுமாகிய மஹா காமேஸ்வரீ தேவியானவள், பாசம், அங்குசம், அம்ருத கலசம், கபாலம், வரத, அபய முத்திரைகள் இவைகளைத் தனது ஆறு கரங்களிலும் உடைத்தாய், பூஷணங்களின் மணித் திரட் கதிர்கள் நாற்றிசைகளிலும் பரந்தொளிரத் திவ்விய வஸ்த்ர, கந்த, புஷ்ப மாலைகளைத் தரித்துக் கொண்டு, சதுரங்க சேனைகளுடன் மித்ரேசநாத நவயோனி சக்கிர, ஆத்ம தத்துவ, சிருஷ்டி கிருத்திய, இச்சா சக்தியோடு கூடி விளங்குவாள்.

வலது கோணத்தில் ஹாதி வித்யா ஸ்வரூபிணியாய் சூரியமண்டலமாகும் ஜாலந்தர பீடத்தில் ஷஷ்டிசநாதரோடு கூடி உள், வெளித் தசாரங்கள் இரண்டிற்கும் பதினான்கு கோணத்திற்கும் நாயகியாய் வித்தியா தத்துவ, ஸ்திதி கிருத்திய, ஞானசக்தி ஸ்வரூபிணியாய், காமராஜாத்மக காமகலா ஸ்வரூபிணியாய், பிரஹ்மாண்ட கோடிகளைச் சிருஷ்டிக்கவும், காக்கவும் ஆற்றலுள்ளவாய்ச் சகல பரிவாரங்கள் புடைசூழ விஷ்ணு சக்தியாய் விளங்கித் தனது ஆறு கரங்களிலும் பாசம், அங்குசம், பாணம், வில், புஸ்தகம், ஜபமாலைகள் விளங்க, வஜ்ரத்தைப்போல் பிரகாசிக்கும் திருமேனியையுடைய மஹா வஜ்ரேச்வரீ மகா வைபத்துடன் வீற்றிருப்பாள்.

இடது கோணத்தில் ஸாதி வித்தியா ஸ்வரூபிணியாய்ச் சந்திர மண்டல ரூப பூர்ணகிரி பீடத்தில், உட்டீசா நந்த நாதரோடு கூடி நாற்கோணம், பதினாறு இதழ், எட்டு இதழ் பதுமங்கள் இவைகளுக்கு நாயகியாய்ச் சிவ தத்துவ, ஸம்ஹார கிருத்திய, கிரியா சக்தி, சக்தி பீஜ ஸ்வரூபிணியாய், ருத்திராத்மக சக்தியாய்ப் பூர்ண சந்திரனையொத்த திருமேனியை யுடையவளாய்த் தனது ஆறு கரங்களிலும் வில், அம்பு, பாசம், அங்குசம், புத்தகம், அபய முத்திரைகளைத் தரித்தவளாய், மணிமயமான பூஷணங்களையும், உடைகளையும் பூண்டு மஹாபகமாலினி என்னும் தேவி வீற்றிருப்பாள்.

இவர்களுக்கு அதிரஹஸ்ய யோகினிகள் என்று பெயர். இம்மூவருக்கும் அதாவது மஹா காமேச்வரீ, மஹா வஜ்ரேச்வரீ, மஹா பகமாலினிகளுக்கு நாயகியாகிய திரிபுராம்பா சக்கிரேச்வரீ முக்கோணத்தின் எதிர்க் கோணத்திலுள்ள இரத்தின சிம்மாதனத்தின் மேல் வசிப்பள்.

9. ஒன்பதாவது ஸர்வாநந்தமய சக்கிரம்

முக்கோணத்தின் மத்தியில் பிரஞ்ஞான ஸ்வரூபமாயும், யோகிகளால் தியானித்தற்குரியதாயுமுள்ள ஸர்வாநந்த மயமென்னும் பிந்து சக்கிரத்தில் மாயா மயங்களாகும் கயிறுகளால் கட்டப்பட்டிலகும் கறுப்புப் பட்டுத்திரை (திரஸ்கரணி)யும், மல்லிகை, முல்லை முதலிய நறுமணப் பூக்களால் அலங்கரிக்கப்பட்ட பஞ்சப் பிரஹ்ம மஹா மஞ்சமும் அதன்மேல் விரித்துள்ள இலவம்பஞ்சு மெத்தையும், சிவதத்துவம் முதல் பிரிதிவி தத்துவம் ஈறாகவுள்ள முப்பத்தாறு தத்துவ ரூபமான படிகளும் ஸதாசிவ ரூபமான பட்டுத் தலையணைகளும் விளங்கும். இத்தகைய மகிமை வாய்ந்த மஞ்சத்தின்மேல் திரிலோக சுந்தரனும் காமேச்வரனுமான பரப்ரஹ்மம், பாசம், அங்குசம், கரும்புவில், புஷ்ப பாணங்களைத் தனது நான்கு கைகளிலும் தரித்துக் கொண்டு திவ்விய வஸ்திர பூஷணங்களை அணிந்து, அழகில் மிக்க அறமாதர் பலர் வெஞ்சாமரை வீசிக்கொண்டும், இனிய வீணாகானம் செய்து கொண்டும், இன்னும் இவ்விதமான பல உபசாரங்களைச் செய்து கொண்டும் சூழ்ந்து நிற்க, மஹா வைபவத்தோடு அமர்ந்திருப்பார். அவருடைய இடது தொடையென்னும் மஹா பீடத்தின் மேல் த்ரிலோக மோஹினியும், சிருஷ்டியாதி பஞ்சகிருத்தியங்களுக்கும் காரணமானவளும், ஸர்வதந்திர ஸ்வதந்திரையும், சாந்த ரஸ ஸ்வரூபிணியும், ஸகல லோக மாதாவும், சிறந்த வஸ்திர பூஷண புஷ்ப மாலைகளையணிந்தவளும், குங்குமப்பூவைப் போன்ற திருமேனியையுடையவளும் ஸமஸ்த சக்கிர பரிவார ஸமேதையும், பரப்ரஹ்ம சக்கிர மயமானவளும் மஹா ஒட்டியாண பீட ஸ்வரூபிணியும், சர்யாநந்த நாதாதிகளோடு கூடி விளங்குபவளும், ஸர்வத்திற்கும் நாயகியுமான மஹா த்ரிபுரஸுந்தரீ தேவி விளங்குவாள்.



இப் பிந்துவோடு கூடிய முக்கோணத்தின் மேலுள்ள நாற்கோணத்தில், ஸாதகனுடைய வலப்பக்கத்திலிருந்து இடது பக்கமாக மூன்று ரேகைகள் உண்டு. இந்த மூன்று ரேகைகளில் குரு மண்டல தேவதைகள் வீற்றிருப்பார்கள். ஒன்று என்று குறிப்பிட்ட மேல் ரேகையில் திவ்விய முக குருமண்டலமும், இரண்டாம் ரேகையில் ஸித்த ஒக குரு மண்டலமும், மூன்றாம் ரேகையில் மானவ ஒக குரு மண்டலமும் விளங்கும்.



பிந்து த்ரிகோண சக்கரம்



பிந்து த்ரிகோண
கர்ப மஷ்ட கோண சக்கரம்



ஸ்ரீ நகரத்தின் உலோகக் கோட்டைகள்



ஸ்ரீ நகரத்தின் இரத்தினப் பிராகாரங்கள்

இத்திவ்விய, ஸித்த, மானவ ஓகக் குரு மண்டல தேவதைகளின் பெயர்கள். அவரவர்கள் ஸம்பிரதாயத்திற்கேற்பப் பேதப்படும். இச்சம்பிரதாயங்கள் பலவகைப்படும். அவற்றுள் காதி வித்யா ஸம்பிரதாயம், ஹாதி வித்யா ஸம்பிரதாயம், ஸாதி வித்யா ஸம்பிரதாயம், மஹா ஷோடசீ ஸம்பிரதாயம், பராஸம்பிரதாயம் என்பவை முக்கியமானவையாகும். இக்குரு மண்டலத்தின் மூன்று கோடுகளில் மானவ ஓகக் கோட்டில், ஸாதகன், தனது குருவையும் ஸித்த ஓகக் கோட்டில் தனது பரம குருவையும், திவ்விய ஓகக் கோட்டில் தனது பரமேஷ்டி குருவையும் பாவித்து பூஜித்தல் வேண்டும்.

நித்தியா தேவதைகள்

மத்திய முக்கோணத்தில் மூன்று கோடுகளிலும், ஒவ்வொரு கோட்டிலும் அவ்வைந்து தேவதைகள் வீதம் பதினைந்து தேவதைகள் விளங்குவார்கள். இப்பதினைந்து நித்தியா தேவதைகளுக்கும், காமேச்வரீ, பகமாலினீ, நித்யக்லின்னை, பேருண்டா, வந்நிவாஸினி, மஹா வஜ்ரேச்வரி, சிவதூதீ, த்வரிதை, குளஸுந்தரீ, நித்தியை, நீலபதாகா, விஜயா, ஸர்வமங்களா, ஜ்வாலாமாலினீ, சித்ரா என்பன பெயர்களாகும். பதினாறாவது நித்யை மஹா நித்யையாகும். இம்மஹா நித்யாதேவியைப் பிந்துவில் பாவித்தல் வேண்டும்.

அன்றியும் அம்மத்தியத் திரிகோணத்தின் நாற்றிசைகளிலும் காமேஸ்வர காமேஸ்வரிகளின் ஆயுதங்களான பஞ்ச பாணங்கள், தனுசு, பாசம், அங்குசம் என்னும் ஆயுத தேவதைகள் விளங்குவார்கள்.



இங்ஙனம் ஸ்ரீ சக்கிர விளக்கமும் ஆவரண தேவதைகளின் பெயர்களும் ஒருவாறு சுருக்கமாய்க் கூறப்பட்டன.

இனி நமது சரீரத்தில் ஸ்ரீசக்கிர பாவனை செய்யும் கிரமத்தைச் சற்று விவரிப்போம்.

நமது சரீரத்தில்

பிரம்ம ரந்திரம் - பிந்துஸ்தானம்
மஸ்தகம் அல்லது சிரசு - திரிகோணம்
லலாடம் அல்லது நெற்றி - அஷ்டகோணம்
ப்ருமத்தியம் (புருவமத்தி) - அந்தர்த்தசாரம்
கண்டம் அல்லது கழுத்து - பஹிர்த்தசாரம்
ஹ்ருதயம் (மார்பு) - மந்வச்ரம் அல்லது பதினான்கு கோணம்
நாபி (தொப்புள்) - அஷ்டதள பத்மம்
கடி (இடுப்பு) - ஷோடசதள பத்மம்
ஊரு (தொடைகள்) - விருத்தத்ரயம்
பாதங்கள் - பூபுரம்

ஆகப் பாவித்தல் வேண்டும்.

இது, சரீரத்தில் வெளிப்படையான அங்கங்களில் ஸ்ரீசக்கிர பாவனையாம். மூலாதாராதி சக்கிரங்களில் ஸ்ரீசக்கிரத்தைப் பாவிப்பதும் உண்டு. அது எங்ஙனமெனின்,

1. மூலாதாரத்திற்குக் கீழ் உள்ள ஸஹஸ்ராரம் - பூபுரம்
2. அதற்குமேல், விஷுவமென்னும் ஆறிதழ்ச் சக்கிரம் - பதினாறு தள பத்மம்
3. மூலாதாரம் - அஷ்டதள பத்மம்
4. ஸ்வாதிஷ்டானம் - சதுர்த்தசாரம்
5. மணிபூரகம் - பஹிர்த்தசாரம்
6. அநாஹதம் - அந்தர்த்தசாரம்
7. விசுத்தி - அஷ்டகோணம்
8. உள்நாக்கு (இந்திரயோனி) - மத்திய முக்கோணம்
9. ஆஞ்ஞை - பிந்து
10. பிரஹ்மரந்திரம் - மஹா பிந்து

இங்ஙனம் ஸ்ரீசக்கரத்திற்கும் சரீர சக்கிரத்திற்கும் ஐக்கியம் செய்தல் அவசியம்.

ஸ்ரீ சக்கிரமானது பரப்பிரஹ்மமாகும். பரதேவதையின் ரதமாதலின் அது சரீரமேயாகும். ஸ்ரீநகரமும் அதுவேயாகும். இவ்விஷயம் பாவனோப நிஷத்தில் நன்கு கூறப்பட்டிருக்கிறது. அதன் சுருக்கம் இங்கு கூறப்படும்.

1. ஸ்ரீகுருநாதரே மேலாகிய காரணமாகும் சிற்சக்தியாகும். இத்தகைய விமரிச சக்தியானது தேகத்தில் இரு கண்கள், இரண்டு காதுகள், இரண்டு நாசித் துவரங்கள், வாய், பாயு, உபஸ்தம் என்னும் ஒன்பது துவாரங்களின் மூலமாய் ஸ்புரிக்கின்றது. ஆதலின் இவ்வொன்பது துவாரங்களும் குருஸ்வரூபமானவை.

2. நவ சக்கிர மயமாய் விளங்கும் ஸ்ரீசக்கிரமே தேகமாகும்.

3. சரீரத்திலுள்ள அஸ்தி (எலும்பு) தாதுவே வாராஹீயாகும். மாமிசமே குரு குள்ளாதேவீ யெனப்படுவாள். வாராஹீ பிதா; குரு குள்ளாவாகிய பலி தேவதையே தாய்.

4. நான்கு ஸமுத்திரங்களே தர்மாதிநான்கு புருஷார்த்தங்கள்.

5. தேகமே நவரத்தினத் தீவு.

6. மாம்ஸம், ரோமம், துவக்கு (சருமம்), இரத்தம், சுக்கிலம், மஜ்ஜை, அஸ்தி, மேதை, ஓஜஸ்ஸு என்னும் ஒன்பது தாதுக்களும்; புஷ்பராகம், நீலம், வைடூரியம், பவழம், முத்து, மரகதம், வஜ்ஜிரம், கோமேதகம், பத்மராகம் என்னும் நவரத்தினக் கண்டங்களாகும்.

7. மனத்தின் ஸங்கற்பங்களே ஸந்தானம், ஹரிசந்தனம், மந்தாரம், பாரிஜாதம், கதம்பம் என்னும் கல்பக விருக்ஷங்களாகும்.

8. தேஜஸ்ஸாகும் மனமே கல்பக உத்தியாவனம்.

9. நாவினால் உணரத்தக்க இனிப்பு, புளிப்பு, கசப்பு, உவர்ப்பு, கார்ப்பு, துவர்ப்பு என்னும் ரஸங்களே வஸந்த, கிரீஷ்மாதி அறுவித ருதுக்களாகும்.

10. ஞானமே (விசேஷ) அர்க்கியம், இதுவென்று பஞ்சேந்திரியங்களால் சுட்டி அறியக்கூடிய யாவும் நைவேத்தியத்திற்குரிய (அவிஸ்) பதார்த்தங்களாகும். அறிபவனே, அதாவது, தானே, ஹோமஞ் செய்பவன் ஆகும். ஞாதுரு, ஞானம் ஞேயம் என்னும் திரிபுடிகளின் அபேதபாவனையே ஸ்ரீ சக்கிர பூஜையாகும்.

11. நியதியோடு கூடிய சிருங்காரம் பயனாகம், ரௌத்திரம், பீபத்ஸம், ஹாஸ்யம், வீரம், கருணை, அத்புதம், சாந்தியென்னும் ஒன்பது ரஸங் (சுவை)களும் அணிமாதி பத்து ஸித்தி தேவதைகளாகும்.

12. காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம், புண்ணியம், பாபம், இவை எட்டும் பிராஹ்மியாதி எட்டு மாத்ருகா சக்திகளாம்.

13. மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அநாஹதம், விசுத்தி, ஆஞ்ஞை யென்னும் ஆறாதாரங்களும், மூலாதாரத்திற்குக் கீழுள்ள குளஸஹஸ்ராரமும், மேலுள்ள அகுள ஸஹஸ்ராரமும், உள்நாக்கும் சேர்ந்து ஒன்பது ஆதாரங்கள், இவற்றின் ஸமஷ்டி ஒன்று, ஆக பத்தும் ஸர்வ ஸங்கோபிண்யாதி பத்து முத்ரா தேவதைகளாம்.

14. பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், சுரோத்திரம், துவக்கு, சட்சு, ஜிஹ்வை, ஆக்கிராணம், வாக்கு, பாணி, பாதம், பாயு, உபஸ்தம் என்னும் பதினைந்தும் இங்ஙனம் விகாரப்பட்ட மனமும், சேர்ந்து பதினாறும் பதினாறிதழ்க் கமலத்திலுள்ள காமாகர்ஷிணீ முதலிய பதினாறு சக்திகளாம்.

15. பேசுதல், ஏற்றுக் கொள்ளுதல், நடத்தல், கழித்தல், ஆநந்தித்தல் என்னும் ஐந்து கர்மேந்திரியங்களின் தொழில்களும், தியாகபுத்தி, கிரகிக்கும் புத்தி, உபேக்ஷா புத்தி, ஆக எட்டும் அஷ்ட கமலத்திலுள்ள அநங்க குஸுமாதி எட்டு சக்திகளாகும்.

16. அலம்புஸா, குஹூ, விச்வோதி, வாராணா, ஹஸ்தி, ஜிஹ்வை, யசோவதீ, பயஸ்வினீ, காந்தாரீ, பூஷா, சங்கினீ, சரஸ்வதீ, இடை, பிங்கலை, சுஷும்னை என்னும் பதினான்கு நாடிகளின் சக்திகளே ஸர்வ ஸங்க்ஷோபிணி முதலிய பதினான்கு கோண தேவதைகளாவர்.

17. பிராணன், அபானன், வியானன், உதானன், ஸமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்ஜயன் என்னும் பத்து வாயுக்களே பஹிர்த்தசாரத்திலுள்ள ஸர்வ ஸித்திப்ரதை முதலிய பத்து தேவதைகளாவர்.

18. மேற்கூறிய தசவாயுக்களோடு சேர்க்கையாகும் உபாதிபேதத்தினால் ஜாடராக்னியானது ரேசகம், பாசகம், சோஷகம், தாஹகம், ப்லாவகம் என்னும் தொழில்களையும்.

19. க்ஷாரகம், உத்காரகம், க்ஷோபகம், ஜ்ரும்பகம், மோஹகம் என்னும் தொழில்களையும் செய்து, பிராணிகள் புஜித்த பக்ஷியம், போஜ்யம், சோஷ்யம், லேஹ்யம், பேயம் என்னும் ஐந்து வித ஆகாரத்தை ஜீரணம் செய்கின்றது.

ஜாடராக்கினியானது பிராணாதி, ஐந்து வாயுக்களோடும், நாகாதி ஐந்து உபவாயுக்களோடும் சேர்ந்து தனது பத்து கலைகளினால் மேற்கூறிய பத்து தொழிற் பெயர்களையடைகின்றதென அறிக.

20. ரேசகம் முதல் மோஹகம் ஈறாகவுள்ள பத்து அக்னி கலைகளே அந்தர்த்தசார சக்கிரத்திலுள்ள ஸர்வக்ஞாதி பத்து சக்திகளாவர்.

21. சீதம், உஷ்ணம், சுகம், துக்கம், இச்சை, ஸத்வம், ரஜசு, தமசு என்னும் எட்டு அஷ்டகோண சக்கிரத்தின் சக்திகளாகிற வசினீ முதலியவராவர்.



ஸ்ரீ நகரத்தின் மகாபத்மாடவீ
பிராகாரங்கள் - சிந்தாமணி கிரகம்



சப்தசதீ யந்திரம்



சக்ரசோடசி பூஜா யந்திரம்



சண்டி சக்கிரம்

22. சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம், கந்தம் என்னும் பஞ்சதன்மாத்திரைகளே ஐந்து புஷ்ப பாணங்கள்.

23. மனமே கரும்பு வில்.

24. ராகமே (ஆசை) பாசம்.

25. துவேஷம் அங்குசமாகும்.

பாசாங்குச தனுர்ப்பாணங்கள் பரதேவதையின் ஆயுதங்களாகும்.

26. அவ்யக்தம், மஹத்தத்வம், அஹங்காரம் என்பவையே காமேஸ்வரீ, வஜ்ரேஸ்வரீ, பகமாலினீ என்னும் மத்திய த்ரிகோண சக்திகளாவர்.

27. நிருபாதிக ஞானமே காமேஸ்வரர்.

28. ஸதா ஆநந்தகனமாயுள்ள ஆத்ம ஸ்வரூபமே பரதேவதையாகும் லலிதை.

29. பரதேவதையின் செம்மை நிறமானது எல்லாவற்றின் விமர்சம் என்னும் விசாரணையேயாம்.

30. அநன்ய (பேதமற்ற) சித்தத்தினாலேயே ஸர்வ ஸித்திகள் (ஏற்படும்).

31. அடிக்கடி அநுஸந்தானஞ் செய்வதே உபசாரங்களாகும்.

32. நான், நீ, உண்டு, இல்லை, செய்யத்தக்கது, செய்யத்தகாதது, உபாஸிக்கத்தக்கது என்னும் விகற்பங்களையெல்லாம் ஆத்மாவில் லயம் செய்தலே ஹோமமாகும்.

33. இப்பாவனோபநிஷத்தில் ஒன்றுமுதல் முப்பத்திரண்டு வாக்கியங்களில் கூறப்பட்ட குருபாவனை முதல் ஹோமாந்தமான பாவனைகளின் பரஸ்பர பேதங்களையொழித்து அபேதபாவனை செய்தலே தர்ப்பணமெனப்படும்.

34. காலமானது பதினைந்து திதிகள் வடிவமாய்ப் பரிணமித்திருக்கின்றதென உணர்தல் (அவசியம்).

35. இங்ஙனம் மூன்று முகூர்த்தங்கள் அல்லது இரண்டு முகூர்த்தங்கள் அல்லது ஒரு முகூர்த்தம் பாவிக்கும் ஸாதகன் ஜீவன்முக்தன் ஆகின்றான். அவனே சிவயோகியென்று கூறப்படுவன்.

36. காதி மதரீதியாய் அந்தஸ்சக்கிர பாவனைகள் பிரதிபாதிக்கப்பட்டன.

37. எவன் இங்ஙனம் அறிகின்றானோ அவன் ''அதர்வசிரஸ்ஸை'' அத்யயனம் செய்தவன் ஆகின்றான் - என்பது பாவனோப நிஷத்தின் சுருக்கமாகும்.

இங்ஙனம், முமுக்ஷுவாகும் ஸாதகன் ஸ்ரீசக்கிரத்திற்கும், தனது சரீரத்திற்கும் யாதொரு பேதமும் இல்லையென நன்கு அறிவதோடு பூமி, அந்தரிக்ஷம், ஸ்வர்க்கம் என்னும் பிரஹ்மாண்டமும் ஸ்ரீசக்கிரத்தைவிட வேறன்று எனத் தெளிதல் வேண்டும்.

ஸ்ரீ சக்கரமும் மேருவும் சிவசக்திகளின் ஐக்கிய ரூபமாகும். சிவ சக்கிரங்கள் நான்கு; அவை பிந்து, அஷ்டதள கமலம், பதினாறுதள கமலம், பூபுரம் என்பன. சக்தி சக்கிரங்கள் ஐந்து; அவை மத்திய முக்கோணம், அஷ்டகோணம், உள்தசாரம், வெளித்தசாரம், பதினான்கு கோணம் என்பனவாம். இவற்றுள் முக்கோணத்தைப் பிந்துவோடும், அஷ்ட கோணத்தை அஷ்டதள கமலத்தோடும்; உள், வெளி என்னும் இரண்டு தச கோணங்களைப் பதினாறு தள கமலத்தோடும்; பதினான்கு கோணத்தைப் பூபுரத்தோடும், ஐக்கியப்படுத்தி சிவ சக்திகளின் ஐக்கியத்தையுணர்தல் வேண்டுமென்பது சம்பிரதாயமாகும். சக்தியைச் சிவத்தோடு ஐக்கியம் செய்வதுதான் ஜீவப்பிரஹ்மைக்கியமெனப்படும். சித்சக்தி அல்லது பிரஹ்ம வித்தியோபாஸனா மார்க்கமாய், ஹயக்ரீவர், வியாஸர், துர்வாஸர், அகஸ்தியர், தத்தாத்ரேயர், வஸிஷ்டர் முதலிய ஸகல ரிஷிகளும், கோரக்ஷநாதர், மத்ஸ்யேந்திரநாதர் முதலிய சகல சித்தர்களும், காளிதாஸர், ஸ்ரீசங்கர பகவத் பாதர் ஏனைய சக்தி உபாசனப் பெரியார்களும் நித்தியாநந்தப் பெருவாழ்வை யடைந்துள்ளார்கள்.

நிர்விசேஷ நிருபாதிக பிரஹ்மமே காமேஸ்வரர். இவர் கேவலம் பிரகாச வடிவினர். இந்த நிர்விசேஷப் பிரஹ்மத்தில் சூரியனிடத்தில் கிரணங்களைப் போல், அபின்னமான (பிரிக்க முடியாத) ஒரு சக்தியுண்டு. இது சித்சக்தி என்று கூறப்படும்.

இது விமர்ச வடிவம். இதுதான் அஹம்பத லக்ஷ்யார்த்த வடிவ கூடஸ்த ஸ்வரூப சாக்ஷியாகும். ஸ்தூல ஸூக்ஷ்ம காரண சரீரங்களில் ஜாக்கிர, ஸ்வப்ன, ஸுஷுப்தி அவஸ்தைகளையும் அவற்றின் விவகாரங்களையும் பிரகாசிப்பிக்கச் செய்வதனால் திரிபுரஸுந்தரீயென்றும், சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் மின்னல், அக்னி, மனம் என்னும் பிரகாசப் பொருள்களையும், பிரகாசிக்கச் செய்வதால் இராஜராஜேச்வரீயென்றும், யாவராலும் ''நான் நான்'' என்று அநுபவிக்கப்படுவதால் பராஹந்தையென்றும், எல்லா விகல்ப (பேத) ஞானங்களைப் பிரகாசிக்கச் செய்வதால் சிதி அல்லது ஸம்வித் என்றும், ஜடசக்தியாகும் அவித்தையினால் தோன்றும் ஸகல அத்தியாஸங்களையும் நிவர்த்திப்பதனால் வித்யை யென்றும், இந்த சிற்சக்தியே விவகரிக்கப்படுகின்றது.

இத்தகைய பிரஹ்மாபின்ன சிற்சக்தியினின்றும், ஸர்வ ஜீவர்களின் கர்மாக்களின் நிமித்தமாய், அவரரவர்களுக்கு, அவரவர்களின் புண்ணிய பாவ அநுபவ ரூபமான சுக துக்கங்களையடைவிக்கப் போக்கிய வடிவப் பிரபஞ்சம் சிருஷ்டி செய்தற் பொருட்டு ஜட சக்தியென்னும் ஒரு கல்பித சக்தியுண்டாயிற்று. ஒரு பெரு மணல்வெளியில் சூரிய கிரணங்களின் சம்பந்தத்தால் இல்லாததான பேய்த்தேர் என்னும் கானல் ஜலம் தோற்றியதுபோல் அஜ்ஜட சக்தியினின்றும் காலத்திரயத்திலும் இல்லாததான மாயையுண்டாயிற்று. அம்மாயையினின்றும், கானல் ஜலப் பிரவாஹம் போல் அவ்வியக்தமும், மஹத்தத்துவ அஹங்காரங்களுள் தோன்றின. அவ்வகங்காரத்தினின்றும் ஆகாசாதி பஞ்சபூதங்களும் தோன்றின. இதுவே ஸர்வப் பிரபஞ்ச சிருஷ்டிக் கிரமமாகும். சித்சக்தியபின்ன பிரஹ்ம சேதனம் ஜடமாயுள்ள மாயையில் அநுப்பிரவேசஞ் செய்து காரணேச்வரன் எனப்படுவன்.

இங்ஙனமே அவ்யக்த, மகத்தத்துவ, அகங்காரங்களில் சேதனம், அநுப்பிரவேசம் செய்த ஸூத்ராத்மா (அந்தர்யாமி), ஹிரண்யகர்ப்பன், விராட் என்னும் பெயர்களையும் பெறுகின்றது. இங்ஙனமே ஜடசக்தியாத்மக மாயா பரிணாமங்களான சர்வ பிரபஞ்சத்திலும், அஸ்திபாதி பிரிய வடிவ சிற்சக்தியோடு

நிர்விசேஷ சேதனம் அதிஷ்டானமாய் விளங்குகின்றது. இதுதான் சிருஷ்டி கிரமத்தின் சுருக்கமாகும். சித்சக்தியபின்ன பிரஹ்மத்தினிடத்தில், கயிற்றில் பாம்பு போல் இப்பிரபஞ்சம் தோற்றுதலால் இதைச் சித்விவர்த்தம் என்றும், ஜடாத்மக மாயையின் விரிவு ஆதலின் மாயா பரிணாமமென்றும் சாஸ்திரங்கள் கூறும். நாம ரூபாத்மக பிரபஞ்சமானது, அஸ்தி பாதி பிரிய வடிய அகண்டாகார விருத்தி ஞானத்தினால், பிரஹ்மஸ்வரூப (தோற்றுவாய்) அபிவியஞ்சகமாதலின் இது முமுக்ஷுவிற்கு ஹேயமல்ல. ஈஸ்வர சிருஷ்ட மாதலின் அது பிரளய பர்யந்தம் நாசமும் அடையாது. ஈஸ்வர சிருஷ்டியில் அடங்கிய ஒவ்வொரு பொருளும் ஜீவனது துக்கத்திற்குக் காரணமேயல்ல; மற்றோ ஜீவ சிருஷ்டியாகிய பேதமே அதாவது ஈஸ்வர சிருஷ்டியில் அடங்கிய வஸ்துக்களில் ஒன்றற்கொன்றுள்ள பரஸ்பர பேதமே துக்கத்திற்குக் காரணமாகும். பேத தர்சனமே அஞ்ஞானம்; பேத தர்சனம்தான் துவைதம். துக்க காரணமாகும். இந்த ஜீவ சிருஷ்ட பேதம்தான் மித்யையென்று அறிதல் வேண்டும். பேதம் சத்தியமென்று ஜீவர்கள் நினைப்பதால் பின்ன வஸ்துக்களிடத்தில் ஆசையும், ஆசையால் பிரவிருத்தியும், அவாவின பொருள் கிட்டாத போது துக்கமும், இச்சித்த அப்பொருள் கிடைக்காமற் செய்தவர்களின் மேல் துவேஷமும், இங்ஙனமே லோபமோஹாதி ஸகல துர்க்குணங்களும் உண்டாய்ப் பேதப் பிரவிர்த்தியில் சுழன்று கொண்டு ஜனனமரண ஸம்ஸாரத்தில் மூழ்கிக் கிடக்கின்றனர். இதுதான் பந்தமாகும். இது ஜீவர்களால் கற்பிக்கப்பட்டதேயாகும். ஜீவத்தன்மையுள்ள வரையில் பந்தமுண்டு. ஜீவத்தன்மையானது, தானல்லாத ஸ்தூல ஸூக்ஷ்ம, காரண சரீரங்களைத் தான் என்றும் அகங்காரமும், தனக்கு எந்த வகையிலும் சம்பந்தப்படாத ஆந்தர பாஹ்யப் பொருள்களில் தனது என்னும் மமதையுமே ஆகும். அவித்தையால் தோற்றும் பந்தம் ஒழிதற்கு ஞானமாகும் வித்தையே சிறந்த காரணமாகும். இங்கே வித்தையென்பது பிரஹ்ம வித்தை அல்லது ஸ்ரீவித்தையாகும்.

இந்த ஸ்ரீவித்யாஸ்வரூபிணியான பராஸம்வித்தானது யாருடைய சித்தத்தில் ஸ்புடமாய் விளங்குமோ அவனே, பேதத்தைக் காரணமாய்க் கொண்டு தோற்றின சகல அநர்த்தங்களாகும் பண்டாஸுரன் முதலிய சத்ருக்களையொழித்து, ஸ்வாராஜ்யத்தையடைதற்குரிய யுவ ராஜாவாவன். அவன், தனது ஞானத்தின் மகிமையால் கற்பிதமாய்த் தோன்றும் சகல அநாத்ம பேதங்களையொழித்து சிவசக்தியைக்கியப் பேரானந்த ஸாகரமாய் விளங்குவான். இதுதான் சாக்தாத்வைதத்தின் சுருக்கமாகும்.

இதுகாறும் ஸ்ரீ நகரத்தின் சிறிய வடிவில் இருபத்தைந்து கோட்டைகளின் விவரமும், அவற்றிற்குள் விளங்கும் சிந்தாமணி கிருஹத்தின் வர்ணனையும், அதற்குள் இலங்கும் பஞ்சப் பிரஹ்ம மஹா மஞ்சத்தின் பெருமையும், அதன்மேலுள்ள ஸ்ரீசக்கிரத்தின் விளக்கமும், ஆவரண தேவதைகளின் சிறப்பும் ஒருவாறு சுருக்கமாய்க் கூறப்பட்டன. மற்றும் ஸ்ரீ சக்கிரத்தினுடையவும் ஆவரண தேவதைகளினுடையவும் அத்யாத்ம தத்துவமும் ஒருவாறு கூறப்பட்டன. அன்றியும் ஸ்ரீவித்யோபாஸ்தியின் மஹா பலனான சாக்தாத்வைத விமர்சனமும் மிகு சங்கிரகமாகவும் செய்யப்பட்டது. விஸ்தாரமாய் அறிய விரும்புவோர் ஞானாவர்ணம், தந்திரராஜம், தந்த்ரஸாரம், மாத்ருகா சக்கிர விவேகம், ஸௌபாக்ய ரத்னாகரம், யோகினீ ஹ்ருதயம் (வாமகேச்வர தந்த்ரம்), காமகலா விலாசம், வரிவஸ்யா ரஹஸ்யம், திவ்விய மங்கள த்யானம் முதலிய நூல்களைக் குருமுகமாய்ச் சிரவணஞ் செய்து அறியவும்.

---

1. 25 கோட்டைகள், 9 சக்கிரங்கள் இவைகளின் அத்யாத்ம விமர்சம் இந்நூலாசிரியரால் இயற்றப்பட்ட ''பரா பூஜா வாஸனா விமர்சனம்'' என்னும் நூலில் விஸ்தாரமாய் அறியலாம்.

தசமகா வித்யா

காளி தியானம்

வாமோர்த்வே சின்ன முண்டம் வரமபிததேதோ தக்ஷிணோர்த்வே தீக்ஷ்ணம்
கட்கம் சாதேஹ்ய பீதிம் கரகமலதலே பிப்ரதீம் மேக காந்திம்।
திக்வஸ்த்ராம் ஊர்த்துவ கேசீம் சவகரக்ருத் காஞ்சிகலாபாம் சவாஸ்ருக்
விஸ்பூர்யத் வ்யாத்தவக்த்ராம் சரிதஜன பலதாம் காளிகாம் தாம் பஜேஹம்॥

(இவளது இடது மேல்கரத்தில் வெட்டப்பட்ட தலை, அதன் கீழ் கரத்தில் வரம், வலது மேல் கரத்தில் கூரிய கத்தி, அதன் கீழ்க் கரத்தில் அபயம் கொண்டவளும், கருமையான நிறத்தினளும், ஆடையற்றவளும் மேல் நோக்கிய கேசமுடையவளும், சவங்களின் கரத்தாலான ஒட்டியாணத்தை அடைந்தவளும், சவத்தின் ரத்தத்தால் பூர்ணமான திறந்த வாயினளும், பக்தர்களுக்குப் பலனளிப்பவருமாகிய காளி தேவியைப் பூஜிக்கின்றேன்).



காளி யந்திரம்

குறிப்பு :- இது விசுவாமித்ரர் அருளிய ஸ்லோகம் ஆகும். இதில் ஆதிகாளி, தக்ஷிணகாளி, க்ரீம் காளி, ஸ்திதிகாளி, பத்ரகாளி, மதுகைடப சம்ஹார காளி, குஹ்ய காளி, எனப் பல உண்டு. - தசமகா வித்யா ரூபங்கள் உபாசன மூர்த்தங்கள் ஆகும்.

தாரா தியானம்

விச்வவ்யாபக வாரிமத்ய விலஸத் ச்வேதாம் புஜன்ம ஸ்திதாம்
கர்த்ரீம் கட்க கபால நீல நளினை: ராஜத்கரா மிந்துபாம்/
காஞ்சீ குண்டல ஹார கங்கணலஸத் கேயூர மஞ்ஜீதாம்
ப்ராப்தைர்நாகவரை: விபூஷிததனும் ஆரக்த நேத்ரத்யாம்//
பிங்காக்ரை கஜடாம் லலத்ஸ்வரஸனாம் தம்ஷ்ட் ராகராளானனாம்
சர்ம த்வைபிவரம் கடௌ விததீம் ச்வேதாஸ்தி பட்டாளிகாம்/
அக்ஷோப்யேண விராஜமான சிரஸம் ஸ்மேரானனாம் போருஹாம்
தாராம் சாவஹ்ருதாஸனாம் த்ருடகுசாம் அம்பாம் த்ரிலோக்யா: ஸ்மரேத்//

(உலகம் எங்கும் நிறைந்த ஜலத்தின் நடுவில் (சமுத்ர ஜலத்தில்) விளங்கும் வெண் தாமரையில் வீற்றிருப்பவளும், கத்தரிக்கோல், கத்தி, கபாலம், கருங்குவளைப் பூ இவற்றினை நான்கு கரங்களில் கொண்டவளும், சந்திரன் போன்ற நிறத்தினளும், சிறந்த சர்ப்பங்களையே ஒட்டியாணம், குண்டலம், ஹாரம், கங்கணம், தோள்வளை, பாதச்சலங்கை முதலான ஆபரணங்களைக் கொண்ட தேகத்தினளும், சிவந்த மூன்று கண்களுடையவளும், மஞ்சளும் சிவப்பும் கலந்த வர்ணம் கொண்ட முனையுடைய ஒற்றைச் சடையுடையவளும், மின்னும் (அசையும்) நாக்கினளும், தித்திப் பற்களுடன் கூடிய விசாலமான முகத்தினளும், இடையில் யானைத் தோலாடை அணிந்தவளும், வெண்ணிறமான எலும்புகளை அணிந்த நெற்றியினளும் ''அக்ஷோப்ய'' என்ற சர்ப்பத்தால் (இவர் ஒரு ரிஷி. சிவ ஸ்வரூபி. தாரா மந்திரத்தை முதலில் ஜபம் செய்த மந்திர ரிஷி. சர்ப ரூபியாய் இருப்பவர்). பிரகாசிக்கும் சிரத்தினளும், புன்சிரிப்புத் தவழும் தாமரை முகத்தினளும், சவத்தின் மார்பில் அமர்ந்திருப்பவளும், கடினமான மார்பகமுள்ளவளும், மூவுலகினுக்கும் தாயாய் இருப்பவளுமான ஸ்ரீதாரா தேவியைத் தியானிக்க வேண்டும்).



தாரா யந்திரம்

ஸ்ரீ வித்யா தியானம்

பாலார்காயுத தேஜஸம் த்ரிணயனாம் ரக்தாம் பரோல்லாஸினீம்
நானாங்க்ருதி ராஜமான வபுஷம் பாலோடு ராட்சேகராம்/
ஹஸ்தைரிக்ஷுதனு: ஸ்ருணிம் ஸுமசரம் பாசம் முதாபிப்ரதிம்
ஸ்ரீசக்ரஸ்தித ஸுந்தரீம் த்ரிஜகதாமாதாரபூதாம் ஸ்மரேத்//

(பத்தாயிரம் இளம் சூரியனின் ஒளியை உடையவளும், முக்கண்ணியும், சிவப்பு ஆடை தரித்தவளும், பலவித ஆபரணங்களால் அழகிய தேஹம் உடையவளும் பிறைச் சந்திரனைச் சிரத்தில் அணிந்தவளும், கைகளால் கரும்பு வில், அங்குசம், புஷ்ப பாணம், பாசம் இவற்றைத் தரித்தவளும் (வலது கரங்களில் - பாணம், அங்குசம், இடது கரங்களில் - வில், பாசம்) ஸ்ரீசக்கரத்தில் வீற்றிருப்பவளும், மூவுலகினுக்கும் ஆதாரமாய் உள்ளவளுமாக ஸ்ரீசக்கரத்தில் அமர்ந்திருப்பவளுமாகிய பேரழகியை ஸ்மரிக்க வேண்டும்).



ஸ்ரீவித்யா - திரிபுரசுந்தரி யந்திரம்

புவனேஸ்வரி தியானம்

பாஸ்வத் ரத்னௌக மௌளி ஸ்புரதம்ருத ருசோ ரஞ்ஜயத் சாருரேகாம்
ஸத்யஸ்ஸம்தப்த கார்த்த ஸ்வரகமலஜபா பாசுராபி: ப்ரபாபி:/
விச்வா காசாவகாசம் ஜ்வலயத் அசிசிரம் தர்த்ரு பாசாங்குசேஷ்டா
பீதீனாம் பங்கி துங்க ஸ்தனமவது ஜகன்மாது ரார்க்கம் வபுர்ண://

(பிரகாசிக்கின்ற ரத்னங்களால் ஆன கிரீடத்தில் மின்னும் சந்திரனின் அழகிய கலையை அழகுறச் செய்கின்றதும், உடன் உருக்கிவிட்ட பொன், செந்தாமரை, செவ்வரத்தைப்பூ, (மஞ்சள் நிற மேனி, சிவந்த முகம், சிவந்த உதடுகள்) இவைகள் போன்று பிரகாசிக்கின்ற காந்திகளால் ஆகாயத்தின் எல்லாப் பகுதிகளையும் ஜ்வலிக்கச் செய்கின்றதும், பாசம், அங்குசம், வரதம் இவைகளைத் தாங்கி நிற்கின்றதும், நிமிர்ந்த ஸ்தனமுள்ளதும், வெண்மையானதும் ஆன சூரியனுக்குள் இருக்கும் ஸ்ரீஜகன்மாதா புவனேஸ்வரியின் தேஹம் உங்களைக் காப்பாற்றட்டும். சூரிய மண்டலத்தில் இருப்பவளாக புவனேஸ்வரியை இதனால் தியானிக்க வேண்டும்).



புவனேஸ்வரி யந்திரம்

பைரவீ தியானம்

ஆதாம்ரார் காயுதாபாம் கலித சசிகலா ரச்மி தீப்தாம் த்ரிநேத்ராம்
தேவீம் பூர்ணேந்து வக்த்ராம் வித்ருத ஜபவட புஸ்தகா பீதியபீஷ்டாம்।
பீனோத்துங்கஸ் தனார்த்தாம் வலிகலிதவிலக்னா மஸ்ருக்பங்கராஜத்
முண்டஸ்ரங்கமண்டி தாங்கீம் அருணதரதுகூ லானுலேபாம் நமாமி॥

(பத்தாயிரம் உதய சூரியன் ஒளியினள். கூடிய பிறையின் கிரணங்களால் பிரகாசிப்பவர். முக்கண்ணினள். பூர்ண சந்திரன் போன்ற முகத்தினள். ஜபமாலை, புஸ்தகம், அபயம், வரதம் தரித்தவள். பருத்த நிமிர்ந்த மார்பகத்தினள். மூன்று மடிப்புடைய இடையினள். ரத்தம் தோய்ந்த முண்டமாலை அணியும் அங்கத்தினள். மிகச் சிவந்த பட்டாடை பூச்சுடையவள். இவ்வாறான ஸ்ரீபைரவீ தேவியை வணங்குகின்றேன்).



பைரவி யந்திரம்

ஸ்ரீ சின்னமஸ்தா தியானம்

ப்ரத்யாலிடபதாம் ஸதைவ தததீம் சின்னம் சிர: கர்த்ரிகாம்
திக்வஸ்த்ராம் ஸ்வகந்பந்த சோணித ஸுதா தாராம் பிபந்தீம்முதா/
நாகபத்த சிரோமணிம் த்ரிணயனாம் ஹ்ருத்யுத்பலாங்க்ருதாம்
ரத்யாஸக்த மனோபவோபரி த்ருடாம் த்யாயேத் ஜபாஸன்னிபாம்//

(முன் இடது காலும், பின் வலது காலும் வைத்திருப்பவளும் வெட்டப்பட்ட தலை, கத்தரிக்கோல் கரங்களில் வைத்திருப்பவளும், ஆடையற்றவளும், தன் தலையில்லா தேஹத்தினின்று எழும் ரத்தமாகும் அமிர்தத்தை மகிழ்வுடன் அருந்துபவளும், பாம்பு கொண்டு தன் சிரத்தில் மணியைக் கட்டிக் கொண்டிருப்பவளும், முக்கண்ணியும், மார்பில் நீலோத்பல மாலை அணிந்திருப்பவளும், செவ்வரத்தம் பூப்போன்ற நிறத்தினளுமான ஸ்ரீசின்னமஸ்தா தேவியை ரதியோடு சேர்ந்த மன்மதன் மேல் இருப்பவளாகத் தியானிக்க வேண்டும். (ஸ்ரீ சின்னமஸ்தா தேவியின் வலது பக்கம் வர்ணினீ தேவியும், இடது பக்கம் டாகினீ தேவியும் இருப்பார்கள். இருவரும் ரத்த தாரையை அருந்துவார்கள். திகம்பரிகளாகவும், கபாலமாலையும் கொண்டவர்கள்).



சின்னமஸ்தா யந்திரம்

ஸ்ரீ தூமவதீ வித்யா தியானம்

அத்யுச்சா மலினாம்பரா (அ)கில ஜனோத்வேகாவஹா துர்மனா:
ருக்ஷாக்ஷித்ரிதயா விசாலதசனா சூர்போதரீ சஞ்சலா।
ப்ரஸ்வேதாம் புசிதா க்ஷுதாகுலதனு: க்ருஷ்ணாதிக்ஷேப்ரபா
த்யேயா முக்தகசா ஸதா ப்ரியகலிர் தூமாவதீ மந்த்ரிணா॥

(மிக நீண்டவள், அழுக்காடை அணிந்தவள், அனைவருக்கும் துன்பம் தருபவள். நன்மனமில்லாதவள். கொடுமை விளைவிக்கும் முக்கண்ணினள். இடைவெளி உடைய பல்லினள். முறம் போன்ற வயிற்றினள். நிலையற்றவள். வியர்வை உடையவள். பசியுடையவள், கருத்தவள், துன்பம் விளைவிக்கும் காந்தியினள், விரித்த சடையினள், கலஹத்தில் ஈடுபட்டவள். இவ்வாறாக தூமாவதீயை ஜபிப்பவன் தியானிக்க வேண்டும். பிரபஞ்ச சார ஸங்கிரஹம் நூல் இவளுடைய தியானத்தை இரண்டு விதமாய்க் கூறுகின்றது).



தூமவதி யந்திரம்

ஸ்ரீபகளாமுகீஸ்வரூப தியானம்

கம்பீராம்ச மதோன்மத்தாம் தப்தகாஞ்சன ஸந்நிபாம்।
சதுர்புஜாம் த்ரிணயனாம் கமலாஸன ஸம்ஸ்திதாம்।
பீதாம்பரதராம் ஸாந்த்ரத்ருடனபீன பயோதராம்।
ஹேம குண்டல ஸம்பூஷாம் பீதசந்த்ரார்த்த சேகராம்
பீதபூஷண ஸம்பூஷாம் ஸ்வர்ணஸிம் ஹாஸனஸ்திதாம்।
ஊர்த்வகேச ஜடாஜூடாம் கராளவதனாம் புஜாம்।
ப்ருகுடீ பீஷணானனாம், சம்பகாரண்ய ரூபிணீம்।
வாமே பாசாங்குசௌ சக்திம் தஸ்யாதஸ் தாத்வரம் சுபம்।
தக்ஷிணே க்ரமதோ வஜ்ரம் கதா ஜிஹ்வாஅபயானி ச॥

(இந்த பகளாமுகீ தேவீ அம்ருதக் கடவுளின் நடுவில் மணிமண்டபத்தில் ரத்னமயமான மேடையில் தங்க சிம்ஹாசனத்தில் அல்லது தாமரை மலரில் வீற்றிருப்பாள். கம்பீரமான தோற்றமுடையவள். உருக்கிவிடப்பட்ட பொன்னின் மேனியள். முக்கண்ணி, பொற்குண்டலங்கள் அணிந்தவள். அவள் சிரத்தை பிறைச்சந்திரன் அலங்கரிக்கும். மேல் நோக்கிய ஜடாபாரம் உடையவள். பயமளிக்கும் முகத்தினளாகவும், ஸௌம்ய முகத்தினளாகவும், காக்ஷியளிப்பாள். நெரிக்கும் புருவத்தினள். (கதை, நாக்கு (சத்ருவினுடையது) இவை தாங்கும் இரு கரத்தினளாகவும்), (முக்கரம், பாசம், வஜ்ரம், நாக்கு இவையுடைய நான்கு கர கமலமுடையவளாகவும்), என்றபடி இடது கரங்களில் பாசம், அங்குசம், சக்தி, வரம் (மேலிருந்து கீழ்) இவற்றையும், வலது கரங்களில் வஜ்ரம், கதை, நாக்கு, அபயம் (மேலிருந்து கீழாக) இவற்றையும் தாங்குபவளாகவும் இருப்பாள். சம்பகவனம் போன்று திகழ்பவள் என்று இவளுடைய உருவம் பற்றி மந்திர சாஸ்திரங்கள் பேசுகின்றன. தவளானன ஸுந்தரீ என்ற வெண்மையான பிரகாசமான முகத்தினாள். இந்து பிம்பானனாம் சந்திர பிம்பம் போன்ற முகத்தினள் எனவும் வர்ணிக்கப்படுகிறாள்).



பகளாமுகி யந்திரம்

ஸ்ரீராஜ மாதங்கீ தியானம்

த்யாயேயம் ரத்னபீடே சுககலபடிதம் ச்ருண்வதீம் ச்யாமளாங்கீம்
ந்யஸ்தை காங்க்ரீம் ஸரோஜே சசிசகல தராம் வல்லகீம் வாதயந்தீம் /
கல்ஹாரா பத்தமாலாம் நியமித விகஸத் சூளிகாம் ரக்தவஸ்த்ராம்
மாதங்கீம் சங்க பத்ராம் மதுமத விவசாம் சித்ரகோத்பாஸி பாலாம் //

(ரத்ன பீடத்தில் அமர்ந்து ஒரு சரணார விந்தத்தை தாமரை மலரில் வைத்துக் கொண்டிருப்பவளும், கிளியின் அழகிய சொல்லைக் கேட்பவளும், நீல நிறத்தினளும், சந்திர கலை தரித்தவளும், வீணை வாசிப்பவளும், செங்கழு நீர் பூமாலை அணிந்தவளும், கட்டிய அழகிய கேசம் உடையவளும், சிவந்த வஸ்த்ரம் தரித்தவளும், சங்குத் தோடணிந்திருப்பவளும் (காதம்பரீ), மது அருந்தி மதத்தினால் தன்னை மறந்திருப்பவளும், திலகம் விளங்கும் நெற்றியை உடையவளுமான ஸ்ரீராஜமாதங்கீயை நான் தியானிக்கின்றேன்).



ராஜமாதங்கி யந்திரம்

ஸ்ரீ கமலாத்மிகா தியானம்

காந்த்யா காஞ்சன ஸன்னிபாம் ஹிமகிரி ப்ரக்யைச் சதுர்பிர்கஜை:
ஹஸ்தோத்க்ஷிப்த ஹிரண்மயாம்ருத கடை: ஆஸிச்யமானாம் ஸ்ரீயம் /
பிப்ராணாம் வரதாப்ஜயுக்மமபயம் ஹஸ்தை: கிரீடோஜ்வலாம்
க்ஷௌமாபத்த நிதம்ப பிம்பலளிதாம் வந்தே (அ) ரவிந்த ஸ்திதாம் //

(தங்க நிறத்தினள். ஹிமாலயம் போன்ற நான்கு யானைகளின் துதிக்கையில் உள்ள பொன்மயமான அமிர்தக் கலசங்களால் அபிஷேகம் செய்விக்கப்பட்டவள். நான்கு கரங்களில் வரம், இரண்டு தாமரை மலர்கள், அபயம் தரித்தவள். கிரீடத்தால் பிரகாசிப்பவள். இடையில் பட்டாடை தரித்திருப்பவள். இவளே மகாலக்ஷ்மீ (கமலாத்மிகா). தாமரை மலரில் வீற்றிருப்பவளை வணங்குகின்றேன்.



கமலாத்மிகா யந்திரம்

சரசுவதியின் திருவுருவ வகைகள்

மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப நாடக நடிகனானவன் பல உருவங்களை ஏற்றுக்கொண்டு தோன்றுவது போல சக்தியின் வடிவமாம் சரசுவதி தேவியும் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு அவரவர்கள் பரிபக்குவ நிலைக்கு ஏற்ப, பல்வேறு காலங்களுக்கு ஏற்பத் திருவுருவங்களுடன் வெளிப்பட்டு அருளுகின்றாள்.

நூல்கள்

அவ்வகையில் கணபதி, முருகன், திருமால், சிவன், திருமால், லட்சுமி, சரசுவதி, சக்தி, சூரியன் ஆகிய தெய்வத் திருவுருவங்களில் பல பேதங்கள் காணப்படுகின்றன. விநாயகர் பராக்கிரமம், குமாரதந்திரம், சிவபாரக்கிரமம், விஷ்ணு பராக்கிரமம், தேவி பாகவதம், தந்திர சாரம் சிற்ப நூல்கள், சிவாகம நூல்கள், சம்ஹிதைகள், மந்திர சாஸ்திரம், தியான ரத்னாவளி, மகாபுராணங்கள், உபமகாபுராணங்கள் முதலிய பல நூல்கள் தெய்வத் திருவுரு வகைகளை விரிவாக எடுத்துரைக்கின்றன.

குறிப்பாக இப்பகுதியில் ஞான சொரூபமாக விளங்குபவளும், கல்விக்கு அதிதெய்வமாகப் போற்றப்படுபவளும் அறுபத்து நான்கு கலைகளுக்குப் பிறப்பிடமாக இருந்து அருளுபவளுமாகிய சரசுவதி தேவியானவள் ஞானத்தை வளர்க்கும் பொருட்டு பல நிலைகளில் திருவுருக் கொண்டு தனது கரங்களில் பல முத்திரைகளையும், பல ஆயுதங்களையும் ஏந்தியவளாய் (தியானத்திலும், சிற்பத்திலும், ஓவியத்திலும், வேதாகம நூல்களிலும், தந்திர நூல்களிலும், மந்திர நூல்களிலும்) விளங்குகின்றாள். பொதுவாக உருவ பேதங்கள், யோக பேரம், போக பேரம், தியான பேரம் என்ற முறையில் இருப்பதாகக் கூறுவாரும் உளர்.

சரசுவதி தேவியின் திரு உருவைக் காணும்போது அவள் நின்ற நிலையிலும், அமர்ந்த நிலையிலும், முனிவர்கள் வணங்கிடவும், பணிப் பெண்கள் பணி செய்திடவும், வானவர்கள் மலர் பொழிந்திடவும், யானைகள் அபிஷேகத்தினைச் செய்திடவும், லட்சுமி - ருத்ராணி இருவரும் இருமருங்கிலும் விளங்கிடவும், பதினாறு சக்திகள் சூழ்ந்து விளங்கவும், இவள் விளங்கிடுவாள். இவ்வாறு திருக்கோலம் கொண்டருளும் இத்தேவியின் கரங்களில் சில முத்திரைகளும், ஆயுதங்களும் காணப்படும்.

இரண்டு திருக்கரங்களையுடைய சரசுவதி தேவியின் பல பெயர்களும், கரங்களில் விளங்கும் முத்திரைகளும் ஆயுதங்களும்

	பெயர்	வலக்கரம்	இடக்கரம்
1.	சரசுவதி	எழுதுகோல்	புஸ்தகம் (சுவடி) (ஏடு)
2.	சரசுவதி		புஸ்தகம்
3.	பராசம்புதிதா	சின்முத்திரை (ஞானமுத்திரை)	புஸ்தகம்
4.	சரசுவதி	அட்சமாலை	வீணா
5.	பாரதி	அட்சமாலை	புஸ்தகம்

குறிப்பு :- 1 -5 முடிய உள்ள விவரங்கள், சாரதா திலகம், சோழர்பாணி, வித்யார்வை தந்திரம் என்ற நூல்களில் எடுக்கப்பட்டது.

நான்கு திருக்கரங்களையுடைய சரசுவதி தேவியின் பல பெயர்களும், கரங்களில் விளங்கும் முத்திரைகளும் ஆயுதங்களும்

	பெயர்	வலக்கரம்	இடக்கரம்
1.	சரசுவதி	வரதம், அட்சமாலை	கபாலம், புத்தகம் (ஏடு) (சுவடி)
2.	சரசுவதி	சிந்தா, அட்சமாலை (ஞானதீபம்)	கலசம், சுவடி
3.	சரசுவதி	சிந்தா, அட்சமாலை	கலசம், எழுதுகோல்
4.	சரசுவதி	வீணா, அட்சமாலை	கலசம், சுவடி
5.	சரசுவதி	பத்மம், அட்சமாலை	பத்மம், சுவடி
6.	சரசுவதி	பத்மம், பத்மம்	எழுத்தாணி, சுவடி
7.	சரசுவதி	வரதம், அட்சமாலை	அபயம், சுவடி
8.	சரசுவதி	அபயம், அட்சமாலை	வரதம், சுவடி
9.	சரசுவதி	வீணா, அட்சமாலை	வீணா, சுவடி
10.	சரசுவதி	வரதம், பத்மம்	அட்சமாலை, சுவடி
11.	சரசுவதி	அட்சமாலை, அங்குசம்	பாசம், சுவடி
12.	சரசுவதி	அட்சமாலை, வரதம்	அபயம், சுவடி
13.	சரசுவதி	அட்சமாலை, தண்டம்	கலசம், சுவடி
14.	சரசுவதி	அட்சமாலை, வீணா	கலசா, சுவடி
15.	சரசுவதி	சிந்தா, பத்மம்	அட்சமாலா, சுவடி
16.	சரசுவதி	அட்சமாலை, அங்குசம்	வீணா, சுவடி
17.	சரசுவதி	அட்சமாலை, வீணா	பத்மம், சுவடி
18.	சரசுவதி	அட்சமாலை, வரதம்	பத்மம், சுவடி
19.	சரசுவதி	அட்சமாலை, சுருவம்	கலசம், சுவடி
20.	சரசுவதி	அட்சமாலை, அபயம்	வரதம், டங்கா (கத்தி)
21.	நீல சரசுவதி	(கண்டா) மணி, கபாலா	சூலம், அசி (குறுவாள்)
22.	நீல சரசுவதி	கர்த்தரி, கபாலம் (மழு கபாலம்)	அரைகபாலம், திரிசூலம்
23.	நீல சரசுவதி	கர்த்தரி, திரிசூலம்	கபாலா, பாத்ரா (இலைக்கத்தி)
24.	வாகீஸ்வரி	பத்மம், பத்மம்	வரதம், ஆதர்ஸா (கண்ணாடி)
25.	வாகீசுவரி	சுவடி, அட்சமாலை	வரதம், அபயம்
26.	மகா சரசுவதி	அட்சமாலை, சுவடி	அபயம், பத்மம்
27.	சரசுவதி	அட்சமாலை, சுவடி	அபயம், வரதம்
28.	பூதலிபி	வரதம், அட்சமாலை	சுவடி, கபாலம்
29.	மாத்ரிகா	வரதம், அட்சமாலை	கலசம், சுவடி
30.	தாரோதகலா	அட்சமாலை, சுவடி	காபலம், கபாலம்
31.	லட்சுமி	அட்சமாலை, பத்மம் (யானைகள் இருபக்கத்திலும் விளங்கும்)	பத்மம், புஸ்தகம்
32.	பாலா	அட்சமாலை, பாசம்	அங்குசா, சுவடி
33.	பாலா	அட்சமாலை, வரதம்	அபயம், சுவடி
34.	காமேசுவரி	அட்சமாலை, லக்ஷுகாபா	புஷ்பபாணம், சுவடி
35.	பரமஹம்ஸா	சுவடி, அட்சமாலை	கலசம், சின்முத்திரை
36.	திரிபுராபைரவி	அட்சமாலை, புஸ்தகம்	வரதம், அபயம்
37.	திரிபுராபைரவி	அட்சமாலை, புஸ்தகம்	அபயம், வரதம்



வாக்தேவி



மகா சரஸ்வதி



சிந்தாமணி சரஸ்வதி

38.	சம்பத்ப்ரதா பைரவி	அட்சமாலை, வரதம்	சுவடி, அபயம்
39.	சத்குடா பைரவி	பாசம், அங்குசம்	சுவடி, அக்ஷா
40.	மாதங்கி	பத்மம், புஸ்தகம்	தனுசு, பாணம்
41.	மாதங்கி	சிந்தா, புஸ்தகம்	தனுசு, பாணம்
42.	பிராம்ஹி	அட்சமாலை, அபயம்	தண்டம், குண்டிகா
43.	பிராம்ஹி	வரதம், சுவடி	அட்சமாலை, பத்மம்
44.	பிராஹ்மணி	அட்சமாலை, கும்பம்	சிருக், சிருவம்
45.	சாரதா	கும்பம், சின்முத்திரை	அட்சமாலை, சுகா (கிளி)
46.	சாரதா	அட்சமாலை, வியன்	வீணா, பத்மம்
47.	பாரதி	வரதம், அட்சமாலை	பத்மம், சுவடி
48.	பாரதி (வேறுவகை)	எழுத்தாணி, புஸ்தகம்	பத்மம், பத்மம்
49.	பாரதி (வேறுவகை)	அட்சமாலை, கும்பம்	சிந்தா, புத்தகம்
50.	பாரதி (வேறுவகை)	அட்சமாலை, கும்பம்	சிந்தா, புத்தகம்
51.	பாரதி (வேறுவகை)	சிந்தா, அட்சமாலை	வரதம், புத்தகம்
52.	மகாவித்யா	சிந்தா, பத்மம்	வீணா, புத்தகம்
53.	மகாவாணீ	சிந்தா, புத்தகம்	வீணா, பத்மம்
54.	மகாதேனு	வரதம், பத்மம்	வீணா, புத்தகம்
55.	மகாலட்சுமி	அட்சமாலை, பத்மம்	புத்தகம், உத்பலா (மலர்)
56.	மகாகாளி	அட்சமாலை, பத்மம்	புத்தகம், அபயம்
57.	மகாஈஸ்வரி	வரதம், அபயம்	பத்மம், புத்தகம்
58.	ஆர்யா	வரதம், அட்சமாலை	புத்தகம், பத்மம்
59.	வேதகர்பா	வரதம், புத்தகம்	வீணா, பத்மம்
60.	வாக்தேவி	அட்சமாலை, சிந்தா	சுகா, புத்தகம்

மேலே கொடுக்கபட்டுள்ள நான்கு கரங்கள் உடைய சரசுவதி (1 - 60) முடிய முத்திரைகள் யாவும் - சாரதா திலகம், பிரபஞ்ச சார தந்திரம், அக்னி புராணம், ரூப மண்டலா, பஞ்சரத்னாகமம், விஷ்ணு தர்மோத்தரம், பூர்வ காரணம், அம்சுமத் பேதாகமம், தேவி மகாத்மியம், மண்டன மகாவித்யா, வித்யார்ணவ மகாசரசுவதி, சோமநாதபுரம் சிற்பங்கள், ராமாயணம் ஆகிய நூல்களிலிருந்து திரட்டியவை ஆகும்.

ஆறு கரங்களை உடைய சரசுவதியின் உருவங்களில் ...

1. சாரதா

வலக்கரங்களில் - பத்மம், பாசம், சூலம், இடக்கரங்களில் - கலசம், கபாலம், அபயம்.

2. சாரதா (வேறுவகை)

வலக்கரங்களில் - சூலம், பாசம், பத்மம், இடக்கரங்களில் - பாசம், கலசம், வரதம்.

3. சாரதா (வேறுவகை)

வலக்கரங்களில் - கமலம், பாசம், சூலம். இடக்கரங்களில் - கலசம், வியூகஹா, பாசம்.

4. த்ரைலோக்ய மோகனா

வலக்கரங்களில் - வீணா, பாசம், அங்குசம். இடக்கரங்களில் - கல்பவல்லீ, கபாலம், வீணா.



ஸ்ரீவித்யா தேவி



வேதகர்பா



பாலா சரஸ்வதி


வாசஸ்பதி வாகீஸ்வரி

வாசஸ்பதி வாகீஸ்வரி



சரஸ்வதி சிற்பங்கள் (தஞ்சாவூர்)

5. த்ரைலோக்ய மோகனா (வேறுவகை)

வலக்கரங்களில் - வீணா, அங்குசம், அட்சமாலை. இடக்கரங்களில் - பாசம், பத்மம், வீணா.

6. த்ரைலோக்ய மோகனா (வேறு வகை)

வலக்கரங்களில் - வீணா, அங்குசம், அட்சமாலை. இடக்கரங்களில் - பாசம், பத்மம், வீணா.

7. சரசுவதி

வலக்கரங்களில் - சங்கு, சக்கரம், குடா (மாலை). இடக்கரங்களில் - அட்சமாலை, பத்மம், வீணை.

எட்டு கரங்களை உடைய சரசுவதியின் உருவங்களில் ...

1. சரசுவதி

வலக்கரங்களில் - அபசாலா, முயா, சக்ரம், திரிசூலா. இடக்கரங்களில் - சங்கம், லாங்லா, (சாட்டை), கபா (வில்), பினா (பினாகம்).

2. மகா சரசுவதி

வலக்கரங்களில் - சரா, முசலா, சக்ரம், திரிசூலா. இடக்கரங்களில் - சங்கம், லாங்கலா கண்டா (மணி), கபா.

பத்து கரங்களையுடைய சரசுவதியின் உருவங்களில் ...

1. சாரதா

வலக்கரங்களில் - பத்மம், சக்கரம், குணபாசா (முடிக்கயிறு), ஹரிநா, புத்தகம். இடக்கரங்களில் - வர்ணமாலா யந்திரம், டங்கம், கபாலம், வரதம், கும்பம்.

2. காமேஸ்வரி

வலக்கரங்களில் - திரிசூலம், டமருகம் (உடுக்கை), அசி, க்ருதா (வஜ்ரம்), பினாகா (வில்). இடக்கரங்களில் - பானம், பாசம், அங்குசம், புத்தகம், அட்சமாலை.

3. ருத்ரபைரவி

வலக்கரங்களில் - திரிசூலா, டமரு (உடுக்கை), அசி, க்ருதா, பினாகா. இடக்கரங்களில் - பானம், பாசம், அங்குசா, புஸ்தகா, அட்சமாலா.

காசியபம் (சிற்ப நூல்)

சரசுவதி நான்கு திருக்கரங்களை உடையவள். வியாக்யான முத்திரை, ஜபமாலை, புத்தகம், குண்டிகை ஆகியன விளங்கும்.

மாசாரம் (சிற்ப நூல்)

சரசுவதி தேவியானவள் நான்கு கரங்களை உடையவள். அக்கரங்களில் ஞான முத்திரை, புத்தகம், ஜபமாலை, கமண்டலமும் விளங்கும்.

மானசாரம் (வேறுவகை)

சரசுவதி தேவிக்கு இரண்டு கரங்களையும் அமைக்கலாம். வலக்கரம் வரதமாகவும், இடக்கரம் தாமரையினைக் கொண்டும் விளங்குதல் வேண்டும்.

ஸ்ரீதத்வநிதி (சிற்ப நூல்)

சரசுவதியின் நான்கு கரங்களில் முறையே - புத்தகம், ஜபமாலையும், முன்கரங்களில் வீணையினைத் தாங்கி வாசிக்கும் முறையில் அமைத்தல் வேண்டும்.

சில்பரத்தினம் (சிற்ப நூல்)

சில்பரத்தினத்தில் வாகீஸ்வரியைப் பற்றிக் கூறும்போது எழுத்தாணியை வலக்கரத்திலும் சுவடியை இடக் கரத்திலும் அமைத்தல் வேண்டும் என்று கூறுகிறது.

சண்டிகல்பம்

மகாசரசுவதி 8 கரங்களை உடையவள். மணி, சூலம், கலப்பை, சங்கம், உலக்கை, சக்கரம், வில், அம்பு ஆகியன கரங்களில் விளங்கும்.

மகாலக்ஷ்மி ரத்னகோசம்

ஷெ நூலில் ஸ்ரீவித்யா தேவியானவள் ஆதிசேக்ஷன் மீது அமர்ந்தவளாயும், தெத்திப் பற்களை உடையவளாயும், வீணையினை ஏந்தி வாசிப்பவளாயும் விளங்குபவள் ஆவாள்.

மார்க்கண்டேய புராணம்

இந்த நூலில் சரசுவதி தேவியின் நான்கு கரங்களில் சங்கு, சக்கரம், கதை, அபயம் ஆகியன கொண்டு கருட வாகனத்தில் வீற்றிருப்பாள்.

ஸ்ரீதத்வநிதி (வேறுவகை)

வெண்தாமரை மலரில் வீற்றிருப்பவள், நான்கு கரங்கள் கொண்டு திகழ்பவள். தண்டம், புத்தகம், ஜபமாலை, கிண்டி ஆகியன கரங்களில் திகழும்.

ஸ்ரீதத்வநிதி (வேறுவகை)

இந்நூலில் பராதேநு வாகீஸ்வரி என்ற அமைப்பில் வாகீஸ்வரியைக் கூறும்போது இவளது நான்கு கரங்களில் பாசம், அங்குசம், ஜபமாலை, புத்தகம் ஆகியன விளங்கும்.

ஸ்ரீதத்வநிதி (வேறுவகை)

இந்நூலில் சௌபாக்ய வாகீஸ்வரியை குறிப்பிடுகையில் எழுதுகோலையும், சுவடியையும் கொண்டு காட்சி தருவாள் என்கிறது.

ஸ்ரீதத்வநிதி (வேறுவகை)

ககாரத் தேவதை வாணி தியானத்தில் ஜபமாலை, தாமரைப்பூ, கிளி, புத்தகம், ஆகியன நான்கு கரங்களில் விளங்கும்.

நிருசிம்ஹ பிராசாரதம்

இந்நூலில் இத்தேவியானவள் புத்தகம், ஜபமாலை, வீணை, கமண்டலம் ஆகியவற்றைத் தனது நான்கு கரங்களில் தரித்திருப்பாள் என்று கூறுகிறது.

பிராம்ஹி (நிருசிம்ஹ பிராசரதம்)

ஹம்ச வாகனத்தில் நான்கு முகங்களும், ஆறு கரங்களும் கொண்டவளாக விளங்குவாள். இடக்கரங்களில் - வரதம், சூத்திரம், சுருவம், வலக்கரங்களில் - புத்தகம், குண்டிகை, அபயம் ஆகியன விளங்கும்.

மூர்த்தித் தியானம்

மூர்த்தித் தியானத்தில் சரசுவதி ன் நான்கு கரங்களில் ஸ்படிக மாலை, வெண்தாமரை, கிளி, புத்தகம் (ஏடு) ஆகியன விளங்கும்.

மூர்த்தித் தியானம் (வேறு வகை)

வெண்தாமரை மலரில் வீற்றிருப்பவள். வீணையினைக் கொண்டு விளங்குபவள். பிரமன், திருமால், ருத்திரன் இவர்களால் பூஜிக்கப்படுபவள்.

மூர்த்தித் தியானம் (வேறு வகை)

வாக்தேவியாக தியானிக்கப்படும். இத்தேவியின் நான்கு கரங்களில் புத்தகம், ருத்ராட்ச மாலை, கிளி, தாமரை விளங்கும்.

ஹம்ஸவாகினி / மயூர வாகினி

அன்னப்பறவை, மயில் இவைகளின் மேல் அமர்ந்து வீணையினை வாசிக்கும் வடிவமாகவே சரசுவதி தேவியின் திருவுருவம் அமைக்கப்படும்.

நீல சரசுவதி

வித்யா தேவதைகளில் தாரா என்றும், நீல சரசுவதி என்றும், சரசுவதி போற்றப்படுகின்றாள். இவள் ஓங்கார வடிவினள்.

பாலா சரசுவதி

பாலா சரசுவதியின் கரங்களில் ஜபமாலையும், புத்தகமும் விளங்கும்.

மேலும் சரசுவதி உருவத்தில் பல்வேறு நிலைகள் பற்றி வேதங்கள், புராணங்கள், பிராம்மணங்கள், ஆகமங்கள் ஆகியவற்றில் விரிவாகக் காணலாம்.

* * *



மகா சரஸ்வதி யந்திரம்


ॐ श्रीं ह्रीं ह्सौः हुं फट् नीलसरस्वत्यै स्वाहा ॥ स्त्रीं ॥
स्त्रीं
स्त्रीं
स्त्रीं
द्रां द्रीं क्लूं क्लीं सौः ह्रीं स्वाहा ॥

நீல சரஸ்வதி யந்திரம்


सर्वजनमनोहरि सर्वसुखरंजिनि
॥ भगनायै नमः॥
लक्ष्मी
श्रीं
ओं
मों
वं
प्रीतिः
ह्रीं
मातंग्यै नमः
(ह्रां द्राविण्यै । ह्रीं शोषिण्यै । वं बन्धिन्यै । मों मोहिन्यै । आं आकर्षिण्यै । नमः॥

ராஜமாதங்கி யந்திரம்

வாக்வாதிநீ யந்திரம்


अं
आं
वद
स
सां
नमः
सोः
ॐ
क्लीम्
र
दि
वा
ग्वा
स्व



பூர்ண மாத்ருகா யந்திரம்



ह्रीं	ह्रीं	ह्रीं	ह्रीं	ह्रीं	ह्रीं	ह्रीं
अ	आ	इ	ई	उ	ऊ	ऋ
ज	झ	ञ	ट	ठ	ड	ॠ
ळ	भ	म	य	र	ढ	ऌ
च	ब	स	ह	ल	ण	ॡ
ङ	फ	ष	श	व	त	ए
घ	प	न	ध	द	थ	ऐ
ग	ख	क	अः	अं	औ	ओ

மாத்ருகா தேவதா சாந்திகர யந்திரம்



மகாவித்யா பூஜா யந்திரம்

சப்தமாதர்கள்

(சப்த மாத்ருகள் - சப்த கன்னியர்கள்)

தாய்த் தெய்வ வழிபாட்டிற் சிறப்பிடம் பெறும் ஏழு பெண் தெய்வங்கள் சப்தமாதர்கள் அல்லது சப்த மாத்ருக்கள் என அழைக்கப்படுவர். இவர்களை சப்த கன்னியர் என்றும் அழைப்பதுண்டு. இவர்கள் முக்கியமான இந்து சமய தெய்வங்களின் சக்திகளாவர். பிராமி (சரசுவதி), மாகேசுவரி (சிவசக்தி), கௌமாரி (குமாரசக்தி), வைஷ்ணவி (லக்ஷ்மி), வாராகி, மாகேந்திரி (இந்திராணி), சாமுண்டா (சாமுண்டி) என்னும் சக்திகள் எழுவரும் முறையே, பிரம்மா, சிவன், முருகன், விஷ்ணு, வராகமூர்த்தி, இந்திரன், யமன் என்போரின் சக்திகளாக இருந்து வேண்டுவோர்க்கு வேண்டிய பலன்களைத் தருகின்றனர். இவ்வெழுவரின் திருமேனிகள் சிவனாலயத்தின் ஆவரணப் பகுதியில் விளங்கும். மேலும் தனித்து அருள் வழங்கும் அம்பிகை வழிபாட்டிலும் அம்பிகையைப் பார்த்தவாறு விளங்குவர்.

சப்தமாதர்களின் திருமேனிகளை பிரதிஷ்டைக்கு முன் விநாயகர், வீரபத்திரர், பைரவர் திருமேனி ஏதேனும் ஒன்றினை நிறுவி தொடர்ச்சியாக சப்தமாதர்களை அமைப்பர். தமிழ்நாட்டில் பல கிராமங்களில் தனித்த நிலையில் சப்த மாதர்களுக்குக் கோயில்கள் பல உள்ளன.

சப்தமாதர்களின் தோற்றம் தொடர்பாக வேறுபட்ட புராணக் கதைகள் கூறப்படுகின்றன. சிவனுக்கும் அந்தகாசுரன் என்னும் அசுரனுக்குமிடையேயான போரில் சிவனுக்கு உதவியாகத் தோற்றுவிக்கப் பட்டவர்கள் என வராக புராணத்திற் கூறப்படுகின்றது. சிவன் அந்தகாசுரனுடன் போரில் ஈடுபட்டபோது அந்தகாசுரனின் உடலில் இருந்து வழிந்த இரத்தத்திலிருந்து தோன்றிய அசுரர்களை அழிக்கும் நோக்கில் சிவன் தனது வாயிலிருந்து தோன்றிய அக்கினியிலிருந்து யோகேசுவரி என்னும் சக்தியை உருவாக்கினார் எனவும், மகேசுவரி என்னும் பெயருடைய சக்தியும் இவரால் உருவாக்கப்பட்டதெனவும், பிரம்மா, இந்திரன், வராக மூர்த்தி, விஷ்ணு, குமரன், யமன் என்போரும் தமது சக்திகளை சிவனுக்குதவியாக மாத்திரிகள் தோற்றுவிக்கப்பட்டனர் என மார்க்கண்டேய புராணமும் தேவி மகாத்மியமும் கூறுகின்றன. நைரித என்பவனுக்கு எதிராகப் போரில் பிரம்மாவிற்கு உதவியாக இவர்கள் தோற்றுவிக்கப்பட்டனர் என சுப்ரபேதாகமத்திலிருந்து அறிய முடிகின்றது.

மாத்திரிகர்களின் எண்ணிக்கை, அவர்களைக் கூறும் ஒழுங்கு தொடர்பாக வேறுபாடுகளுமுண்டு. மாத்திரிகர்களின் எண்ணிக்கை ஏழாகக் காணப்படினும் எட்டு அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையிலான மாத்திரிகள் பற்றிய குறிப்புக்களுமுண்டு. ஸ்கந்த புராணம், தேவி புராணம், பிரம்மவைவர்த்த புராணம் என்பவனவற்றில் பல மாத்திரிகள் குறிப்பிடப்படுகின்றனர். தேவி பாகவதம் நித்ய சோடசிகார்ணவ, பிரபஞ்ச சார தக்கிரம், லிங்க புராணம், மந்தரமஹோததி, வராகபுராணம் போன்ற நூல்கள் எட்டு மாத்திரிகர்களின் பெயர்களைக் குறிப்பிடுகின்றன. கதாசரித்சாகரம் என்னும் நூல் நாராயணி தலைமையிலான மாத்திரிகளைக் குறிப்பிட்டாலும் அவர்களின் பெயர்களைத் தரவில்லை. வேறு சில நூல்கள் பதினாறு மாத்திரிகர்களைக் குறிப்பிடுகின்றன. இவ்வாறு வெவ்வேறு எண்ணிக்கையிலான மாத்திரிகர்கள் குறிப்பிடப்பட்டாலும் மாத்திரிகர்களின் சிற்பங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது பிராமி, மகேசுவரி, கௌமாரி, வைஷ்ணவி, வராகி, இந்திராணி, சாமுண்டி என்னும் சப்த மாத்திரிகர்களே சில வேறுபாடுகளுடன் காட்டப்படுவதனைக் காணலாம். முற்கால சாளுக்கியர்களின் கல்வெட்டுக்களிலும் மாத்திரிகர்களின் எண்ணிக்கை ஏழாகவே குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கினி புராணம், அம்சுமத் பேதாகமம், பூர்வகாரணாகமம், மச்ச புராணம், ரூபாவதாரம், ரூப மண்டனம், விஸ்வகர்ம சாஸ்திரம், சில்பரத்தினம், ஸ்ரீதத்வநிதி, விஷ்ணுதர்மோத்திர புராணம், தேவி புராணம் போன்ற நூல்களில் சப்த மாத்திரிகர்களின் உருவ அமைப்பினைப் பற்றிய விபரங்கள்

கூறப்பட்டுள்ளன. ஆண் தெய்வங்களின் சக்திகளான இவர்கள் தத்தமக்குரிய ஆண் தெய்வங்களின் ஆயுதங்கள், ஆபரணங்கள், வாகனம், கொடி என்பனவற்றினைக் கொண்டு காணப்படுவர்.

பிராமி

பிரம்மனின் சக்தி. இவர் மஞ்சள் நிறமானவர். நான்கு முகங்களையும், ஆறு கரங்களையும் கொண்டு காணப்படுவார். வலது பக்க மூன்று கரங்களில் ஒன்று வரத முத்திரையிலிருக்கும். மற்றைய இரு கரங்களிலும் அட்ச மாலை சிகுவா என்பன காணப்படும். இடது கரங்களில் ஒன்று அபய முத்திரையிலிருக்க மற்றையன புத்தகம், கமண்டலம் என்பன வற்றினை ஏந்தியவாறு காணப்படும். அம்சுமத் பேதாகமம், ரூபமண்டனம் என்னும் நூல்கள் பிராமியை நான்கு கரங்களுடனும் விவரிக்கின்றன. இவர் செந்தாமரை மீது உட்கார்ந்திருப்பார். வாகனமாகவும் கொடியாகவும் அன்னம் காணப்படும். மஞ்சள் ஆடை உடுத்தி, ஆபரணங்களை அணிந்திருப்பார். தலையில் கரண்ட மகுடம் காணப்படும்.

மகேசுவரி

சிவனின் சக்தி. வெள்ளை நிறமானவர். இவர் ஐந்து முகங்களையும், ஒவ்வோர் முகத்திலும் மூன்று கண்களையும் கொண்டிருப்பார் என ஸ்ரீதத்வநிதி, விஷ்ணு தர்மோத்திர புராணம் என்பனவற்றிற் கூறப்பட்டுள்ளது. ஸ்ரீதத்வநிதி இவருக்குப் பத்துக்கரங்கள் காணப்படுமெனவும் அவற்றுள் வலது பக்கத்திலுள்ள ஐந்து கரங்களில் ஒன்று அபய முத்திரையிலிருக்க ஏனையவற்றில் வாள், வஜ்ரம், திரிசூலம், பரசு என்பன காணப்படுமெனவும், இடது பக்கத்திலுள்ள கரங்களிலொன்று வரத முத்திரையிலிருக்க ஏனையவற்றில் பாசம், மணி, நாகம், அங்குசம் என்பன இடம் பெற்றிருக்கும் எனவும் கூறுகின்றது. விஷ்ணு தர்மோத்திர புராணத்தில் இவருக்கு ஆறு கரங்களும், ரூப மண்டனம், மச்ச புராணம், அம்சுமத் பேதாகமம், பூர்வ காரணாகமம் என்பனவற்றில் நான்கு கரங்களும் கூறப்பட்டுள்ளது. இவரது தலையில் ஜடா மகுடம் காணப்படும். அதில் பிறைச் சந்திரனைச் சூடியிருப்பார். எருதினை வாகனமாகவும் கொடியாகவும் கொண்டிருப்பார்.

கௌமாரி

முருகனின் சக்தி. இவர் ஆறு முகங்களையும், பன்னிரு கரங்களையும் கொண்டிருப்பார் என ஸ்ரீதத்வநிதி கூறுகின்றது. பன்னிரு கரங்களில் இரு கரங்கள் வரத அபய முத்திரைகளிருக்க மற்றைய கரங்கள் வேல், கொடி, தண்டம், பாத்திரம், அம்பு, வில், மணி, தாமரை, சேவல், பரசு என்பனவற்றினை ஏந்தியிருக்கும். அம்சுமத்பேதாகமம், ரூபமண்டனம், காரணாகமம் என்பனவற்றில் இவருக்கு நான்கு கரங்கள் கூறப்பட்டுள்ளது. அம்சுமத்பேதாகமத்தின்படி இவரது நான்கு கரங்களுள் இரு கரங்கள் அபய வரத முத்திரையிலிருக்கும். மற்றையன வேல், சேவல் என்பனவற்றினை ஏந்தியிருக்கும். இவர் பதின்மூன்று கண்களைக் கொண்டிருப்பார் எனவும் இவ்வாகமம் கூறுகின்றது. கௌமாரி மயிலினை வாகனமாகவும் கொடியாகவும் கொண்டவர்.

வைஷ்ணவி

விஷ்ணுவின் சக்தியான இவர் நீல நிறமானவர். ஆறு கரங்களைக் கொண்டிருப்பார். வலது கரங்களில் ஒன்று வரத முத்திரையிலிருக்கும். மற்றைய கரங்களில் கதா, தாமரை என்பன காணப்படும். இடது கரங்களில் ஒன்று அபய முத்திரையினைக் காட்டுவதாகவும், மற்றையன சங்கு சக்கரம் ஏந்தியவாறும் காணப்படும். அம்சுமத்பேதாகமம், ரூப மண்டனம் என்னும் நூல்கள் வைஷ்ணவியை நான்கு கரங்களுடன் விவரிக்கின்றன. வைஷ்ணவி அழகிய கண்களையும், முகத்தினையும், மார்பினையும் கொண்டிருப்பார். மஞ்சள் ஆடை அணிந்திருப்பார். விஷ்ணுவிற்குரிய ஆபரணங்களை அணிந்து கருடனை வாகனமாகவும் கொடியாகவும் கொண்டிருப்பார்.

வராகி

வராகமூர்த்தியின் சக்தி. கறுப்பு நிறமானவர். பன்றியின் முகத்தை ஒத்த முகத்தினையும், பெரிய வயிற்றினையும் கொண்டிருப்பார். இவருக்கு ஆறு கரங்கள் காணப்படும். வலது கரங்களில் ஒன்று வரத முத்திரையிலிருக்கும். மற்றையனவற்றில் தண்டம், வாள் என்பன இடம் பெற்றிருக்கும். இடது கரங்களில் ஒன்று அபய முத்திரையினைக் காட்ட மற்றையன கேடயம், பாத்திரம் என்பனவற்றினை ஏந்தியவாறு காணப்படும். இவர் எருமையை வாகனமாகக் கொண்டிருப்பார் என வராகியினைப் பற்றி ஸ்ரீதத்துவநிதி விவரிக்கின்றது. தண்டநாத வராகி, சுவப்ன வராகி, சுத்த வராகி, என்னும் மேலும் மூன்று வகையான வராகியின் உருவ அமைப்பு பற்றியும் இந்நூலில் கூறப்படுகின்றது. தண்டநாதவராகி பொன்னிறமானவர். பன்றியின் முகத்தினை ஒத்த முகம் கொண்டிருப்பார். இவரது கரங்களில் சங்கு, சக்கரம், கலப்பை, உலக்கை, பாசம், அங்குசம், தண்டம் என்பன காணப்படும். இரு கரங்கள் அபய, வரத முத்திரையிலிருக்கும். சுவப்ன வராகி மேக நிறமானவர். மூன்று கண்களைக் கொண்டிருப்பார். பிறைச் சந்திரனைச் சூடியிருப்பார். வாள், கேடயம், பாசம், அரிவாள் என்பன கரங்களில் இடம் பெற்றிருக்கும். இரு கரங்கள் அபய வரத முத்திரையிலிருக்கும். சுத்த வராகி நீல நிறமானவர். பன்றியின் முகத்தினை ஒத்த முகம் கொண்டவர். வெண்மையான பற்கள் வெளியே நீட்டப்பட்டவாறிருக்கும். தலையில் பிறைச்சந்திரனைச் சூடியிருப்பார். சூலம், கபாலம், உலக்கை, நாகம் என்பன கரங்களிற் காணப்படும்.

இந்திராணி

இந்திரனின் சக்தி; பொன்னிறமானவர்; ஆறு கரங்களைக் கொண்டிருப்பார் என ஸ்ரீதத்வநிதி கூறுகின்றது. வலது கரங்களில் ஒன்று வரத முத்திரையிலிருக்கும், மற்றையனவற்றில் அட்சமாலை, வஜ்ரம் என்பன காணப்படும். இடது பக்க கரங்களிலொன்று அபய முத்திரையினைக் காட்டுவதாகவும் மற்றையன தாமரை, பாத்திரம் என்பனவற்றினை ஏந்தியவாறும் காணப்படும். அம்சுமத்பேதாகமம் பூர்வகாரணாகமம் என்னும் நூல்களில் இவருக்கு நான்கு கரங்கள் கூறப்படுகின்றன. அவற்றுள் இரு கரங்கள் அபய, வரத முத்திரையிலிருக்க மற்றைய இரு கரங்கள் வேல், வஜ்ரம் என்பனவற்றினை ஏந்தியிருக்கும். தேவி புராணத்தில் அங்குசம், வஜ்ரம் என்பனவற்றினை ஏந்திய இரு கரங்களுடன் கூறப்பட்டுள்ளது. இந்திராணிக்கு ஸ்ரீதத்வநிதியில் ஆயிரம் கண்களும், அம்சுமத்பேதாகமத்தில் மூன்று கண்களும், பூர்வகாரணாகமத்தில் இரு கண்களும் கூறப்படுகின்றது. ரூப மண்டனம் என்னும் நூல் இவரை பல கண்களுடன் காட்டவேண்டும் எனக் கூறுகின்றது. இவரது தலையில் கிரீடம் காணப்படும். பல ஆபரணங்களை அணிந்திருப்பார். இந்திராணி சௌமிய இயல்பினைக் கொண்டவர். இவரது வாகனமாகவும் கொடியாகவும் யானை இடம் பெற்றிருக்கும்.

சாமுண்டி

கறுப்பு நிறமானவர். பயங்கரமான தோற்றம் கொண்டவர். இறந்த மனித உடலை இருக்கையாகக் கொண்டவர். பாம்புகளை உடலில் அணிந்திருப்பார். ஒட்டிப்போன மெலிந்த வயிறு, குழிவிழுந்த கண்களைக் கொண்டிருப்பார். இவருக்குப் பத்து கரங்கள் காணப்படும். வலது கரங்களில் உலக்கை, சக்கரம், சாமரை, அங்குசம், வாள், இடது கரங்களில் கேடயம், பாசம், வில், தண்டம், கோடரி என்பன காணப்படும் என சாமுண்டியின் உருவ அமைப்பினைப் பற்றி ஸ்ரீதத்வ நிதி விவரிக்கின்றது. விஷ்ணு தர்மோத்திர புராணத்தில் சாமுண்டி செந்நிறத்தினைக் கொண்டிருப்பார் எனக் கூறப்பட்டுள்ளது. தேவி மகாத்மியம் இவர் இரு கரங்களைக் கொண்டிருப்பார் எனவும் அவை, வாள், பாசம் என்பன ஏந்தியிருக்கும் எனவும் விவரிக்கின்றது. இவர் நான்கு கரங்களையும், மூன்று கண்களையும் கொண்டவர் எனவும் தடித்த மேல் நோக்கிய கேசம் காணப்படுமெனவும் செந்நிறத்தினைக் கொண்டிருப்பார் எனவும் ஆகமங்களிற் கூறப்பட்டுள்ளது.

அமைப்பு முறை

மாத்திரிகர்கள் ஒரே கல்லில் வரிசையாக அமர்ந்திருப்பது போன்றோ தனித்தனியாகவோ காட்டப்படுவர். அமர்ந்திருக்கும் நிலையில் இடது காலை மடித்து ஆசனத்தின் மீது வைத்து வலது காலைத் தொங்கவிட்டவாறு காணப்படுவர். ஆகமங்கள், புராணங்கள் மற்றும் நூல்களில் இவர்கட்கு இரண்டிற்கு மேற்பட்ட கரங்கள் கூறப்பட்ட போதிலும் இரண்டு அல்லது நான்கு கரங்களுடன் காட்டப்படுவதே பொதுவாகவுள்ளது. நான்கு கரங்களுடன் விளங்கும்போது முன்னிரு கரங்களும் அபய வரத முத்திரையிலிருக்கும் பின்னிரு கரங்களும் அவரவர்க்குரிய ஆயுதங்களை ஏந்தியவாறு காணப்படும். பிராமிக்கு சூலமும் அட்சமாலையும், மகேசுவரிக்கு சூலமும், மானும், கௌமாரிக்கு சக்தியும் வஜ்ஜிரமும், வைஷ்ணவிக்கு சங்கும் சக்கரமும், வராகிக்கு கலப்பையும் சக்தியும், இந்திராணிக்கு வஜ்ஜிரமும் சக்தியும், சாமுண்டிக்கு கபாலமும் சூலமும் காணப்படும். நூல்களில் குறிப்பிட்ட அம்சங்கள் தவிர்ந்த வேறு தனியான அம்சங்களும் காணப்படும் மாத்திரிக சிற்பங்களும் உண்டு. இவர்கட்குரிய வாகனங்கள் இருக்கையின்கீழ் அமைக்கப்பட்டிருக்கும். மாத்திரிகர்களின் தாய்மைக் கருத்தினை எடுத்துக் காட்டும் வகையில் இவர்களது மடியில் அல்லது பக்கத்தில் குழந்தைகளைக் காட்டும் வழக்கமுண்டு. இவர்கள் நடனமாடுவதாகச் சித்தரிக்கப்பட்ட சிற்பங்களும் உண்டு. மாத்தரிகர்கட்கு இருபுறமும் ஆயுத புருஷர்கள் அல்லது வீரபத்திரர், விநாயகர் காணப்படுவர். வீரபத்திரரை இடது பக்கத்திலும் விநாயகரை வலது பக்கத்திலும் அமைக்க வேண்டுமென ரூபமண்டனம் எனும் நூல் கூறுகின்றது. சப்தமாத்திரிகர்களுடன் காணப்படும் வீரபத்திரரை சாந்தமான முகத்துடன் முன்னிரு கரங்கள் அபய வரத முத்திரையிலிருக்க பின்னிரு கரங்கள் சூலம், கதை என்பனவற்றினைத் தாங்கியவாறு பத்மாசனத்தின் மீது உட்கார்ந்த நிலையில் காட்டவேண்டும் எனவும் இவரது வாகனமான காளையும் காட்டப்படவேண்டும் எனவும் ஆகமங்கள் கூறுகின்றன. முன்னிரு கரங்களிலும் வீணை வைத்திருப்பது போன்றும் காட்டப்படுவதுண்டு. மதுரா, அலகாபாத் நூதனசாலைகளிலுள்ள சிற்பங்கள் தமிழ்நாடு, கர்நாடக மாநிலங்களிலுள்ள சிற்பங்களில் வீணையுடன் காணப்படும் வீரபத்திரரைக் காணலாம். சில சிற்பங்களில் வீரபத்திரரும் நடனமாடுவதாகச் சித்தரிக்கப்பட்டுள்ளார். ஒரிசா மாநிலத்திலுள்ள சிற்பங்களில் தாமரை மொட்டு, வாள், அட்சமாலை, திரிசூலம், வீஜபூரக என்னும் அம்சங்களைக் கொண்ட இரண்டு அல்லது நான்கு கரங்களுடனான வீரபத்திரரைக் காணலாம். விநாயகர் சப்தமாத்திரிகர்கட்கு இடப்பக்கத்தில் தனக்குரிய அம்சங்களுடன் காணப்படுவார். சில சிற்பங்களில் விநாயகரும் நடன மாடுவதாகக் காட்டப்பட்டுள்ளது. (அலகாபாத் நூதனசாலையிலுள்ளது). அமீர் நூதன சாலையிலுள்ள (கி.பி. 8ம் நூற்றாண்டு) சிற்பம் ஒன்றில் மாத்திரிகர்க்கு நடுவில் நடராஜர் காணப்படுகின்றார். கர்நாடக மாநிலம் பாதாமிக் குகையில் நடராஜருக்குப் பக்கத்தில் நடனமிடும் மாத்திரிக சிற்பமுள்ளது.

குஷாணர்கள் காலத்தில்

குஷாணர்களது ஆட்சிக் காலத்திலிருந்து சப்தமாத்திரிக சிற்பங்களின் வளர்ச்சியினை அவதானிக்கலாம். ஆரம்பத்தில் மாத்திரிகர்கள் சாதாரண பெண்கள் போன்று தனித்தனியான குறியீடுகள், வாகனங்கள் எதுவுமின்றி இருக்கும் அல்லது நிற்கும் நிலையில் காட்டப்பட்டனர். வலது கரம் அபய முத்திரையிலிருக்க இடது கரம் பாத்திரம் ஒன்றினை ஏந்தியவாறோ அன்றேல் இடுப்பில் வைத்தவாறோ காணப்படுகின்றது. இவர்கட்கு இரு புறமும் ஆயுத புருஷர்கள் காணப்படுகின்றனர். இவர்களது வலது கரம் அபய முத்திரையிலிருக்க இடது கரம் நீண்ட ஈட்டியைப் பிடித்தவாறு காணப்படுகின்றது. மாத்திரிகர்களை குழந்தைகளுடன் காட்டும் வழக்கத்தினையும் குஷாணர் காலத்தில் காணலாம்.

குப்தர்கள் ஆட்சியில்

மத்திய காலத்தின் ஆரம்பத்திலிருந்து அதாவது குப்தர் காலத்தில் மாத்திரிகர்களின் சிற்பங்கள் தனித்துவமான அம்சங்கள், வாகனங்களுடன் செதுக்கப்பட்டன. அத்துடன் ஆயுத புருஷர்கட்குப் பதிலாக வீரபத்திரரும் விநாயகரும் இடம் பெற்றனர். சப்த மாத்திரிகர்கள் குப்தர்களதும் அவர்களது சிற்றரசர்களதும் காவல் தெய்வங்களாகக் கருதப்பட்டதனால் இவர்களது காலத்தில் இவ்வழிபாடு சிறப்புற்றிருந்தது. முதலாம் குமார குப்தனின் கங்காதர சாசனம், ஸ்கந்த குப்தனின் பீகார் சாசனம், குப்தர் காலத்தினைச் சேர்ந்த வராகமிகிரர் எழுதிய பிரம்மசம்ஹிதை, மிருச்சகடிகை, ஹேமசந்திரனின் திவ்யா கரய காவியம் என்பனவற்றில் மாத்திரிகர்கள் பற்றிய குறிப்புகள் உள.

மாத்திரிகர்களும் குழந்தைகளும்

ஒரிசா மாநிலம், புவனேசுவரத்திலுள்ள பரசுராமேசுவரர் கோயில் (கி.பி. 650), முக்தேசுவரர் கோயில், வைத்தால் தெனல் கோயில் (கி.பி. 775) என்பனவற்றிலுள்ள மாத்திரிக சிற்பங்கள் மத்திய கால இந்தியாவிலும் ஒரிஸா பகுதியிலும் இவ்வழிபாட்டின் சிறப்பினை எடுத்துக் காட்டுகின்றன. மத்திய பிரதேசம், தேவா மாவட்டத்திலுள்ள கூர்க்சி என்னும் இடத்திலிருந்து பெறப்பட்டு அலகாபாத் நூதன சாலையில் வைக்கப்பட்டுள்ள வீரபத்திரர் விநாயகருடன் கூடிய சப்த மாத்திரிக சிற்பத்தில் (கி.பி. 10ம் நூற்றாண்டு) மாத்திரிகர்கள் குழந்தைகளுடன் நடனமாடுவதாகக் காட்டப்பட்டுள்ளனர். தத்தமக்குரிய ஆயுதங்கள் வாகனங்களுடன் காணப்படும் இச் சிற்பம் கலை அழகு மிக்கது. மத்திய பிரதேசம் ரேவா என்ற இடத்திலிருந்து கிடைத்த அலகாபாத் நூதன சாலையிலுள்ள மணற்கல்லில் செதுக்கப்பட்ட சிற்பத்தில் (கி.பி. 11 ஆம் நூற்றாண்டு) மாத்திரிகர்கள் தத்தமக்குரிய ஆயுதங்கள், வாகனங்களுடன் ஒரு கரத்தில் நீர்ப் பாத்திரத்தினை ஏந்தியிருப்பது குறிப்பிடத்தக்க அம்சம்.

இதம்பூர் என்ற இடத்திலிருந்து கிடைத்து இன்று இங்கிலாந்து நூதன சாலையிலுள்ள வெண்கலத்திலான மாத்திரிகர்களின் படிமம் குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் கிடைத்துள்ள இவ் ஒரே ஒரு வெண்கல மாத்திரிக படிமத்தில் வீரபத்திரருக்கும் விநாயகருக்கும் நடுவில் பிராமி, கௌமாரி, வைஷ்ணவி என்போர் இருக்கும் நிலையில் காணப்படுகின்றனர்.

தனித்தனியான மாத்திரிக சிற்பங்களை இந்தியாவின் பல பகுதிகளிலும் பொதுவாகக் காணலாம். சிங்பூம் மாவட்டம், சேரைகேலா என்ற இடத்திலிருந்து பெறப்பட்டு பாட்னா நூதன சாலையிலுள்ள சப்த மாத்திரிக சிற்பத் தொகுதியில் வைஷ்ணவி, சாமுண்டி இருவரும் நான்கு கரங்களுடனும் மற்றையவர்கள் இரு கரங்களுடனும் உள்ளனர். மாத்திரிகள் அனைவரும் குழந்தைகளுடன் காணப்படுகின்றனர். கி.பி 6, 7 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கொள்ளப்படும் இச்சிற்பங்கள் மாத்திரிகர்களின் தலை அமைப்பு, ஆயுதங்கள், அவர்களின் தனியம்சங்களை வெளிப்படுத்தும் சிறந்த படைப்பாகும். பூரி, மார்க்கண்டேசுவரர் கோயில் குளத்தின் ஒரு பக்கத்தில் பிராமி, மகேசுவரி, கௌமாரி, வராகி, இந்திராணி என்போரின் தனித்தனி சிற்பங்கள் உள. இவர்களது தொடையின் மீது காணப்படும் குழந்தையை இடது கரத்தினால் பிடித்தவாறும் வலது முன் கரத்தில் வியாக்கியான அல்லது அபய முத்திரையினைக் காட்டியவாறுமுள்ளனர். பின்னிரு கரங்களிலும் ஆயுதங்களை ஏந்தியுள்ளனர். இருக்கைகளின் கீழ் வாகனங்கள் செதுக்கப்பட்டுள்ளன. வராகி பயங்கரமான தோற்றத்துடன் சித்தரிக்கப்பட்டுள்ளார். பிராமி நான்கு முகங்களுடன் காணப்படுகின்றார். ஜெய்ப்பூர் பிரதேசத்திலும் தனித்தனியாக மாத்திரிக சிற்பங்கள் காணப்படுகின்றன. இவை தவிர வங்களாத்திலுள்ள தேவக்ராம் என்ற இடத்திலிருந்து கிடைத்து வாரேக்திர சாகித்திய பரிசத் நூதன சாலையிலுள்ள பிராமியின் நிற்கும் நிலையிலான புடைப்புச் சிற்பம், கல்கத்தா, ஆஷ்ரோஷ் நூதன சாலையிலுள்ள வராகியின் சிற்பம், மத்திய பிரதேசம் சத்ன என்ற இடத்திலிருந்து கிடைத்து கல்கத்தா இந்திய நூதன சாலையிலுள்ள எட்டுக் கரங்களுடனும் சிங்கத்தின் முகத்துடனும் சிங்கத்தின் மீது அர்தபர்யங்க நிலையில் உட்கார்ந்திருக்கும் நரசிம்மியின் சிற்பம், படாசாலி என்ற இடத்திலிலுள்ள எட்டுக் கரங்களுடனான நரசிம்மியின் சிற்பம், பாட்னா நூதன சாலையிலுள்ள கார்த்திகாயினியின் சிற்பம் என்பன சிறந்த படைப்புக்களாகக் கருதப்படுகின்றன.

தென்னிந்தியாவில் சப்த மாத்திரிக வழிபாடு

தக்கணத்தினை ஆட்சி செய்த முற்கால சாளுக்கியர் காலத்திலிருந்து தென்னிந்தியாவில் இவ் வழிபாடு செழிப்புற்றிருந்தது. முற்கால சாளுக்கிய அரசர்கள் ஹரிதியின் வழித் தோன்றல்கள் என்றும் சப்த மாதர்களினால் வளர்க்கப்பட்டவர்கள் என்றும் சாசனங்களின் முகவுரையில் கூறப்படுகின்றனர். சாளுக்கியர் காலத்தினைச் சேர்ந்த ஐகோளே, எல்லோரா என்னுமிடங்களில் சப்த மாதர்களின் சிற்பங்களைக் காணலாம்.

பல்லவராட்சிக் காலம் முதல் தமிழ்நாட்டில் இவர்களது வழிபாடு சிறப்புப் பெற்றிருந்தது. பல்லவ மன்னன் இராஜசிம்மன் கட்டிய காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிலில் காணப்படும் மாத்திரிகர்களின் சிற்பம் திருக்கோகர்ணம், மலையடிப்பட்டி, குன்னத்தூர், திருக்காளக்குடி, திருப்பரங்குன்றம் என்னும் இடங்களிலுள்ள முற்கால பாண்டியர்களதும் முத்தரையர்களதும் குகைக்கோயில்களிலுள்ள சப்த மாத்திரிக சிற்பங்கள் தமிழ்நாட்டின் பழமையான மாத்திரிக சிற்பங்களாகக் கருதப்படுகின்றன.

சோழர் காலத்தில்

முற்கால சோழர் காலத்தில் சப்த மாதர்கட்கு தனியாக சந்நிதிகள் அமைக்கப்பட்டன. இக்காலத்தில் கட்டப்பட்ட கோயில்களில் கருவறையைச் சுற்றி அமைக்கப்பட்ட அட்ட பரிவார ஆலயங்களுள் ஒன்று சப்த மாத்திரிகர்கட்குரியதாக இருந்தது. கச்சியப்ப சில்பம், மாயாமதம் போன்ற நூல்களில் அட்ட பரிவார தெய்வங்களுள் சப்த மாத்திரிகர்களும் குறிப்பிடப்படுகின்றனர். சோழராட்சிக் காலத்தில் சப்தமாதர்கட்குத் தனியான கோயில்களும் அமைக்கப்பட்டது. தமிழ்நாடு செங்கல்பட்டு மாவட்டம் வேளச்சேரி என்ற இடத்திலுள்ள செல்லியம்மன் (காளப்பட்டரி) கோயில் திருச்சி மாவட்டம் ஆலம்பாக்கத்திலுள்ள கோயில் என்பன சப்தமாதர்கட்கான தனியான கோயில்கள். வேளச்சேரி செல்லியம்மன் கோயிலின் கருவறையில் கிழக்குப் பக்கத்தில் விநாயகர் சிற்பமும் தெற்குப் பக்கத்தில் சப்த மாத்திரிகர் சிற்பங்கள் ஒரே வரிசையில் மேற்குப் பக்கத்தில் வீரபத்திரரின் சிற்பமும் காணப்படுகின்றன. அரச வம்சத்தினைச் சேர்ந்தவர்களால் கோயிலுக்கு நிவந்தங்கள் வழங்கப்பட்டமையினை கோயிற் சுவரிலுள்ள சாசனங்கள் வாயிலாக அறிய முடிகின்றது.

முதலாம் குலோத்துங்க சோழனின் தளபதியாகிய கருணாகரத் தொண்டைமான் கலிங்க தேசத்தினை வெற்றி கொண்டமையைப் பற்றி ஜயங்கொண்டாரினாற் பாடப் பெற்ற கலிங்கத்துப் பரணியில் கடவுள் வாழ்த்தில் சிவன், விஷ்ணு, பிரம்மா, சூரியன், விநாயகர், முருகன், நாமகள், கொற்றவை என்போரைப் பாடிய பின்பு சப்தமாதர்கட்கு வணக்கம் செலுத்தியுள்ளமையைக் காணலாம்.

> மேதி, புள், அலகை, தோகை, ஏறு, உவணம்
> வேழம் என்ற கொடி ஏழுடைச்
> சோதி மென் கொடிகள் ஏழின் ஏழ்இரு
> துணைப்பதம் தெழ நினைத்துமே.
>
> கேழல், மேழி, கலை, யாளி, வீணை, சிலை
> கெண்டை என்று இனைய பல்கொடி
> தாழ, மேருவில் உயர்ந்த செம்பியர்
> தனிப்புலிக் கொடி தழைக்கவே.

- கலிங்கத்துப்பரணி 17,18.

பிராமி தியானம்

சதுர்புஜாம் சதுர்வக்த்ராம் பீதமால்யாம்பரோ ஜ்வலாம்।
வரதா பயஹஸ்தாம் ச ஸாக்ஷமாலாம் ஸ்கண்டிதாம்॥
ஜடா மகுட ஸம்யுக்தாம் ஸிம்ஹவாஹன ஸுஸ்திதாம்।
ஸர்வா பரண ஸம்யுக்தாம் ப்ராஹ்மீம் த்யாத்வா ப்ரபூஜயேத்॥

பிராமி காயத்ரீ

ஓம் ஹம்ஸத்வஜாய வித்மஹே கூர்ச்ச ஹஸ்தாய தீமஹி।
தந்நோ ப்ராம்மீ ப்ரசோதயாத்॥



நான்கு முகங்களையும், நான்கு கைகளையும் உடையவளும், மஞ்சள் நிறமான ஆடை, அட்சமாலை, இவைகளால் மிகவும் பிரகாசிக்கின்றவளாயும், வரதம், அபயம் எனும் முத்திரைகளைக் கொண்டவளும், உருத்திராக்க மாலையை அணிந்திருப்பவளும், சிம்ஹவாஹனத்தில் அமர்ந்திருப்பவளும் (அன்ன வாகனமும் உண்டு) எல்லா விதமான ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டவளுமான பிராமி தேவியை தியானம் செய்து பூசிக்க வேண்டும்.

குறிப்பு :- சப்தமாதர்களின் படங்கள் பத்ரகாளி பிரதிஷ்டாவளி நூலின்படி இங்கு கொடுக்கப்பட்டுள்ளன. இதில் பல்வேறு நிலைகள் உண்டு. குறிப்பாக பிராம்ஹிக்கு 4 முகம். ஆனால் ஒரு முகம் கொடுக்கப்பட்டுள்ளதை அறிக .

மாகேசுவரி தியானம்

ஏகவக்த்ராம் த்ரிநேத்ராம் ச மஹாதேவீம் சதுர்புஜாம்/
ஜடாமகுட ஸம்யுக்தாம் ஸுக்ல வர்ணாம் ஸுசோபிதாம்//
வரதா பய ஹஸ்தாம் தாம்ம்ருகம் டங்கஞ்ச தாரிணீம்/
வ்ருஷவாஹ ஸமாரூடாம் வந்தே மஹேஸ்வரீம் சுபாம்//

மாகேசுவரி காயத்ரீ

ஓம் வ்ருஷத்வஜாய வித்மஹே ம்ருகஹஸ்தாய தீமஹி/
தந்நோ ரௌத்ரீ ப்ரசோதயாத்//



ஒரு முகம், மூன்று கண்கள், நான்கு கைகள் இவைகளையுடையவளும், ஜடா மகுடத்தைத் தரித்திருப்பவளும், வெண்மை நிறமாக இருப்பவளும், மிகவும் அழகாக பிரகாசிப்பவளும் வரத முத்திரை, அபய முத்திரை இவைகளைக் கரங்களில் கொண்டவளும், மானையும், டங்கத்தையும், பின் கரங்களில் கொண்டவளும், ரிஷப வாகனத்தில் அமர்ந்திருப்பவளுமான மகாதேவியான மாகேசுவரியை வணங்குகின்றேன்.

கௌமாரி தியானம்

ஏகவக்த்ராம் த்விநேத்ராம் ச சதுர்புஜ ஸமந்விதாம்/
ஜடா மகுட ஸம்யுக்தாம் நீலவர்ணாம் சுயௌவனாம்//
வரதாபய ஹஸ்தாம் தாம் வஜ்ரம் சக்திம் ச தாரிணீம்/
சர்வலக்ஷண ஸம்பந்தாம் கௌமாரீம் தாம் விபாவயேத்//

கௌமாரி காயத்ரீ

ஓம் சிகித்வஜாய வித்மஹே வஜ்ர ஹஸ்தாய தீமஹி/
தந்நஸ் கௌமாரி ப்ரசோதயாத்//



ஒரு முகம், இரண்டு கண்கள், நான்கு கைகள் இவைகளையுடையவளும், ஜடா மகுடத்தை அணிந்திருப்பவளும், நீல நிறமான மேனியையுடையவளும், யௌவன வயதுடையவளும், வரதம் - அபயம் - வஜ்ராயுதம் - சக்தி ஆயுதம் இவைகளைக் கொண்டவளும் சாமுத்ரீகா லட்சணங்கள் எல்லாம் ஒருங்கே அமையப்பெற்றவளுமான கௌமாரி தேவியை வணங்க வேண்டும்.

வைஷ்ணவி தியானம்

ஏகவக்த்ராம் த்விநேத்ராம் ச சதுர்புஜ ஸமன்விதம்/
வரா பயகராம் ச்யாமாம் சங்கம் சக்ரஞ்ச தாரிணிம்//
நவயௌவன ஸம்பன்னாம் ஸ்ரீமத்கருட வாஹனாம்/
ஸர்வ லக்ஷண ஸம்பன்னாம் வைஷ்ணவிம் தேவிகாம் பஜே//

வைஷ்ணவி காயத்ரீ

ஓம் தார்க்ஷ்யத்வஜாய வித்மஹே தண்டஹஸ்தாய தீமஹி/
தந்நோ வைஷ்ணவீ ப்ரசோதயாத்//



ஒரு முகம், இரண்டு கண்கள், நான்கு கரங்கள், அபய முத்திரை, வரத முத்திரை, சங்கு, சக்கரம் இவைகளைக் கைகளில் பெற்றிருப்பவளும், கௌமார வயதைத் தாண்டி அடுத்த யௌவன வயதை அடைந்திருப்பவளும், கருட வாகனத்தின் மீது அமர்ந்திருப்பவளும், சாமுத்ரிகா லக்ஷணங்கள் எல்லாம் ஒருங்கே அமையப்பெற்றவளுமான வைஷ்ணவி தேவியை வணங்குகின்றேன்.

வாராஹீ தியானம்

ஏகவக்த்ராம் த்விநேத்ராம் ச சதுர்புஜ சமன் விதாம்/
க்ருஷ்ணாம்பர தராம் தேவீம் வராஹ சக்ரஸம்யுதாம்//
ஹலமுஸல ஹஸ்தாம் தாம் வரா பயகராம் புஜாம்/
ஸிம்ஹவாஹ ஸமாருடராம் கிரீட மகுடோஜ்வலாம்//
ஸர்வாலாங்கார ஸம்பன்னாம் வாராஹிம் பூஜயேத்புத://

வாராஹீ காயத்ரீ

ஓம் மஹிஷத்வஜாய வித்மஹே தண்ட ஹஸ்தாய தீமஹி/
தந்நோ வாராஹி ப்ரசோதயாத்//



ஒரு முகம், இரண்டு கண்கள், நான்கு கரங்கள், இவைகளைப் பெற்றிருப்பவளும், கருப்பு நிறமுள்ள ஆடையை உடுத்திக் கொண்டிருப்பவளும், வராஹ சக்கரத்தைப் பெற்றிருப்பவளும், கலப்பை, உலக்கை இவைகளை ஆயுதங்களாகக் கைகளில் பெற்றிருப்பவளும், வரத முத்திரை, அபய முத்திரையோடு சிம்ஹ வாஹனத்தில் அமர்ந்திருப்பவளும், கிரீட மகுடத்தை அணிந்திருப்பவளும், சாமுத்ரிகா லக்ஷணங்கள் எல்லாம் ஒருங்கே அமையப் பெற்றவளுமான வாராஹீ தேவியை வணங்க வேண்டும்.

மாஹேந்த்ரீ (இந்திராணி) தியானம்

ஏகவக்த்ராம் த்விநேத்ராம் ச சதுர்புஜ ஸமன்விதாம்।
ஸ ரத்ன மகுடோபேதாம் ஹேமவர்ண ஸ்வரூபிணிம்॥
வராபயகராம் போஜாம் வஜ்ரம் சக்திம் ச தாரிணீம்।
மாஹேந்த்ரீம் மாதரம் வந்தே கஜவாஹன ஸம்ஸ்த்திதாம்॥

மாஹேந்த்ரீ (இந்திராணி) காயத்ரீ

ஓம் கஜத்வஜாயை வித்மஹே வஜ்ரஹஸ்தாயை தீமஹி।
தந்நோ மாஹேந்த்ரீ ப்ரசோதயாத்॥



ஒரு முகம், இரண்டு கண்கள், நான்கு கைகளையுடையவளும், இரத்தினங்கள் பதிக்கப் பெற்ற மகுடத்தை அணிந்திருப்பவளும், பொன்னிறமான மேனியை உடையவளும், வரத முத்திரை, அபய முத்திரை, வஜ்ராயுதம், சக்தி ஆயுதம் இவைகளைக் கைகளில் பெற்றிருப்பவளும், யானை வாகனத்தின் மீது அமர்ந்திருப்பவளுமான மாஹேந்த்ரீ தாயை வணங்குகின்றேன்.

சாமுண்டாதியானம்

சதுர்புஜாம் த்ரிணேத்ராம் ச காலமேக ஸமப்ரபாம்।
த்ம்ஷ்ட்ரா கராளவதனாம் வ்யாக்ரசர்மாம் பரோஜ்வலாம்॥
ஸகட்காம் சூலஹஸ்தாம் ச கபாலா பயதாரிணீம்।
கிங்கிணி மாலயாயுக்தாம் கரண்ட மகுடான் விதான்॥
சிரோமாலா ஸமாயுக்தாம் ப்ரதே வாஹந ஸம்ஸ்திதாம்।
பிநஸ்தனீம் யெனவானம் ச சாமுண்டாம் பாவயேத்ஸதா॥

சாமுண்டா காயத்ரீ

ஓம் பாசத்வஜாய வித்மஹே சூலஹஸ்தாய தீமஹி।
தந்நோ சாமுண்டி ப்ரசோதயாத்॥



நான்கு கைகள், மூன்று கண்கள், காலமேகம் போன்ற கருப்பான மேனியும், கோரைப் பற்களுடன் கூடிய பயங்கரமான முகத்தையுடையவளும், புலித்தோலை ஆடையாக உடுத்தியிருப்பவளும், கத்தி, சூலம், கபாலம் அபயமுத்திரை கொண்டிருப்பவளும், சிறிய மணிகளாலான மாலையை அணிந்திருப்பவளும், கரண்ட மகுடம் கொண்டவளும், மனிதர்களின் (தலைகள்) முழு கபாலங்களை மாலையாக அணிந்திருப்பவளும், பிரேதத்தை (சவத்தை) வாகனமாகக் கொண்டவளுமான சாமுண்டா தேவியை எப்பொழுதும் வணங்கவேண்டும்.


லம் லம்
ஹ்ரீம்
அபரம்

இந்திராணி யந்திரம்

கௌமாரி யந்திரம்





வாராகி யந்திரம்



சிவன் - சப்தமாதர்கள் - விநாயகர்
(ஐஹோல் - கர்நாடகா - 8 - ஆம் நூற்றாண்டு)

தனித்த தேவி ரூபம்
கிராம தேவதா மற்றும் வாகனங்கள்

மூலஸ்தான அம்பிகா தியானம்

சதுர்புஜாம் சந்த்ரநிபாம் த்ரிணேத்ராம்
சந்த்ரா வதம்ஸாம் சசிதுல்ய வகத்ராம்/
குடார ராஜீவ வரோபயோஜ்வலாம்
மூலப்ரதேசஸ்தி தமாதரம் பஜம்//

காயத்ரீ

ஓம் கணாம்பிகாசை வித்மஹே மஹாதபாசை தீமஹீ/
தந்நோ கௌரீ ப்ரசோதயாத்//



மூலத்தான அம்பிகா
(திருக்கருகாவூர்)

மூன்று கண்களையும், நான்கு கரங்களையும் உடையவளும், சந்திரனைப் போன்று வெண்மையான நிறம் கொண்டவளும், அழகான முகத்தையுடையவளும், சந்திரனை முடியில் அணிந்தவளும், கோடரி (மழு), நீலோத்பலம், வரத முத்திரை, அபய முத்திரை கொண்டு விளங்குபவளும், மூலஸ்தானத்திலிருப்பவளுமான அம்பிகையை வணங்குகின்றேன்.

போகசக்தி தியானம்

த்விநேத்ராம் த்விபுஜாம்ச்யாமாம் கரண்ட மகுடான் விதாம்/
உத்பலம்வாம ஹஸ்தேன பிப்ரதீம் ஸுமனோஹராம்//
ப்ரலம்பதக்ஷ ஹஸ்தே ந சோப மானாம் த்ரிபங்கிகாம்/
ஸர்வாபரண ஸம்யுக்தாம் போகசக்தி மஹம் பஜே//

காயத்ரீ

ஓம் ஹம்போகசக்த்யை ச வித்மஹே ஸோமஹமத்யைச தீமஹி/
தந்நோ சக்தீ ப்ரசோதயாத்//



போகசக்தியம்மன்

இரண்டு கண்களையும், இரண்டு கரங்களையும் கொண்டவளும், கரண்ட மகுடத்தைத் தரித்திருப்பவளும், இடது கையில் நீலோத்பல மலரை (கருநெய்தல் மலர் அல்லது அல்லிமலர்) ஏந்தியிருப்பவளும், தொங்க விட்டுக் கொண்டிருக்கிற வலது கையையுடையவளும், திரிபங்க நிலையினால் (கழுத்து, இடுப்பு, முழங்கால் ஆகியன வளைவுடன் கூடியிருப்பது) மிக அழகாக விளங்குபவளும், நிறைய ஆபரணங்களையுடையவளுமான போகசக்தியை வணங்குகின்றேன்.

காமாட்சி தியானம்

சதுர்புஜே சந்த்ரகலாவதம்ஸே குசோந்நதே குங்குமராகசோணே/
புண்ட்ரேக்ஷு பாசாங்குச புஷ்பபாண ஹஸ்தே நமஸ்தே ஜகதேகமாத://



காமாட்சி

நான்கு கைகளையுடையவளே, சந்திரகலையினால் அலங்கரிக்கப்பட்ட சிரசையுடையவளே, பருத்த ஸ்தன பாரங்களையுடையவளே, குங்குமம் போன்று சிவந்த மேனியையுடையவளே, தாமரை மலர், கரும்பு, பாசக்கயிறு, அங்குசம், புஷ்பபாணம் இவைகளைக் கைகளில் உடையவளே. உலகுக்கெல்லாம் ஒப்பற்ற ஒரே தாயாக இருக்கின்றவளே உன்னை வணங்குகின்றேன்.

அன்னபூரணி தியானம்

ஆதாய தக்ஷிணகரேண ஸுவர்ணதர்வீம்
துக்தாந்ந பூர்ண மிதரேணச ரத்ந பாத்ரம் ।
பிக்ஷாடனா வஸரதத்த ஸுபோஜநாம் தாம்
ஸ்வர்ணப்ரபாம் ஹ்ருதி பஜே மஹிதாந்நபூர்ணீம் ॥

காயத்ரீ

ஓம் அந்த பூர்ணாயை ச வித்மஹே ஸ்வர்ணப்ரபாயை ச தீமஹி ।
தந்நோ க்ஞாநதாயீ ப்ரசோதயாத் ॥



அன்னபூரணி

வலது கையில் ஸ்வர்ணத்தால் செய்யப்பட்ட கரண்டியுடன், இடது கையில் பாலன்னம் நிரம்பிய ரத்ந மயமான பாத்திரத்தையுடையவளாகவும், பரமேச்வரன் பிக்ஷாடணத்திற்காக வரும் சமயம் அவருக்கு நல்ல உணவை அளித்தவளும், ஸ்வர்ணச் சாயை உடையவளுமான அன்னபூரணீ தேவியை மனதில் தியானம் செய்கிறேன். (திருவாவடுதுறை மடாலயத்தில் பந்திக்கட்டில் அன்னபூரணீ நின்ற திருமேனி உள்ளது. தினந்தோறும் இவள் பார்வையில் அன்னபதார்த்தங்கள் அமையும்).

துர்க்கா தியானம்

ஏகவக்த்ராம் சிரோஜ்வாலாம் ரக்த நேத்ராம் புஜாஷ்டகாம்/
நீலாங்கீம் கோரதம்ஷ்ட்ராம்ச நாநாலங்கார பூஷிதாம்//
சாப பாண கபாலாஸி லே சக்ர கதாயுதாம்/
வந்தே துர்காம் பதாக்ராந்த மஹிஷாஸுரமஸ்தகாம்//



துர்க்கா

ஒரு முகத்தையுடையவளும், ஜ்வாலையையுடைய சிரசினையுடையவளும், சிவந்த கண்களையுடையவளும், எட்டு கைகளையுடையவளும், கருமை நிறங்கொண்ட சரீரத்தையுடையவளும், கோரைப் பற்களையுடையவளும், பலவகைப்பட்ட ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவளும், வில், அம்பு, கபாலம், கத்தி, சூலம், சக்கரம், கதை இவைகளை ஆயுதங்களாக உடையவளும், காலின் கீழ் மகிஷாசுரனின் மத்தகத்தில் ஒரு காலை ஊன்றிக் கொண்டிருப்பவளுமான துர்க்கா தேவியை வணங்குகின்றேன். (மேலும் இதில் பலவகையான துர்க்கா விசேஷங்கள் உண்டு. சாக்த தந்திர நூல்கள், சிவாகமங்கள், மூர்த்தி த்யானம், ஸ்ரீதத்வநிதி நூல்களில் காண்க).

345

திருமகள் / கஜலெட்சுமி (மகாலட்சுமி - செல்லியம்மன்) தியானம்

சதுர்புஜாம் த்விநேத்ராம்ச வராபயகராந்விதாம்/
காத்வயத்ருதாம் போஜாம் க்ருதபங்கேர ஹாஸநாம்//
ஸுவர்ண கலசோபேத கஜயுக்மேந பார்ச்வயோ/
க்ருதாபிஷிக்காம் பத்மாம் தாம் கஜலக்ஷ்மீ முபாஸ்மஹே//



மஹாலட்சுமி

இரண்டு கண்களையும், நான்கு கரங்கள் கொண்டவளும் (பின் கரங்கள் உயரத்தூக்கி இருக்கின்ற நிலையில்) அக்கரங்களில் தாமரை மலர்களையும், முன் இரு கரங்கள் அபய, வரத முத்திரைகளை உடையவளும், இவளின் இரு புறத்திலும் சுவர்ண கலசங்களையுடைய இரு யானைகளினால் (கங்கை நீரால்) அபிஷேகம் செய்யப்படுகிறவளும், தாமரை மலரில் வீற்றிருக்கின்ற கஜலெட்சுமியை வணங்குகின்றேன். (**குறிப்பு** :- இத்திருவுருவக் கஜலெட்சுமி பெரும்பாலும் சிவாலயத்தின் வாயு மூலையில் காணப்படும். அருகில் சரசுவதியையும் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கும். இலக்குமி பற்றி, சண்டிகல்பம், மூர்த்தி த்யானம், காஸ்யப சில்பம், நிருஸிம்ஹ பிராஸாதம், பாஞ்சராத்ரம், மயூகம், அதர்வண ரகஸ்யம், சில்பரத்னம், மற்றும் வேதம், ஆகமம் புராணங்களில் காணலாம். சிவாலயத்தில் விளங்கும் லெட்சுமி ஓர் யட்சினி என்பர். இவள் எல்லா செல்வத்திற்கும் அதிபதி. கிராமத்தில் இவளை ஆதியில் செல்லியம்மன் (செல்வ அம்மன்) என்று வழிபடுதல் மரபு. வாக்தேவீயை பேச்சியாயீ என்று வழிபடுதலும் மரபு).

346

பத்ரகாளீ (சதுர்புஜ பத்ரகாளி) தியானம்

ஏகவக்த்ராம் த்ரிணயனாம் ஊர்த்வகேச ஸமன்விதாம்/
ச்யாம வர்ண சமாயுக்தாம் சதுர்தோர் தண்ட மண்டிதாம்//
சூலம் டமருகஞ்சைவ கபாலம் பாசமேவச/
பிப்ரதீம் புல்லநயனாம் நாநாபரண பூஷிதாம்//
ப்ரஸந்நவதநாம் தேவீம் துகூல வஸநோஜ்வலாம்/
ஸிம்ஹாதிருடாம் பத்ராப்த்யை பத்ரகாளீ மஹம்பஜே//



காளி தேவி

ஒரு முகம், மூன்று கண்கள், நான்கு கரங்கள், மேலே தூக்கியிருக்குமாறு கட்டப்பட்ட கூந்தலையுடையவளும், கருமை நிறங் கொண்டவளும், சூலம், டமருகம், கபாலம், பாசக்கயிறு இவைகளைக் கொண்டவளும், மலர்ந்த கண்களையுடையவளும், பலவகைப்பட்ட ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவளும், பட்டாடையை உடுத்தியிருப்பதால் மிகவும் பிரகாசிக்கின்றவளும், மகிழ்ச்சி பொருந்திய முகத்தையுடையவளும், சிம்ஹத்தின் மேல் வீற்றிருப்பவளுமான தேவீ பத்ரகாளியை நன்மைகளை அடைவதின் பொருட்டு நான் வணங்குகின்றேன். (**குறிப்பு :-** காளீ வடிவங்களில் நான்கு கரங்கள், எட்டு கரங்கள், 16 கரங்கள், 32 கரங்கள், 16 முகங்களோடு 64 கரங்கள் தியானங்களில் சொல்லப்படுகின்றன. பிரளய காலத்தில் இவள் எடுக்கும் திருமேனியானது சொல்லவொண்ணாததாகும்)

347

மகா மாரியம்மன் தியானம்

அக்னிஜ்வாலா சிகாமக்நி நேத்ராமக்நி ஸ்வருபிணீம்।
கரண்ட மகுடோ பேதாம் கதாடக்கா கராம்புஜாம்॥
வீராஸநாம் கபாலாஸி பாஸஹஸ்தாம் ரவிப்ரபாம்।
வந்தே தேவீம் மஹாமாரீம் நாகாபரண பூஷிதாம்॥



அக்னி ஜ்வாலையை சிகையாகக் கொண்டவளும், அக்னியைக் கண்களாகவும், உடலாகவும் கொண்டவளும், (நெருப்பு போன்ற கண்கள் மற்றும் சிவந்த மேனி) கரண்ட மகுடத்தைத் தரித்திருப்பவளும், கதை, உடுக்கை, கபாலம், பாசம் இவைகளைக் கைகளில் வைத்திருப்பவளும், வீராசனத்தில் அமர்ந்திருப்பவளும், சூரியனுக்கொப்பான காந்தியையுடையவளும், பாம்பை மாலையாக அணிந்திருப்பவளுமான மகா மாரியை வணங்குகின்றேன். (**குறிப்பு :-** எட்டு கரங்களையுடைய மகாமாரியம்மன் உண்டு - சமயபுரம்).

வீரன் தியானம்

ஸாந்த்ர நீர தசங்காசம் கர்ணவிச்ராந்தச் மச்ருகம்।
தம்ஷ்ட்ரா கராள வக்த்ரம் சப்ருகுடீக்ருத நேத்ரகம்॥
கரசோபினிகனி த்ரஞ்ச தண்டினம் நீலவாஸஸம்।
வஸநஜக்ரு தோட்யாணம் வீரமீடே த்ரிபங்கிகம்॥

காயத்ரீ

ஓம் வம் வீராய தண்டஹஸ்தாய வித்மஹே கராள வக்த்ராய தீமஹி।
தந்நோ தீர: ப்ரசோதயாத்॥



வீரன் யந்திரம்



பேச்சியம்மன் யந்திரம்

நீருண்ட மேகம் போன்று கருமையான மேனியை உடையவரும், காது வரை நீண்ட மீசையையுடையவரும், கோரைப் பற்களால் பயங்கரமான முகத்தையுடையவரும், உயரத் தூக்கப்பட்டிருக்கிற புருவத்தையுடைய கண்களையுடையவரும், கோடரியைக் கையில் கொண்டவரும், தண்டத்தையுடையவரும், நீல நிறமான ஆடையை உடுத்தியிருப்பவரும், தோலாலான வார்ப்பட்டையை இடுப்பிலணிந்திருப்பவரும், த்ரிபங்கிகமாக நிற்பவருமான வீரனை வணங்குகின்றேன். (**குறிப்பு :-** இதில் தியானம் மூன்று உள்ளது. ஆனால் கிராம தேவதை ஆலயத்தில் கையில் கோடரிக்குப் பதில் அரிவாள் காணப்படும். கீழே நாய் இருக்கும். இரு பத்தினிகளும் நின்ற நிலையில் காணப்படலாம்).

காத்தவராய சுவாமி தியானம்

ரக்தவர்ணம் த்விநயனம் வ்ருத்தாளக விபூஷிதம் /
தீர்கக்ருஷ்ண த்ருடச்மச்ரும் க்ரூர த்ருஷ்டியுதம் சுபம் //
கட்கம் தண்டஞ்ச பிப்ராணம் ஸர்வாலங்கார சோபிதம் /
ஸுரத்நபாதுகாரூடம் வீராஸநப்ரதிஷ்ட்டிதம் //
வாணிஜ்ய விப்ரகண்யேதி சக்தித்வய ஸமந்விதம் /
காத்தவராயாக்யம் தேவம கௌமாரீ புத்ரகம் பஜே //

காயத்ரீ

ஓம் காத்வராய ஸ்வாமிநே ச வித்மஹே ஸக்தி ஸஹிதாய தீமஹி /
தந்நோ குமார: ப்ரசோதயாத் //

சிவந்த மேனியையுடையவரும், இரண்டு கண்களையுடையவரும், முன்னுச்சி கேசத்தினால் அழகுபடுத்தப்பட்ட வட்டமான முகத்தையுடையவரும், நீண்டதும், கருமையானதும், எடுப்பான மீசையுடையவரும், நன்மையைச் செய்பவரும், கத்தி, தண்டம் இவைகளைக் கையில் வைத்திருப்பவளும், ஆபரணங்களால் நன்கு அலங்கரிக்கப்பட்டு பிரகாசிக்கின்றவரும், ரத்தினங்கள் பதித்த அழகான பாதுகைகள் மீது இருப்பவரும், வீராசனத்தில் அமர்ந்திருப்பவரும், வாணிஜ்யை, விப்ரகன்யை என்ற இரு சக்திகளையும் இருபுறமும் கொண்டவரும், கௌமாரியின் பிள்ளையுமான காத்தவராயன் என்று அழைக்கப்படுகின்ற இவரை வணங்குகின்றேன்.

கருப்பண்ணசுவாமி தியானம்

வ்ருத்தாயத் த்விநேத்ரம் ச வ்யாளபத்தஸுகுந்தளம் /
நீலம் ஸகஞ்சுகம் பீமம் த்ரிபுண்ட்ர விலஸந்முகம் //
குந்தம் தரந்தம் வாமே ச க்ருகரம் தக்ஷிணேகரே /
ஓட்யாண பத்த கச்சம் ச ஸர்வாலங்கார பூஷிதம் //
தப்தசாமீகராபஞ்ச சக்தித்வய ஸமன்விதம் /
கருப்பண்ணஸ்வாமிநம் த் வந்தே பீடேஸு ஸம்ஸ்திதம் //

காயத்ரீ

ஓம் க்ரூம் க்ருஷ்ண ஸ்வாமிநே ச வித்மஹே ருத்ர புத்ராய தீமஹி /
தந்நோ பீம: ப்ரசோதயாத் //

வட்டமாகவும், நீண்டு விசாலமாகவும் இருக்கின்ற இரு கண்களையுடையவரும், பாம்பினால் உயரத் தூக்கிக் கட்டப்பட்ட தலைமுடியையுடையவரும், கருப்பான மேனியையுடையவரும், சட்டையை அணிந்திருப்பவரும், விபூதி அணிந்திருப்பதால் பிரகாசிக்கின்ற முகத்தையுடையவரும், இடது கையில் ஈட்டியையும், வலது கையில் காட்டுக்கோழியையும் பெற்றிருப்பவரும், பட்டை வாரினால் கட்டப்பட்ட மூல கச்சத்தை உடையவரும், உருக்கி வார்த்த செம்பொன் போன்ற மேனியையுடைய இரு மனைவிகளை இருபுறமும் கொண்டவரும் (கனகப்ரபை, காஞ்சனப்ரபை) ஆசனத்தில் சுகமாக அமர்ந்திருப்பவருமான கருப்பண்ணசுவாமியை வணங்குகின்றேன்.

கருப்பன்சுவாமி

கிராமத்தை காத்துவரும் தெய்வங்களில் கருப்பனும் ஒரு தேவதை. கருப்பண்ணசுவாமி, கருப்பண்ணன், கருப்பு என்றெல்லாம் பல பெயர்களில் அழைக்கப்படுகிறவர். பெயரிலிருந்தே இவர் கருப்பு நிறம் என்பதை தெரிந்து கொள்ளலாம்.

இவர் மகா பராக்கிரமமுடையவர் (மகா விக்ரம சாலினம்); வீரர்களுக்குக் கோபம் வந்தால், கண்கள் நெருப்புக் கனலாகச் சிவந்து போகும். இவருடைய கண்களும், ரத்தச் சிவப்பானவை (ரக்தாக்ஷம்); கருவண்ண ஆடை உடுத்தியிருந்தாலும், மனத்தைக் கவரும் தோற்றமுடையவர். (க்ருஷ்ணவஸ்த்ரஞ்ச, மோஹனாக்ருதிம்); இரு கைகளிலும் கத்தியும், தண்டமும் தாங்கியவர். (த்விபுஜம், கட்கம் தண்டம் சபிப்ராணம்), எல்லா அணிகலன்களும் அணிந்து விளக்கு பவர்; அருகிலேயே ஒரு கோழி - கிராமமக்களோடு ஒரு நெருக்கத்தை உண்டாக்குவதற்காக இருக்கலாம்.

இத்தகைய பேராற்றலும், பேரழகும் எளிமையும் படைத்த கருப்பண்ணசுவாமியை, தத்தமது அண்ணனாகவே பாவித்து வழிபடுகிறார்கள் கிராமமக்கள். இவருடைய செம்மைவிழிகள் அடியார்களின் அச்சத்தை போக்குகின்றன; அயலார்களின் கொட்டத்தை அடக்குகின்றன.

கருப்பரின் தியான சுலோகம்

ரக்தாக்ஷம் க்ருஷ்ணவஸ்த்ரஞ்ச த்விபுஜம் மோஹனா க்ருதிம்
கட்கம் தண்டம் பிப்ரணம் ஸர்வாலங்கார சோபினம் /
பார்ஸ்வே குக்குட ஸம்யுக்தம் மஹா விக்ரம சாலினம்
கருப்பன் இதி விக்யாதம் ஸ்வாமிநம் பாவயேத் ஸதா //

கருப்பன் என்று பெயர் பெற்ற இந்தக் காவல் தெய்வம், கிராமவாசிகளால் பலவாறாக வணங்கப்படுகிறது. சில இடங்களில் அவைதிகச் சடங்குகளும் அனுஷ்டிக்கப்படுவதாகத் தெரிகிறது. கருப்பன் என்று பெயர் இருப்பதால் கிருஷ்ணனோடு தொடர்புபடுத்தியும் சிலர் வழிபடுகிறார்கள். நாமாவளியில் வருகின்ற க்ருஷ்ண புத்ரன் என்ற சொல் இவரைக் கிருஷ்ண அம்சம் கொண்டவராக எண்ணத் தூண்டுகிறது. ஆனால் பல இனங்களையும் சேர்ந்த பூசாரிகளால் வழிபாடு நடத்தப்பெறும் தெய்வங்கள் பெரும்பாலும் சிவ சம்பந்தமுடையவையாகவே இருக்கின்றன. அத்துடன், ஹிம்சை என்பது வைணவத்துக்கு புறம்பானது என்பதையும் நினைவிற் கொள்ளவேண்டும்.

சில கிராமங்களில் கருப்பருக்குக் காயத்ரி வடிவிலான தோத்திரங்களையும் சொல்கிறார்கள்.

கட்க ஹஸ்தாய வித்மஹே மஹாவிக்ரமாய தீமஹி /
தந்நோ நீல : ப்ரசோதயாத் //

இத்துடன்'கம் கருப்பாய நம:' என்ற மூல மந்திரத்தையும் ஜபிக்கிறார்கள்.

மகா காளன் என்ற கருப்பண்ண ஸ்வாமி

மஹாகாளன்

மஹா காளன் என்ற கருப்பண்ண ஸ்வாமி, பூதநாதன் ஆகிய மஹா சாஸ்தாவின் அன்பிற்குப் பாத்திரனாகிய கணநாதன். பூதகணங்களுக்கு நாயகனாகிய சாஸ்தா இவர் மூலமாகவேதான் ஆணை இட்டருளுவார். மஹா சாஸ்தாவின் ஆணையை சிரமேற் கொண்டு அவர் எண்ணங்களைப் பூர்த்தி செய்யும் திறனுடையவர் கருப்பண்ண ஸ்வாமி.

த்யானம் (வேறுவகை)

த்விபுஜம் பீன க்ருஷ்ணாங்கம் பப்ருச்மச்ரு சிரோரு ஹம் /
கதாம் கட்கம்ச பிப்ராணம் மஹாகாலம் வயம் நும: //

என்பது இவர் தியானம்.

(கதை, கத்தி ஏந்திய இரு கைகளுடன் கூடியவர். பருத்த கரிய திருமேனி உடையவர். மஞ்சள் நிற மீசை, கேசம் உடையவர். இவ்வாறான மஹா காளரை வணங்குவோம் என்பது இதன் பொருள்).

சூரபத்மாதியரால் விரட்டப்பட்ட இந்திரன் இந்திராணியுடன் சீர்காழியிலே மறைந்து வாழ்ந்தான். தேவர் அவனைக் கைலைப்பதி அழைத்துச் செல்ல முற்பட்டனர். அவன், இந்திராணியைத் தனிமையில் விட்டுச் செல்வது ஆபத்து என நினைத்த மஹா சாஸ்தாவை வேண்டினான். காவல் தெய்வமாயிற்றே ஐயப்பன். மஹாசாஸ்தா இந்திரன் முன் தோன்றி, ''தேவர் தலைவ! நான் இந்திராணிக்குத் தீங்கு நேராது காப்பேன். அஞ்சேல் சென்று வருக'' என விடை கொடுத்து அனுப்பினார்.

பின் தன் தானைத் தலைவனாகிய மஹா காளனை அழைத்து, ''இவளை நீ காத்து நில்'' என ஆணையிட்டார். சாஸ்தாவின் ஆணையை சிரமேற் கொண்டு மஹா காளன் இந்திராணியைக் காத்து வந்தார். இந்திராணியும் சீர்காழியில் உள்ள நந்தவனத்தில் தவம் புரிந்து வந்தாள்.

இப்படி இருக்கும்போது சூரபத்மாவின் தங்கையான அஜாமுகீ தன் தோழி துன்முகியுடன் புறப்பட்டு வரும்போது எதிர்பாராத விதமாக இந்திராணியை கண்டாள். உடனே அவளைத் தூக்கிக் கொண்டு வீரமாஹேந்திரம் சென்று சூரபத்மனுக்கு அளிக்க ஆசை கொண்டாள். இந்திராணியைப் பலாத்காரமாக இழுத்தாள். அவள் பயந்து நடுங்கி,

பையரா அமளியானும் பரம்பொருள் முதலும் நல்கும்
ஐயனே ஓலம், விண்ணோர்க்காதியே யோலம் சொண்டார்
கையனே யோலம் எங்கள் கடவுளே யோலம் மெய்யார்
மெய்யனே யோலம் தொல்சீர் வீரனே யோலம் ஓலம்

என்றபடி ஹரியும் ஹரனும் தந்த ஐயனே! விண்ணோர்க்கு ஆதியே! செண்டுறு கையனே! மங்கையர் கற்பினைக் காக்கும் கடவுளே! சிறப்புற்ற வீரனே! என்னைக் காத்தருள்! எனக் கதறினாள்.

இது கேட்ட சாஸ்தாவின் கணத் தலைவனாகிய கருப்பண்ண ஸ்வாமி (வீர மாகாளன்) விரைந்து ஓடி வந்து, அஜாமுகீயைத் தடுத்தான். அவனைக் கண்ட அஜாமுகீ, ''நீ யார்?'' என்று வினவ, அவன் ''வெள்ளை வாரணத்தை வாஹனமாகக் கொண்டவனும், ஹரிக்கும் ஹரனுக்கும் பிறந்தவனும், இவ்வுலகங்கள் காக்கும் தெய்வமும் ஆகிய சாஸ்தாவின் அடிபணியும் ஏவலாளன் நான் '' என்று தெரிவித்துக் கொண்டான்.

அது கேட்ட அஜாமுகீ, கோபித்துக் தன் கையில் இருந்த சூலத்தை மஹாகாளன் மீது ஏவினாள். அதை அவன் தூளாக்கினான். மீண்டும் துன்முகியின் கையில் இருக்கும் சூலத்தை வாங்கி, அவன் மீது வீசினாள். அதையும் அவன் துண்டித்து வீழ்த்தினான். அஜாமுகீயோ ஒரு மலையை எடுத்து எறிந்து மஹாகாளான் கத்தியை வீணாக்கினான்.

இதனால் பெரிதும் கோபம் அடைந்த கருப்பண்ண ஸ்வாமி அஜாமுகீயை பிடித்து இழுத்து, இந்திராணியைத் தொட்ட கையை வெட்டி வீழ்த்தினான். தன் தாளால் உதைத்து அவளைப் பூமியிலே உருட்டினான். சினந்த துன்முகியின் ஒரு கையையும் வெட்டினான். அவளும் சசி தேவியைத் தீண்டினாள் அல்லவா? இந்த மஹா காளனை சித்தங்காத்தான் என்ற பெயராலும் அழைப்பர். பீடாபஹாரி என்றும் இவரைப் புகழ்வர். இவர் கோயில் ஒன்று காவிரிப் பூம்பட்டிணத்திலே உள்ளது. இவர் சிவனுக்கு நந்திகேச்வரர் போன்று சாஸ்தாவிற்கு உறுதுணையாக பக்கத்திலே காத்திருப்பார்.

அர்ச்சனைக்கான நாமாவளி

ஓம் க்ருஷ்ணபுத்ராய நம:
ஓம் ரக்தாக்ஷாய நம:
ஓம் நீலவஸ்த்ர தராய நம:
ஓம் த்விபுஜாய நம:
ஓம் சுந்தராய நம:
ஓம் கட்கபாணினே நம:
ஓம் தண்டஹஸ்தாய நம:
ஓம் அலங்கார சோபிதாய நம:
ஓம் குக்குடப் ப்ரியாய நம:
ஓம் பய நிவாரகாய நம:
ஓம் தயாமூர்த்தயே நம:
ஓம் நிசி நாதாய நம:
ஓம் ரோக ஹராய நம:
ஓம் கருப்பஸ்வாமினே நம:

காக்கும் கடவுளான கருப்பன் அனைவருடைய அச்சத்தையும் போக்கவேண்டுமெனப் பிரார்த்திப்போம்.

திரௌபதி தியானம்

த்விநேத்ரம் ஏகவக்த்ராம்ச பத்மா பயகராம் புஜாம் /
ஹரித்ரா வஸ்த்ர ஸம்யுக்தாம் கிரீடம்குடோஜ் வலாம் //
மல்லிகா மால்ய ஸம்யுக்தாம் ஸ்வர்வாபரண பூஷிதாம் /
ஞான தாத்ரீஞ்ச மோக்ஷ ஸாம்ராஜ்ய காரிணீம் //

காயத்ரீ

ஓம் த்ராம் த்தௌபத்யை ச வித்மஹே
மல்லிகா மால்யை சதீமஹி /
தந்நோ தாத்ரீ ப்ரசோதயாத் //

ஒரு முகம், இரண்டு கண்கள் இவைகளுடையவளும், ஒரு கையில் தாமரையையும், மற்றொரு கையில் அபய முத்திரையைக் கொண்டவளும், சுவர்ணம் போன்று மஞ்சள் நிறமான மேனியையுடையவளும், மஞ்சள் நிறமான ஆடையை உடுத்தி இருப்பவளும், கிரீட மகுடத்தால் பிரகாசிக்கின்றனவளும் மல்லிகை மலரால் கட்டப்பட்ட மாலையையுடையவளும், ஆபரணங்கள் யாவற்றாலும் அலங்கரிக்கப்பட்டவளும், ஞானம் வைராக்யம் இவைகளைக் கொடுப்பவளும், மோக்ஷ சாம்ராஜ்யத்தைக் கொடுப்பவளும் ஆவாள்.

கங்காள (அங்காள) பரமேஸ்வரி தியானம்

ஏகவத்ராம் த்ரிணேத்ராம் ச ஜடாமகுட மண்டிதாம் /
ஜ்வாலாகேசாம் கராளாஞ்ச தக்ஷிணே நக்ர குண்டலாம் //
வாமகர்ணே பத்ர பூஷாம் ஸர்வாபரண பூஷிதாம் /
பாச சூல கபாலோக்ர டங்க ஹேதி விராஜிதாம் //
பீதாபரதராம் வ்ருஷாரூடாம் கங்காள பரமேஸ்வரீம் /
வந்தே சதுர்புஜாமுக்ராம் குங்குமாபாம் சுபப்ரதாம் //

காயத்ரீ

ஓம் காம் கங்காள்யை ச வித்மஹே
ஜ்வாலா கேசாய ச தீமஹீ /
தந்நோ தாத்ரீ ப்ரசோதயாத் //

ஒரு முகம், மூன்று கண்கள், நான்கு கைகள் இவைகளையுடையவளும், ஜடா மகுடத்தினால் விளங்குபவளும், அக்னிஜ்வாலையை கூந்தலாக உடையவளும், பயங்கரமான தோற்றத்தையுடைவளும், வலது காதில் மகர குண்டலத்தையும், இடது காது பத்ர குண்டலத்தையும் அணிந்து சர்வாபரணம் கொண்டவளும், பாசக்கயிறு, சூலம், கபாலம், டங்கம் (பெரிய கத்தி) - (ஹேதி - கூர்மையான ஆயுதம்) ஆகியனவற்றை கரங்களில் கொண்டிருப்பவளும், வெண் பட்டாடையை உடுத்து இருப்பவளும், காளையின் மேல் வீற்றிருப்பவளும், குங்குமம் போன்ற சிவந்த மேனியையுடையவளும், நன்மையைச் செய்கின்றவளுமான அங்காள பரமேஸ்வரியை வணங்குகின்றேன். (கங்காள பரமேஸ்வரி என்பது அங்காள பரமேஸ்வரி என்று மருவி வந்துள்ளது).

காட்டேரி தியானம்

ரக்தவர்ணாம் த்விபாஹூம் ச கோரவக்த்ராம் த்ரிநேத்ரகாம் /
ஊர்த்வோபத்த ஸுகேசாம் ச வ்யாவ்ருத்தாஸ்யாம் குரூபிணீம் //
சுஷ்டி கோதராம் ஸூக்ஷ்மவஸ்த்ராம் த்ருத சங்காக்ஷ மாலிகாம் /
தண்ட சக்ராப்ஜ சூலாஸி டக்கா கேடாத்திகம் ததா //
கண்டாளி மணயச்சைவ ததாநாம் தக்ஷவாமயோ /
காட்டேரீம் பாவயே கர்ப்ப சிசுமாம்ஸாஸ்ருகத்திநீம் //

காயத்ரீ

ஓம் காஷ்டேஸ்வரீஞ்ச வித்மஹே ருத்ர புத்ரீஞ்ச தீமஹி!
தந்நோ ரௌத்ரீ ப்ரசோதயாத்!!

சிவந்த மேனியையுடையவளும், இரண்டு கைகளையும், மூன்று கண்களையுமுடையவளும், கோரமான முகத்தையுடையவளும், மேலே தூக்கிக்கட்டப்பட்ட கூந்தலையுடையவளும், திறந்திருக்கின்ற வாயையுடையவளும், விகாரமான சரீரத்தையுடையவளும் வற்றிப்போயிருக்கிற வயிற்றையுடையவளும், மெல்லிய அல்லது குறைவான ஆடையை அணிந்திருப்பவளும், தண்டம், சக்ரம், தாமரை, சூலம், கத்தி, உடுக்கை, கேடயம் இவைகளை உடையவளும் மணிகள் வண்டுகள் இவைகளான மாலைகைளையும், தனது இரு கரங்களினால் கர்ப்பத்திலிருக்கின்ற சிசுவின் மாம்சம் ரத்தம் இவைகளை உண்ணுகிறவளுமாகிய காட்டேரியை வணங்குகின்றேன்.

காத்தாயி அம்மன் தியானம்

த்விபுஜாம் ச த்விநேத்ராம் ச ஸரத்ன மகுடோஜ்வலாம் /
தக்ஷிணே பத்மஸம்யுக்தாம் வாமே லம்ப கரான்விதம் //
வீரேண ரக்ஷிதாம் தேவீம் ச்யாமர்பாம் சுப யௌவநாம் /
வந்தேஹம் மஹாமாயாம் ஸர்வமங்களா தாயினீம் //

ஸ்ரீ கிருஷ்ணனை பதியாக அடைய விரும்பிய கோபிகைகள், மார்கழி மாதத்திய காத்யாயனீ விரதம் அனுஷ்ட்டித்தார்கள் என்று புராண வாயிலாக அறிகிறோம். அவர்களுக்கு இந்த விரதத்தை உபதேசித்த காத்யாயன மகரிஷியின் பெயராலேயே விரதமும் அவர் பெயரைப் பெற்றே வழங்கப்படுகிறது. கோபிகைகள் வழிபட்ட அம்பிகை மிகவும் அழகானவள்; அற்புதமான பட்டாடை அணிந்தவள் (விசித்திர பட்டவஸனாம்) பிறைச்சந்திரனை சிரஸில் தாங்கியிருப்பவளும் (அர்த்த சந்த்ர விபூஷிதாம்); கைகளில் கத்தி -கேடயம்-வஜ்ரம்-சூலம்-வில் அம்பு- சங்கம் மணி தாமரை ஏந்தியிருப்பவள். (கட்க கேடக வஜ்ராணி சூலம் சவிசிகம் ததா தாராந்தீம் தனுபாவம் சங்க கண்டே ஸரோருஹாம்); ஜடா மகுடம் கொண்டவள் (ஜாடா மகுடமண்டிதாம்); கோடிக்கணக்கான நிலவுகளுக்கொப்பான தண்ணொளி வீசுபவள் (கோடி சந்த்ர ஸமப்ரபாம்); தங்கத் திருமேனியில் அழகான இருவிழிகளைக் கொண்ட இந்தப் பராசக்தி ஸ்ரீ கிருஷ்ணனின் எல்லையில்லா ஆற்றலின் வடிவம். கம்ஸனை அடக்கியவள்; விந்திய மலையை இருப்பிடமாகக் கொண்டவள்.

இவ்வளவு சிறப்பு பெற்ற காத்யாயனீ தேவி, கிராம மக்களால் காத்தாயீ என்று அழைக்கப்படுவதாகத் தெரிகிறது. பகைவர்களையும் வாழ்வில் எதிர்படும் மற்ற துன்பங்களையும் அழித்து, தன் அடிபணிபவர்களைக் காப்பாற்றுகிறாள் என்பதாலும் (காத்த ஆயி) காத்தாயி ஆகிறாள்.



காத்தாயி அம்மன்

நல்ல பர்த்தாவை அடைய விரும்பும் கன்னிப் பெண்கள்

காத்யாயனி மகாமாயே மஹா யோகின்யதீஸ்வரி।
நந்தகோப ஸுதம் தேவி பதிம் மே குருதே நம॥

என்ற சுலோகம் ரூபமான மந்திரத்தை ஆவ்ருத்தி செய்து, மகிழ்ச்சியான வாழ்க்கை அமையப் பெறுகிறார்கள் என்பதை அனுபவப்பூர்வமாகக் காணலாம். விந்தியமலை உயரத்துக்கு காத்யாயனியை உயர்த்த முடியாத கிராமமக்கள், தமக்கேற்றபடி காத்தாயியாக ஆக்கிக் கொண்டுவிட்டார்கள். மலையிலிருந்து சமவெளிக்கு வந்துவிட்டதால் அம்பிகையின் மகிமை குறைந்துவிடவில்லை.

காத்தாயிக்கு இரண்டு கரங்கள்; ஜகன் மாதாவின் அம்சம் என்பதைக் குறிப்பிடுவது போல மூன்று கண்கள் மகுடம் அணிந்திருக்கின்றாள்.; வலக்கரத்தில் தாமரை, நீண்ட இடக்கரம்; வீரர்கள் சூழ்ந்து நின்று கொண்டிருக்கிறார்கள்; சியாம வர்ணம்; இளமை ததும்புகிறது. மகாமாயைகளையும் அள்ளி வழங்குகிற வள்ளல் தன்மை உடையவள்.

அர்ச்சனைக்கான நாமாவளி

ஓம் காத்யாயின்யை நம:
ஓம் த்விபுஜாயை நம:
ஓம் த்விநேத்ராயை நம:
ஓம் மகுடோஜ்வாலாயை நம:
ஓம் பத்ம ஹஸ்தாயை நம:
ஓம் வீர ஸேவிதாயை நம:
ஓம் ச்யாமாபாயை நம:
ஓம் மங்களாதாயின்யை நம:

ஓம் நந்தாயை நம:
ஓம் பத்ராயை நம;
ஓம் ஸுநந்தின்யை நம:
ஓம் விந்த்ய நிவாஸின்யை நம:
ஓம் பீதாம்பர தாரிண்யை நம:
ஓம் அஸ்த்ர ஹஸ்த்தாயை நம:
ஓம் அம்ருதாயை நம:
ஓம் மஹாமாயாயை நம:

தவறான வழிகளில் செல்லும் ஆண்களை நல்வழிப்படுத்தி குடும்பப் பற்றுடையவர்களாகச் செய்ய வல்லவள், காத்தாயி. குடும்பத்தில் பரஸ்பர அன்பையும் அமைதியையும் அளிக்கும் பெரும் சக்தியாக காத்தாயி விளங்குவதால், பெண்மணிகளால் அக்கறையோடு ஆராதிக்கப்படுகிறாள்.



கருப்பன் சுவாமி



பூர்ணா - ஐயனார் - புஷ்கலா

ஐயனார் / சாஸ்தா தியானம்

யுவானம் ஸுந்தரம் ஸௌம்யம் புஷ்ப குச்சகரம் ப்ரபும் /
யோக வேஷ்டித திவ்யாங்கம் ஸுகபத்மாஸனஸ்த்திதம் //
பூர்ணாஞ்ச புஷ்கலாம் தேவீம் க்ருத்வா தக்ஷிணவாமயே: /
பார்ச்வயோர் ப்ராஜமானம் தம் சாஸ்தாரம் நௌமி பூதயே //

மிகுந்த அழகாகவும், புன்முருவலுடனும் கூடியிருப்பவளும், கையில் புஷ்பக் கொத்தை வைத்திருப்பவளும், யோக பட்டையினால் சுற்றப்பட்ட சரீரத்தையுடையவரும் (உத்குடிகாசனம் அல்லது இரு கால்களும் குத்திட்டு) சுகமாக பத்மாசனத்தில் வீற்றிருப்பவரும், வலது பக்கத்தில் பூர்ணாம்பிகையும் , இடது பக்கத்தில் புஷ்கலாம்பிகையும் வைத்துக்கொண்டு விளங்குகிறவருமான சாஸ்தாவை ஐஸ்வர்யத்தின் பொருட்டு வணங்குகின்றேன்.

பூர்ணா தியானம்

த்விநேத்ரம் த்விபுஜம் ச்யாமாம் கரண்டமகுடான் விதாம் /
வரதோத் பலஸயுக்தாம் சாஸ்த்ரு ரக்ஷஸ்த்திதாம் சுபாம் //
கிஞ்சித் குஞ்சித தக்ஷாங்க்ரீம் ஸ்ர்வாபரண பூஷிதாம் /
த்யாயேத் பூர்ணாம்மஹா தேவீம் சாஸ்த்ருபத்நீம் குணோஜ்வலாம் //

இரண்டு கண்கள், இரண்டுகைகள் இவைகளையுடையவளும், கருமை நிறமான மேனியையுடையவளும், கரண்ட மகுடம் என்னும் மகுடத்தை தரித்திருப்பவளும், வரத முத்திரை, நீலோத்பல மலர், இவைகளைக் கைகளில் வைத்திருப்பவளும், ஐயனாரின் வலது பக்கத்தில் வீற்றிருப்பவளும், சுபத்தைச் செய்பவளும், கொஞ்சம் மடித்து வைத்துக் கொள்ளப்பட்ட வலது முழங்காலை உடையவளுமாக உட்கார்ந்திருப்பவளும், ஆபரணங்களால் நன்கு அலங்கரிக்கப்பட்டவளும் நற்குணங்களால் பிரகாசிக்கின்றவளும் ஐயனாரின் மனைவியுமான பூர்ணா என்ற பெயருடைய மகாதேவியைத் தியானம் செய்ய வேண்டும்.

புஷ்கலா தியானம்

த்விநேத்ராம் த்விபுஜாம் பீதாம் கிரீட மகுடோஜ்வலாம் /
பாசஹஸ்த்தாம் மனோக்ஞாங்கீம் சர்வாபரண பூஷிதாம் //
ஈஷத்குஞ்சித வாமாங்க்ரீம் சர்வாலங்கார சோபிதாம் /
சாஸ்த்ருவா மஸ்த்திதாம் தேவீம் வந்தேஹம் புஷ்கலாம் சுபாம் //

இரண்டு கண்கள், இரண்டு கைகள் இவைகளையுடையவளும், மஞ்சள் நிறமான மேனியையுடையவளும், கிரீட மகுடம் என்கிற மகுடத்தை தரித்திருப்பவளும், பாசக்கயிற்றையுடையவளம், அழகான மேனியையுடையவளும், நிறைய ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவளும், கொஞ்சம் வளைந்திருக்கும் படி மடக்கி வைத்துக்கொள்ளப்பட்ட இடது கால்களையுடையவளும், நன்கு அலங்கரிக்கப்பட்டு சோபிக்கின்றவளும், ஐயனாரின்/சாஸ்தாவின் இடது புறம் வீற்றிருப்பவளும் ஆன புஷ்கலா தேவியை வணங்குகின்றேன்.

பலிபீடதியானம்

பஞ்சசீர்ஷம் தசாக்ஷஞ்ச தசபாகும் தசச்ரவம் /
நீர தாபம் பலிபுஜம் பலி பீட மஹம் பஜே //



பலிபீடம்

ஐந்து தலைகள், பத்து கண்கள், பத்து கைகள், பத்து காதுகள், இவைகளையுடையதும், நீருண்ட மேகம் போல கருமை நிறம் கொண்டதும், பலி பிண்டங்களை சாப்பிடுகிற பலிபீடத்தை வணங்குகின்றேன்.



ஆன்ம நந்தி



நந்தி வாகனம்



அதிகார நந்தி

நந்திதேவர் - சுயம்பிரகாசிகை



மயில் வாகனம்



அன்ன வாகனம்



சிம்ம வாகனம்



யானை வாகனம்

மூனிசுவரர்

ஸ்ரீ முனீசுவரசுவாமி தியானம்

ரக்தவர்ணம் திருநேத்ரஞ்ச
ஜடாமகுட மண்டிதம்
பஸ்மோத்தூளித ஸர்வாங்கம்
நாகா பரணபூஷிதம்
திருசூலம் தக்ஷ ஹஸ்தேது
ஊருஹஸ்தந்து வாமகே
லம்பிதம் தக்ஷ பாதஞ்ச
சயநம் வாம பாதகே
கர்ணபூஷண ஸம்யுக்தம்
முனீசுவர முபாஸ்மஹே

காயத்ரீ

ஓம் முனீசுவராய வித்மஹே
சூலஹஸ்தாய தீமஹி
தந்நோருத்ர ப்ரசோதயாது

மூலமந்திரம்

ஓம் ஹாம் யோகீஸ்வராய
யோகவல்லபாய ஸகல
யோக பலப்ர தாய துஷ்ட
க்ரஹமர்த்தநாய முனீசுவராய
தே மே:

108 அர்ச்சனை (அஷ்டோத்ர அர்ச்சனை)

01. ஓம் முனிசுவராய நம
02. ஓம் சுத்த ஞானி நே நம
03. ஓம் மஹாயோகினே நம
04. ஓம் அக்ஷமாலாதராய நம
05. ஓம் சர்ம வாஸஸே நம
06. ஓம் முனிஸேவ்யாய நம
07. ஓம் ஜடா தாரிணே நம
08. ஓம் மஹா வீராய நம
09. ஓம் வலாடக்ஷாய நம
10. ஓம் மஹா பல பராக்ரமாய நம
11. ஓம் சூலதாரிணே நம
12. ஓம் நாகயஜ்ஞோப வீதினோ நம
13. ஓம் மநோபவத் வஸ்நி நோ நம
14. ஓம் டமருக தராய நம
15. ஓம் ரௌத்ர ரூபாய நம
16. ஓம் ஸித்தஸே விதாய நம
17. ஓம் ஸ்மராந்தகாய நம
18. ஓம் பூதாத்யக்ஷாய நம
19. ஓம் ஞானமயாய நம
20. ஓம் ஸர்ப்ப பூஷணாய நம
21. ஓம் வீரநாதாய நம
22. ஓம் விச்வேசுவராய நம
23. ஓம் உக்ராய நம
24. ஓம் பஸ்மோத்தூளிதவிக்ரஹாய
25. ஓம் கிங்கிணித்ருதயே நம
26. ஓம் சத்ரு மதநாய நம

27. ஓம் அனந்தசக்தயை நம
28. ஓம் மஹாபைரவிபூஜிதாயை நம
29. ஓம் ரோக நாசநாயை நம
30. ஓம் வீரக்னாய நம
31. ஓம் வேதகோஷ பிரியாயை நம
32. ஓம் கலிதோஷ நிவாரகாய நம
33. ஓம் துஷ்டபூதப் ரேதாதி நாச நாயை நம
34. ஓம் க்ரஹ பீடாநிவார காயா நம
35. ஓம் பக்தா பீஷ்ட பலப்ரதாய நம
36. ஓம் தர்மராஜ பூஜித பலப்ரதாய நம
37. ஓம் சங்கராய நம
38. ஓம் ரவிசந்திராக்னி லோசனாய நம
39. ஓம் ரக்சந்தன லேபநாய நம
40. ஓம் ரஜோ மூர்த்தயே நம
41. ஓம் வரதாய நம
42. ஓம் நமஸ்காரபிரியாய நம
43. ஓம் ஸ்தோத்ர பிரியாய நம
44. ஓம் யமாந்தகாயை நம
45. ஓம் யமநியமாதி அஷ்டயோகாய நம
46. ஓம் ஸ்மசாநவாஸினே நம
47. ஓம் மஹாவீர பராக்ரமாய நம
48. ஓம் ஸமாகான பிரியாய நம
49. ஓம் வேத வேத்யாய நம
50. ஓம் விச்வரூபிணே நம
51. ஓம் க்ஷேத்ரபாலாய நம
52. ஓம் ரக்தநேத்ராய நம
53. ஓம் உரக பூஷணாய நம
54. ஓம் வனசாரிணே நம
55. ஓம் மஹாபயங்கராய நம
56. ஓம் வாசுவேத பூஜிதாய நம
57. ஓம் சரணாகத ரக்ஷணாய நம
58. ஓம் ரத்னகிரீடாய நம
59. ஓம் ராகத்வேஷ விநாச நாய நம
60. ஓம் ராமாய நம
61. ஓம் யோகினீகண ஸேவிதாய நம
62. ஓம் அமிருதாதி சக்திபூஜிதாய நம
63. ஓம் ஆனந்தா நந்தாய நம
64. ஓம் இஷ்டேஷ்ட வரப்ரதாய நம
65. ஓம் ஈஷணாத்ரய வர்ஜிதாய நம
66. ஓம் உமாபூஜித வரப்ரதாய நம
67. ஓம் ஊர்ஜிதோர் ஜிதசாஸ நாய நம
68. ஓம் ரிஷிதேவ கணஸ்ஸத்யாய நம
69. ஓம் ருணத்ரய விமோச நாய நம
70. ஓம் க்லீங்கார மந்திரலக்ஷணாயாய நம
71. ஓம் ஏகாந்த பிரியாய நம
72. ஓம் ஐசுவரிய பலப்ரதா நம
73. ஓம் ஓங்காரமந்திர ரூபாய நம
74. ஓம் ஔதார்ய குண ஸம்பந்நாயா நம
75. ஓம் அம்பிகா நாதாய நம
76. ஓம் அரஹரஸ்தோத்ரபிரியாய நம
77. ஓம் கமலாஸனபூஜிதாய நம
78. ஓம் காத்யாயனியோக ரக்ஷகாய நம
79. ஓம் குமாரகணநாதஸேவிதாய நம
80. ஓம் கேதாரராக பிரியாய நம
81. ஓம் கைலாசவாஸினே நம
82. ஓம் கொங்கண சித்ரஸேவிதாய நம
83. ஓம் கௌமாரிசக்தி பூஜிதாய நம
84. ஓம் கங்காள வைஷாயாய நம
85. ஓம் கஞ்சமலாதசாய நம
86. ஓம் சந்திரசார நிவர்த்தகாய நம
87. ஓம் சாமுண்டிவர ப்ரதாய நம
88. ஓம் ஞான உபதேசாய நம
89. ஓம் தேவராஜபூஜித பாதாப்ஜாய நம
90. ஓம் தர்மாதி பலப்ரதாய நம
91. ஓம் பார்வதீதப: பல மதாய நம
92. ஓம் பக்தாபீஷ்ட பலப்ரதாய நம
93. ஓம் மந்தாகினி மஞ்சுள சேகராய நம
94. ஓம் யக்ஷகின்னரகீ தபிரியாய நம
95. ஓம் ராஜராஜேசுவசுராய நம
96. ஓம் லலிதாதேவி பூஜிதாய நம
97. ஓம் வீராகமதத்வ அர்த்தாய நம
98. ஓம் சரணாகத ரக்ஷணய நம
99. ஓம் ஸந்யாச யோக ரக்ஷணாய நம
100. ஓம் ஸப்தரிஷி ஸேவிதாய நம
101. ஓம் க்ஷமா மூர்த்தயெ நம
102. ஓம் வன்னி மூர்த்தயை நம
103. ஓம் யஜமான மூர்த்தயை நம
104. ஓம் அர்க்க மூர்த்தயை நம
105. ஓம் ஜலமூர்த்தயை நம
106. ஓம் வாயு மூர்த்தயை நம
107. ஓம் இந்து மூர்த்தயை நம
108. ஓம் ஆகாச மூர்த்தயை நம
109. ஓம் முனீசுவராய நம

* * *

365

இடப தேவர் (நந்தி) தியானம்

சுத்த ஸ்படிக ஸங்காசம் சூர்ய சந்த்ராக்னி நேத்ரகம் /
ரத்ன சோபித க்ரைவேயம் அச்விநி கர்ணபூரகம் //
சுவர்ண நூபுர ஸந்நாதம் சிவவாகன சங்கதம் /
சிவபக்தாக்ரகம் சுபம் வ்ருஷ தேவம் நாமம் யஹம் //



சுத்தமான ஸ்படிகம் போன்று வெண்மைநிறம் கொண்டவரும், சூரியன், சந்திரன் இவர்களைக் கண்களாக உடையவரும், சூரியன் சந்திரனோடு அக்னியையும் கண்ணாக உடையவரும், ரத்னங்கள் பதிக்கப் பெற்ற சுவர்ண ஹாரத்தை கழுத்தில் தரித்திருப்பவரும், அஸ்வினீ என்னும் ஆபரணத்தை காதுகளில் அணிந்திருப்பவரும், (அஸ்வினீ தேவதைகளைக் காதுகளாகக் கொண்டவர் என்றும் கொள்ளலாம்) பரமேஸ்வரனுக்கு வாகனமாக அமைந்தவரும், சிவபக்தர்களுக்குள் முதல்வரும், அழகானவருமான இடபதேவரை வணங்குகின்றேன்.

குறிப்பு:- மூர்த்தித் தியானம், உத்தரகாமிகம், பூர்ணகாரணாகமம், அம்சுமத் பேதாகமம், சுப்ரபேதம், விஷ்ணு தர்மோத்ரம், சில்பரத்னம் ஆகிய நூல்களில் நந்தி தேவரின் ரூபம் மற்றும் அளவு முறை காணலாம். சிவனாலயத்தில் - அதிகாரநந்தி, இந்திர நந்தி, பிரமநந்தி, ஆன்மநந்தி, மால்விடை, தருமநந்தி, விஸ்வரூபநந்தி, சம்மார நந்தி எனும் பல நிலைகள் உண்டு. இதன் விளக்கம் ஷை ஆதீன வெளியீடாகிய 'சிவாலயத் திருமேனிகள்' நூலில் காண்க. மேலும் பின்வரும் பகுதிகளில் சில வாகனங்கள் மட்டும் யந்திரத்துடன் கொடுக்கப்பட்டுள்ளது. இன்னும் பல உள்ளன).



அம்பிகா யந்திரம்



அன்னபூரணி யந்திரம்



துர்க்கா யந்திரம்




துர்க்க
சூக்ஷ்மா
விஜயா
உமா
ஹ்ரீ
கா
ॐ त
ஹ்ரீம்
महिषाय
हुंफट्
க
பட்
ஹ்ரீம்
துர்கா
யோகினி
க்ஷேத்ரபாலர்

மகிஷாசுரமர்த்தினி யந்திரம்

காளி யந்திரம்




மஹாலக்ஷ்மி
ஜெயலக்ஷ்மி
தனலக்ஷ்மி
தைரியலக்ஷ்மி
அங் அங்
நசி நசி
மசி மசி
நங் நங்
ஸ்ரீயும்
ஓம் ஐயும்
சிங்
ஓம்
றீங்
வா வா
வங்

மஹாலட்சுமி யந்திரம்



மஹாலட்சுமி யந்திரம்


யோகினி
வசீகரணபைரவர்
தாம்ர பைரவர்
ஜயா
விஜயா
ஹ்ராம்
ஹ்ரீம்
ஹ்ரூம்
ஹ்ரீம்
பட்

காளியா யந்திரம்



மகா மாரியம்மன் யந்திரம்


Hrīm
Hrīm
Hrīm
Hrīm
Hrīm
Hrīm
Hrīm

Oṃ	Śrām	Ha	Ri	Ha	Ra
Pā	Tra	Pu	Tra	Lā	Bha
Śa	Tru	Vi	Nā	Sa	Ma
Da	Ga	Jā	Vā	Ha	Na
Śrī	Gu	Ru	Ma	Hā	Śā
Stā	Huṃ	Pha	Ṭ	Svā	Hā

ஐயனார் யந்திரம்


N
SOMA
VĀYU
ĪŚĀNA
RĀKṢASA
MĀNUṢA
MĀNUṢA
PAIŚĀCA
DAIVIKA
BRAHMĀ
VĀRUṆA
INDRA E
NIRṚTI
AGNI
YAMA
S

ஐயனார் யாகசாலை



நந்திகேஸ்வரர் யந்திரம்



பலிபீட யந்திரம்



மயில் வாகன யந்திரம்



சிம்ம வாகன யந்திரம்



யானை வாகன யந்திரம்



குதிரை வாகன யந்திரம்

திருமேனிகளுக்கும் யந்திரங்களுக்கும் உரிய உபசார முறைகள்

(உபாசனை)

இறைவனுக்கும் நமக்கும் நெருங்கிய உறவை உண்டாக்குவது உபாசனையாகும். இறைவன் விஷயத்திலும் நாம் அடிக்கடி கோயிலுக்குப் போகவேண்டும். அவருக்கு மகா நைவேத்யங்களை சமர்ப்பிக்க வேண்டும். கொண்டும் கொடுத்தும் குடிகுடியீசற்கு ஆட்செய்தல் வேண்டும். அப்போது தான் நமக்கும் இறைவனுக்கும் உறவு வலுக்கும். சிக்கெனப் பிடிக்கும் தெளிந்தநிலை பிறக்கும். அதற்குரிய வழி உபாசனையே ஆகும். உபாசனை இரு நிலைகளைக் கொண்டது.

சகளோபாசனை

உபாசனை ''சகளோபாசனை'' எனவும் ''நிஷ்களோபாசனை'' எனவும் இருவகைப்படும். இறைத் திருமேனிகளைப் பலகாலும் கண்டு அவருடைய அடிமுதல் முடிகாறும் உள்ள உருவஅமைப்பை உள்ளக் கிழியில் எழுதிப் புகுதல். அங்ஙனம் பழகி அவர் உருவம் நம் மனப்பாடத்தில் பதியுமானால் நாம் செய்யும் செயல்கள் அனைத்தும் சிவச் செயல்களே. அதனால் நாம் செய்யும் வினைகளுக்கு ஏற்ற நல்லதும் கெட்டதுமான பயன்கள் நம்மைச் சாரா.

★ யந்திரமும் மந்திரமும்

யந்திரம் என்பது மந்திரசக்தி நிலைத்திருந்து இயங்க செய்யும் கருவி. அது இறைவனுடைய வடிவை ஓரளவாகக் கீறுகோடான நிலையில் நினைவூட்டுவது. (இந்நூலின் முன் பகுதியில் கணபதி முதற்கொண்டு தொடர்ச்சியாக பல நிலைத் திருமேனிகளில் வடிவம் கொடுக்கப்பட்டுள்ளன) இது உருவ நிலையிலிருந்து அருவ நிலைக்கு அழைத்துச் செல்லும் உபாயம்; உருவத்திற்கும் அருவத்திற்கும் இடைகழி இல்லையாயின் ஒருவன் வீட்டுப் புறவாயிலிலிருந்து உள்ளிடத்தை அடைய முடியாதவாறு போல யந்திரம் வெளிக்கீறாக இறைவனின் திருவுருவத்தை நினைவூட்டும். ஆகையால் யந்திரங்கள் இறைவன் வடிவாகவே போற்றப்படுவனவாயின. ஆகமங்களும் மந்திரோத்தார விதியை அடுத்து யந்திரோத்தார விதியை அமைத்தன எனின் இதன் இன்றியமையாமையை என்னென்றுரைப்பது? இதனால் யந்திரமின்றி மந்திரம் பயனில்லை.

யந்திர பூசை

பொதுவாக யந்திரங்களை பொன் தகட்டிலேனும், வெள்ளித்தகட்டிலேனும், சகளோபாசனைக்குப் பத்திரம், புஷ்பம், பழம், நீர், பாத்திரம், நைவேத்யம், பலகை, விமானம் முதலான புறச்சாதனங்கள் அனைத்தும் மிகத்தேவை. சகளோதியின் தன்மைகளை மனத்திலே பதியச் செய்கிறது. அதனால் உபாசகன் சொல்லாலும் செயலாலும் ஏன் உருவத்தாலும் கூட உபாசனை செய்யும் மூர்த்தியாகவே ஆகிவிடுகிறான்.

நிஷ்களோபாசனை

நிஷ்களோபாசனையாவது உருவத்தைக் கண் முதலிய கருவிகளால் நோக்கிப் பழகாது கருத்தாலேயே உபாசனா மூர்த்தியின் உருவைக் கற்பித்துத் தியானிப்பது.

குறிப்பு:- உபாசனைக்குரிய நியமம், தியானம், மூலமந்திரம், ஜபம், ஹோமம், நைவேத்யம், உச்சாடனம், தர்ப்பணம், உரு ஆகியவற்றை குருமூலமாக அறிக.

★ ஷெ ஆதீன வெளியீடு எண் 224, ''ஆடல்வல்லான்'' நூலில் பக்கம் 338 முதல் 347 வரை காண்க.

இறைவன் மந்திரமே வடிவானவன். அவன் உறுப்புகள் அனைத்தும் மந்திர வடிவு என்றும் உறுப்பையும் மந்திரத்தையும் இணைத்து எண்ணி, பயிற்சி முற்றின் உறுப்புக்களை மறந்து மந்திரத் தியானம் மட்டும் நிலைபெறும். இது நிஷ்களோபாசனையின் இரண்டாவது நிலையாகும். இந்நிலை முதிருமானால் ஆதாரங்களாகிற இடத்தில் நம்மில் வேறாக ஒளியொன்று தெரிகிறது. என்ற நிலையும் கெட்டு, எங்கும் ஒளியாய் காண்பவனாகிய தானும் அதனுள் வியாப்பியமாக விளங்கும். பரிபூரணத் தியானம் சித்திக்கும். இதனை அதுவாதல் என்ற பரிபாஷையால் அறிவிக்கின்றன ஞான சாத்திரங்கள்.

செப்புத்தகட்டிலேனும் அல்லது அத்திப்பலகை, வில்வப் பலகை, அரசம்பலகையிலேனும் யந்திரங்களைக் கீறி, அத்திப்பலகை ஆசனத்தில் வடக்கு நோக்கியிருந்து அந்த வழிபடு மூர்த்தங்களுக்கு உரியவாறு 'ஓம் கம் கணபதியே நமஹ' என்று தொடங்கி, சிவகுரு, ரிஷி, பஞ்சப்பிரம,ஷடங்க மந்திரங்கள், கரநியாசம், அங்க நியாசம் முறையே சொல்லிக் கொடுத்தவாறு தியானிக்கவேண்டும். பின் யந்திரத்தை ஆதார சக்தி முதலாகப் ''பெருமானே! என்னுடைய பூசை முடியும் வரையில் யந்திர ஸ்தானத்திலிருந்து அருளுக'' என்று பிரார்த்தனை செய்து கொண்டு யந்திரத்தை .ஸ்தான வேதிகையில் எடுத்து வைத்து குருவின் உபதேசப்படி மந்திரங்களைக்கூறித் திருமஞ்சனம் செய்க. அபிஷேகம் முடிந்த பிறகு மீண்டும் யந்திரத்தை யதாஸ்தானத்தில் வைத்து மூலமந்திரம் மற்றும் காயத்ரி மந்திரங்களால் செஞ்சந்தனம், புனுகு, சவ்வாது, கஸ்தூரி, பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, கோரோசனை, தம்பலம் (தாம்பூலம்) ஆகிய இவைகளை யந்திரத்தின் நடுவில் சாத்தி அஷ்டோத்ரம் செய்து மற்றும் சகஸ்ரநாமம் அருச்சனை செய்து பால், பாயாசம், சர்க்கரைப் பொங்கல் (தெய்வப்படிமங்களுக்கு நைவேத்தியம் சிலகாலங்களிலும், காம்யத்திலும் மாறும்) முதலியவற்றை நிவேதனம் செய்து, தூப தீப ஆராதனைகள் செய்க. பனுவல்களால் தோத்திரம் செய்க. பின்னர், கையில் புஷ்பங்களை எடுத்து அருக்கிய சலத்தைத் தெளித்து, செபித்துச் சாத்தி ஜபத்தின் பலனை அம்மூர்த்திக்கே அர்ப்பணம் செய்க. யந்திர பூசை, மந்திர ஜபம், அபிஷேக முறை, உபசாரமுறை பலன் இவைகள் யாவும் பல நிலைகளையுடையதாகும். குருமூலம் அறிக.

நித்திய பூசை

சாங்கம், உபாங்கம், பிரத்யங்கம் என மூன்று பிரிவுடையதாகும்.

சாங்கம்

அபிஷேகம், பாத்தியம், ஆசமனீயம், அர்க்கியம், வஸ்திரம், ஆபரணம், சந்தனம், புஷ்பம் என்னும் எட்டாகும்.

உபாங்கம்

தூபம், தீபம், திருநீறு, குடை, கண்ணாடி, சாமரம், விசிறி, வியாஜனம், நர்த்தனம், கீத வாத்தியம் என்னும் பத்தாகும்.

பிரத்யங்கம்

நைவேத்தியம், பலி, ஹோமம், நித்தியோத்சவம், சுளுக்கோத்கதானம், சுவஸ்திவாசகம் என்னும் ஆறு ஆகும்.

இம்மூன்றினுள் முதலில் சாங்கத்தில் வரும் அபிஷேகம், இறை வழிபாட்டில் மிகச் சிறப்பும் முதன்மையும் உடையது. தண்ணீராலும் பலவகைப் பொருள்களாலும் நிகழ்த்தப்படும் இவ் வபிஷேகம், காணும் பக்தர்களைப் பரவசப் படுத்தும் தன்மையுடையது. இவ்வபிஷேகம் பற்றியும் அபிஷேகப் பொருள் பற்றியும் தேவாரத் திருமுறைகளில் வரும் சொற்றொடர்களாவன.

தடம் கொண்டதோர் தாமரைப் பொன்முடி தன்மேல்
குடம் கொண்டடியார் குளிர்நீர் சுமந்தாட்ட............

ஆடினாய் நறு நெய்யொடு பால் தயிர்..................

பாலினால் நறு நெய்யாய் பழத்தினால் பயின்றாட்டி
.......தூய காவிரியின் நன்னீர்கொண்டு இருக்கு ஓதி ஆட்டி
ஆன் ஐந்தும் ஆடியை............சந்தனமும் குங்குமம் சாந்தும் தோய்ந்த தோளானை..........
தேன், நெய், பால் சூட்டுகந்தானே தேவனே

என இவ்வாறாக அபிடேகிக்கப்படும் பொருள்களை இவை காட்டுகின்றன.

இவ்வபிஷேகம் திருக்கோயில்களில் அதன் வருவாய்க்கேற்பவும், இன்னும் அங்கு அநுசரிக்கப்படும் ஆகம நெறி முறையை ஒட்டியும் நித்தம் 1, 2, 3, 4,5,6 வேளைகளிலும், இன்னும் சில இடங்களில் இதற்குமேல் பலமுறையும், சில இடங்களில் இதற்குக் குறைந்தும் நடைபெறுகிறது. மற்ற சுயம்பு புற்றுமண், சுதை மர வடிவங்கட்கு பாவனாபிஷேகமாகவும், அல்லது நீரின்றி சாம்பிராணித் தைலம், புனுகு, சவ்வாது பூச்சுடன் நடைபெறுகிறது.

செய்யப்படும் அபிஷேகப் பொருட்கள், முறை முதலியனவும், காலம், இடத்திற்கேற்ப கூடியும் குறைவுமாக உள்ளன. உதாரணமாக செய்யும் முறையில் விபூதி அபிஷேகம் பல தலங்களில் கடைசி கட்டத்தில் செய்யப்படினும், காணமுத்தி தரும் தில்லை நடராசருக்கு முதலிலேயே செய்யப்படுகிறது. இது போல் அபிடேகப் பொருட்களும் ஆகம, புராணங்களை அனுசரித்து ஒரேவிதமாய் இல்லாது சிலவற்றை விட்டும், சிலவற்றைக் கூட்டியும், புதுப் பொருள்களைச் சேர்த்தும் செய்யப்படுகிறது. இவ்வாறு ஆகமபுராண முறைகளைத் தழுவியும், மற்றும் பல மாறுதல்களுடன் சேர்க்கப்பட்டுவரும் பொருள்களையும் இங்கு அபிடேகப்பொருள் வரிசையில் கொடுக்கப்பட்டுள்ளது.

அபிஷேக நீர்

அபிஷேகப் பொருள்களில் முதன்மையாக வேண்டப்படுவது புனித நீராகும். முதன் முதலில் இந்த நீரைத் தயாரிக்க வேண்டிய முறையினைப் பேரூர்ப் புராணம் கூறுகின்றதைக் காண்போம்.

''சூரியன் உதிப்பதற்கு முன்னே பன்னிரண்டு புதிய சால்களில் புதிய நீரை வடிகட்டி எடுத்து மணலைப் பரப்பி, அதிலே வைத்து ஏலம், விலாமிச்சவேர், வெட்டிவேர், பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ மற்றும் நறுமண மலர்களை நீரில் இட்டு செபித்துப்பின், ஒவ்வொரு அபிடேகப் பொருளையும் திருமேனியில் இட்டபின், இந்நீரை இடை இடையே பாத்திரத்தில் முகந்து இடவேண்டும்.''

அபிஷேகப் பொருட்கள்

பஞ்சகவ்யம்
சந்தனாதித் தைலம்
எள்எண்ணெய் (நல்லெண்ணெய்)
அரிசிமாவு
கோதுமை மாவு ✱
கடலை(கொண்டைகடலை) மாவு ✱
உளுந்துமாவு ✱
பச்சைப்பயறு மாவு ✱
நெல்லிமுள்ளி (நெல்லிக்காய் பொடி)
கமண்டல நீர் மஞ்சள் பொடி (சாதா)
கஸ்தூரி மஞ்சள் பொடி
திரவியப்பட்டைப்பொடி
நார்த்தம்பழம்
கொளஞ்சிப்பழம்
தம்பரத்தம்பழம்
இனிப்பு மாதுளைப்பழம்
புளிப்பு மாதுளைப்பழம்
திராட்சைப்பழம்
கொய்யாப்பழம்
விளாம்பழம்
வாழைப்பழம், மாம்பழம்
பலாப்பழம்
பம்பிளிமாசிபழம்
அன்னாசிப்பழம்
அகில்கட்டை சாந்து
வில்வக்கட்டை சாந்து
வில்வஇலை அரைத்தது
பன்னீர்
சகஸ்ரதாரை
ஏகதாரை
கோசிருங்கம்
யானைக்கொம்பு சிருங்கம்
காண்டாமிருக சிருங்கம்,
தேன்
சர்க்கரை
பசும்பால்

✱ இக்குறியிட்ட பொருள்கள் கொண்டு அபிஷேகம் செய்யப்படுவது ஒரு சில இடங்களில் காணப்படும்.

வாசனை கோஷ்டப் பொடி
எலுமிச்சம்பழம்
பச்சைக்கற்பூரம்
(இளவெண்ணீர் கலந்தது)
இளநீர் - சாதா
இளநீர் (செவ்விளநீர்)
இளநீர் (கவுளி பாத்திரம்)
தேங்காய் திருகல்
கருப்பஞ்சாறு
பஞ்சாமிர்தம் 1
ரசபஞ்சாமிர்தம்
பல பஞ்சாமிர்தம்

சந்தனம்
செஞ்சந்தனம்
பழநி பஞ்சாமிர்தம்
பஞ்சபலோதகம்
கஷால்யோதகம்
ரக்னோதகம்
சொர்ணோதகம்
வில்வோதகம்
புஷ்போதகம்
குசோதகம்
மிருத்யோதகம்
அர்க்கியோதகம்

பசுந்தயிர்
பசுநெய்
அன்னம்
திருநீறு
வலம்புரிச் சங்கம்
இடம்புரிச் சங்கம்
கங்கை, காவிரி முதலிய புண்ணிய நதிகளின் நீர்
கடல்நீர்
கொண்டல் (மழை) ✿ நீர்
மற்றும் பல
நிறைவாக ஸ்நபனம்

அபிஷேகப் பொருள்களைத் தயாரிக்கும் முறை

1. பஞ்சகவ்யம்

நமது சமயத்தில் பசு மிகவும் உயர்வாகப் போற்றப்படுகிறது. இதற்குரிய காரணங்கள் பல. அவற்றுள் முதன்மையானது இதனிடத்தில் இருந்து கிடைக்கும் பஞ்ச (ஐந்து) பொருள்களான பால், தயிர், நெய், கோசலம், (நீர்), கோமயம் (சாணம்). இவ்வைந்தையும் மந்திரம் ஜெபித்துப் பூசித்து ஒன்றாகக் கலந்து பின் அபிடேகிக்கப்படும் பொருள் பஞ்சகவ்யமாகும். இதனை ''ஆவினுக்கு அருங்கலம் அரன் அஞ்சாடுதல்'' என அப்பரடிகள் பாடுகிறார்.

2. பஞ்சாமிர்தம் -1

வாழைப்பழம், தேன், சர்க்கரை, பால், பசுநெய் ஒன்று சேர்ந்தது. பஞ்சாமிர்தம் தயாரிக்கும் முறை:- வாழைப்பழத்தை திருத்தி, ஆயிரத்துக்கு ஆறு படி(5லிட்டர்) வீதம் பால் சொரிந்து, தேன், நெய், வெல்லம் இரண்டு இரண்டு படி (1500 கிராம்) வீதம் கலந்து தயாரிக்க வேண்டும். (கவிராட்சச கச்சியப்ப முனிவர் இயற்றியுள்ள பேரூர் புராணம்- மருத வரைப்படலம் பாட்டு- 31) மற்றும் அபிடேகப் பொருட்களைப் பற்றி இப்புராணம் கூறுகிறது.

3. பஞ்சாமிர்தம் - 2

(ரதபஞ்சாமிர்தம்) பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன் ஒன்று கலந்தது.

4. பஞ்சாமிர்தம் - 3

மா, பலா, வாழை, தேங்காய்திருகல், சர்க்கரை மதலிய பல்வகைச் சுவைப் பொருள்கள் கலந்தது.

5. பழநி பஞ்சாமிர்தம்

இது பழநி தண்டாயுதபாணிக்கே உரிய தனிச்சிறப்பும், மிக்க சுவையும் உடையது. மலைத்தேன், மலைவாழைப் பழம், சர்க்கரை மற்றும் நல்ல சுவை மணமுள்ள பொருட்களின் கூட்டுப் பொருள்.

6. பஞ்சபலோதகம்

எலுமிச்சம்பழம், நார்த்தப்பழம், கொளஞ்சிப்பழம், தம்பரத்தம்பழம், மாதுளைப்பழம் இவற்றின் சாற்றை ஒன்று கலந்து, இதனைப் பதமந்திரம் எண்பத்தொன்றையும் கூறிச் செய்தல் வேண்டும். (பதமந்திரம் பின்னர் குறிக்கப்பட்டிருக்கிறது)

7. கஷால்யோதகம்

ஆல், அரசு, அத்தி, மா, நாவல் இவற்றின் பட்டைத்தூள் அல்லது தளிர்களை ஒன்றுசேர்த்து நீரில் கலந்து அபிஷேகித்தல்.

8. உதகநீர்

ரத்தினோதகம், நவரத்தினங்கள் அனைத்தையும் அல்லது ஏதேனும் கிடைப்பனவற்றை அபிடேக நீரில் இட்டு அபிடேகித்தல். இதேபோல்,

புஷ்பத்தை இட்டு செய்தல் புஷ்போதகம்
வில்வத்தை இட்டுச் செய்தல் வில்வோதகம்
பொன்னை இட்டுச் செய்தல் சொர்ணோதகம்
குசம் (நாணல்) இட்டுச் செய்தல் குசோதகம்

9. மிருத்யோகம்

கடல் மண், கங்கை, காவிரிநதிகளின் மணல், மலைமண், புண்ணிய தலத்து மண், வில்வமரத்தடி மண் இவற்றை ஒன்று கலந்து அபிடேகித்தல்.

10. விபூதி

நல்ல காராம்பசு, கபிலை, சாதாரண பசுஞ்சாணத்தால் தயாரிக்கப்பட்ட சாம்பலை வடிகட்டி தூய்மை செய்து பச்சைக் கற்பூரம், சாம்பிராணித் தைலம், புனுகு, சவ்வாது (தற்கால நறுமணப் பொருள்களில் அரகஜா) இவற்றைக் கலந்து அபிடேகித்தல்.

11. சந்தனம்

வாசனைமிக்க (மைசூர்) சந்தனக் கட்டையை கல்லில் கையால் அரைத்துப் பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, கோரோசனை, பன்னீர், கஸ்தூரி இவற்றைக் கலந்து தயாரிக்க வேண்டும்.

12. அகில் கட்டை

அகில் கட்டையைச் சந்தனக் கல்லில் தேய்த்தெடுத்த சாந்து.

13. வில்வக்கட்டை

சந்தனக் கல்லில் அரைத்தெடுத்த சாந்து அல்லது வில்வ இலையை அரைத்தெடுத்த சாந்து.

14. கோசிருங்கம்

பசுமாட்டின் கொம்பைத் துளையிட்டு நுனியில் பொன் அல்லது வெள்ளியால் பசுவின் தலைபோல் உருவாக்கி இணைத்து வாசனை கலந்த நீரை நிரப்பச் செய்து அபிடேகித்தல்.

15. யானைக்கொம்பு

யானையின் தந்தம் (நீண்ட சிங்கப்பல்) துளைத்து யானைத் தலைபோல் பொன் வெள்ளியால் செய்து தயாரித்த கருவியால் அபிடேகித்தல்.

16. காண்டாமிருக சிருங்கம்

பெரிய விலங்காகிய காண்டாமிருக மூக்கின் நுனியில் உள்ள கொம்பில் துளையிட்டு தயாரித்த கருவியால் அபிடேகித்தல்.

17. சகஸ்ரதாரை

பொன், வெள்ளி, செம்பினால் சல்லடை (1000 துளைகளுடன்) தயாரித்தது.

18. ஏகதாரை

சிறிய/பெரிய சொம்பின் அடியில் ஒரே துவாரம் இட்டு இதில் நீரை நிரப்பி அபிடேகித்தல்.

19. வலம்புரிச் சங்கம்

வலமாக விளைந்த கிடைத்தற்கரிய சங்கில் நீரை நிரப்பிச் செய்தல்.

20. சாதாரணச் சங்கு

(இடம்புரிச் சங்கு) சாதாரணமாய்க் கிடைக்கும் சங்கம் 108, 1008ஐ சேர்த்து பூசித்துச் செய்தல்.

21. கமண்டலம்

வில்வக்காய் அல்லது உலோகத்தால் செய்த கெண்டி

22. இளநீர்

இளநீரை ஒரே பாத்திரத்தில் ஏற்று அபிடேகிக்காமல், எவ்வளவு எண்ணிக்கையில் நிறைய இளநீர் இருப்பினும் ஒவ்வொன்றாய் பெருமானுக்கு அபிடேகிக்கவேண்டும்.

அபிஷேகப் பொருள்களின் அளவும் பயனும்

பொருள்கள்	அளவு	பயன்
தைலம்	ஒருபடி (750 கி)	சுகம்
மாப்பொடி	ஒரு பலம் (50 கி)	கடன் நீக்கம்
மஞ்சள் பொடி	ஒரு பலம் (50 கி)	இராஜவசியம்
நெல்லிக்காய்ப் பொடி	ஒரு பலம் (50 கி)	நோய் நீக்கம்
ஜலத்திரவியம்	2 பலம் (100கி)	இஷ்ட சித்தி
பஞ்சகவ்யம்	1 மரக்கால் (4லிட்டர்)	பாவநீக்கம்
பஞ்சாமிர்தம்	1 மரக்கால் (4லிட்டர்)	புஷ்டி அளிக்கும்
பசும்பால்	6 படி (5லிட்டர்)	ஆயுள் விருத்தி
பசுந்தயிர்	12 படி (10 லிட்டர்)	சந்ததி விருத்தி
பசுநெய்	அரைப்படி (400 கி)	மோட்சம்
தேன்	1 ஆழாக்கு (100கி)	சுகம், இசைஞானம் தரும்
கருப்பஞ்சாறு	1 படி (750 கி)	சுகம்
சர்க்கரை	3 பலம் (150 கி)	பகை நாசம்
வாழைப்பழம்	25	பயிர் விருத்தி
நாரத்தை	12	நேர்மை பயக்கும்
எலுமிச்சம் பழம்	25	இராஜவசியம்
மாம்பழம்	15	நன்மக்கட்பேறு
பலாப்பழம்	1	துன்பம் நீங்கும்
இனிப்பு மாதுளை	10	கோபம் தணியும்
புளிமாதுளை	10	கோபம் தணியும்
இளநீர்	25	போகம் அளிக்கும்
அன்னம்	1 மரக்கால் (4 கிலோ)	சாம்ராஜ்ஜியம்
சந்தனம்	1 மரக்கால் (4 கிலோ)	இலட்சுமி கடாட்சம்
கலசம்	10	மோட்சம்

பத்ராம்பு	1 மரக்கால் (4 லிட்டர்)	உலக நன்மை
தாராம்பு	1 மரக்கால் (4 லிட்டர்)	இன்பம் தரும்
சிருங்கோதகம்	1 மரக்கால் (4 லிட்டர்)	தைரியம்
ரத்னோதகம்	1 மரக்கால் (4 லிட்டர்)	இலட்சுமி கடாட்சம்
குசோதகம்	1 மரக்கால் (4 லிட்டர்)	இலட்சுமி கடாட்சம்
அருக்கியோதகம்	1 மரக்கால் (4 லிட்டர்)	ஞான விருத்தி
சங்கோதகம்	1 மரக்கால் (4 லிட்டர்)	புண்ணியம்

அபிஷேகத்திற்குரிய 81 பத மந்திரங்கள்

ஓம்
வ்யோவயாபினே
வ்யோவரூபாய
சர்வவ்யாபினே
சிவாய
அனந்தாய
அநாதாய
அநாசிர்தாய
துர்வாய
சாஸ்வதாய
யோகபீடசம்ஸ்திதாய
நித்ய யோகினே
த்யானகராய
ஓம் நமச்சிவாய
சர்வப்ரபவே
சிவாய
ஈசான்ய மூர்த்தாய
தத்புருஷவக்த்ராய
அகோரேஹ்ருதாய
வாமதேவகுஹ்யாய
சத்யோதஜாத மூர்த்தயே
ஓம் நமோவோ நம:
குஹ்யாதி குஹ்யாய
கோப்த்ரே
அநிதனாய
சர்வயோகஹ்ருதாய
சர்வவித்யாதிபாய
ஜ்யோதிரூபாய
பரமேஸ்வரபராய
அசேநத அசேநத
வ்யோமின் வ்யோமின்
வ்யாபின் வ்யாபின்
அரூபின் அரூபின்
ப்ரதம ப்ரதம
தேஜஸ் தேஜஹே
ஜ்யோதிர் ஜ்யோதிர்
அரூப
அநக்நி
அதூம
அபஸ்ம
அநாதே
நாநா நாநா
தூது தூது
ஓம்பூ:
ஓம்புவ:
ஓம் சுவ:
அநிதன
நிதன
நிதோத்பவ
சிவ
சர்வ
பரமாத்மன்
மகேஸ்வர
மகாதேவ
சத்பாவேஸ்வர
மகாதேஜஹ
யோகாதிபதே
முஞ்ச முஞ்ச
ப்ரதம ப்ரதம
சர்வ சர்வ
பவ பவ
பவோத்பவ
சர்வபூத சுகப்ரத
சர்வசாந்நித்யகர
பிர்மவிஷ்ணுருத்ரபர
அநர்ச்சித அநர்ச்சித
அஸம்சுத அஸம்சுத
பூர்வஸ்தித பூர்வஸ்தித
சாக்ஷி சாக்ஷி
துரு துரு
பதங்க பதங்க
பிங்க பிங்க
ஞான ஞான
சப்த சப்த
சூக்ஷம் சூக்ஷம்
சிவ
சர்வ
சர்வத
ஓம் நமோ நம:
ஓம் சிவாய
ஓம்

குறிப்பு :- இந்த பத மந்திரங்கள் சிவத் திருமேனிக்கே உரியதாக இருந்தாலும் ஏனைய மூர்த்திகளையும் சிவமாம் தன்மையாய் பாவித்துச் செய்யப்படுகிறது.

பிரதிஷ்டா மூர்த்திகளின் காயத்ரீ மற்றும் பிற மந்திரங்கள்

1. கணபதி மூலமந்திரம்

ஓம் ஏக தந்தாய வித்மஹே வக்ர துண்டாய தீமஹி/
தந்நோ தந்தி ப்ரசோதயாத்//

2. ஸ்ரீ வல்லப கணபதி காயத்ரீ

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் க்லௌம் கம் கணபதயே/
வர, வரத, சர்வ ஜனமே வசமானய ஸ்வாஹா//

3. கணபதி காயத்ரீ

ஓம் தத்புருஷாய வித்மஹே வக்ரதுண்டாய தீமஹி/
தந்நோ தந்தி ப்ரசோதயாத்//

4. கணேச காயத்ரீ (வேறுவகை)

ஓம் ஏகதந்தாய வித்மஹே வக்ரதுண்டாய தீமஹி /
தந்நோ தந்தி பிரசோதயாத்//

5. கணேச காயத்ரீ (வேறுவகை)

ஓம் வக்ரதுண்டாய வித்மஹே லம்போதராய தீமஹி/
தந்நோ தந்தி: ப்ரசோதயாத்//

6. ஸ்ரீ கணபதி குடும்பக்ஷேம காயத்ரீ

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் லக்ஷ்மீ கணபதயே
மம மம குடும்பஸ்ய யாவத்ராநாம் துரிதம்/
ஹர ஹர க்ஷேமம் குருகுரு ஸர்வ சௌபாக்யம்
தேஹி தேஹி ஜம் கௌம் கணபதயே ஸ்வாஹா//

7. ஸ்ரீ மகாகணபதி ஹோம மந்திரங்கள்: ✱ ஸ்ரீ கணேச ஷடாக்ஷரம்

ஓம் மேதோல்காய ஸ்வாஹா//

8. ஸௌம்ய கணபதி மந்த்ரம்

ஓம் ஸ்ரீம் கம் ஸௌம்யாய கணபதயே
வர வரத, சர்வ ஜனம்மே, வசமானய ஸ்வாஹா//

✱ ஷி மூலமந்திரங்கள் - பிரபஞ்ச ஸார சங்கிரகம், சாக்ர பிரபோதம், மந்த்ர மகோததி, மந்த்ர தத்வநிதி, மந்த்ர மகார்ணவம், குமாரதந்திரம், பூதாடாமர தந்த்ரம், நித்யபூஜா லக்ஷண சங்கிரகம், கணபத்யதர்வ சீர்ஷோபநிஷத், ஹேரம்போநிஷத், கணேச பூர்வதாபினி உபநிஷத், வல்லபேசோபநிஷத், கணேச ஸ்தோத்திர தாபினி உபநிஷத், கணபதி வழிபாடு மஹா சைவ தந்திரம், குமார ஸம்ஹிதா தந்திரம், வட்டாமரேச தந்திரம், பிரபஞ்ச சாரம் சாரதா திலகம், சாக்ர ப்ரமோதம் - ஆகிய நூல்களில் கணேசரின் மந்திரங்கள் விசேஷமாக கூறப்பட்டுள்ளன.

9. ஹரித்ரா கணேச மந்த்ரம்

ஓம் ஹூம்கம் க்லௌம் ஹரித்ரா கணபதயே
வர வரத ஜன க்ருதயம் ஸதம்பய ஸ்தம்பய ஸ்வாஹா //

10. லக்ஷ்மி கணபதி

ஓம் ஶ்ரீம் கம் ஸௌம்யாய கணபதயே வர வரத ஸர்வஜனம்
மே வசமானய ஸ்வாஹா

11. ருண ஹரண கணபதி (கடன் தொல்லை தீர)

ஓம் கணேச ருணம் ச்சிந்தி வரேண்யம் ஹூம் நம: பட்

12. மஹா வித்யா கணபதி (அன்னையின் அருள் பெற)

ஓம் ஶ்ரீம் ஹ்ரீம் க்லீம் கம் க ஏ ஈலஹ்ரீம் கணபதயே ஹஸக-
ஹலஹ்ரீம் வர வரத ஸகலஹ்ரீம் ஸர்வஜனம் மாம் வசமானய ஸ்வாஹா.

13. ஹரித்ரா கணபதி (மக்கள் ஈர்ப்பு)

ஓம் ஹூம் கும் க்லௌம் ஹரித்ரா கணபதயே வர வரத ஸர்வ
ஜன ஹ்ருதயம் ஸ்தம்பய ஸ்தம்பய ஸ்வாஹா

14. வக்ரதுண்ட கணபதி (எதிர்பாராத நன்மை கிடைப்பதற்கு)

ஓம் வக்ரதுண்டாய ஹூம்.

15. நிதி கணபதி (செல்வப் பிராப்தி)

நிதிதோ ரத்னதாதுமான் ரசேஷாஹனோ பலகஹனோ
வக்ரதுண்டாய் ஹூம்.

16. புஷ்டி கணபதி (தான்யப் பெருக்கம்)

ஓம் கம் கைம் கணபதயே விக்ன விநாசினே ஸ்வாஹா.

17. பால கணபதி (மன நிறைவு அடைய)

ஓம் கம் கணபதயே நமஸ்ஸித்தியாய ஸ்வாஹா.

18. சக்தி கணபதி (செயல் வெற்றி பெற)

ஓம் ஹ்ரீம் க்ரீம் ஹ்ரீம்.

19. ஸர்வசக்தி கணபதி (உடற்பாதுகாப்புக்கு)

ஓம் ஹ்ரீம் க்ரீம் மஹா கணபதயே ஸ்வாஹா

20. ஹேரம்ப கணபதி (அமைதி பெற)

ஓம் கூம் நம:

21. க்ஷிப்ர ப்ரஸாத கணபதி (விரைவில் விநாயகர் அருள் பெறுவதற்கு)

ஓம் கம் க்ஷிப்ரப்ஸாதனாய நம:

22. குக்ஷி கணபதி (நோய் அகல)

ஓம் ஹூம் க்லௌம் ட ட ராஜ ஸர்வஜன க்ருதய கதிமதி
க்ரோத ஜிஹ்வா ஸ்தம்பய ஸ்தம்பய ஸ்வாஹா.

23. ஸந்தான லக்ஷ்மி கணபதி (நன் மகவு அடைய)

ஓம் நமோ லக்ஷ்மீகணேசாய மஹ்யம் புத்ரம் ப்ரயச்ச ஸ்வாஹா.

24. ஸ்வர்ண கணபதி (தங்கம் அடைய)

ஓம் க்ஷ்ம்ர்யூம் க்ஷிப்ரகணபதயே ஸுவர்ணகேஹே வ்ய
வஸ்த்திதாய ஸ்வர்ணப்ரதாய க்லீம் வஷட் ஸ்வாஹா.

25. விஜய கணபதி (வெற்றி பெற)

ஓம் க்லௌம் ஸ்ரீம் ஸர்வவிக்ன ஹந்த்ரே பக்தானுக்ரஹகர்த்ரே
விஜய கணபதயே ஸ்வாஹா.

26. அர்க கணபதி(நவக்ரஹ தோஷம் நீங்க)

ஓம் கம் கணபதி அர்க கணபதி வரவரத ஸர்வஜனம் மே வசமானய ஸ்வாஹா.

27. உச்சிஷ்ட கணபதி (முக்காலமும் அறிய)

ஓம் நமோ பகவதே ஏகதம்ஷ்ட்ராய ஹஸ்திமுகாய லம்போதராய
உச்சிஷ்ட மஹாத்மனே ஆம் க்ரோம் ஹ்ரீம் கம் க்கே க்கே
ஸ்வாஹா.

28. போக கணபதி (ஸகல போகங்களும் பெற)

ஓம் ஹ்ரீம் கம் ஹ்ரீம் வசமானய ஸ்வாஹா

29. விரி விரி கணபதி (பரந்த அறிவு பெற)

ஓம் ஹ்ரீம் விரி விரி கணபதி ஸர்வம் மே வசமானய ஸ்வாஹா

30. வீர கணபதி (தைரியம் அடைய)

ஓம் ஹ்ரீம் க்லீம் வீரவர கணபதயே வ:வ: இதம் விஸ்வம்
மம வசமானய ஓம் ஹ்ரீம் பட்.

31. ஸங்கடஹர கணபதி (தடங்கல் விலக)

ஓம் நமோ ஹேரம்ப மதமோதிக மம ஸர்வஸங்கடம் நிவாரய
நிவாரய ஹும் பட் ஸ்வாஹா.

32. விக்னராஜ கணபதி (அரச போகம்)

ஓம் கீம் கூம் கணபதயே நம: ஸ்வாஹா.

33. தருண கணபதி (இளமை நீடிக்க)

ஓம் ஐம் ஹ்ரீம் ஸ்ரீம் கண் நமோ பகவதே நித்யயௌவனாய
யுவதிஜன ஸமாஸ்லிஷ்டாய கணபதயே நம:

34. துர்க்கா கணபதி (துன்பம் நீங்க)

ஓம் ஹ்ரீம் கம் ஹ்ரீம் தும் துர்காபுத்ராய சக்தி ஹஸ்தாய மாத்ரு
வத்ஸலாய மஹாகணபதயே நம:

35. யோக கணபதி (ஞானம் பெற)

ஓம் ஹம் ஸம் கம் பகவதே நித்யயோக யுக்தாய ஸச்சிதானந்த
ரூபிணே விநாயகாய நம:

36. ந்ருத்த கணபதி (ஆடற்கலையில் மேன்மை பெற)

ஓம் க்லௌம் ஐம் ஐம் ஐம் நம் நர்தனப்ரியாய சிதம்பரானந்த
தாண்டவாய கஜானனாய நம:

37. ஸித்தி கணபதி (முயற்சிகளில் வெற்றி பெற)

ஓம் நம: ஸித்தி விநாயகாய ஸர்வ கார்யகர்த்ரே
ஸர்வ விக்ன ப்ரசமனாய ஸர்வராஜ்ய வச்ய
கரணாய ஸர்வஜன ஸர்வஸ்த்ரீ ஸர்வபுருஷாகர்ஷணாய
ஸ்ரீம் ஓம் ஸ்வாஹா.

38. புத்தி கணபதி (கல்வியறிவு வளர)

ஓம் வாக்கணபதயே ஸ்வாஹா.

39. நவநீத கணபதி (மனத்தைக் கட்டுப்படுத்த)

ஓம் ஐம் ஹ்ரீம் ஸ்ரீம் ஓம் க்லௌம் நவநீத கணபதயே நம:

40. மோதக கணபதி (நற்பலன்கள் பெற)

ஓம் மம் மஹாகணபதயே ஏகதந்தாய ஹேரம்பாய மோதக
ஹஸ்தாய நாளிகேரப்ரியாய ஸர்வாபீஷ்ட ப்ராதாயினே ஸ்ரீம்
ஹ்ரீம் க்லீம் ஸர்வஜனம் மே வசமானய ஸ்வாஹா.

41. மோஹன கணபதி (பாதுகாப்பு பெற)

ஓம் ஆம் க்லீம் ஸர்வக்தி கணாதீச மாம் ரக்ஷ ரக்ஷ மம
ஸான்னித்யம் குரு குரு அஷ்டைஸ்வர்யாதி பூதிம்
ஸம்ருத்திம் குரு குரு ஸர்வ துக்கம் நாசய நாசய
ஸர்வஜனம் மே வசமானய ஆனய மோஹனானோத்தம
விநாயகாய ஹூம் பட் ஸாவாகா

42. குரு கணபதி (குரு அருள்பெற)

ஓம் கம் கணபதயே ஸர்வவிக்ன ஹராய ஸர்வாய ஸர்வ
குரவே லம்போதராய ஹ்ரீம் கம் நம:

43. அபீஷ்ட வரத கணபதி (வேண்டியதைப் பெற)

ஓம் ஸ்ரீம் ஸ்ரீம் கணாதிபதயே ஏகதந்தாய லம்போதராய
ஹேரம்பாய நாளிகேர ப்ரியாய மோதக பக்ஷணாய மம
அபீஷ்டபலம் தேஹி ப்ரதிகூலம் மே நச்யது அனுகூலம் மே
வசமானய ஸ்வாஹா.

44. ப்ரம்மணஸ்பதி கணபதி

ஓம் ஸ்ரீம் க்லீம் நமோ கணேஸ்வராய ப்ரம்ஹ ரூபாய சாகே
ஸர்வ ஸித்திப்ரதேயாய ப்ரம்பஹணஸ் பதயே நம:

45. தூர்வா கணபதி

ஓம் ஹ்ரீம் க்லாம் ஸ்ரீம் தும் துரிதஹராய தூர்வாகணேசாய
ஹூம்பட்.

46. த்ரைலோக்ய வசீகரண கணபதி மந்த்ரம்

ஓம் வக்ரதுண்டாய தமஷ்ட்ராய, க்லீம், ஹ்ரீம், ஸ்ரீம், கம்
கணபதயே வர வரத சர்வஜனம்மே, வசமானய ஸ்வாஹா.

47. சக்தி விநாயக மந்த்ரம்

ஓம் ஹ்ரீம் க்ரீம் ஹ்ரீம் கணபதயே நமஹ:

48. வ்ராத கணபதி மந்த்ரம்

ஓம் நமோ வ்ராதப் பதயே நமோ, கணபதயே,
நமப்ரதமபதயே, நமஸ்தேஸ்து, லம்போதராய, ஏகதந்தாய,
விக்ன நாசினே, சிவஸூதாய, ஸ்ரீவரத மூர்த்தயே ஸ்வாஹா.

49. தனாகர்ஷண கணபதி மந்த்ரம்

ஓம் க்லாம், க்லீம், கம், கணபதயே, வரவரத,
மம, தன தான்ய, ஸம்ருத்திம் தேஹி தேஹி, ஸ்வாஹா.

50. சங்கட ஹரகணபதி மந்த்ரம்

ஓம் நமோ ஹேரம்ப மத மோதித, மம ஸங்கடம்
நிவா ரய, நிவா ரய ஹூம் பட் ஸ்வாஹா.

51. மோஹன கணபதி மந்த்ரம்

ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் க்லாம் க்லௌம் கணபதயே,
வர வரத, ஸர்வ ஜனான் மோஹய க்லீம் ஸ்வாஹா.

52. ககார கணபதி மந்த்ரம்

ஓம் கம் கணபதயே ஸர்வ விக்ந ஹராய
ஸர்வாய ஸர்வகுரவே லம்போதராய ஹ்ரீம் கம் நமஹ.

53. ஸித்தி விநாயக மந்த்ரம்

ஓம் நமஹ ஸித்தி விநாயகாய, ஸர்வகார்ய கர்த்ரே,
ஸர்வ விக்னப்ரசமனாய, ஸர்வ ராஜ்ய வசீகரணாய,
ஸர்வஜன ஸர்வ ஸ்திரி, புருஷாகர்ணாய ஸ்ரீம் ஓம் ஸ்வாஹா.

உச்சிஷ்ட கணபதி மந்திரங்கள்

54. ஓம் ஹ்ரீம் கம் ஹஸ்தி பிசாசிலிகே ஸ்வாஹா.

55. ஓம் நமோ உச்சிஷ்ட கணேசாய ஹஸ்தி, பிசாசிலிகே ஸ்வாஹா.

56. ஓம் ஹஸ்தி, முகாய, லம்போதராய, உச்சிஷ்ட மஹாத்மநே,
க்ராம், க்லீம், ஹ்ரீம், கே, கே, உச்சிஷ்டாய ஸ்வாஹா:

57. ஓம் ஹஸ்தி முகாய லம்போதராய உச்சிஷ்ட, மஹாத்மனே,
ஆம் க்ரோம் ஹ்ரீம் கே, கே, உச்சிஷ்டாய ஸ்வாஹா



கணபதி பத்திர மண்டலம்


35
25
43
33
19
18
20
23
11
10
12
6
4
1
17
13
22
27
37
3
2
5
8
14
7
16
24
22
18
34
44
28 38
40.30
29
39

உச்சிஷ்ட கணபதி யந்திரம்


33
23
41
31
34
24
19
11
18
10
20
12
6
4
1
39
29
17
9
13
21
25
35
3
2
5
16
8
14
22
7
15
28,38
32
42
26,36
27
37

வக்ரதுண்ட கணபதி யந்திரம்


33
23
41
31
40,30
34
24
19
11
18,10
20
12
6
4
1
39,29
17,9
13,21,
25
3
2
5
16,8
14,22
7
15
38,28.
32
42
26,36
27
37

சக்தி கணபதி யந்திரம்

58. ஓம் நமோ பகவதே, ஏக தமஷ்ட்ராய ஹஸ்தி முகாய, லம்போதராய,
உச்சிஷ்ட மஹாத்மனே, ஆம் க்ரோம் ஹ்ரீம், கம், கே, கே, ஸ்வாஹா.

